264

# தென்னாட்டுக் கோட்டைகள்



108736
N54-49/

# தமிழகக் கோட்டைகள்

5-6-67
4-6

PUBLIC INFORMATION AND PUBLICITY DEPT.
30 DEC 1967
DIGITIZED

ஆசிரியர் :
புலவர் ச. குலசேகரன்,
தமிழாசிரியர், இ. ரெ. உயர்நிலைப்பள்ளி,
திருச்சிராப்பள்ளி.

ஜெனரல் புக் கம்பெனி
டவுன்ஹைஸ்கூல் ரோடு :: கும்ப

முதற் பதிப்பு—1967

V211
N67

ARCHIVES LIBRARY
No. 108737
MADRAS

10·9 கிலோகிராம் 51×76 செ. மீ. அளவுள்ள
வெள்ளைக் காகிதத்தில் அச்சிடப்பெற்றது.

...உரிமை

1–00

கீதா பிரஸ், கும்பகோணம்.

30DEC1967
P.J.O.L. (INFORMATION AND PUBLICITY)

# முன்னுரை

''தமிழகக் கோட்டைகள்'' என்னும் பெயர் தாங்கிய இச்சிறு நூலில், தமிழகத்தின் பழங்காலச் சின்னங்களாக இன்றும் அழியாது நின்று நிலவுகின்ற, நமது அரசினரால் நன்கு பாதுகாக்கப்பட்டு வருகின்ற பல்வேறு வகையான கோட்டைகளின் வரலாறுகள் இடம் பெற்றுள்ளன. அக்கோட்டைகள், அமைந்திருக்கும் இடங்கள், அவைகளின் அமைப்பு முறைகள், சிறப்பியல்புகள் முதலியன இந்நூலில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. இவற்ருல் தமிழரசரின் போர்த்திறன், ஆட்சியின்மாட்சி, கலைவன்மை ஆகியவற்றைத் தமிழ் மாணவர் அறிந்து பயன்பெறலாம். ஆகையால் இச்சிறு நூலைக் கண்ணுறும் ஆசிரியப் பெருமக்கள் தங்கள் பள்ளிகளில் பாட நூலாக வைத்து என்னை இத்துறையில் ஊக்குவிக்குமாறு வேண்டிக்கொள்கிறேன்.

ஆசிரியர்.

30 DEC 1967

# பொருளடக்கம்


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| (1) | தோற்றுவாய் | ... | 1 |
| (2) | பண்டைக்காலப் போர் முறை | ... | 9 |
| (3) | வேலூர்க் கோட்டை | ... | 16 |
| (4) | செஞ்சிக் கோட்டை | ... | 28 |
| (5) | தஞ்சைக் கோட்டைகள் | ... | 42 |
| (6) | திருச்சிராப்பள்ளிக் கோட்டைகள் | ... | 53 |
| (7) | நாமக்கல் கோட்டை | ... | 69 |
| (8) | புலிக் கோட்டை | ... | 76 |
| | கட்டுரைப் பயிற்சி | ... | 88 |

3 0 DEC 1967
(...ATION AND PUBLICITY) DEPTT.

# தேசீய கீதம்

–[*]–

ஜன கண மன அதிநாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா

பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
த்ராவிட உத்கல வங்கா

விந்திய ஹிமாசல யமுனு கங்கா
உச்சல ஜலதி தரங்கா

தவசுப நாமே ஜாகே
தவசுப ஆசிஷ மாங்கே

காயே தவ ஜய காதா

ஜன கண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா

ஜயஹே! ஜயஹே! ஜயஹே!
ஜய ஜய ஜய ஜயஹே!

— மகாகவி இரவீந்திரநாத தாகூர்.

# தேசிய கீதம்
(பொருள்)

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற நீதான்
மக்கள் எல்லாருடைய மனத்திலும் ஆட்சி
செலுத்துகிருய்.

நின் திருநாமம், பஞ்சாபையும் சிந்துவையும்
குஜராத்தையும் மஹாராஷ்டிரத்தையும்
திராவிடத்தையும் ஒரிஸாவையும் வங்காளத்தையும்
உள்ளக் கிளர்ச்சியடையச் செய்கிறது.

அது விந்திய, ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது;
யமுனை, கங்கை நதிகளின் இன்ப நாதத்தில்
கலக்கிறது;
இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப்படுகிறது.

அவை நின் ஆசியை வேண்டுகின்றன;
நின் புகழைப் பாடுகின்றன;

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு
வெற்றி. வெற்றி. வெற்றி.

30 DEC 1967
...PUBLICITY) DEPTT.

# 1. தோற்றுவாய்

சீரும் சிறப்பும் பெற்ற நம் நாடு, மிகவும் பழமையானது. பண்டுதொட்டே, மக்கள் கோட்டை கொத்தளங்களை அமைத்துக் கட்டடக் கலையில் வல்லவர்களாக விளங்கினார்கள். தஞ்சை, சிதம்பரம், மதுரை, காஞ்சி போன்ற ஊர்களிலுள்ள விண்ணளாவிய கோவில்கள், மகாபலிபுரத்திலுள்ள சிற்பக் களஞ்சியங்கள், மற்றும் நாட்டின் பல பகுதிகளிலுமுள்ள பழங்காலக் கட்டடங்கள் முதலியன நம் நாட்டுப் பழங்காலக் கட்டடக் கலையின் சிறப்பை விளக்குதற்குரிய சான்றுகளாக இன்றும் நின்று நிலவுகின்றன. இத்தகைய கட்டடக் கலையில் கோட்டைகளும் முக்கியமான இடத்தைப் பெறுகின்றன. பண்டைக் காலத்து மக்கள் தமக்குள் மனமாறுபாடு கொள்ளுங் காலத்தில் வில், வாள், வேல், தடி, கயிறு முதலியன கொண்டு போர் புரிந்து வந்தனர். ஆதலால் பகைவர்களிடமிருந்து தம்மையும், தம் மக்களையும் காத்துக்கொள்ளத் தமிழ் மன்னர்கள் பலவகை ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். இவ்வகை ஏற்பாடுகளில் தலைநகரையும், மற்றும் பல இன்றியமையாத இடங்களையும் பகைவரிடமிருந்து காப்பதற்கு வலிமைவாய்ந்த கோட்டை முதலிய அரண்களை ஏற்படுத்திக் கொண்டனர். இத்தகைய

ஏற்பாடுகளைப் பற்றிப் பழங்காலத்தில் கையாண்ட முறைகளை இனிக் காண்போம்.

பண்டைக்காலத் தமிழ் மன்னர்கள் நாட்டின் நடுப் பகுதியில் பாதுகாப்பான இடங்களில் தமது தலை நகரங்களை அமைப்பர். அத்தலைநகரத்தின் நடு விடத்தில், அரசனது அரண்மனை இருக்கும். அரச காரியங்கள் நடைபெறும் அலுவலகங்களில் பணி புரிவோரும் பிறரும் அரண்மனையைச் சூழவிருப்பர். அதனைச் சூழவிருக்கும் இடங்களில் நாட்டின் தொல் குடிப் பெருமக்களாகிய செல்வர் முதலியோர் வாழ்வர். மற்றும் அதனைச் சூழ வணிகர்களும் பலவகைத் தொழிலாளர்களும் வாழ்வர். நகரின் அமைப்பு, அகநகரம், புறநகரம் என இருவகையாகப் பகுக்கப்பட்டிருக்கும். அகநகரில் இன்றியமையாத செல்வ இருக்கைகளும் ஆயுதச்சாலைகளும் இருக்கும். புறநகரில் போர்வீரர் களும் பல்வகைத் தொழில்புரிவோரும் ஏனையோரும் வாழ்வர். இங்ஙனம் அமைந்த நகரத்தைச் சுற்றிலும் போர்த்திறன்மிக்க, பெரியதொரு மதிற்சுவர் எழுப்பப் பட்டிருக்கும். இம்மதிற்சுவர்தான் அரண்களில் இன்றி யமையாத இடத்தைப் பெறுகிறது. இம்மதிற்சுவரை அடுத்து வெளியே நீர் நிறைந்த ஆழமான அகழி இருக்கும். மதிலுக்கு அகத்தும் புறத்தும் மிகுதியான போர்வீரர்கள் மதிலைக்காவல் செய்வர். அகழிக்கு வெளி இடங்களில் வேல், மூங்கில், இலந்தை முதலிய முள் மரங்களும், காரை, சூரை, இண்டு போன்ற முட்செடிகளும், முட்கள் செறிந்த ஆதொண்டை, அச்சங்கொடி ஆகிய முட்கொடிகளும் நிறைந்த காவற்காடு நகரைச் சூழ்ந்திருக்கும். மதிற்சுவரை

அடுத்து, சுமார் 18 மீட்டருக்கு அதிகமான ஆழமும், 30 முதல் 90 மீட்டர் வரை அகலமுமுடைய அகழி, நகரைச் சூழ்ந்திருக்கும். இவ்வகழியில் ஆறுகள், ஏரிகள், கடல்கால்கள் முதலியவற்றை இணைத்து நீர் நிறைந்திருப்பதற்கு வேண்டிய வகையினைச் செய்வர். பகைவர் அகழிகளைக் கடந்து மதிலைப் பற்றுது தடுப் பதற்காக அகழிகளில் இடங்கர், கரா முதலிய கொடிய நீர்வாழ் உயிரினங்களும் நிறைந்திருக்கும். முள் நிறைந்த தாமரைக் கொடிகளும் பிறவும் வலைபோல் பின்னிப் பிணைந்து கிடக்கும்.

பகைவர்கள் தலைநகரைத் தாக்க முற்பட்டால் முதலில் காவற் காட்டையும் அதன்பின் மதிலையும் அகழி யையும் கடக்கவேண்டும். அது மிகவும் கடுமையான செயலாகும். பகைவர்கள் திடீரென நகருக்குள் நுழை யாவண்ணம் காவற்காடு முள்ளும் புதரும் செறிந்திருக் கும். காட்டு வழிகளை நன்கறிந்த வீரர்கள் காட்டுக்குள் புகும் பகைவரை எளிதில் வென்றுவிடுவர். இவற்றை யும் கடந்து வரும் பகைவர்களை வீரர்கள் எதிர்த்துப் போரிடுவர். தடுத்து நிறுத்த இயலாவிடின், வீரர்கள் மதிலுக்குள் நுழைந்து பகைவரை எதிர்ப்பர். மதில்கள், பகைவர்களால் ஏற முடியாதனவாகவும் தகர்க்க முடியாதனவாகவும் மிக்க வலிமையும் திண்மை யும் வாய்ந்திருக்கும். அத்தகைய மதிற்சுவர்களை அமைக்கும்போது, அவற்றில் உலோகத் தகடுகளையும் கூட்டி அமைப்பர்.

மதிற்சுவர்கள் செப்புத் தகடுகளைக் கூட்டியும் அமைக்கப்பட்டதாகச் சங்க நூல்கள் கூறுகின்றன.

மதிற்சுவர்களை அமைக்கும்போது மண்ணைப் பனஞ்சாறு ஊற்றி அரைத்துக் கட்டுவார்கள். மதிற்சுவர்களைக் கட்டுங்காலத்து, இராகிக் கூழைக் காய்ச்சி இணைப்புக் களில் ஊற்றுவதும், ஈயம், செம்பு முதலிய உலோகங் களைப் பொருத்துவதும் அக்கால வழக்கங்களாக இருந்தன. இத்தகைய மதில்கள் உயர்வு, அகலம், திண்மை, அருமை முதலிய இலக்கணங்களுடையனவாக இருக்கும். கோட்டையின் அடிப்பகுதிகளைக் கல்லால் அமைப்பார்கள். இக்கோட்டைச் சுவர்கள் வெளிப்புறம் செங்குத்தாகவும் வெளியில் சற்று கவிழ்ந்த வண்ண மாகவும் உட்புறம் சரிந்தும் அமைந்திருக்கும். மதிற் சுவர்கள் பெரும்பாலும் இரட்டைச் சுவர்களாலேயே அமைக்கப்பட்டு வந்தன. படகு, தோணி முதலியன கொண்டும், நூலேணி கொண்டும் அகழியைக் கடக்க முற்படும் பகைவரை மதிலின் அலங்கங்களிலிருந்து கொண்டு, வீரர்கள் அம்பு முதலியவற்ருல் தாக்குவர். சுவர்களின் நடுவே நெற்பதர், வரகு, உமி, வரகு வைக் கோல், கம்பு முதலிய பொருள்கள் நிரப்பப் பெற்றிருக்கும். எதிரிகள் சுவர்களைத் துளைத்துக்கொண்டு வர முற்பட் டால், அவர்கள் உள்ளே நுழைய முடியாதபடி நடுவே இருக்கும் பதர், வரகு முதலிய பொருள்கள் சரிந்து வந்துகொண்டே இருக்கும். அதனுல் பகைவரது முன் னேற்றம் பெரிதும் தடைப்படும். மதிற்சுவர்களினுள் பல சுரங்கங்களும், மேலே பலவகை அலங்கங்களும், கிளிக்கூடுகளும் அமைக்கப்பட்டிருக்கும். பகைவர்கள் அரணைத் தாக்கத் துவங்கும்போது, வீரர்கள் மதில்களில் அமைக்கப்பட்டிருக்கும் அலங்கங்களில் பாதுகாப்பாகத்

தங்கிக்கொண்டு பகைவர்களை எதிர்ப்பார்கள். தனித்த ஆள் மறைவாக நின்றுகொண்டு பகைவரை எதிர்க்கு மிடம் கிளிக்கூடு எனப்படும். இவ்வாறு அமைக்கப் பட்ட மதில்களில் பலவகை இயந்திரப் பொறிகளும் தாமியங்கிகளும் அமைக்கப்பட்டிருந்தன. 1800 ஆண்டுகட்கு முற்பட்டதாகக் கருதப்படும் சிலப்பதிகாரம் போன்ற தமிழ் நூல்கள் இவ்வுண்மை களைத் தெளிவாக அறிவிக்கின்றன.

கோட்டை மதில்களின்மேல் பண்டைத் தமிழ் அரசர்கள் தங்கள் அடையாளங்களாகிய வில், புலி, கயல் முதலிய இலச்சினைகளைப் பொறித்துவைப்பார். அஃதன்றியும் தம்மால் வெல்லப்பட்ட மன்னர்களது கோட்டைச் சுவர்களின்மீதும் தமக்கு உதவியாக இருக்கும் துணையரசர்களின் கோட்டைச் சுவர்களின் மீதும் பேரரசர்களின் அடையாளங்கள் பொறிக்கப் பெற்றிருக்கும்.

பண்டைத் தமிழகத்தில் எயிற்பட்டினமென்ற பெயருடைய சிறந்த ஒரு நகரம் காஞ்சிபுரத்திற்கு வடபால் சுமார் 25 கிலோ மீட்டர் தொலைவில் இருந்த தாகக் கருதப்படுகிறது. சோழன் நலங்கிள்ளி என்பான் பாண்டிய நாட்டிலுள்ள ஏழுபொன் கோட்டை என்ற தோரூரில் இருந்த ஏழு மதில்களையும் அழித்து வெற்றி பெற்று, அம்மதில்களின்மீது தனது புலிப்பொறியையும் பொறித்தான் என்று புறநானூறு கூறுகிறது.

கி. மு. 287 முதல் 212 வரை வாழ்ந்தவராகக் கருதப்படும் கிரேக்க நாட்டவரான ஆர்க்கிமிடிஸ், தம்

நாட்டின்மீது படையெடுத்துவந்த, அக்காலத்து வலிமை பெற்ற வல்லரசாக விளங்கிய உரோமப் பேரரசை ஓரளவு தடுக்க முடிந்ததும், கோட்டை மதிலின் துணைக் கொண்டேயாம். ஆர்க்கிமிடிஸ் தமது நாட்டு மதிலின் மீது பற்பல விதமான இயந்திரப் பொறிகளை அமைத்துப் பகைவர்கள் மதிலை அணுக ஒட்டாதபடி தடுத்துவந்தார். இப்பொறிகளின் நுட்பத்தை அறியாத உரோமர்கள் நெடுநாட்கள் செய்வதறியாது திணறினர்.

உரோமர்களது கப்பற்படை சிசிலி நகரத்தின் கோட்டையை நோக்கி வரும்போது, ஆர்க்கிமிடிஸ் கதிரவனொளியை ஒருமுகப்படுத்தும் கண்ணாடித் தொகுதியின் மூலம் அவற்றை எரியச் செய்தார். இவ்வாறு கப்பல்கள் பலமுறை எரிந்து சாம்பலாயின. துறைமுகங்களில் சரக்கு மூட்டைகளைத் தூக்கும் (கிரேன்கள்) தூக்கிகள் போன்ற பொறிகளை நீரில் மூழ்கும்படி மறைத்து வைத்திருந்து, திடீரெனக் கலங்களைக் கவிழ்த்தும் எழுந்து உள்ளே மூழ்கும்போது கொக்கிகள் போன்றவற்றால் மாட்டியிழுத்து உள்ளே அமிழ்த்தியும் பகைவரது கலங்களை அழித்தனர்.

இதுபற்றி, "புளுடார்க்கு" என்ற ஆசிரியர், "உரோமரும் கிரேக்கரும் போரிட்டார் என்று கூறுவதற்கில்லை. ஆர்க்கிமிடிஸ் என்ற கிரேக்கர் ஒருவர் தான் உரோமர்களுடன் போர் புரிந்தார் என்று கூறவேண்டும். சிசிலி மக்கள் அனைவரும், ஆர்க்கிமிடிசின் பொறியமைப்புக்களுள் சேர்ந்த துணையமைப்புப் பொறிகளாயினர். உயிரில்லாத அப்பொறிகளை ஆக்கியவரும் அசைவித்தவரும் அவரே ஆயினர். தாக்குதலிலும்,

பாதுகாப்பதிலும் அவரது படைகள் சிறந்த வெற்றி யடைந்தன. ஆர்க்கிமிடிசின் மாயக் கருவிகளால் மனம் மருண்ட உரோமர்கள், கோட்டைக்குள்ளிருந்து யாராவது தடியையோ, கயிற்றையோ நீட்டினுல்கூட அஞ்சி நடுநடுங்கினர்'' என்று கூறுகின்ருர்.

தார்த்தாரியப் படைகளுக்கு அஞ்சிய சீனர்கள், தங்கள் நாட்டு எல்லைப்புறத்தில் பெரியதொரு கோட்டை யாக மதிற் சுவரை எடுத்தனர். இம்மதில் 2,250 கிலோ மீட்டர் நீளமுள்ளது. இதன் உயரம் 10 மீட்டர், அகலம் 8 மீட்டர். நடுவே பல கோபுரங்களும் கோட்டைகளும் உண்டு. பல பள்ளத்தாக்குகளையும் மலைகளையும் ஊடுருவிக்கொண்டு இம்மதில் செல்கிறது. இச்சீனப் பெருஞ்சுவர் வடபாகத்தில் மங்கோலியாவுக்கும் சீன வுக்கும் எல்லையாக இருக்கிறது; பகைவர்கள் நாட்டுக் குள் வராமல் தடுக்கிறது. இச்சுவர் உலக வியப்புக் களுள் ஒன்ருகக் கருதப்படுகிறது.

மற்றும், அண்மையில் நடந்த உலகப் பெரும் போரில் ஐரோப்பியரைக் குலைநடுங்கச் செய்த அடால்ப் ஹிட்லரின் மின்னற் போரில், ஓரளவு தங்கி நின்றது மாகினுட் அரண்தான் என்பது அனைவரும் அறிந்ததே. எனவே, இரண்டாயிரம் மூவாயிரம் ஆண்டுகட்கும் அதற்கு முன்னரும் கோட்டைகள் பகைவரிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்குப் பயன்பட்டது போலவே, விஞ்ஞானம் தலையெடுத்து விண்ணூர்தி யினுல் அணுக்குண்டுப் போர் செய்யும் இக்காலம் வரை பாதுகாப்புக்குக் கோட்டைகள் இன்றியமையாதவை யாகவே இருந்துவருகின்றன என்பதை அறிகிருேம்.

எனவே, கோட்டை கொத்தளங்களின் அமைப்பை— சிறப்பாகத் தென்னுட்டவராகிய நம் நாட்டவர் கையாண்ட கோட்டைகளின் அமைப்பை—மாணவர்கள் அறியவேண்டுவது இன்றியமையாததாகும். அங்ஙனம் கோட்டையின் இயல்புகளை அறிவதற்கு வரலாற்றுப் புகழ் வாய்ந்த பல கோட்டைகளின் அமைப்பு முறைகளை அறிவது உதவியாக இருக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. எனவே, இன்றுவரை முற்றும் அழிவுபடாது நின்று நிலவும் **செஞ்சிக் கோட்டை, வேலூர்க் கோட்டை, நாமக்கல் கோட்டை** முதலியவை பற்றி இனி அறியத் தொடங்குவோம். அதற்கு முன் பண்டைக் காலத் தமிழரசர்களின் போர் முறையினைச் சிறிது காண்போம்.

# 2. பண்டைக்காலப் போர் முறை

பண்டைக்காலத்துத் தமிழ் மன்னர்கள் மதிலரண்களில் தங்கியிருந்து போர் செய்த முறைகளை நாம் புறநானூறு, புறப்பொருள் வெண்பாமாலை முதலிய நூல்களில் காணலாம். இக்காலத்துப் போர் முறைகளைப் போன்றதன்று பழங்காலப் போர் முறை. இக்காலத்தில் போர் மூளுதற்குப் பல மாதங்களுக்கு முன்னரே அரசர் தாம் இருக்குமிடம் தெரியாதவாறு மறைந்து விடுவார். மீண்டும் போர் நிகழ்ந்து சமாதானம் நிலைபெற்ற பல மாதங்களுக்குப் பிறகுதான் வெளியில் தலைகாட்டத் துணிவர். இஃதன்றிப் படைவீரர்களும் தூங்குபவன் தலையில் கல்லைப் போடுவதுபோன்று ஆயுதமற்ற பொதுமக்கள் மீதும், குடியிருக்கை, பள்ளி, மருத்துவச்சாலை போன்ற அமைதியான பகுதிகளிலும், அணைக்கட்டு, தொழில் நிலையம் போன்ற இடங்களிலும் இரவோடிரவாக விமானங்களில் பறந்து சென்று குண்டுமாரி பொழிந்து மறைவர்.

பண்டைக்காலத்தில் போர் தொடங்கின் மன்னன் தானே முன்னின்று போரை நடத்துவான். போர் நடத்துவதற்குரிய இடங்கள் வரையறுக்கப்படும். போர் நிகழ்தற்குரிய இடங்களில் உள்ள பொதுமக்களுக்கு, 'இவ்விடம் போர் நிகழவிருப்பதால் நீங்கள் யாவரும் பாதுகாப்பான இடங்களைச் சென்றடையுங்கள்' என்ற அறிக்கை விடப்படும். உணர்த்த உணராப் பசு

முதலிய விலங்குகளைத் தாமே முன்னிருந்து போர்க்களத்தினின்று அப்புறப்படுத்துவர். எதிர்த்துப் போர் புரிய வந்தவரிலும் அடிபிறக்கிட்டோர், ஆயுதமில்லாதோர், குடுமியவிழ்ந்தோர், பின்னிட்டோர், அஞ்சியோர், பேடியர், மகளிர், குழவிகள், நோய்வாய்ப்பட்டோர் முதலியவர்களோடு போரிடார். அன்றியும் தாம் போருக்குப் போதலை மற்றையோருக்கு விளக்கமாக அறிவித்தற்காகப் போருக்குரிய அடையாள மாலைகளை அணிந்தே செல்வர்.

இங்ஙனம் போர்க்கெழும் மன்னர்கள் தம்போர் முறைகளைப் பெரும்பாலும் ஏழுவகையாகப் பகுத்திருந்தனர். அவற்றுள் முதலாவது வெட்சியாகும். வெட்சி, என்பது, பகைவர் நாட்டின்மீது படையெடுக்க விரும்பும் மன்னன், அந்நாட்டிலுள்ள பசுக்கள் போர் நிகழ்ச்சிகளால் துன்புறுமே என்ற இரக்க உணர்வால் அவற்றிற்குத் தொல்லை நேரா வண்ணம் பாதுகாக்க முயல்வான். இவ்வாறு பகைவர்களது பசுக்களைக் கவர விரும்பிய மன்னன் தன் வீரர்களை அனுப்புவான். வீரர்கள், (போரில் வெட்டப்பட்டு உதிரம் பெருகி ஆடையில் பட்டால் நிறம் தோன்ருமல் இருப்பதற்காகவும், அது கண்டு மனத்திகில் ஏற்படாதிருக்கவும்) செந்நிற ஆடையை அணிந்து செல்வர். வீரர்கள் ஆநிரைகளைக் கவரச் செல்கின்ருேம் என்பதை அறிவித்தற்காகச் செந்நிறம் பொருந்திய வெட்சிப்பூ மாலையை அணிவர். இத்தகைய இவ்வீரர்களை எதிர்த்துப் போரிட விரும்புவோர் வெட்சி வீரர்களைத் தாம் எதிர்த்துப் போரிடப் போகிருேம் என்பதை அறிவித்தற்குக் கரந்தைப் பூமாலையைச் சூடிக்கொண்டு போரிடுவர்.

இதுபோலவே, பகைவர் நாட்டின்மீது படை யெடுத்துச் செல்வோர், வஞ்சிப்பூ மாலையைச் சூடிக் கொண்டு போரிடுவதும், அவ்வீரரை எதிர்த்துப் போரிடுவோர் காஞ்சிப்பூ மாலையைச் சூடி எதிர்ப்பதும் முறையாகும். இத்தகைய பழங்காலப் போர் முறைகளில் மதிலை வளைத்துக்கொண்டு போரிடுவதும் மதிலுக்குள் இருந்து மதிலைக் காப்பதுமாகிய முறைகள் கூறப்படு கின்றன. மதிலைக் வளைத்துக் கொண்டு அழிக்க முற்படும் வீரர்கள் உழிஞைப்பூவை மாலையாகக்கட்டி அணிந்திருப்பார். மதிலை வளைத்துக்கொண்டு அழிக்க முற்படும் வீரர்களை எதிர்த்து நிற்போர் நொச்சிப்பூவை மாலையாகக் கட்டி அணிந்திருப்பர். இப்போர்ப் பகுதியை தமிழ் நூல்கள் உழிஞைப்படலம் என்றும், நொச்சிப் படலம் என்றும் பகுத்து விரிவாகக் கூறுகின்றன. அதன் சுருக்கம் பின்வருமாறு:—

அரசன், தான் போருக்குச் செல்வதற்குமுன், வெண்கொற்றக் குடையையும் வாளையும் நல்லதொரு நாளிலே முன்னே செல்லும்படி அனுப்பிவைப்பான். அதன்பின், தனக்கு ஏற்றநாளில் முரசத்திற்குப் பூசனை புரிந்து முழக்கிப் படைவீரர்களுடன் போருக்கெழுவான். அச்சமயத்தில் அறிஞர்கள் முற்காலத்து நிகழ்ந்த போர்களால் பல அரண்கள் அழிந்ததை எடுத்துக்கூறி, மன்னனுக்கு ஊக்கமூட்டுவர். அரசன் படைகளுடன் சென்று பகையரசனது மதிலின் புறத்தே தங்குவான். வீரர்கள் பகைவருடைய மதிலின் இரகசியங்களையும் நுட்பங்களையும் அறிந்து கூறுவர். அதன்பின் அரசனது படைகள் காவற்காட்டில் நுழையத் தொடங்கும். இங்ஙனம் காட்டை அழித்துக் கொண்டு

புகும் வீரர்களது நிலையைப் புறத்துழிஞை என்று கூறுவர். காவற்காட்டைத் தாண்டிக் கொண்டு அகழியின் புறத்தே தங்கியிருந்து, நாவாய், தோணி, நூலேணி, கயிறு முதலியவற்றின் துணைக்கொண்டு அகழியைக் கடப்பர். அது போது மதிற் காப்போர், கற்பொறி, அம்பு, எறிவேல், மதிற்பொறி முதலியன கொண்டு தாக்கினாலும் அதற்கு அஞ்சாது, மதிலின்மீது ஏணி சார்த்தி மேலே ஏறி, அதற்குள் அமைந்திருக்கும் காவற் காட்டுக்குள் குதிப்பர். மதிற்சுவரினுள்ளும் காவற்காடு இருப்பதுண்டு. வீரர்கள் பாதுகாப்பி லிருந்துகொண்டு பகைவரைக் கடுமையாக எதிர்ப்பர். இவ்வண்ணம் பகைவரது வீரர்கள் போரிட்டு வெல்வர்.

பகைவர்களது மதில், ஏறுவதற்கும் உடைத்தற்கும் இடங்கொடாது மிக வலிமை வாய்ந்ததாக இருப்பின், அப்பொழுது மதிற்கதவுகளை யானைகளைக் கொண்டும், வீரர்களைக்கொண்டும் தாக்கியுடைப்பர். அவ்வாறு மதிலை வளைத்துக்கொண்டு போரிடும் வீரர்கள் பலநாள் அணுகமுடியாத நிலை ஏற்படுவதும் உண்டு. அங்ஙனம் வீரர்கள் வெளியில் இருக்கும்போது மதிலுக்குள் இருக்கும் அரசனது முரசொலியைக் கேட்டு அதனாற் சினமிகுந்த உழிஞைப்படை வீரர்களின் தலைவனை மன்னன் புறத்திலுள்ள உணவு சமைத்தற்குரிய அகப்பை முதலிய கருவிகளை மதிலினுள் எறிந்துவிட்டு, ‘இன்று மாலைக்குள் இம்மதிலைக் கைகொண்டு உட்புகுந்து பிறகே சமைத்து உண்போம்’ என்று வஞ்சினங் கூறு வான். வீரர்கள் மதில்களின் உயரங் குறைந்த பகுதி களின்மீது தாவிக் குதிக்கும்படி குதிரையைச் செலுத்துவர். அங்ஙனம் குதிரை மதிலின்மீது தாவும்

போது, மதிலின்மீதுள்ள வீரன் மீதும் பாய்ந்து அவ் வீரனது உடலைச் சின்னுபின்னப் படுத்தும். அதனைக் குதிரை மறம் என்றும் கூறுவார்கள். இங்ஙனம் பகையரசர்கள் மதிலைச் சூழ்ந்து கொண்டிருப்பதை அறிந்து, மதிலுக்குள் இருக்கும் அரசனுக்கு நண்பரான மன்னர்கள் துணைசெய்ய வந்து உழிஞையாரோடு போரிட்டு மதிலைக் காப்பதும் உண்டு. உழிஞை மன்னன் மதிலைக் கைப்பற்றி விட்டால் மதிலை அழிப்பதோடு, கழுதை ஏர் பூட்டிக் குடைவேல் விதையையும், பலகறையையும் கலந்து விதைப்பான். இத்தகைய வெற்றி கொண்டபின் அரசன் தன் படைவீரர்களுக்குப் பல சிறப்புக்கள் செய்தலோடு, தனது வாளுக்கு மஞ்சன நீராட்டுதலும் செய்வான்.


முற்கூறியவாறு பகையரசர்கள் தமது மதிலைக் கைக்கொள்ள வரும்போது மதிலைக் காக்கும் வீரர்களை **நொச்சி வீரர்கள்** என்று கூறுவார்கள். இவ்வீரர்கள் நொச்சிப் பூமாலையை அணிந்து மதிலைக் காவல் புரிவர். இவர்களது நிகழ்ச்சிகளைப் பற்றிக் கூறும் பகுதி நொச்சித்திணையாகும். இதன் சுருக்கம் பின்வருமாறு:— நொச்சிப் படையினர், மதிலை வளைத்துப் போர் செய்யும் படை வீரர்களின்மீது மதிலுக்குள் அமைந்துள்ள கண்ணறைகளிலிருந்து அம்பெய்வர். இவர்கள் காவற் காட்டைக் காத்தற்குச் செய்யும் போரை ஊர்ச்செரு என்றும், மதில் காத்தலை எயிற்போர் என்றும் கூறுவர். மதிலைக்காக்கும் வீரர்கள் தங்களது குதிரைகளை மதிலின் மீது நடத்தியும் போரிடுவர். இங்ஙனம் மதிலானது

பண்டைத் தமிழ் மன்னர்களின் போர்த் துறைகளுக் கேற்ற சிறந்த இடத்தைப் பெற்றிருந்ததென்பது நூல் களால் அறியப்படுகின்றது.

தமிழ் நூல்களில் **தூங்கெயிலெறிந்த தொடித்தோட் செம்பியன்** என்ற பெயரால் சோழ மன்னன் ஒருவன் சிறப்பிக்கப்படுகிறான். இம் மன்னன் அரக்கர்களால் இரும்பு, செம்பு, வெள்ளி ஆகிய உலோகங்களால் அமைக்கப்பட்டதும், ஆகாயத்தில் திரியவல்லதுமாகிய அரண்களைத் தன் கைவேலால் எறிந்து வென்றான். அச்சிறப்பு நோக்கிய மக்கள் இவ்வரிய வீரத்திற்கு அறிகுறியாக, இம்மன்னனுக்கு ஒரு கை வளையை அணிவித்தனர். ஆதலின், இம் மன்னன் தூங்கெயி லெறிந்த தொடித்தோட் செம்பியன் எனப் பெயர் பெற்றனன் என்பர். தூங்குதல் என்பது தொங்குதல் என்று பொருள்படும். தூங்கெயில் என்பதற்குப் பலவகை இயந்திரப் பொறிகள் பொருத்தப்பட்டுத் தொங்கும் எயில் என்று பொருள் கொள்வதே சிறப்பு. **நற்றேர்ச் செம்பியன்** என்னும் சோழ மன்னன், மிகுதியான இயந்திரப் பொறிகள் பொருந்தப் பெற்றுத் தூங்கெயில் என்று புகழப்பெற்றதும், பகைவர்கள் அணுகுதற்கரியது மான பகைவரது மதிலை அழித்துப் புகழ் பெற்றான் என்ற செய்தியை மணிமேகலை, சிலப்பதிகாரம், புறநானூறு, பத்துப்பாட்டு, கலிங்கத்துப் பரணி முதலிய நூல்கள் கூறுகின்றன.

இங்ஙனம் அமைந்த கோட்டைகள் சிற்ப இலக்கணப்படி நான்கு வகைப்படும். சமவெளிகளில் அமைந்த கோட்டையை, **ஸ்தலதுர்க்கம்** என்றும்,

காட்டுப் பகுதிகளின் பாதுகாப்பையுடையவைகளை **வனதுர்க்கம்** என்றும், மலைப்பாதுகாப்பைப் பொருந்தியவற்றைக் **கிரிதுர்க்கம்** என்றும், நீரரணுடையவற்றை **ஜலதுர்க்கம்** என்றும் கூறுவர்.



# 3. வேலூர்க் கோட்டை

வேலூர், பல நூற்றுண்டுகளுக்கு முன் ஒரு வேலங் காட்டருகில் தோற்றுவிக்கப்பட்டதால், அப்பெயரைப் பெற்றது என்பர். வேலூரை இராயர் வமிசத்து மன்னர்கள் ஆண்டுவந்தமையின், இராய வேலூர் என்ற பெயரும் ஏற்படலாயிற்று. வரலாற்றுப் பெருமை வாய்ந்த இராயவேலூரை நினைக்கும்போது நம் நினைவுக்கு வருவன அவ்வூர்க் கோட்டையும், அக்கோட்டை யினுள்ளே உட்கோட்டையாக அமைந்திருக்கும் ஜலகண்டேசுரர் கோவிலும், அக் கோவிலின் கலியாண மண்டபத்தில் காணும் ஒப்பற்ற அரிய வேலைப் பாடமைந்த சிற்பங்களுமேயாம்.

## கோட்டையின் அமைப்பும் அகழியின் சிறப்பும் :

இவ்வூர்க் கோட்டை தென்னிந்தியாவின் போர்க்கட்டடக் கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. தற்போது தென்னிந்தியாவிலுள்ள கோட்டைகளில் அதிகமான அழிபாட்டுக்கு உட்படாது முழுமையாக இருக்கும் கோட்டை இஃது ஒன்றேயாகும். கோட்டை மிகப் பரந்த வெளியில் பள்ளமான இடத்தில் அமைந்திருக்கிறது. கோட்டையின் வெளிப்புறங்கள் பரந்த வெளியாகவும் மேடாகவும் இருப்பதால், பகைவர் வெளியிடங்களில் பாதுகாப்பாகத் தங்கிக் கோட்டையைத் தாக்க முடியாமல் போவதோடு, பீரங்கி முதலியவற்றுல் உள்ளிடங்களைத் தாக்குதற்கும்

இயலாமல் போகிறது. கோட்டையின் பொது அமைப்பு ஒழுங்கற்ற நாற்கோண உருவில் அமைந்திருக்கிறது. கோட்டையின் முக்கிய உறுப்புக்களாக மதிற்சுவரையும், அகழியையும் உள்ளிடத்தையும் கருதலாம்.

கோட்டையின் வெளிப்புறத்தைக் கடந்தவுடன் முதலாவதாகக் காணப்படுவது அகழியேயாம். அகழி, சுமார் 12 மீட்டர் ஆழமும், சில இடங்களில் 90 மீட்டர் அகலமும் உடையதாகக் காணப்படுகிறது. இவ்வகழியில் நீர் நிறைந்திருக்கிறது. அகழிக்காக நகரத்தின் கீழ்ப்புறத்தில் அமைந்திருக்கும் குன்றுகளிலிருந்து ஓடிவரும் நீரைச் சூரியகுண்டம் என்றதொரு குளத்தில் தேக்கிவைத்துப் பாதுகாக்கின்றனர். அக்குளத்திலிருந்துதான் கோட்டையின் அகழிக்குப் பூமிக்குள்ளே கால்வாய் அமைத்து, மட்குழாய்களின் வழியாகத் தண்ணீர் கொண்டு செல்லப் படுகிறது. அகழியைப் பகைவர் கடக்காமலிருப்பதற்காக முன்னர்ப் பலவகை முதலைகளும், தாமரைக் கொடிகளும் வளர்க்கப்பட்டன. முற்காலத்தில் இராசத்துரோகிகள், கொலைக் குற்றம் செய்தோர், போர்க் கைதிகள் முதலியோரை முதலைக்கு இரையாக இதில் தூக்கிப் போட்டுவிடுவார்களாம். பிற்காலத்தில் கோட்டையில் தங்கியிருந்த வெள்ளையர்கள் வேடிக்கையாக அம் முதலைகளை வேட்டையாடிச் சுட்டுக் கொன்றுவிட்டனர். மீண்டும், 1878ஆம் ஆண்டு பல்மனேர் தாலூகாவிலிருந்து முதலைக் குட்டிகளைக் கொண்டுவந்து அதில் விட்டனராம். அவற்றின் சந்ததிகளில் சில இன்னும் காணப்படுகின்றன.

பண்டைக்காலத்தில் அகழியைக் கடந்து உள்ளே செல்லப் பெரியதொரு தூக்குப்பாலம் இருந்ததாம். இப்போது அகழியைப் பாலத்தால் கடந்து கோட்டைச் சுவரைத் துளைத்துக்கொண்டு செல்லுகின்ற பெரிய தொரு பாதை அமைக்கப்பட்டிருக்கிறது. மற்றும் அகழியின் தெற்குப் பக்கத்தில் கற்பாறைகளால் கட்டப் பட்ட ஒரு குறுகிய பாதையும் அதனைக் கடப்பதற்கு உதவுகிறது.

அகழியின் மேற்குப் பக்கத்தில் கல்லால் அமைக்கப் பட்ட ஒரு குறுகியபாதை முன்னாளில் கட்டப்பட்டிருந்தும் தற்போது பயன்படாத வகையில் அடைத்து வைக்கப் பட்டிருக்கிறது. இன்றும் அகழிகளில் ஏராளமான தாமரை அல்லிக்கொடிகள் வளர்ந்து கண்ணுக்கினிய காட்சியைக் கொடுக்கின்றன.

**மதிற்சுவர்களின் மாண்பு:**

இனி, அகழிக்கு அடுத்தபடியாகக் காணப்படும் மதில்களைக் காண்போம். மதிற்சுவர்கள் மூன்று பெரும் பிரிவுகளாக அமைந்திருக்கின்றன. கோட்டையின் பெரிய சுவர்களெல்லாம் கருங்கற்களால் கட்டப் பட்டவை. கருங்கற்கள் நன்கு செதுக்கப்பட்டுக் காரையின் உதவியில்லாமல் காடிவெட்டி இணைக்கப் பட்டிருக்கின்றன.

முதற்பகுதி, அகழியின் உட்பகுதிச் சுவர்க்கு மேலே சுமார் 3 மீட்டர் உயரம் வரை அமைந்துள்ளது. இச் சுவர்கள் மிகப்பெரிய பாறைப் பாளங்களால் கட்டப் பட்டிருக்கின்றன. இச்சுவர்களின் இடையில்

சுண்ணும்புக் காரை செலுத்திப் பொருத்தப்படாமல், கற்களின் கன அளவையும், காடி அமைப்பையும் கொண்டு பொருத்தப்பட்டிருக்கின்றன. இம்மதிலின் மேல் வரிசையில் அரை வட்டவடிவமான பெருங் கற்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன. இக்கற்கள், மதிற் சுவருக்குச் சிறந்த அழகைத் தருவதோடு, அகழியைக் கடக்க முற்படும் பகைவரைப் பாதுகாப்பாக மறைந்து நின்று பார்த்துச் சுடுவதற்கான துளைகள் அமைந்தனவாகவும் இருக்கின்றன. இத்துளைகள் வெளியிலிருந்து பார்ப்பதற்குச் சிறிய புள்ளிகள் போலத் தோன்றினும், உள்ளமைப்பில் போதுமான அளவு அகன்றதாக அமைந்திருக்கின்றன. மேலும், சுவரில் ஏறத்தாழச் சமமான இடைவெளித் தூரங்களில் நீண்ட சதுர வடிவமுள்ள கிளிக்கூடுகள் போன்ற ஏவறைகள் பல அமைந்து உள்ளன. அகழியின் நடுப்பகுதியை அடைந்தவரைத் தாக்குவதற்கு மேலே கண்ணறைகளும், அகழியின் உட்புறச் சுவரை அடைந்தவர்களைத் தாக்குவதற்கு ஏற்றவண்ணம் கீழ்நோக்கிய துளைகளும் அமைந்தனவாயிருக்கின்றன. இக் கிளிக்கூடுகள் உட்புறச் சுவருக்கு வெளியே அகழிக்குள் நீட்டிக்கொண்டிருப்பதோடு, மேற்பகுதியில் பாதுகாப்பாக மூடப்பட்டுமிருக்கிறது. கோட்டைச் சுவரின் வெளிப்பகுதியில் காணும் இவ் வலங்கங்கள் கோட்டைக்குச் சிறப்பான பாதுகாப்பைத் தருவதோடு, சிறந்த அழகுப் பொருள்களாகவும் காட்சியளிக்கின்றன. இத்தகைய கிளிக்கூடுகள் கோட்டையின் கிழக்குப் பக்கத்தில் முப்பத்து மூன்றும், தெற்கில் இருபதும், மேற்கில் பதினெட்டும், வடக்கில் பதினாறுமாக எண்பத்தேழு கூடுகள் அமைந்திருக்கின்றன.

வெளிப்புறச் சுவரில் மற்றுமொரு பெரிய பாதுகாப் பாகப் பிதுக்கங்கள் அமைந்திருக்கின்றன. இவை மூலைப் பகுதிகளில் மிகப் பெரிய அளவில் அகழிக்கு உள்ளே நீட்டிக்கொண்டிருக்கின்றன. இப்பிதுக்கங்கள், அகழி யில் இறங்கும் பகைவரை மிகவும் எளிதாக நெருங்கித் தாக்குவதற்கு ஏற்றதாக இருக்கின்றன. இப்பிதுக்கங் களிலும் மிகுதியாகக் கிளிக்கூட்டு அலங்கங்கள் காணப் படுகின்றன. இப்பிதுக்கங்கள் மூலைப் பகுதிகளில் மிகப் பெரிய அளவிலும் மற்ற இடைப்பகுதிகளில் சற்றுச் சிறு அளவிலும் காணப்படுகின்றன. இத்தகைய பிதுக்கங் களில் மிகப் பெரும்பாலானவை வட்டமாகவும், சிறுபான் மையானவை சதுரமாகவும் அமைந்துள்ளன. இத்தகைய பிதுக்கங்கள் கிழக்கில் ஏழும், தெற்கில் மூன்றும், மேற்கில் நான்கும், வடக்கில், ஆறுமாக இருபது பிதுக் கங்கள் காணப்படுகின்றன. தெற்குப் பகுதிச் சுவரும் மேற்குப் பகுதிச் சுவரும் பகைவர்களின் தாக்குதலுக்கு உட்பட்டு, அலங்கம் முதலியவை ஓரளவு அழி பாடுற்றிருக்கின்றன. மற்ற பகுதிகள் சிறிதும் கெடாது நல்ல நிலையில் காணப்படுகின்றன. வெளிப்புறச் சுவரின் உட்பகுதியிலிருந்து அகழிக்கு இறங்கக் கிழக்குப் பகுதியில் இரண்டும்,வடக்கு,தெற்கு,மேற்கு ஆகிய பகுதி களில் ஒவ்வொன்றுமாகத் திட்டி வாயில்கள் (சிறு வழிகள்) இருக்கின்றன.

அதனை அடுத்துக் கோட்டையின் இரண்டாவது சுவர் எழுப்பப் பெற்றிருக்கிறது. இச்சுவர்தான் கோட்டையின் சிறந்த பாதுகாப்பாக விளங்கும் சுவராகும். இச்சுவருக்கும், வெளிச்சுவருக்கும் சுமார் 12 மீட்டர் இடைவெளியிருக்கிறது. இச்சுவரும் மிகச்

சிறந்த கற்களால் இரட்டைச் சுவராக 15 மீட்டர் உயரமும், 9 மீட்டர் அகலமும் கொண்டதாக அமைந்திருக்கிறது. மேற்சுவரின் மேற்பகுதி, முன்பக்கம் சற்றுச் சரிவாகவும் பின்னே உயர்ந்தும், முக்கோணமும் நீண்ட முக்கோணமுமான வடிவங்கொண்ட 1 மீட்டர் உயரத் திட்டுகளைக் கொண்டதாகக் காட்சியளிக்கிறது. அதைச் சேர்ந்தாற்போல்தான் சுவரின் மூன்றும் பகுதியான இராமபாட்டை அமைந்திருக்கிறது. மதிற்சுவரின் இரண்டாம் பகுதியிலும், மூலைப்பகுதிகளில் வட்டப் பிதுக்கங்கள் அமைந்திருக்கின்றன. இக்கனமான சுவரின்மீது மழை பெய்யும்போது தண்ணீர் தேங்கிச் சுவரைக் கெடுத்துவிடாதிருக்க, மேற்பகுதி சுண்ணும்புக் காரையால் பூசப்பட்டிருப்பதோடு, சுவர்களின் இடைப் பகுதிகளில் நீர் கழிவதற்கேற்ற பள்ளங்கள் அமைக்கப் பட்டிருக்கின்றன. இம்மேற் பகுதியைப் பிற்காலத்தில் இக்கோட்டைக்குவந்துசேர்ந்த பொறியியல் வல்லுநர்கள் கட்டியிருக்கலாமென்று கருதப்படுகிறது. இத்தகைய பள்ளங்கள் மதிலின் முற்பகுதிச் சுவர்களிலும் அமைக் கப்பட்டுள்ளன.

**இராமபாட்டை:**

இனி, மதிற்சுவரின் மூன்றும் பகுதியாகிய இராம பாட்டையைப் பற்றிக் கவனிப்போம். இராமபாட்டை, கோட்டையின் உட்பகுதியிலிருந்து சுமார் 5 மீட்டர் உயரமுள்ளதாய் அமைந்திருக்கிறது. கோட்டையின் உட்பகுதியிலிருந்து கோட்டை மதிலின் மேலிடங் களுக்குச் செல்ல அங்கங்கே படிக்கட்டுகள் அமைந் திருக்கின்றன. இப்பாதை, சுமார் 6 மீட்டர் அகலம் கொண்டதாக அமைந்திருக்கிறது. ஒரே மட்டமாக

இருக்கும் இப்பாதை போர்க் கருவிகளையும், வேறு தளவாடங்களையும் போர்க்காலங்களில் போரிடும் வீரர்களுக்குக் கொடுப்பதற்கு வண்டிகளில் ஏற்றிச் செல்வதற்கு ஏற்றவாறு உள்ளது. இரண்டாவது மதில் 3 மீட்டர் அகலமுள்ள சுவரின் மறைவில் பாதுகாப்பாகப் பகைவரறியாமல் ஆட்கள் சென்று வருவதற்கு ஏற்றதாக இப்பாதை அமைந்திருக்கிறது.

இப்பகுதியின் வடகிழக்கு மூலையில் பெரியதொரு உயர்ந்த அலங்கம் விளங்குகிறது. தற்போது இராம பாட்டையின் தென்மேற்கு மூலைத்திட்டில் கொடிக் கம்பம் ஒன்று காட்சியளிக்கின்றது.

**கோட்டையும், கோவிலும் :**

கோட்டையின் உட்பகுதி, முற்காலத்தில் நான்கு மாடவீதிகள் கொண்டதொரு நகரமும், ஜலகண்டேசுரர் கோவிலும் அதற்கு எதிரில் ஒரு பெரிய குளமும் கடைகளும் உடையதாக விளங்கிற்றும். ஆனல், இக்காலத்தில் சிற்சில கட்டடங்களும் கோவிலும் மட்டுமே காணப்படுகின்றன. குளம் இருந்த சுவடே காணப்படாமல் மறைந்து, அவ்விடம் இப்போது விளையாட்டு மைதானமாக இருக்கிறதாகக் கூறப்படுகிறது. கி. பி. 16ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியில் விஜயநகர ஆட்சிக்குக் கீழ்ப்பட்ட வேங்கடாத்திரி என்னும் சிற்றரசன் வேலூர்க்கோட்டையில் வாழ்ந்து வந்தான் என்றும், அவன் சிற்பம், ஓவியம், இசை, தத்துவம் முதலிய கலைகளில் விருப்பமுடையவனுயிருந்தானென்றும், அவனது காலத்தில் கோவிலும் கோட்டையும் சிறப்புடன் விளங்கின என்றும், விஜயநகரப்

பேரரசின் அழிவால் அச்சிற்றரசன் இறந்தானென்றும், அவனுக்குப்பின் கோவிலும் கோட்டையும் பொலி விழந்தன என்றும் கூறப்படுகிறது.

### ஜலகண்டேசுரர் கோவிலும் சிற்ப வேலைப்பாடும் :

கோட்டையின் உட்பகுதியின் வடக்குப் பக்கத்தில் உட்கோட்டையாக அமைந்திருக்கும் ஜலகண்டேசுரர் கோவிலைப் பற்றி, இனி அறியத் தொடங்குவோம். கோட்டையின் உட்பகுதியைவிடக் கோவில் இருக்கும் இடம் தாழ்ந்து உள்ளது. கோவிலில் உள்ள இலிங்கம், நீரில் அமைந்திருந்ததால், ஜலகண்டேசுரர் என்று பெயர்பெற்றது. தென்புறம் நோக்கி இருக்கும் இக்கோவிலுக்குப் பிற கோவில்களில் இருப்பன போலவே, திருச்சுற்று மதில் முதலியன அமைந்திருக்கின்றன. இக்கோவிலின் மேற்குப் பக்கத்தின் முற்பகுதியில் அமைந்திருக்கும் கலியாண மண்டபம் மிக அரிய வேலைப்பாடமைந்த சிற்பச் சிறப்பு வாய்ந்ததாக விளங்குகின்றது. அதிற்காணும் ஒவ்வொரு தூணும், கூரையும், மேலிடங்களும் மிக நுட்பமான சிற்றுளி வேலைகளால் நிரம்பப் பெற்றிருக்கின்றன. பேரழகு வாய்ந்த ஒற்றைக்கல் சிற்பங்களாகிய தூண்களைக்கொண்ட மண்டபத்தின் நடுப் பகுதி, பல பருத்த தூண்களால் தாங்கப்படுகிறது. தூண்களை இணைக்கும் படியான பகுதிகளிலே அழகு வாய்ந்த கோலங்கள் செதுக்கப்பட்டுள்ளன. நடுவில் அமைந்திருக்கும் ஐந்து தூண்களும் அவற்றைச் சேர்ந்த நான்கு வரிசை மேற் கூட்டுகளும் ஒரே கல்லால் ஆனவை. ஒரு சிறிதும் உடைசலோ விரிசலோ இன்றி, இவ்வேலையை நிறை

வேற்றியுள்ளது, பெருவியப்புக்குரியதாகவே விளங்கு கிறது. மண்டபத்தின் மேற்பகுதியில் செதுக்கப்பட்டுள்ள வேலைப்பாடுகள் மனத்தைக் கவர்வனவாயுள்ளன.

மண்டபத்தின் முன் பகுதியிலும், இரண்டாம் பகுதியிலும் ஐந்தடுக்காகவும் நான்கடுக்காகவும் விரிந்த தாமரை மலரின் இதழ்களின்மேல் கிளிகள் நேராகவும் தலைகீழாகவும் அமர்ந்து மூக்காலும், கால்களாலும் இதழ்களைப் பற்றி, மலரைத் தாங்கிக் கொண்டிருப்பன வாகச் செதுக்கப்பட்டுள்ளன. மற்றும், அம்மேற்கூட்டின் மூலைகளில் கல்லாலான வளையங்கள், இரண்டு மூன்று அடுக்குகள் தொங்குகின்றன. இவற்றைக் காண்போர் எவரும் வியப்புறுமலிருக்கமுடியாது. ஆமையால் சுமக் கப்பட்டிருப்பது போன்று, மண்டபத்தின் மேற்குப்பகுதி மேடை செதுக்கப்பட்டிருக்கின்றது. மற்றும் அம் மண்டபத்தின் வெளியே ஏறத்தாழ 1 மீட்டர் உயரமும் 1 மீட்டர் அகலமும் கொண்ட இரண்டு பெரிய கல் தொட்டிகள், தேங்காய் ஓட்டைப்போல, 2 சென்டி மீட்டர் கனத்தில் செதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. கோவில் திருச்சுற்றின் வடமேற்கு மூலையில் ஆபத்துக் காலங்களில் தப்பிச் செல்வதற்கேற்றதொரு சுரங்க வழியும் அமைக்கப்பட்டிருக்கிறது. கோவிலின் உட்பகுதி, எளிய வேலைப்பாடுகளுடன்தான் விளங்குகிறது. தற்போது இக்கோவிலின் மூலத்தானத்தில் இலிங்கப் பிரதிட்டையோ, வேறு உருவச்சிலைகளோ இல்லை. மற்றும் பூசனை, திருவிழா முதலிய எவ்வித நிகழச்சிகளும் இருப்பனவாக அறியக்கூடவில்லை. பகையரசர்களின் படையெடுப்பால், இக்கோவில் பாழ்பட்டுள்ளதென்றே கூறவேண்டும்.

இக்கோவிலின் வெளிப்புறத்தே மிகச் சிறந்த வேலைப்பாடமைந்த இரண்டு வாயிற்காவலர்களின் சிலைகளும், இரண்டு பெரிய பீரங்கிகளும் உள்ளன. இக்கோவிலின் முற்பகுதியில் இருக்கும் பெரிய கோபுரம், சற்றுப் பழுதுபட்டுக் காணப்படுகிறது. இக்கோவிலின் கலியாண மண்டபத்தில் காணப்படும் சிற்பங்கள், மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் காணப்படும் விஜய நகர மன்னர்களின் காலத்துச் சிற்பங்களோடு ஒத்தன வாக இருக்கலாமென்று அறிஞர்கள் கருதுகின்றனர். கலியாண மண்டபத்தின் சிறந்த சிற்ப வேலைப்பாடுகளைக் கண்ட ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியார் இம் மண்டபத்திற்காணும் சிற்ப வேலைப்பாடுகளமைந்த பகுதிகள் முழுவதையும் பெயர்த்து இங்கிலாந்துக்கு எடுத்துச் செல்ல விரும்பினார்கள் என்றும், அவர்கள் அவற்றை எடுத்துச் செல்வதற்காக ஏற்பாடு செய் திருந்த கப்பல், எதிர்பாராத வகையில் மூழ்கி விட்ட தால், அவர்களது எழுச்சி தளர்ந்து விட்டதென்றும் கூறப்படுகிறது.

**கோட்டையையும் கோவிலையும் பற்றிய வரலாறு :**

இக்கோட்டையும் கோவிலும் பொம்மி ரெட்டி என்பவனால் கட்டப்பட்டன என்று கூறப்படுகிறது. பொம்மி ரெட்டி, கிருஷ்ணா நதிக்கரையில் உள்ள பத்திராசலம் என்ற ஊரைச் சேர்ந்தவன். அவன் தகப்பன் யாதம நாயுடு என்பவன். இத்தகப்பனுடன் பிறந்தவர்கள், பொம்மி ரெட்டியையும், அவன் சகோதரன் திம்மி நாயுடு என்பவனையும் கொன்று, பொருள்களைக் கைப்பற்றத் திட்டமிட்டனர். அவர்கள்

எதிரிகளிடமிருந்து தப்பித் தங்கள் தாய் நாட்டை விட்டுத் தெற்கு நோக்கிப் புறப்பட்டனர். இராமேசுவரம் முதலிய புண்ணியத் தலங்களுக்கு யாத்திரை சென்று வரும் வழியில், வேலூரின் சுற்றுப்புறம் அவர்களைக் கவர்ந்தது. அங்கேயே அவர்கள் தங்கிவிட விரும்பி, வேலூருக்குத் தெற்கே 8 கிலோ மீட்டர்கள் தொலைவி லுள்ள கைலாசப் பட்டணம் என்னும் ஊரில் வாழ்ந்த கரிகாற் சோழனிடம் தாமும் அங்குக் குடியேற அனுமதி அளிக்க வேண்டினர். சோழன் அனுமதி பெற்ற அவர் களிருவரும் அங்குத் தங்கித் தமது கால்நடைகளை வளர்த்துப் பெருக்கிப் பெருஞ் செல்வரானார்கள்.

ஆரணியை ஆண்டு வந்த ஒருசிற்றரசன், அவர்களை ஒரு முறை தாக்கிப் படுதோல்வியடைந்தான். இதனால் மகிழ்ந்த கரிகாலன் பொம்மி ரெட்டிக்குப் பல பரிசுகளும் உரிமைகளும் வழங்கினான். இவ்வாறாக மேனிலை எய்தியவனே பொம்மி ரெட்டி. இவன் கோவில் கட்டியதற்கு வேறு வேறு வரலாறுகள் வழங்கி வருகின்றன. வேட்டையின் பொருட்டு நாயுடன் சென்ற பொம்மி ரெட்டி, தன் நாய் முன் செல்ல ஒரு முயலைத் துரத்திச் சென்றானாம். அம்முயல் நாயிடமிருந்து தப்ப, ஓர் எறும்புப் புற்றைச் சுற்றிச் சுற்றி வந்ததாம். அச் சமயம் “ இந்த எல்லையில் ஒரு கோவில் கட்டுவாயாக ” என்று அசரீரி கூறிற்றாம். அதன்படி கோவில் எழுப்பினான் என்று கூறுகிறது ஒரு கதை. மற்றொரு கதை பின்வருமாறு கூறுகிறது: பொம்மி ரெட்டியிடம் ஒரு பசு இருந்ததாம். அதற்கு ஐந்து பால் காம்புகள் இருந்தனவாம். அப்பசு அருகேயுள்ள ஒரு குளத்தின் இடையே இருந்த ஒரு புற்றில் வாழ்ந்து வந்த ஐந்துதலை

நாகப்பாம்பிற்குப் பாலூட்டிற்றும். அப்பாம்புருவில் பாலருந்திய சிவபெருமான் பொம்மி ரெட்டியின் கனவில் தோன்றி ஒரு புதையலை அவனுக்குக் காட்டி, அதைக் கொண்டு ஒரு கோவில் எழுப்பக் கட்டளையிட்டனராம். அதன்படி கோவில் கட்டினனும்.

முடிவு :

இவ்வாருகத் தோன்றிய அழகிய இக்கோவிலில் பூசை கிடையாது. இங்ஙனம் அமைந்துள்ள இக் கோட்டையுள் மன்னன் வாழவில்லை. ஆனல், இங்குக் காவற் படையினர் பயிற்சிசாலை ஒன்றும், கோட்டையின் தென்கிழக்குப் பகுதியில் சிறியதொரு சிறைக்கூடமும் இருக்கின்றன.



# 4. செஞ்சிக்கோட்டை

தமிழ் நாட்டின் பழங்காலக் கோட்டைகளுள் செஞ்சிக்கோட்டையும் ஒன்று. இது தென்னார்க்காடு மாவட்டத்தின் வடமேற்குப் பகுதியில் செஞ்சி எனப் பெயர் பூண்ட தாலூகாவிலுள்ளது. செஞ்சியாற்றின் கரைக்கு மேற்கே 1½ கிலோ மீட்டர் தூரத்தில் இக் கோட்டை விளங்குகிறது. இக்கோட்டை முக்கோண வடிவில் மூன்று குன்றுகளுக்கு நடுவே ஆய்த எழுத்தைப் போன்று அமைந்திருக்கிறது. இம்மூன்று குன்றுகளும் வலிய கருங்கற் சுவர்களால் இணைக்கப்பட்டிருக்கின்றன. இச்சுவர்களின் அகலம் பதினெட்டு மீட்டரும், உயரம் ஆறு முதல் எட்டு மீட்டரும் உள்ளனவாக இருக்கின்றன. மதிலின் அருகே ஆழ்ந்தகன்ற அகழி ஒன்றும் காணப் படுகிறது. இதன் அகலம் 25 மீட்டர்களாகும். கோட்டையின் வெளிச் சுற்றளவு சுமார் 39 கிலோ மீட்டர்கள். உட்கோட்டை 5 கிலோ மீட்டர்கள் சுற்றளவுடையதாகும். இந்த இரண்டு கோட்டை களுக்கும் கோட்டை வாயில்களிலிருந்தன. தற்போது வெளிக்கோட்டையின் வாயில்கள் அடைக்கப் பட்டுவிட்டன. இப்பொழுது இருப்பவை இரண்டு வாயில்களே. அவை திண்டிவனத்திலிருந்து திருவண்ணா மலைக்குச் செல்லும் பாதைக்காக மதிலை இடித்து அமைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றின் வழியாகவே இப்போது கோட்டைக்குப்போக முடியும். உட்கோட்டை யிலிருந்த இரண்டு வாயில்களும் இன்னும் அப்படியே

இருக்கின்றன. அவற்றில் வடக்கிலுள்ளது ஆர்க்காட்டு வாயில் அல்லது வேலூர் வாயில் என்றும், கிழக்கிலுள்ளது புதுச்சேரி வாயில் என்றும், அங்குள்ள மக்கள் வழங்கி வருகின்றூர்கள்.

இம்மூன்று குன்றுகட்கும் இடையே முக்கோண வடிவமான நிலப்பரப்புள்ளது. இஃது ஏறக்குறைய ஐந்து கிலோ மீட்டர் சுற்றளவுள்ளது. இங்குள்ள கோட்டையைத்தான் கீழ்க்கோட்டை என்று கூறுவார்கள். கீழ்க்கோட்டைக்குள் இருக்கும் குன்றுகளுள் ஒன்று வடக்கிலும், மற்ருென்று தெற்கிலும், வேருென்று மேற்கிலுமாக அமைந்துள்ளன. வடபாலுள்ளது கிருஷ்ணகிரி எனவும், தென்பாலுள்ளது சந்திராயன் துர்க்கம் எனவும், மேற்பாலுள்ளது இராஜகிரியெனவும் பெயர் பெறும். இராஜகிரிக்குத் தெற்கிலுள்ள சிறிய குன்றைச் சக்கிலி துர்க்கம் அல்லது சங்கிலி துர்க்கம் என்றும் கூறுவர். இவற்றுள் மிகப் பெரியதும் சிறந்ததும் இராஜகிரியே யாகும்.

**இராஜகிரி :**

இராஜகிரி ஏறக்குறைய முந்நூறு மீட்டர் உயரமுள்ளது. இக்குன்றின் வடபகுதி, செங்குத்தாய் அமைந்துள்ளது. இக்குன்றைச் சுற்றிக் கீழ்க்கோட்டையினுள் காப்புச்சுவர்கள் வலுவாக்கப்பட்டுள்ளன. எனவே, இதைக் கீழ்க்கோட்டையினுள் அமைந்திருக்கும் உட்கோட்டையென்று கூறலாம். இராஜகிரியின் மேலே ஏறி, உச்சியை அடைவதற்கு உட்கோட்டையின் வழியாக ஒரே வாயில்தான் அமைந்திருக்கிறது. இவ்வாயில், உட்கோட்டையின் பகுதியில் கிழக்கு நோக்கியுள்ளது.

இவ்வாயிலிலிருந்து வரிசையாகக் கட்டப்பட்டுள்ள சுவர்களின் நடுவே மேலேறிச் செல்லுவதற்குப் படிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இப்படிகளின் வழியாகக் குன்றின் பாதி உயரத்தைக் கடந்துவிட்டால் சிறிதளவு சமநிலங் காணப்படுகிறது. இச்சம நிலத்தில் ஒன்றிரண்டு மரங்களும் புற்றரைகளும் காணப்படுகின்றன. இராஜகிரியைக் காணச் செல்லுவோர் இங்குச் சிறிது நேரம் தங்கி, இளைப்பாறிச் செல்ல வாய்ப்புடையதாயிருக்கிறது. இதற்கு மேலுள்ள பகுதி மிகவும் செங்குத்தாயிருப்பதால், ஏறிச் செல்வதற்கு மிகவும் கடினமானதாக இருக்கிறது. இங்கிருந்து பாதை வளைவாகத் தொடங்கி மேற்புறமாகச் சென்று, பின்னர் வடபுறம் உயரச்செல்லுகிறது. இப்பாதை, மேலிடத்தில் சமதளமுள்ள ஒரு பாறைவரை சென்று முடிகிறது. இப்பாறைக்கும் இராஜகிரியின் உச்சிக்கும் இடையில் சுமார் பன்னிரண்டு மீட்டர் அகலமுள்ள பிளவு ஒன்று மலையின் அடிப்பகுதி வரையிலும் காணப்படுகின்றது. மூன்று புறங்களிலும் ஏறமுடியாத பாறைகளைப் பெற்றுப் பாதுகாப்பு மிகுந்த இக்குன்று, நான்காம் பக்கத்தில் செங்குத்தான மலைப்பிளவு ஒன்றை இயற்கையகழியாகக் கொண்டிருக்கிறது. இந்தப் பிளவு, ஏழு மீட்டர் அகலமும் பதினெட்டு மீட்டர் ஆழமும் உடையது. கோட்டையை ஆண்டுவந்த மன்னர்கள் அவ்வகழியை மேலும் மேலும் ஆழமாக்கி விட்டனர். இப்பிளவினை இரும்புப் பாலத்தின் உதவியால் கடந்து வந்தார்களென்றும், அப்பாலம் பழுது பட்டமையால், தற்போது மரப்பாலம் அமைத்திருக்கிறார்கள் என்றும் தெரிகிறது. இதைக் கடந்தால் இராஜகிரியின் உச்சியிலுள்ள கோட்டை வாயிலை அடையலாம்.

இராஜகிரியின் வடக்குப்பாகம் செங்குத்தாய் அமைந்துள்ளதெனக் கூறினேம். கிழக்குப் பகுதியும் தெற்குப் பகுதியுங்கூட உச்சியிலிருந்து 120 மீட்டர் உயரம் கீழ் நோக்கிச் செங்குத்தாக அமைந்துள்ளது. அதற்கு அப்பால் சமநிலம்போல நாற்பத்தைந்து மீட்டர் அகலம் பிதுக்க முற்றும், அங்கிருந்து தரை வரையில் சரிவுற்றும் அமைந்திருக்கிறது. பிதுக்கமுற்று விளங்கும் இச்சமநிலத்தை இம்மலையின் பீடபூமிப் பாகமாகக் கொள்ளலாம். பீடபூமியின் ஓரங்களில் உயர்ந்த கருங்கற் சுவர்கள் எழுப்பப் பெற்றுள்ளன. உட்கோட்டையி லிருந்து இப்பீடபூமிப் பாகம் வரையில்தான் எளிதாக ஏறுவதற்குப் படிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இப் படிகள் செல்லும் மார்க்கத்தில் இடையிடையே பத்துச் சிறு மண்டபங்கள் அமைந்துள்ளன. படிகளின்மீது ஏறிப் புளிய மரங்கள் நிறைந்த பீடபூமிப் பாகத்தை அடைந்த உடனே அதன் கீழ்ப்பகுதியில் அழகியதொரு சிறு கோவிலைக் காணலாம். அதை அரங்கநாதர் கோவிலென்று கூறுகின்றனர். ஆனுல், அதில் உருவச் சிலை ஒன்றும் இல்லை.

அரங்கநாதரது கோவிலுக்கு மேற்கே சென்றல், துர்க்கைக்குரிய சிறிய கோவில் ஒன்று இருக்கிறது. இதைக் கமலக்கண்ணி அம்மன் கோவிலென்று கூறு கின்றனர். கோட்டையின் மற்ருெரு பகுதியில் செஞ்சி யம்மன் என்னும் ஒரு கன்னித் தெய்வத்தின் பெயர்தான் இக் கோட்டைக்கும் இந் நகரத்திற்கும் பெயராக அமைந்துள்ளதென்று கூறுகின்றனர். இக் கோவிலின் முன்னர், பெரியதொரு பாறையிருக்கிறது. அப் பாறையின்மீது வில், வாள், அம்பு, எருமைத்தலை,

ஆட்டுத்தலை, மனிதர்தலை முதலிய வடிவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இவ்வம்மனுக்கு இத்தகைய உயிர்ப்பலிகள் கொடுக்கப்பட்டு வந்தன என்பதை இவை குறிக்கின்றன என்று கூறுகின்றனர். கோட்டையில் இத்தகைய பெண் தெய்வங்களின் கோவில்கள் ஏழு இருக்கின்றன. கமலக்கண்ணியம்மன் கோவிலைக் கடந்து சிறிது தூரம் மேற்கே செல்லின், இரண்டு பெரிய பாறைகளின் கீழே ஒரு சுனை இருக்கிறது. அச் சுனையிலுள்ள நீர் மிகக் குளிர்ந்ததாகவும் சுவை மிகுந்ததாகவுமிருக்கிறது. இச்சுனையின் தென் பகுதியிலும் சில மண்டபங்கள் பாழடைந்து கிடக்கின்றன. சுனையைக் கடந்து மேலும் மேற்கே சென்றால், பீடபூமிப் பகுதி அகலம் குறைந்து இராஜகிரியின் செங்குத்தான பாகத்தை அடைகிறது. அப்பாகம் சிறிது அகன்று, சமநிலம்போல் அமைந்திருக்கிறது. அங்கும் அழகிய தொரு கோவில் இருக்கிறது. அதிலும் கடவுளின் சிலை காணப்படவில்லை.

அக்கோவிலின் மேற்கில் உயர்ந்த நீளமான ஒரு மண்டபம் கட்டப்பட்டிருக்கிறது. அதைக் கொலு மண்டபம் என்றும் சங்கீத மண்டபம் என்றும் சொல்லுகிறார்கள். அதனுட்சென்று பேசினாலும் பாடினாலும் அதிலிருந்து உண்டாகும் எதிரொலி, மிகுந்த வியப்பை உண்டாக்குகிறது. அவற்றின் வடபகுதியில் கொடி மரம் நிற்கும் கட்டடமும் தெற்கில் மணிக்கூண்டு போன்றதொரு கம்பமும் காணப்படுகின்றன. மணிக் கூண்டின் தென்புறமாகச் சிறிது தாழ்ந்த இடத்தில் சிறு மண்டபம் ஒன்றில் இரண்டு மீட்டர் சுற்றளவும் மூன்று மீட்டர் நீளமுமுள்ள ஒரு பெரிய பீரங்கி காணப்படுகிறது.

இவற்றைத்தவிர, அச்சிகரத்தின் மேற்குப்பகுதியில் ஆழ்ந்த நிலவறையுள்ள பெரிய கட்டடம் ஒன்றும் காணப்படுகிறது. அது நிதிச்சாலை என்று கூறப்படு கின்றது. சில பாறைகளின் நடுவே ஆழ்ந்த, நீர்நிறைந்த இரண்டு சுனைகள் காணப்படுகின்றன. அங்குள்ள கட்டடங்கள் எல்லாம் மிகவும் உறுதி வாய்ந்தவையாய்ச் சுவரின் பழமையை உணர்த்தி நிற்கின்றன.

இத்தகைய அரிய காட்சிகளைக் கண்டு கீழே இறங்கினால், முற்கூறிய உட்கோட்டையை அடையலாம். அங்கு அழிந்தவைபோக எஞ்சியுள்ள பல சின்னங்கள் காணப்படுகின்றன. யானைகள், குதிரைகள் முதலியன கட்டுமிடங்கள், போர்வீரர்களின் உறைவிடங்கள், மிகப் பெரிய தானியக் களஞ்சியங்கள் உடற்பயிற்சி மண்டபங்கள் முதலிய பல கட்டடங்கள் காண்பவர் களின் கண்களைக்கவரும் வண்ணம் காட்சியளிக்கின்றன. அவற்றுள், தானியக் களஞ்சியம் 9 மீட்டர் நீளமும் 6 மீட்டர் அகலமும் 12 மீட்டர் உயரமும் உடைய மூன்று அறைகளையுடையதாய் விளங்குகின்றது. இக்களஞ்சி யத்தின் சுவர்கள் இரண்டு மீட்டர் அகலமுடையது. இக் களஞ்சியத்தை அடுத்தாற்போல் மிகப் பெரியதொரு சிலம்ப மண்டபமுள்ளது. இதன் கீழ்ப்புறத்தில்தான் அரசர் நீராடும் மண்டபம் இருந்தது எனக் கூறுகின்றனர். இப்போது அவ்விடத்தில் வழவழப்பாகச் செதுக்கப்பட்ட இரண்டு பாறைகள் காணப்படுகின்றன. அவற்றையடுத் துப் போர்வீரர்களின் பாசறைகள் இருக்கின்றன.

இவற்றிற்குக் கிழக்கே இருப்பத்தைந்து மீட்டர் உயரமும் நாற்கோண வடிவமு முடைய ஏழடுக்குகளைப்

பெற்ற கலியாண மகால் என்ற ஒரு கட்டடத்தையும் காணலாம். அது நான்கு பக்கங்களிலும் திறந்த இடங் களைக்கொண்டு, மிக அழகாகவும் புதுமையாகவும் விளங்குகின்றது. இம் மகாலைச் சுற்றிப் பல பெரிய அறைகளுள்ள கட்டடங்கள் உள்ளன. அரசியார் இங்கேதான் வாழ்ந்தனராம். இவ்விடத்திற்குச் சக்கரக் குளத்திலிருந்து மட் குழாய்களின் வழியாகத் தண்ணீர் கொண்டுவரப்பட்டது. சக்கரக்குளத்தின் அருகிலேயே செட்டிகுளமும் இருக்கின்றது. இவ்விரு குளங்கட்கு மிடையே பெரியதொரு அநுமான் உருவச்சிலை யொன்றும் காணப்படுகிறது. செட்டிகுளத்திற்கு வடக்கே மேடையொன்றுண்டு. அங்கேதான் தேசிங்கின் உடல் கொளுத்தப்பட்டதென்று கூறுகின்றனர்.

இவற்றையெல்லாம் கண்ணுற்றபின், கிழக்கிலுள்ள உட்கோட்டையின் வாயிலைக் கடந்து வெளியேயுள்ள கீழ்க்கோட்டைக்கு வருவோமாயின், அதன் நேர் கிழக்கில் சாதுல்லாவின் மசூதியும் அதன் தென்பாரிசத் தில் சந்திராயன் துர்க்கத்தினடுவில், சிதைவுற்று விளங்கும் வேங்கடரமண சுவாமியின் ஆலயமும் காணப் படுகின்றன. இக்கோவில், இப்பொழுது திருவுருவச் சிலையின்றிப் பாழ்பட்ட நிலையிலுள்ளது. இங்கிருந்த வேலைப்பாடு மிகுந்த கற்றூண்கள் பிரெஞ்சுக்காரர்களால் எடுத்துச் செல்லப்பட்டுப் புதுவையிலுள்ள 'டியூப்ளே' சிலையின்முன் நாட்டப்பட்டுள்ளன. கீழ்க் கோட்டைக்கு வெளியே 1½ கிலோ மீட்டர் தொலைவில் பாழடைந்த நிலையில் வேலைப்பாடுகளமைந்திருந்த பட்டாபிராம சுவாமி கோவிலொன்றும் காணப்படுகிறது.

### கிருஷ்ணகிரி:

இக்குன்று இராஜகிரியைவிடச் சிறியது. இக்குன்றின்மீது ஏறிச்செல்ல ஒழுங்கான படிக்கட்டுகள் இருக்கின்றன. இங்கே செங்கற்களாலான மகுதி போன்ற சிகரத்தையுடைய அழகிய கொலுமண்டபம் ஒன்றிருக்கிறது. மேலும், இங்குக் கருங்கற்களாலமைக் கப்பட்ட இரண்டு தானியக் களஞ்சியங்களும் எண்ணெய்க் கிணறும் காணப்படுகின்றன. இங்கும் திருவுருவச்சிலை இல்லாத ஓர் அரங்கநாதராலயம் உண்டு. இம்மலையின்மீதும் நல்ல நீர்ச்சுனை யொன்றுண்டு.

### சந்திராயன் துர்க்கம்:

இது கிருஷ்ணகிரி, இராஜகிரி என்னும் குன்றுகளைப் போல் குறிப்பிடத் தகுந்த சிறப்புடையதன்று. இராஜகிரியில் அரசன் தன் குடும்பத்துடன் தங்கிருந்தான் என்றும் கிருஷ்ணகிரியில் கொலு மண்டபத்திலிருந்து அரசியல் அலுவல்களைக் கவனித்து வந்தான் எனறும் கூறப்படுகின்றது.

### கோட்டையின் வரலாறு:

வரலாற்றுச் சிறப்புப்பெற்ற இடங்கள் பலவற்றுள் செஞ்சிக்கோட்டையும் ஒன்று. இக்கோட்டையை ஆதியில் சேரரும், சோழரும் ஆண்டு வந்தனர். பத்தாம் நூற்ருண்டில் சோழவரசர்களில் ஒருவஞன ஆதித்த சோழன் என்பவன் வடக்கே பாலாற்றங்கரை வரையில் ஆட்சி செய்தான் அப்போது செஞ்சியும் சிங்கபுரம் என்ற பெயருடன் அவன் ஆட்சிக்குட்பட்டிருந்தது. அதன்

பின்னர், பல்லவ மன்னர்கள் சிறிது காலம் அக்கோட்டையை ஆண்டு வந்தனர்.

கி. பி. 1209ஆம் ஆண்டு செஞ்சியின் கோட்டை கொத்தளங்கள் திறம்பட அமையலாயின. **ஆனந்தக்கோன்** என்பான் செஞ்சிக்கருகிலுள்ள தேவனூர், மேலைச்சேரி, ஜெயங்கொண்டான் ஆகிய இடங்கட்குத் தலைவனாக விளங்கினன். அவன் செஞ்சியில் கோட்டையொன்று கட்டி, அவ்விடத்திற்கு ஆனந்தகிரி என்ற பெயருஞ் சூட்டினன். அதன்பின், செஞ்சி கி. பி. 1240இல் யாதவகுல மன்னனான கிருஷ்ணக்கோன் என்பானுக்குரியதாயிற்று.

**கிருஷ்ணக்கோன்** திருமாலை உள்ளன்போடு குல தெய்வமாக வழிபடுபவனாதலின் செஞ்சியின் வடபாலுள்ள குன்றில் அரங்கநாதராலயம் ஒன்றைக் கட்டினன். அக்குன்றுக்குக் கிருஷ்ணகிரி என்ற பெயரும் இவனாலேயே ஏற்பட்டது. மதிற் சுவர்களும், கோவில்களும், பல உயர்ந்த கட்டடங்களும் இவன் காலத்தில் நன்னிலையில் அமைக்கப்பட்டன. இங்ஙனம் கிருஷ்ணக்கோன் ஆட்சியில் செஞ்சிக் கோட்டை பல்வகைச் சிறப்புக்களையும் பெற்று விளங்கிற்று.

அதன் பின், முறையே **கோனேரிக்கோன், கோவிந்தக்கோன்** என்பவர்கள் செஞ்சிக்கோட்டையை முறையாக ஆண்டுவந்தனர். இவர்கள் கோட்டை கொத்தளங்களைப் பலவகையிலும் அழகு படுத்திக் கோபால சுவாமி ஆலயம் ஒன்றையும் கட்டினர். இவர்கட்குப்பின் புளியக்கோன் என்பவன் அரசனானன். இவன் சத்திரம், சாவடி

குளம் முதலியவற்றை ஏற்படுத்தினன். இவ்வாறு செஞ்சிக்கோட்டை கி. பி. 1330 வரை யாதவ குல மன்னர்களாகிய கோனூர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. இவர்களையடுத்துக் குறும்பர்கள் என்னும் ஒருவகையினர் சில ஆண்டுகள் செஞ்சியை ஆண்டு வந்தனர்.

விசயநகர மன்னர்கள் தென்னாட்டில் வலுவடைந்து வந்தபோது, செஞ்சிக் கோட்டையைக் கைப்பற்றிக் கொண்டனர். அக்காலத்தில் பீஜப்பூர் சுல்தான் தன் ஆட்சியை விரிவாக்க எண்ணினார். அவரிடம் ஷாஜி என்ற மகாராட்டிர வீரர், படைத்தலைவராக விளங்கினார். இவர் அஞ்சா நெஞ்சம் படைத்த சிறந்த வீரர். போரில் பகைவர்களை முறியடிப்பதில் நிகரற்றவர். பீஜப்பூர் சுல்தானுக்காகத் தென்னாட்டைக் கைப்பற்ற ஷாஜி பல்வகைப் படைகளோடும் புறப்பட்டார். ஷாஜி தன் போர்த் திறத்தால் செஞ்சிக்கோட்டை, தஞ்சைக் கோட்டை முதலியவற்றைக் கைப்பற்றி, பீஜப்பூர் சுல்தான் ஆட்சிக்குட்படுத்தினார். மேலும் செஞ்சியையாண்ட விசயநகர மன்னர்களும் தலைக்கோட்டைச் சண்டையால் முறியடிக்கப்பட்டு நலிவுற்றிருந்தனர். அந்நிலையில் ஷாஜி படையெடுத்தமையால், செஞ்சிக் கோட்டை அவரால் எளிதில் கைப்பற்றப்பட்டது.

ஷாஜிக்குப் பிறகு அவர் மைந்தர் சிவாஜி மகாராட்டிர மக்களை ஒன்று திரட்டி, மகாராட்டிரப் பேரரசை நிலைநிறுத்த முயன்றார். சிவாஜி மகாராட்டிரர்களுக்குள் ஒற்றுமையை ஏற்படுத்தி, படைகளையும் திரட்டினார். சுல்தானின் ஆட்சிக்குட்பட்டிருந்த செஞ்சி, தஞ்சைக் கோட்டைகளைத் தன் வசப்படுத்தினார். அக்கோட்டை

களைக் கைப்பற்றிய உடனே அவர் அவற்றை நன்கு பலப்படுத்தினர்.

சிவாஜி இறந்த பின் அவருடைய மைந்தர் இராஜாராம் சிறிது காலம் செஞ்சியை ஆண்டு வந்தார். சிவாஜி இறந்ததை யறிந்த அவுரங்கசீப் அச்சமின்றி மகாராட்டிரப் பேரரசை யழிக்கத் தென்னுட்டின்மீது படையெடுத்தார். அவர் செஞ்சியைத்தவிர, தஞ்சை முதலான தென்னுட்டின் பல பாகங்களையும் பிடித்துக் கொண்டார். இந்நிலையில் இராஜாராம் மகாராட்டிரப் படைகளோடு சென்று மொகலாயப் படைகளைப் பல விடங்களிலும் தீவிரமாகத் தாக்கிவந்தார்.

அவுரங்கசீப் இத் தொல்லையை நீக்க முதற்கண் இராஜாராமை ஒழிக்கவேண்டுமெனக் கருதினர். தம் படைத் தலைவனை சுல்பிகர்கான் என்பவனை அழைத்து, செஞ்சிக் கோட்டையைக் கைப்பற்றி வருமாறு பணித்தார். சுல்பிகர்கான் பெரும் படையுடன் சென்று செஞ்சியைக் கைப்பற்றத் தொடங்கினன். இருதிறத்தார்க்கும் கடும்போர் நிகழ்ந்தது. செஞ்சிக்கோட்டை பல்வகை இயற்கை யரண்களைப் பெற்றிருந்தது. மேலும், அக்கோட்டை மீது மிகுதியான பீரங்கிகள் பொருத்தப் பெற்றிருந்தன. தீக் குண்டுகளைப் பீரங்கிகள் பகைவர் மேல் வீசின. மொகலாயர்களால் செஞ்சியைக் கைப் பற்ற முடியவில்லை. அவர்கட்கு திரும்பிப் போகவும் விருப்பமில்லை. இதனுல் செஞ்சியை எவ்வாறேனும் கைப்பற்ருமல் திரும்பலாகாது என்னும் நோக்கத்துடன் சுல்பிகர்கான் முற்றுகையிட ஆரம்பித்தான். முற்றுகை ஏழு ஆண்டுகள் நடைபெற்றது. மதிலகத்திருந்தோர்க்கு

உணவு முதலிய ஏமப் பொருள்கள் சுருங்கின. போரிட்டு மனஞ்சலித்த மகாராட்டிரத் தலைவர்களும் அரசர்களும் உருக்கரந்து இரவோடிரவாகக் கோட்டையை விட்டு வெளியேறினர். ஏழு ஆண்டுகட்குப் பிறகு, அவர்கள் சென்றபின்தான்—கோட்டை மொகலாயர் வசமாயிற்று.

அவுரங்கசீப்பின் படையில் பல இராஜபுத்திர வீரர்கள் இருந்து பணியாற்றி வந்தனர். அவர்கள் உயிரினும் மானமே பெரிதெனப் போற்றுபவர்; போரெனிற் பூரிப் படைவர்; விழுப்புண் படுதலேயன்றிப் புறப்புண்படுதல் இழுக்கெனக் கொள்ளும் உயரிய நோக்கினர்; நீதியும் நேர்மையும் உடையவர். இராஜ புத்திரப் பெண்மணிகளும் கணவன்மார் போர்மேற் செல்லுங்கால் ''வென்று வருக'' என வாழ்த்துவர். போரிலே கணவனிறந்தால் மீண்டும் உயிர் வாழாக் கற்பரசிகளாய் அப்பெண் மணிகள் விளங்கினர்.

இத்துணைச் சிறப்புக்களைப் பெற்ற இராஜபுத்திர மரபிலே தோன்றிய சாரூப் சிங்கு என்பவர், அவுரங்கசீப் படையிலே வீரராகப் பணிபுரிந்தார். இவர் இளமை முதலே படையில் தொண்டாற்றி வந்ததோடு, தம் போர்த் திறத்தால் தானைத்தலைவர் நிலைக்கு உயர்ந்தார். அவுரங்கசீப் தென்னாட்டின்மீது படையெடுத்தபோது, சாரூப் சிங்கு உடனிருந்து மன்னன் மகிழும் வண்ணம் போரிட்டுப் பல பரிசுகளையும், பட்டங்களையும், அவனது அன்பையும் ஒருங்கே பெற்றார். இந்நிலையில் அவுரங்கசீப், சுல்பிகர்கானைக் கொண்டு கைபற்றிய செஞ்சியைச் சாரூப் சிங்கிடம் ஒப்புவித்து, அவரையே ஆண்டுவருமாறு ஏற்பாடு செய்தார். இவ்வகையாகத் தம் திறமை


யால் உழைத்து உயர்ந்த சாரூப்சிங்கு அவுரங்கசீப்புக்கு அடங்கிய சிற்றரசராய்ச் செஞ்சியை ஆண்டு வந்தார்.

சாரூப்சிங்கு என்பவரின் மனைவியார், இராணி இராமாபாய் என்பவராவர். இவர்கட்கு நன்மகனாகப் பிறந்தவரே வரலாற்றுப் புகழ்பெற்ற இராஜாதேசிங்கு ஆவர். சாரூப்சிங்கு, செஞ்சியைக் கி. பி. 1700 முதல் 1713 வரை ஆண்டுவந்தார். கி. பி. 1714ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் தேசிங்கு பட்டத்திற்கு வந்தார். ஆனால், அதே ஆண்டு செப்டம்பர்த் திங்கள் ஆர்க்காட்டு நாவப்பான சதுல்லாகான் என்பானோடு போர் புரிந்தார். போரிலே சதிகாரர்கள் சிலர் இருந்து எதிரிக்கு உளவு கூறியதாலும் தன் நண்பன் மகமத்கான் இறந்து பட்டதாலும் மனந்தளர்ந்த தேசிங்கு, போரிலே வெற்றி கிட்டாதென்றறிந்து, போர்க்களத்திலேயே தற்கொலை செய்துகொண்டு உயிர்நீத்தார். பட்டமேறி ஒன்பது மாதங்கள்தான் தேசிங்கு செஞ்சியை ஆண்டாரெனினும், இவ்வீரரால் செஞ்சியில் ஏற்பட்ட சீர்திருத்தங்கள் பலவாகும். தேசிங்கின் பிறப்பால் செஞ்சி, வீரத்தின் விளைநிலமாக மாறியது. இன்றும் செஞ்சி என்ற பெயரைக் கேட்போர் தேசிங்கை நினைந்து போற்றுமலிரார்.

கி. பி. 1750இல் பிரெஞ்சுக்காரர் முஸ்லிம்களிட மிருந்த செஞ்சிக்கோட்டையைக் கைப்பற்றிக்கொண் டனர். அதன் பிறகு ஏறக்குறைய முப்பது ஆண்டு களுக்குப் பின், பிரெஞ்சுக்காரரிடமிருந்து ஆங்கிலேயர் கள் செஞ்சியைக் கைப்பற்றினர். மைசூரைத் தலைநகரமாகக்கொண்டு ஆண்டுவந்த ஹைதரலி என்ற

மன்னர் செஞ்சியைத் தன்னுட்சிக்குட்படுத்திச் சிறிது காலம் ஆட்சி செலுத்தினர். இறுதியில் மீண்டும் ஆங்கிலேயர் அதனைக் கைப்பற்றினர்.

இதுகாறும் கூறியவற்றால் பழம்பெருஞ் சிறப்பு மிக்க செஞ்சிக்கோட்டையைச் சேரர், சோழர், பல்லவர், கோனர், குறும்பர், விஜயநகர மன்னர், சுல்தானியர், முஸ்லிம்கள், இராஜ புத்திரர், பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர் ஆகியோர் ஒருவர் பின் ஒருவராக ஆண்டு வந்தனர் என்று அறியலாம். அக்கோட்டை இந்நாளில் நமது அரசியலாரின் கண்காணிப்பில் பழங்காலச் சின்னமாகப் பாதுகாக்கப்பட்டு வருகிறது.



# 5. தஞ்சைக் கோட்டைகள்

சோழ நாட்டில் மிகுதியான கோட்டைகள் இல்லை. இப்பகுதியில் ஆட்சி நகரமாக நெடுங்காலமாய் விளங்கி வந்தது தஞ்சை நகரமே யாகும். இப்பெருநகர், பிற்காலச் சோழர்களுள் முதல்வனாக விளங்கிய விஜயாலயச் சோழன் காலமாகிய ஒன்பதாம் நூற்றாண்டிலிருந்து, பதின்மூன்றாம் நூற்றாண்டுவரை சோழர் ஆதிக்கத்திலும், பதினைந்து, பதினாறும் நூற்றாண்டுகளில் நாயக்கமன்னர்கள் ஆதிக்கத்திலும், பதினேழு, பதினெட்டாம் நூற்றாண்டுகளில் மராட்டிய மன்னர்களது ஆதிக்கத்திலும் ஆட்சி நகரமாக விளங்கியது. ஏறத்தாழ ஓராயிரம் ஆண்டுகள் ஆட்சித் தலைநகரமாக விளங்கிய பெருமை தஞ்சைக்கு உண்டு. தென்னாட்டுக் கட்டடக் கலையின் மிகச் சிறந்த எடுத்துக் காட்டுக்கள் இன்றும் தஞ்சையில்தான் இருக்கின்றன. திராவிடர்கள் கட்டடக் கலையின் முழு அமைப்பாகிய மாடம், மாளிகை, கூடம், கோபுரம் எனப்படும் நான்கு வகைகளையும் தஞ்சையைத் தவிர வேறு எங்கும் காண முடியாது. இனி, இத்தஞ்சை நகரில் அமைந்திருக்கும் அரண்மனைக்கோட்டையாகிய **வீரராகவன் கோட்டையை**யும், முதலாம் இராசராசனால் அமைக்கப்பட்ட **இராசராசேச்சுவரம்** எனப்படும் **கோவிற் கோட்டையை**யும் பற்றி ஆராய்வோம்.

### வீரராகவன் கோட்டை:

இவ்வரண்மனைக் கோட்டையைப் பெரிய கோட்டை என்றும் கூறுவர்; இதன் இடப்பரப்பு சுமார் 210 ஹெக்டேர். இக்கோட்டைக்கு அமைந்த கோட்டைச் சுவர்கள் 4½ மீட்டர் கனமும் 46 மீட்டர் உயரமும் கொண்டனவாக மிக நீண்ட அளவில் அமைந்திருந்தன. நகரின் சுற்றுப் பகுதிகளில் காவிரியாற்றின் கிளைநதிகள் அகழிகளாக அமைந்து விளங்கின. மதில்களுக்குள் மிகப் பெரும் கட்டடங்களும் நான்கு பெரும் தெருக்களும் காட்சியளிக்கின்றன. இக்கோட்டையின் கீழ்ப் பகுதியில் சுமார் 45 மீட்டர் உயரமுள்ள சிறு குன்றின்மீது, 7 மீட்டர் நீளமுள்ள பெரியதொரு பீரங்கி வைக்கப் பட்டிருக்கிறது. உள் மதிலுக்குள் ஒழுங்கற்ற முறையில் அவ்வக்காலத்து ஆட்சியரசர்கள் கணக்கற்ற கட்டடங் களை மனத்திற்குத் தோன்றியபடி கட்டியிருக்கிருர்கள். உள்ளே எட்டு அடுக்குகள் கொண்டதும் 58 மீட்டர் உயரமுள்ளதுமாகிய பெரியதொரு கூடமும், கோபுரமும் இருக்கின்றன. அவற்றைச் சேர்ந்தாற்போல் ஆறு அடுக்குகள் கொண்ட மாடமும் மாளிகையும் இருக் கின்றன. அவையன்றி, மேலும் இரண்டு கொலு மண்ட பங்களும் சரஸ்வதி மஹால் என்ற பெரியதொரு நூல் நிலையமும், ஆயுதச்சாலை யொன்றும் இருக்கின்றன. தற்போது ஆயுதச்சாலை எடுக்கப்பட்டு விட்டது.

### இராசராசேச்சுவரம்:

கோவில் கோட்டையாகிய இராசராசேச்சுவரத்தைப் பற்றி அறியத் தொடங்குவதற்கு முன், தென்னுட்டின் தலைசிறந்த கட்டடக் கலையாக விளங்கும் இவ்வரிய

கோவிலைக்கட்டி முடித்த இராசராசனைப் பற்றிய ஒரு சிறிது அறியவேண்டியது இன்றியமையாதது. இராசராசன் கி. பி. 985 முதல் 1014ஆம் ஆண்டு வரை 29 ஆண்டுகள் மிக்க புகழுடன் சோழப் பேரரசை ஆண்டு வந்தான். இவன் தனது ஆட்சிக்காலத்தில் சேர பாண்டிய நாடுகளையும், மற்றும் தனது அண்டை நாடுகளாகிய பல நாடுகளையும், இலங்கையையும் வென்று, தனது நாட்டிற்கு வடக்கெல்லை கோதாவரியாகவும், கீழ், மேல் எல்லைகள் கடல்களாகவும் இருக்குமாறு அமைத்தான். இம்மன்னன் சிறந்த தரைப்படையோடு வலிமை வாய்ந்த பெரியதொரு கடற்படையையும் வைத்திருந்தான். இப்பெருவீரன் போரில் கொண்டிருந்த ஆர்வத்தைப் போலவே, சிற்பம், ஓவியம், இசை, நடனம் ஆகிய நுண்கலைகளிலும் சிறந்த விருப்பமுடையவனாக இருந்தான் என்பதை இம் மன்னனது பெருங் கோவிலாகிய இராசராசேச்சுவரம் மெய்ப்பித்துக் கொண்டிருக்கிறது.

**அமைப்பும் மாண்பும்:**

இராசராசேச்சுவரத்தைச் சிறு கோட்டை என்றும் **சிவகங்கைக் கோட்டை** என்றும் கூறுவர். சிவகங்கையின் தென் பகுதியிலிருக்கும் இக் கோட்டையின் அகழியைக் கடந்து, கோட்டைச் சுவரின் உள் வளைவுக்குள் நுழைந்து சென்றால் சிறிது தொலைவில் முதற் கோபுர வாயிலாகிய 'கேரளாந்தகன் வாயில்' என்னும் அழகிய ஒரு கோபுரம் எதிர்ப்படும். அவ்வழகிய கோபுரத்தைக் கடந்து மேலும் சிறிது தொலைவு சென்றால், இராசராசனால் கட்டப்பட்ட மற்றொரு அகன்ற கோபுரமாகிய 'இராசராசன் திருவாயிலை' அடையலாம். அதனையும் கடந்து உட்சென்றால், கருங்கல்லும், செங்கல்லும் பதித்து அமைக்

கப்பட்ட பரந்ததொரு பேரவை காணப்படுகிறது. இப்பேரவையின் நீளம் ஏறத்தாழ 152 மீட்டரும், அகலம் 76 மீட்டரும் ஆகும். இப்பரப்பின் முதற் பகுதியில் அமைந்த பெரியதொரு மேடையில் தென்னுட்டிலேயே மிகப்பெரியதான நந்தியொன்று அமைந்திருக்கிறது. அதனைப் பாதுகாக்க நாயக்க மன்னர்கள் கட்டிய மண்டபமும் இருக்கிறது. அதனை அடுத்துத் "தட்சிணமேரு" எனப் புகழப்படும் பெரியகோவில் கருப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், ஸ்தாபன மண்டபம், நர்த்தன மண்டபம், வாத்திய மண்டபம் என்ற ஆறு பகுதிகளையும், ஏழு வாயில்களையும் உடையதாக விளங்குகிறது. ஒவ்வொரு வாயிலின் இரண்டு பக்கங்களிலும், $5\frac{1}{2}$ மீட்டர் உயரமும் $2\frac{1}{2}$ மீட்டர் அகலமுமுள்ள பதினறு துவாரபாலகர் சிலைகள் நிறுத்தப்பெற்றுள்ளன. கருப்பக்கிருகம் என்பது இறைவன் சந்நிதியாகச் சிவலிங்கம் காட்சியளிக்கும் இடமாகும். கோவிலின் முதல் வாயிலைத் திருஅணுக்கன் வாயில் என்று கூறுகின்றனர். கருப்பக்கிருக மண்டபத்தை அடுத்துள்ள மண்டபங்களில் தெற்கிலும், வடக்கிலும் வாயில்கள் அமைந்துள்ளன. இவ் வாயில்களில் தெற்குப் பக்கத்து வாயிலுக்குத் 'திருவிக்கிரமன் திருவாயில்' என்று பெயர் வழங்கப்படுகிறது.

### விமானத்தின் சிறப்பு:

இக்கோவில் நிலமட்டத்துக்குமேல் உயர்ந்த மேடையில் நிறுவப்பட்டிருப்பதனுல், இதனை மாடக்கோவில் என்பதற்கேற்ற இலக்கணம் பெற்றதென்று கூறுகின்றனர். இக்கோவிலில் நீளம் 242 மீட்டரும், அகலம்

121 மீட்டரும் ஆகும். கோவிலின் கருப்பக்கிரகத்திற்கு மேலே சதுரமான அமைப்பில் பதின்மூன்று கோபுர அடுக்குகள் கொண்ட அழகிய விமானம் காட்சி அளிக்கின்றது. உச்சியில் உள்ள சதுர வடிவமான விமானம் ஒரே கல்லாலானதும் அதன் மேற்பகுதி அரைவட்ட வடிவமானதாகவும் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த அரைவட்ட வடிவத்திற்கு மேல்தான் அழகிய தூபிக் கலசம் விளங்குகிறது. இக்கோபுரத்தின் உயரம் 66 மீட்டர். இதனை உத்தம விமானம் என்று அழைக்கின்றனர். இதன் மேல் கலசம் செம்பினுற் செய்யப்பட்டு, அதன்மேல் பொன் தகடு போர்த்தப்பட்டிருக்கிறது. விமான உச்சியில் அமைந்திருக்கும் கருங்கல் $7\frac{3}{4}$ மீட்டர் சதுரமுள்ளது. இதன் நிறை 80 மெட்ரிக் டன் என்பர். இதனைக் கோபுரத்தின் உச்சியில் சேர்ப்பதற்காகத் தஞ்சை நகருக்கு $6\frac{1}{2}$ கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பால் உள்ள 'சாரப்பள்ளம்' என்னும் சிற்றூரிலிருந்து சாரம் அமைத்து இச் சிகரத்தின்மீது ஏற்றினுர்களென்று கூறப்படுகிறது. மேலேயுள்ள சதுரக் கல்லாலாகிய விமானத்தின் நான்கு மூலைகளிலும் மூலைக்கிரண்டிரண்டாக எட்டு நந்திகள் செதுக்கப்பட்டிருக்கின்றன. அவை தனித்தனியே ஒவ்வொன்றும் 2 மீட்டர் நீளமும், $1\frac{3}{4}$ மீட்டர் அகலமும் உள்ளன.

### ஐரோப்பியர் சிலை:

இராசராசன் அளவு கடந்த சைவ மதப் பற்றுள்ளவன். திருக்கோவிலின் நாற்புறமும் உயர்ந்து விளக்கும் கோட்டைச் சுவர்களின்மீது முன்பு அமைக்கப்பட்டிருந்து தற்போது விழுந்து விட்டவையான 343 நந்தி

உருவங்கள் இருக்கின்றன. வடகோபுரத்தின் கீழ்ப் பாகத்தில் காணப்படும் மூன்று உருவச்சிலைகளுடன் ஓர் ஐரோப்பிய உருவமொன்றும் காணப்படுகிறது. அதனைப் பற்றிக் கூறும்போது, பதினேழாவது நூற்றாண்டில் வாழ்ந்து வந்த நாயக்கர் பரம்பரையினரான இரகுநாத நாயக்கரின் ந ண் ப ர ா க விளங்கிய கிழக்கிந்தியக் கம்பெனியின் தலைவராகிய ரோலண்ட் கிரேப்பினது உருவம் என்று கூறுகின்றனர். மற்றும் சிலர், இச்சிலை யானது பதின்மூன்றும் நூற்றாண்டில் தென்னிந்தி யாவுக்கு வந்துபோன மார்க்கோபோலோவின் உருவ மென்றும் கூறுகின்றனர்.

**சிவலிங்கமும் பிற உருவங்களும்:**

இராசராசேச்சுவரத்தில் அமைக்கப்பட்டிருக்கும் அளவு பெரிய சிவலிங்க உருவம் வேறு எங்கும் இல்லை. இராசராசன் இவ்விலிங்க உருவத்தை நருமதை நதிக் கரையிலிருந்து தஞ்சைக்குக் கொண்டுவந்து சேர்த்தான் என்று தெரிகிறது.

இக்கோவிலில் சிவபெருமானது உருவமே யன்றித் திருமால், முருகன் முதலிய தெய்வங்களின் உருவங் களும் திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சிறுத் தொண்டர், சண்டேசுவரர், சுந்தரர், பரவைநாச்சியார், இராசராசன், அவன் பட்டத்தரசி உலோகமாதேவியார் முதலிய பல அடியவர்களுடைய உருவங்களும் எழுந் தருளச் செய்யப்பட்டுள்ளன. இக்கோவிலிலுள்ள இறை வனது திருநாமம் பெருவுடையார் எனவும், இறைவியின் திருநாமம் பெரியநாயகியார் எனவும் வழங்கப்படு கின்றன.

விதியென்ற தத்துவத்திற்கு. ஆகவேதான் அதனை உதறித் தள்ள நெஞ்சு உரம் பலருக்கு வருவதில்லை.

* * *

மேலுலகத்தில் ஏதோ ஓர் பெரும் ஏடு இருப்பது போலவும், அதிலே பூலோக வாசி ஒவ்வொருவரின் வாழ்க்கைக் குறிப்பும் முன் கூட்டியே எழுதி வைக்கப் பட்டிருப்பது போலவும், அதன்படிதான் சகல காரியமும் நடைபெறும் என்றும் கூறப்படுகிறது. பல வழிகளில் இந்த நம்பிக்கையைப் பலப்படுத்தினர். எவ்வளவு பெரிய கேடு செய்கிறோம் என்பதை அறிந்தார்களோ இல்லையோ, மனிதன் மனதை முடமாக்குகிறோம், கருத்தைக் குருடாக்குகிறோம் என்று தெரிந்து செய்திருந்தால், அவர்கள் மாபெரும் துரோகிகள்; தெரியாமல் செய்திருந்தால் ஏமாளிகள், கபடராயினும், கசடராயினும் அவர்கள் கட்டிவிட்ட கதைகள், இந்த நாட்டு மக்களைத் தலைமுறை தலைமுறையாகக் கெடுத்து விட்டது—தன்னம்பிக்கையைத் தகர்த்து எறிந்தது—முயற்சிகளை முறியடித்தது—முற்போக்கைக் கெடுத்தது.

* * *

முயற்சி பலனளிக்காதபோது, திட்டம் தகர்ந்து விடும் போது, நோக்கம் ஈடேறாதபோது, ஏன் முயற்சி பலிக்கவில்லை; திட்டம் ஏன் வெற்றி பெறவில்லை; நமது கணக்கு ஏன் பொய்த்துப் போயிற்று; காரணம் என்ன என்று கண்டுபிடிக்க, ஆராய்ச்சி செய்ய, திருத்தம் தர, இந்த 'விதி'யெனும் தத்துவம், மனிதனை விடுவதில்லை.

* * *

இந்த விதியை வெல்ல, அல்லது முன் கூட்டியே தெரிந்து கொள்ள, மாற்ற, திருத்த, ஏதாவது

சுவர்களின் மீதும், வேறு பல மண்டபங்களின் மேற் கட்டியிலும் நெடுங்காலமாக ஒன்றின்மேலொன்ருக மறைபட்டிருந்த இருவகை அரிய வண்ண ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இவை, அண்ணுமலைப் பல்கலைக்கழக வ ர லா ற் று ப் பேராசிரியர் திரு. ச. க. கோவிந்தசாமி பிள்ளை, எம். ஏ. அவர்களால் 1931ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டன. அவ் விரண்டனுள் மேற்படையாக அமைந்திருப்பவை, பதினேழாம் நூற்ருண்டினரான தஞ்சை நாயக்கர் கால ஓவியங்கள் என்றும், உட்படையிலிருப்பவை சோழர்காலத்திய ஓவியங்கள் என்றும் ஓவியக்கலைஞர்கள் கருதுகின்றனர். இவை இன்றும் காண்பவரை மகிழ்விக்கும் நிலையில் அமைந்திருக்கின்றன. சோழர்கள் வரைந்த ஓவியத்தின் காலம் கி. பி. பத்து, பதினேராம் நூற்ருண்டு எனக் கூறுகின்றனர். தற்போது இவ்வோவியங்களை அரசாங்கத்தினர், விஞ்ஞான முறைப்படி பாதுகாத்து வருகின்றனர். மேலும் அவர்கள் சில ஓவியங்களை நிழற்படங்கள் எடுத்தும், அவற்றில் அமைந்திருக்கும் நிறங்கள் தோன்ற அச்சிட்டும் நூலுருவத்தில் விரைவில் வெளியிடுவார்கள் என்று கருதப்படுகிறது.

சோழர்கால ஓவியங்களில் ஒரு பகுதி, சைவசமயத் தொடர்புடையதேயாம். ஒன்று சைவசமய நாயன்மார் களுக்குள் ஒருவரான சுந்தரமூர்த்தி நாயனுரது வரலாற்றைக் குறிப்பதாக இருக்கிறது. அதில் சுந்தரரது திருமணப்பந்தலில் பலர் கூடியிருக்கும் காட்சியும், சிவபெருமான் கிழவேதியர் உருக்கொண்டு ஒரு கையில்

குடையும் மற்ெருரு கையில் ஓர் ஓலையும் தாங்கிக் கொண்டு சுந்தரருக்கு முன் நிற்பதாகவும் வரையப் பட்டிருக்கின்றது. இவ்வோவியத்தில் கிழவேதியர் அடிமை ஓலையைக் காட்டித் திருமணத்தைத் தடை செய்து, சுந்தரரை ஆட்கொள்ளும் செய்தி குறிக்கப் படுகின்றது. அதனையடுத்து ஒரு குடியானவன் வீட்டின் காட்சி வரையப் பெற்றிருக்கின்றது. பெண்கள், மட்பானையிலே உலை வைத்துச் சோறு சமைப்பதாகவும், அவர்களில் ஒரு பெண்ணிடமிருந்து வேலையாளொருவன் சோறு பெறுவதாகவும் காட்டப்பெற்றிருக்கின்றன. அவற்றிற்குமேல் கயிலைமலைப் பகுதியில் சிவபெருமான் புலித்தோலின்மீது அமர்ந்திருப்பதாகவும், அவர்க்கு முன்னே நந்தி படுத்திருப்பதாகவும், சிவகணங்களும் முனிவர்களும் சூழ்ந்து நிற்பதாகவும், இவர்களுக் கிடையே நடன மாதர் ஆடுவதாகவும், காட்டப் பெற்றிருக்கின்றன.

இவற்றிற்குச் சற்றுக் கீழ்ப்பாகத்தில் சுந்தரமூர்த்தி நாயனர் வெள்ளை யானையின்மீதும், சேரமான் பெருமாள் நாயனர் வெள்ளைக் குதிரையின்மீதும் கயிலை செல்வதாகக் காட்டப் பெற்றிருக்கிறது. இவ்வோவி யத்தில் அவர்கள் ஆற்றைக் கடப்பது போன்ற தோற்றமும் இருவர்மீதும் தேவர்கள் பூமாரி பொழிவது போன்ற தோற்றமும் காண்பவர்க்கு மிகவும் இன்பம் பயப்பனவாகும். மேற்குப் பக்கத்துச் சுவரில் சிதம்பரம் கோவில் வரையப்பட்டிருக்கின்றது. அதில் கையில் கனலேந்திய சிவபெருமானின் தோற்றம், அதன் முன் வணங்கி நிற்கும் ஓர் அரசன், அவனுடன் வணங்கி நிற்கும் அவன் மனைவியர்கள், இவர்களுக்குச் சற்று

V211
N67

விலகி நிற்கும் வெள்ளித்தடி தாங்கிய இரு சேவகர்கள், அவர்களுக்குப் பின்னே பல செல்வர்கள், மற்றும் பொதுமக்கள் ஆகியோரின் காட்சிகள் தீட்டப்பட்டிருக் கின்றன. அவ்வோவியத்திலிருந்து, அக்கால மக்களின் உடல் தோற்றம், அணிகலன்கள், உடைகள், தலைமுடி யின் ஒப்பனை முதலியவற்றை அறிந்துகொள்ள முடிகிறது.


108737

அதனையடுத்த வடபுறச்சுவரில் சிவபெருமான் திரிபுரத்தை எரிக்கும் காட்சி காட்டப்பட்டிருக்கிறது. விநாயகர், முருகன் முதலிய தெய்வங்கள் தம் அருகே இருக்க, தேவகணங்கள் புடைசூழத் தமது எட்டுக் கரங் களுடன் இரதத்தின்மீது வீற்றிருந்து, தமது நெற்றிக் கண்ணைத் திறந்து நோக்குகிறார். அசுரர்கள் உயிரிழந்து வீழ்ந்து கிடக்கின்றனர். பலர் தங்கள் மனைவியரை அழைத்துக் கொண்டு ஓடுகின்றனர். மற்றும் சிலர் கணவர் கழுத்தைக் கட்டிக்கொண்டு தொங்குகின்றனர். வீராவேசம் பொருந்திய இக்காட்சியும் இதன் மருங்கி லிருக்கும் சிவபெருமானது ஐந்நிறத் தோற்றக் காட்சியும் காண்பதற்கு உரியனவாகும். இன்னும் இதனை அடுத்துப் பற்பல ஓவியங்கள் காட்சியளிக்கின்றன.

**முடிவு:**

இராசராசன் இப்பெருங் கோவிலைக் கட்டி முடித்த போது, அவனது காலத்தவரான கருவூர்த் தேவர் என்ற சிவனடியார் இக்கோவிலின்மீது பல பாடற் பதிகங்களை எழுதியுள்ளார். இம்மன்னன் இக்கோவிலைக் கி. பி. 1003இல் தொடங்கி, கி.பி.1009இல் கட்டி முடித்தான் என்று தெரிகிறது. ஒரு சிறு துண்டுக் கருங்கல்லும்

அகப்படாத தஞ்சை மாவட்டத்தில் இத்தகைய பெருங் கோவிலைக் கட்டி முடித்த இராசராசனது அருஞ்செயலை எண்ணியெண்ணி அறிஞர்கள் வியப்பும் திகைப்பும் அடைகின்றனர். தஞ்சைக் கோவிலைச் சூழ இருந்த கோட்டை அகழிகள் தற்போது தூர்ந்து, பாழ்பட்ட நிலையில் இருக்கின்றன. இவ்வரிய கோவிலைத் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் சென்று கண்டு தமது முன் னோரின் அரும்பெரும் செயல்களை அறிந்து மனமகிழ வேண்டுவது இன்றியமையாததாகும்.



# 6. திருச்சிராப்பள்ளிக் கோட்டைகள்

## திருச்சி மலைக்கோட்டை:

திருச்சிராப்பள்ளிக்குச் சிறந்த அழகு தருவதாகவும் அடையாளப் பொருளாகவும் காட்சியளிப்பது, நகரின் நடுவே அமைந்துள்ள திருச்சி மலைக்கோட்டை. சோழ நாட்டில் குன்றுக்கோட்டையாக விளங்குவது இஃது ஒன்றே எனலாம். இது காவிரியின் மிக அருகே, தென் பகுதியில், ஒரே பாறையாலான தாயுமானவர் மலை என்னும் பெயருடன் அமைந்திருக்கிறது. இம்மலையின் மீது கோவிலாகவும், கோட்டையாகவும் சிறந்த கருங்கற் கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. இம்மலையையும் இதனடியிலுள்ள பெரிய குளத்தையும் உள்ளடக்கிய பெரிய மதிற்சுவர்களால் நகரைச் சுற்றிலும் கோட்டை கட்டப்பட்டிருந்தது. கோட்டைக்கு வெளியில் ஆழ்ந்த அகழி இருந்தது. பிற்காலத்தில் அகழி தூர்க்கப் பட்டுத் தெருக்களாக மாறியுள்ளன. கோட்டை மதில்கள் இடித்து அழிக்கப்பட்டுவிட்டன. ஆனால், அக்கோட் டையின் மேற்கு வாயில் மட்டும் அழிபாட்டுக்கு இலக்கா காமல் இன்றும் ஒரு பழங்காலச் சின்னமாகக் காட்சி யளித்து வருகின்றது. இதனைக் கண்டாலே பழைய கோட்டை எத்தகைய நிலையில் அமைந்திருக்கக்கூடும் என்று ஒருவாறு ஊகித்து உணரலாம். இக்கோட்டை பற்பல போர்களுக்கும், முற்றுகைகளுக்கும் உட்பட்டு, வரலாற்றில் சிறந்த இடம் பெற்றிருக்கிறது. பகைவரின் வருகையை நெடுந்தூரத்திலிருக்கும் போதே அறிவ

தற்கு ஏற்ற வண்ணம் உயர்ந்த மலையையும் பகைவர்கள் திடீர்த் தாக்குதல் செய்ய முடியாதவாறு தடுக்கும் இயற்கை அரணாகிய காவிரியாற்றையும் இக்கோட்டை பெற்றிருக்கிறது. பதினெட்டாம் நூற்றாண்டில் நடந்த கர்நாடகப் போர்களில் இக்கோட்டை சிறந்த இடத்தைப் பெற்றிருந்தது. இம்மலையின்மீது வண்ண ஓவியங்கள் நிறைந்த தாயுமானவர் கோவில் என்ற ஒரு சிவன் கோவிலும், மலையுச்சியில் ஒரு பிள்ளையார் கோவிலும் இருக்கின்றன. இங்குப் பல்லவர் காலத்திய சிற்பங்களும் இருக்கின்றன. இம்மலை ஒரு காலத்தில் சமணப் பள்ளியாக இருந்திருக்க வேண்டுமென்று அறிஞர்கள் கருதுகின்றனர். அதற்குவேண்டிய பற்பல ஆதாரங்களும் அங்குக் காணப்படுகின்றன.

**பெயர்க் காரணம்:**

முன்னொரு காலத்தில் ஆதிசேடனும், வாயுபகவானும் தம்முள் யார் வலிமையுடைவர் என ஒருவரோடொருவர் வாதிட்டுக் கொண்டனர். இறுதியில் ஆதிசேடன் தன் ஆயிரம் மணிமுடிகளால் மேருமலையின் ஆயிரம் சிகரங்களையும் மூடிக் கொள்வதென்றும் அவற்றுள் வாயு ஏதேனும் ஒன்றைப் பெயர்த்தெடுத்தால், அவனே வலியவனென்றும் முடிவிற்கு வந்தனர். அவ்வாறே ஆதிசேடன் சிகரங்களை மூடிக்கொண்டான். வாயுதேவன் தன் வலிமை முழுவதும் கொண்டு மோதித் தாக்கினான். சிகரத்திலிருந்து ஒரு பகுதியைக்கூடப் பெயர்க்க முடியவில்லை. இதுகண்ட வாயு வெகுண்டு, அசைவற்று நின்றனன்; உயிரினங்கள் உயிர்ப்பின்றி வருந்தின; செயலற்றுத் தளர்ந்தன. இது கண்ட தேவர்

பலரும், ஆதிசேடன்பால் சென்று வேண்ட, அவ்வரசனும் தன் தலைகளில் மூன்றினைச் சிறிது உயர்த்தினான். வாயுதேவன் முழுவலியுடன் தாக்கி மூன்று சிகரங்களைப் பெயர்த்தெடுத்து வீசினான். அவை பல இடங்களில் வீழ்ந்தன. அவற்றுள் ஒன்றே இம்மலைக் கோட்டை எனப் புராணக் கதை ஒன்று வழங்குகிறது.

திரிசிரஸ் என்பவன் ஓர் அரக்கன். இவன் சிவபெருமானை வழிபட்டு, வரம்பெற்று, வலிமையுடையவனாய், அரக்கர்களுக்கு அரசனானான். இவன் இம்மலை மீதுள்ள சிவபெருமானையும், திரு ஆனைக்காவிலுள்ள சிவபெருமானையும் வழிபட்டு வந்தான். திரிசிரஸ் வழிபாடு செய்துவந்ததால், இம்மலை இப்பெயர் பெற்றதென்று பிறிதொரு புராணம் கூறுகிறது.

**ஆராய்ச்சியாளர் கூற்று:**

இடைக்காலத்தில் நம் நாட்டில் சமண மதம் மிகச் சிறந்து பரவி இருந்தது. நாட்டில் பற்பல இடங்களில் சமண முனிவர்கள் சமணப்பள்ளிகளை நிறுவித் தங்கள் மதக் கருத்தினைப் பரப்பி வந்தனர். அப்போது நாட்டின் பல பாகங்களிலும், சமணப் பள்ளிகளை அமைத்தனர். இம்மலையில் அமைந்த சமணப்பள்ளிக்குத் தலைவராய்த் திகழ்ந்தவர் சிரா என்ற முனிவராவர். இன்றும் இம்மலைக் குகைகளில் சமண முனிவர் துயின்ற கற்கட்டில்களையும், அவற்றில் சமணத் துறவிகளின் பெயர்கள் பொறிக்கப் பட்டிருத்தலையும் காணலாம். அதனால், இங்கிருந்த சமணப் பள்ளி, சிராப்பள்ளி யென்னும் பெயரோடு விளங்கி வந்தது. நாளடைவில் இம்மலையைச் சூழ விரிந்து எழுந்த பெருநகர்க்கும் சிராப்பள்ளி என்னும்

பெயரே அமையலாயிற்று. திருச்சிராப்பள்ளி யென்று இந்நகர்க்குப் பெயர் வழங்கக் காரணம் இதுவேயென ஆராய்ச்சியாளர் கூறுவர்.

**வரலாற்றுச் சிறப்பு:**

புராணங்களாலும், இலக்கியங்களாலும், சிறப்பிக்கப்படும் இம்மலைக் கோட்டையானது, வரலாற்றுப் பெருமையும் உடையது; காவிரிக் கரையிலுள்ள நகரங்களில் மிகப்பெரியது; பல நூற்றாண்டுகளுக்கு மேலாகவே தமிழக வரலாற்றில் இடம் பெற்றது; சோழர்கள் உறந்தையைத் தலைநகராகக் கொண்ட நாள்முதலாகத் தமிழகத்தின் சிறப்பிடமாக விளங்குவது. கி. பி, 1310இல் முஸ்லிம்களின் படையெழுச்சியினால் பலம் குன்றிய சோழர்கள், விஜயநகரப் பேரரசர்களின் கீழ்ச் சிற்றரசர்களாக ஆண்டு வந்தனர். கி. பி. 1559இல் மதுரையையை ஆண்ட **விசுவநாத நாயக்கர்** திருச்சிக் கோட்டையைப் பெற்றுக்கொண்டு, தஞ்சையை அடுத்த வல்லம் கோட்டையைத் தஞ்சை மன்னனுக்களித்தார். பின்னர், அவர் இக்கோட்டையைப் புதுப்பித்து, பெரிய தெப்பக்குளம் வெட்டுவித்து, அரண்களைத் திருத்தியமைத்தார். மற்றும் **இராணி மங்கம்மாள்**, இங்குச் சிறந்ததொரு சிங்கார அரண்மனையையும் கட்டியிருக்கிறார். நாயக்க அரச பரம்பரையில் எட்டாவது அரசரான முத்துக்கிருஷ்ணப்ப நாயக்கரென்பவர் திருச்சியைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தார். பின் வந்த திருமலை நாயக்கர் தலைநகரை மதுரைக்கு மாற்றிவிட்டார்.

நாயக்கர் வமிசத்துக் கடைசி அரசரான வங்காரு திருமலை நாயக்கரிடமிருந்து, திருச்சியை ஆர்க்காட்டு

நவாபான சந்தாசாகிப், 1736இல் கைப்பற்றிக் கொண்டார். பின், மகமதலி 1751இல் இங்கு வந்து ஒளிந்து கொண்டபோது, சந்தாசாகிபும், பிரெஞ்சுக்காரரும் இதை முற்றுகையிட்டனர். அப்போது கிளைவ் ஆர்க்காட்டைத் தாக்கி, அதைக் கைப்பற்றிக் கொள்ளவே, சந்தாசாகிப் திருச்சியைக் கைவிடுத்து, ஆர்க்காட்டை நோக்கி விரைந்தார். அங்குப் போரில் தோற்று இறந்தார். மகமதலி கர்நாடக நவாபானார். ஆங்கிலேயர் செல்வாக்கு உயர்ந்தது.

கி. பி. 1766இல் ஹைதரலி திருச்சியைத் தாக்கப் படையெடுத்து வந்தார். ஆனால், திருச்சியைத் தாக்காமலேயே திரும்பி விட்டார். பின், 1768–69இல் திருச்சியை முற்றுகையிட்டு, அதன் அரண்களைத் தகர்த்துப் பாழ்படுத்தினார். 1790இல் படையெடுத்து வந்த திப்புசுல்தான் ஸ்ரீரங்கத்தைத் தாக்கி அழித்து, திருச்சியைத் தாக்காமலேயே திரும்பி விட்டார். அது முதல் ஆங்கிலேயர் வசமிருந்து வந்த இக் கோட்டையானது நம் நாடு விடுதலையடைந்த பின், நம் வசமாகி இன்றும் நம் பண்டைய பெருமையை விளக்கி நிற்கின்றது.

**சிற்பச் சிறப்பு:**

கி. பி. 615 முதல் 630 வரை அரசாண்டவனாகக் கருதப்படும் பல்லவ வேந்தனாகிய மஹேந்திரவர்மன் சமண மதத்திலிருந்து சைவ மதத்திற்குத் திருநாவுக்கரசரால் மாற்றப்பட்டான். சைவனாக மாறிய மஹேந்திரன், தன்னாட்சிக்குட்பட்ட நிலப்பகுதியில் அமைந்திருந்த சமணப் பள்ளிகளை யெல்லாம் சிவன் கோவில்களாக

மாற்றியமைத்தான். அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட கோவில்களுள் இம் மலைக்கோட்டையிலுள்ள குகைக் கோவிலும் ஒன்று.

இக் குகைக் கோவில், சிற்பக் கலைகள் மலிந்த சிற்றுளி வேலைப்பாட்டினையுடையது. மேற்சுவரில் செதுக்கப்பட்டுள்ள சிற்பங்கள், காண்போர் மனத்தைக் கவரும் வண்ணம் அமைந்துள்ளன. அவற்றுள் ஒன்று கங்காதரர் சிலையாகும். அது சிவபெருமானே நம் எதிரில் நிற்பது போன்று, காட்சியினை நல்கும். அச் சிலையினைக் கண்டு வியவாதவர் ஒருவருமில்லை. அன்றியும், யாழோர் இருவரும், மனிதன் ஒருவனும் வானத்தில் மிதப்பது போன்று செதுக்கப்பட்டிருக்கும் காட்சியும் கண்டு வியக்கத்தக்கது.

மலையடிவாரப் பகுதியில் சிறிது மேற்கு நோக்கிச் சென்றால் பசுமடம் ஒன்று காணப்பெறும். அதன் பின், கி. பி. 640—670க்கு இடைப்பட்டதாகக் கருதப்படும் பல்லவர் குகையொன்றினைக் காணலாம். ஒரே கல்லாலான அக் குகை, அழகிய வேலைப்பாடுடையதாய் இருத்தலோடு, பல்லவரின் சிற்பக் கலைத் திறனைப்பெரிதும் விளக்கும் சான்றாகவும் நிலவுகின்றது. இதனுள் வியப்பைத் தரும் சிற்ப வேலைப்பாடுகளுடைய இருமண்டபங்கள் உள்ளன. சூரியன், சந்திரன், திருமால், நான்முகன் ஆகிய தேவர்கள் கற்களில் அழகிய உருவங்களாகச் செதுக்கப்பட்டு, காண்போர் வியக்கும் வண்ணம் நிற்கின்றனர். இவைபோன்ற எண்ணிறந்த சிற்பங்களையும், அழகொழுகும் உயிரோவியங்களையும் இக்கோவிலில் கண்டு களிக்கலாம்.

திருச்சிராப்பள்ளியிலுள்ள மற்றும் இரு கோட்டைகள் திருவரங்கமும் திருவானைக்காவுமாகும். இக்கோட்டைகளைக் கோவிற் கோட்டைகள் என்றும் கூறலாம்.

**திருவரங்கம்:**

நாட்டின் அரசையும் செல்வங்களையும் படைகளையும் காத்துக்கொள்ள, அரசர்களால் சிறந்த பாதுகாப்புள்ள பற்பல கோட்டைகள் கட்டப்பட்டன என்று முன்னர் அறிந்தோம். இடைக்காலத்தில் கோட்டை அமைப்புக்களில் சில மாறுதல்கள் ஏற்பட்டன. பிற நாட்டு மன்னர்கள், வேறு மதத்தவர்கள் நம் நாட்டின்மீது படையெடுத்தபோது, தென்னுட்டுக் கோவில்கள் முதலியவற்றில் இறைவனுக்காகச் சேர்த்து வைக்கப்பட்ட பெருஞ் செல்வங்களையும் கொள்ளையிடலாயினர். இத்தகைய அழிபாட்டுக்கு ஆட்பட்ட கோவில்கள் மிகப் பல. இதன் காரணமாகத் தமது கோவில்களையும், தெய்வ உருவங்களையும் பாதுகாக்கவும், மக்கள் இறைவன் வழிபாட்டில் கொண்டுள்ள கருத்தைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளவும், மன்னர்கள் இறைவன் ஆலயத்தையே மிக்க பாதுகாப்புள்ள வலிமை வாய்ந்த கோட்டையாக அமைக்க முன் வந்தனர். இவற்றுல் நாட்டு மக்களிடையே கடவுள் பற்று வளரவும், அதன் துணையாக நாட்டுப் பாதுகாப்புக்கு உதவி ஏற்படவும் வாய்ப்புக்கள் ஏற்பட்டன.

இங்ஙனம் கோவிலாகவும், வலிமை வாய்ந்த கோட்டையாகவும் தென்னுட்டில் விளங்குவன திருவரங்கம் பெரிய கோவில், தஞ்சைக் கோவில், சிதம்பரம் கோவில், திருவண்ணுமலைக் கோவில்,

முதலியனவாம். இவற்றுள்ளுள் மிக்க பாதுகாப்பும், வலிமையும் வாய்ந்தது திருவரங்கம் பெரிய கோவிலே யாம். இக்கோவில் காவிரி, கொள்ளிடம் என்னும் பேராறு களுக்கு நடுவில் நாற்புறமும் ஆற்றையுடையதாய்த் தீவு போல அமைந்திருக்கிறது. இவ்வரிய பாதுகாப்பு, பகைவர்கள் எப்போதும் திடீரெனப் படையெடுத்து வரமுடியாமல் தடை செய்கிறது. திருவரங்கம் திருச்சிராப்பள்ளிக்கு வடக்கே ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் அமைந்திருக்கிறது. இங்கு அமைந்துள்ள விஷ்ணு ஆலயமாகிய அரங்கநாதர் கோவில் நம் இந்திய நாடெங்கும் புகழ் பெற்றது. வைணவர்கள் இதனைத் தமது கோவில்கள் எல்லாவற்றிலும் சிறந்த தாகக் கருதித் திருவரங்கம் பெரிய கோவில் எனப் போற்றுகின்றனர். இக் கோவிலிலுள்ள இறைவனது பெயராலேயே இந்த நகரமும் வழங்கப்படுகிறது. திருவரங்க நகரத்து வீடுகளில் பெரும்பகுதி கோவிலினது வெளிச் சுற்றுப் பிரகாரமாகிய சுற்றுச் சுவருக்குள்ளேயே அமைந்திருக்கிறது. இக் கோவிலின் இடப்பரப்பு, தென்னிந்தியாவிலுள்ள கோவில்கள் யாவற்றிலும் பெரிய தாகும். கோவிலைச் சுற்றி, ஒன்றையடுத்து ஒன்றாக ஏழு வலிய கருங்கற் சுவர்கள் எழுப்பப் பெற்றுள்ளன. இவற்றுள் வெளிப்புறத்தே அமைந்துள்ள சுற்றுச் சுவரின் நீளம் 936 மீட்டரும் அகலம் 769 மீட்டரும் ஆகும்.

இக்கோவிலின் மிகச் சிறந்த அழகுத் தோற்றங்கள் இதனைச் சுற்றியுள்ள ஏழு சுற்றுச் சுவர்களால் மறைக்கப் பட்டுள்ளன. எனவே, உட்சுவருக்குள் அமைந்திருக்கும் கோவிலின் அழகு, மிகவும் கவர்ச்சி பொருந்தியதாக

இல்லை. வெளிப்புறப் பகுதியில் ஏழாவது சுற்றுச் சுவரில் அமைந்துள்ள அலங்காரமான தென்வாயில் வழியாக உள்ளே நுழைபவர், உள்ளே செல்லச் செல்லத் தாம் எண்ணியதற்கு மாருகப் பெரும்பாலும் ஏ மா ற் ற மே அடைவர். உள்ளே பெரிய கோவிற் கட்டடங்களை எதிர் பார்த்துச் சென்றவர் சுற்றுச் சுவர்களோடு இணைத்துப் பொருத்தப்பட்டிருக்கும் வீடுகளையுடைய தெருக்களையே காண்பர். கோவில் என்பதற்கு மாருக நகரம் என்ற உணர்ச்சியே தோன்றும். அவரது மனத்தைக் கவரும் வண்ணம் அமைத்துள்ள கோவிற் கட்டடங்கள் மிகச் சிலவே. உள்நுழையும் பக்தர்களுக்கு முதன் முதலாகக் காட்சியளித்து நிற்பது நான்காவது சுற்றுச் சுவர்கள் அமைந்துள்ள ஆயிரக்கால் மண்டபமே யாகும். விழாக் காலங்களில் உற்சவமூர்த்திகளாகிய கடவுள் உருவங் களை ஆயிரக்கால் மண்டபத்தில் தான் கொலு வைத் திருப்பது வழக்கம். ஆனல், அவ்வாயிரக்கால் மண்டபமும் பெரிதாக அமையவில்லை. அங்கே காணப் படும் சிற்பவேலைப்பாடுகளும் அத்துணை உயர்ந்தனவாக இல்லை.

இவ்வாயிரக்கால் மண்டபத்தினும் சற்றுச் சிறந்த முறையில் சிற்ப வேலைப்பாடுள்ளது இதற்கு எதிரே உள்ள சேஷகிரிராயர் மண்டபமாகும். அம் மண்டபத் தில் உள்ள தூண்களில் திராவிடரின் கட்டடக் கலை முறைப்படி அலங்கரிக்கப்பட்ட சிற்பத் தூண்கள் நிற் கின்றன. அத்தூண்களிலே கால்களை உயர்த்தி நிற்கும் குதிரைகள், யானைகள், யாளிகள், சிங்கங்கள், புலிகள் முதலியன சிறப்பாகச் செதுக்கி அமைக்கப்பட்டுள்ளன. கோவிலின் கோபுர உச்சியிலிருந்து பார்க்கினும்

கோவிலின் முழுப்பகுதிப் பரப்பையும் காணமுடியாது. ஆகையால், கோவிலின் பெரிய அளவை ஊகித்து உணரவேண்டுமே யொழியப் பார்த்து அறிய இயலாது. வெளிப்புறச் சுவர்களின் நான்கு திக்குகளிலும் கோபுர வாயில் அமைப்பதற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள் ளன. எக்காரணத்தாலோ அவ்வேலைப்பாடுகள் முழுவதும் முடிவுருமல் நின்று போயின. முடிவுற்றவை யும் மிக்க வேலைப்பாடின்றி அமைந்துள்ளன. நான்காவது சுற்றுச் சுவரின் கிழக்கு வாயில் கோபுரத்தினுள் படிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் ஏறி, உச்சியில் நின்று பார்த்தால் கோவிலின் காட்சி சற்று விளக்கமாகவும், அழகாகவும் தோன்றுகிறது. தென் புறம் அமைந்துள்ள வாயிலின் முடிவுருத கோபுரம் வெள்ளையடிக்கப்பட்டுக் கவர்ச்சியின்றிக் காட்சியளிக் கிறது. எனினும், கட்டடக் கலையின் சிறந்த வேலைப் பாடுகள் அமைந்த பகுதி இதனுள் அமைந்திருக்கிறது. இதன் வழியாகத்தான் நகரத்திலிருந்து காவிரியாற்றுக் கும், திருச்சிராப்பள்ளிக்கும் வழிகள் செல்லுகின்றன.

இக் கோபுரத்தை வெள்ளைக் கோபுர மென்றும், மொட்டைக் கோபுர மென்றும் கூறுவர். இக் கோபுர வாயிலின் நீளம் 6¾ மீட்டர். அகலமும், உயரமும் 13½ மீட்டர் கொண்டதாக விளங்குகிறது. கோபுரத்தின் அடிப்பாகத்தின் நீளம் 40 மீட்டர்; அகலம் 31 மீட்டர். இக் கோபுரத்தை இதே அளவில் கட்டிமுடிக்கப் பெற்றி ருந்தால், ஏறத்தாழ 93 மீட்டர் அளவில் உயர்ந்திருக் கும் என்றும், தென்னுட்டிலுள்ள எல்லாக் கோபுரங் களினும் உயர்வாக அமைந்திருக்கும் என்றும்

கூறுகின்றனர். இக் கோபுரத்தைத் திருமங்கை மன்னன் கட்டி முடிக்கத் தொடங்கினுன் என்றும், ஏதோ காரணத் தால் வேலே தடைப்பட்டு இடையில் நின்றுவிட்டதென் றும் கூறப்படுகிறது. திருவரங்கத்தைக் காணவரும் எவரும், அதனுடைய பெருமிதமான தோற்றத்திலும் எடுப்பான அமைப்பிலும், கவர்ச்சிகரமான சிற்பங்களிலும் மனத்தைப் பறிகொடுக்காமல் இருக்கமுடியாது. இவ் வெள்ளேக் கோபுரத்தைப் பற்றிப் பின்வரும் சுவையான தொரு வரலாறு கூறப்படுகின்றது.

**அரங்கநாத மாணிக்கமும் இடல் கானும்:**

பதினுன்காம் நூற்ருண்டின் ஆரம்பத்தில் கோவில் கள் முதலிய சிறந்த இடங்களில் இருந்த அரும்பொருள் களேயெல்லாம் கொள்ளேகொள்ளத் தென்னுட்டின்மீது முஸ்லிம் தளபதி **மாலிக்காபூர்** படையெடுத்து வந்தார். அச்சமயம், திருவரங்கம் பெரிய கோவிலும் மாலிக்கா பூரின் கொள்ளேக்கு உட்பட்டு நின்றது. கோவிலின் அர்ச்சகர் முதலியோர் கோவிலினது அரும்பொருள்களே எல்லாம் எடுத்துக்கொண்டு வெவ்வேறிடங்களுக்கு ஓடி மறைந்தனர். மற்றும் சிலர், மூலத்தானமான திருவரங்கப் பெருமானுக்குப் பகைவர்களால் தீங்கு நேரலாகாதெனத் திருவரங்கநாதரை மறைக்கச் சுற்றிலும் சுவர்கள் எழுப் பினர். அக்கோவிலுக்கு ஊழியம் புரிந்து வந்த **அரங்நாத மாணிக்கம், கனகம்** என்ற பெண்களிருவரும் கோவிலுக் குற்ற இத்தகைய நிலேகண்டு மிகவும் வருந்தினர். பகைவர்களின் கொடுமையை அறிந்து, மனம் வருந்து வதைத் தவிர வேறு ஒன்றும் செய்ய முடியாத அவர்கள் கண்ணீருகுத்துக் கவலேப்பட்டனர்.

இத்தகைய சூழ்நிலையில் மாலிக்காபூரின் தளபதியும் திருவரங்கம் பகுதிக்குத் தலைவருமாகிய இடல்கான் என்பவர், அரங்கநாத மாணிக்கம் என்ற பெண்ணின் அழகைக் கேள்விப்பட்டு, அவளை மணந்து கொள்ள விரும்பிக் கோபாலநம்பி என்பவன் வாயிலாக அவளுக்குச் செய்தி அனுப்பினர். குறுநில மன்னனைப்போல் வாழ்வு பெற்றிருக்கும் தம்மை மணக்கத் தேவரடியார் குலத்தில் பிறந்த மாணிக்கம் மிகவும் விரும்புவாள் என்று இடல்கான் நம்பினர். மிக்க கட்டழகு வாய்ந்த மாணிக்கத்தை மணப்பதில் அவர் எத்தகைய முயற்சியையும் கையாளத் தயாராக இருந்தார். கோவிலின் இடிபாட்டையும், பற்பல கொள்ளையடிப்புக்களையும் பற்றிக் கேள்விப்பட்டிருந்த அரங்கநாத மாணிக்கம் இடல்கான் தன்னை மனைவியாக்கிக்கொள்ள விரும்புகிருர் என்ற செய்தியைக் கேள்வியுற்றுத் திடுக்குற்ருள். அவரது கண்ணிற்குத் தான் தப்பி வாழ முடியாது என்பதைத் திட்டமாக அறிந்த அவள், யாது செய்வதெனத் திகைத்தாள். இறுதியாகத் தன் உயிரைக் கொடுத்தேனும் கொள்ளையும், கொலையும் நடத்தும் இடல்கானைப் பழிவாங்கக் கருதினள். இடல்கானிடமிருந்து வந்த கோபால நம்பியிடம் தான் இடல்கானை மணக்க விரும்புவதாகவும், ஆனல், இடல்கான் தன்னை ஊராரறிய மணம்செய்து கொள்ளவேண்டுமென்றும், மணம் செய்துகொண்டவுடன் திருவரங்கம் பெரிய கோவில் சென்று இறைவனை வணங்க இசைவளிக்க வேண்டுமென்றும், இந்நிபந்தனைகளுக்கு உடன்பட்டால், மணம் செய்துகொள்ளவதற்குத் தடை இல்லை என்றும் கூறியனுப்பினள்.

இடல்கானும் இந்நிபந்தனைகளுக்கு உடன்பட்டார். திருமணம் மிகச்சிறப்புடன் நிறைவேறியது. ஊரிலிருந்தோர் யாவரும், 'அரங்கநாதர் மீது அளவற்ற பக்தி கொண்டவளைப்போல் நடித்த இப்பெண், முஸ்லிம் தலைவனை மணந்து கொண்டாளே' என்று வியப்புற்றனர். இடல்கானும், அரங்கநாத மாணிக்கமும் திருமண ஊர் வலம் வந்தனர். அதுபோது மணமகளாகிய அரங்கநாத மாணிக்கம் இடல்கானுக்கு வெள்ளைக் கோபுரத்தைக் காட்டி, "என் இனிய தலைவரே! இஃது எத்தகைய சிறந்த கோபுரம் பாருங்கள்! இக்கோபுரத்தின் மீதேறிப் பார்த்தால், இவ்வூரிலுள்ள இனிய காட்சிகளெல்லாம் தெரியுமாம். இதன்மீது ஏறிப்பார்க்க வேண்டுமென யான் சிறுவயதுமுதல் விருப்பங் கொண்டுள்ளேன். இனிய என் காதலராகிய தங்களால் தான் அவ்வாசை நிறைவேறவேண்டும்" என்று கூறினாள். உடனே இடல்கானும் அரங்கநாத மாணிக்கத்தை அழைத்துக்கொண்டு வெள்ளைக் கோபுரத்தின்மீது ஏறினார். அதன் மேற்பகுதியில் நின்று, இடல்கானுக்கு அரங்கநாத மாணிக்கம் பற்பல இயற்கைக் காட்சிகளைக் காட்டினாள். அவ்வமயம், 'துரையே! கீழே பாருங்கள்! கோபுரத்தின் உயரம் நன்கு புலப்படும்' என்றாள். அத்தலைவன் தலைகுனிந்து கீழே நோக்கினார். உடனே அரங்கநாத மாணிக்கம் அவரது காலை வாரித் தலைகீழாகத் தள்ளினாள். இடல்கானின் உடல், வெள்ளைக் கோபுரத்திலிருந்து விழுந்து சிதறிச் சிதைந்தது. உடனே துருக்க வீரர்கள் அரங்கநாத மாணிக்கத்தைப் பழிவாங்கக் கோபுரத்தின் மீது ஏறினர். ஆனால், அவள் அவர்கள் கையில் அகப்படாமல்,

கோபுரத்தின் மற்ருெரு பக்கத்தில் கீழே விழுந்து உயிரைத் தியாகம் செய்துகொண்டாள்.

**அணிகலன்களும் பிறவும்:**

இக்கோவிலிலுள்ள தெய்வங்களுக்குச் சாத்துபடி செய்யும் கோவில் நகைகளைப் போன்ற விலையுயர்ந்த நகைகள் வேறு எங்கும் கிடையா. இவற்றை நாம் காணவேண்டுமாளுல், கோவிலதிகாரிகளின் உத்தரவினைப் பெற்றுக் கண்டுகளிக்கலாம். அவற்றில் பதிக்கப் பட்டுள்ள விலை மதிப்பற்ற கற்கள் எண்ணற்றன. அவற்றைச் செய்யப் பெரிய அளவு விலையுயர்ந்த தங்கம் பயன்படுத்தப்பட்டது. ஆனுல், அவை சிறந்த அலங்கார மான தோற்றமளிப்பனவாக இல்லை. நாகரிகமான முறையில் கற்களின் முழு அழகும் வெளிப்படும் வண்ணம் அமைக்கப்படவில்லை. விஜயரங்க சொக்கநாத நாயக்கர் அளித்த பரிசுகளும், 1895இல் தென் இந்தியா விற்கு வருகை தந்த வேல்ஸ் இளவரசர் அளித்த ஒரு தங்கத் தட்டுமே இக்கோவிற் பொருள்களில் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தனவாகக் கருதப்படுகின்றன. மிகுந்த வேலைப்பாடுகளுள்ள ஆடைகள், இக்கோவிலில் உள்ளன. ஜார் மன்னர்களின் வைரமிழைக்கப்பட்ட செங்கோலில் விளங்கிய புகழ் வாய்ந்த 'ஆர்லாப் வைரம்' முன்ஞெரு காலத்தில், திருவரங்கம் கோவிலி லுள்ள திருவுருவத்தின் கண்ணுக அமைந்திருந்தது எனவும், அதனைப் பதினெட்டாம் நூற்ருண்டில் ஒரு பிரெஞ்சுக்காரர் கவர்ந்து சென்றுவிட்டார் எனவும் செவிவழி வருகின்ற ஒரு செய்தி உண்டு.

கோவிலைப் பற்றிச் சரியான வரலாற்றைத் தெளிவாக அறியக்கூடவில்லை. விரிவாக எழுதப்பட்ட ஒரு

தலபுராணத்தில் கோவிலின் துவக்கத்தைப் பற்றி ஒரு கதை கூறப்படுகின்றது. மற்றொரு நூலாகிய கோவி லொழுகு என்பது அவ்விடத்தின் வரலாற்று நிகழ்ச்சி களுடன் கூடிய பல செய்திகளைத் தெரிவிக்கின்றது. 'மெக்கன்சி' எழுதிய குறிப்புக்களிலும் கோவிலின் வரலாறும், குருமார்களின் வரலாறுகளும் குறிக்கப் பட்டுள்ளன. கோவில் கட்டடங்களில் காணப்படும் கல்வெட்டுக்கள் 906 முதல் 946 வரை ஆண்ட முதற் பராந்தக சோழன் காலத்தன எனக் கருதப்படுகின்றன. அவற்றுள் பல, வரலாற்றுச் சிறப்புடையனவாகக் காணப்படுகின்றன. அவை பாண்டியர்களாலும், ஹொய்சால மன்னர்களாலும், விஜயநகர அரசர்களின் வழி வந்தவர்களாலும் செதுக்கப்பட்டிருக்கின்றன.

### திருவானைக்கா:

திருவரங்கத்தின் மிக அருகில் அமைந்திருக்கும் திருவானைக்கா கோவிலும் திருவரங்கத்தைப் போன்று அமைந்த கோட்டைக் கோவிலேயாகும். திருவரங்கத் தில் ஏழு சுற்றுச் சுவர்கள் இருப்பது போலவே திருவானைக்காவில் ஐந்து சுற்றுச் சுவர்கள் அமைந்திருக் கின்றன. இவ்வைந்து சுற்றுச் சுவர்களுக்கும் திருவரங் கத்திலுள்ள ஏழு சுற்றுச் சுவர்களுக்கும் சிலர் தத்துவப் பொருள் கூறுகின்றனர்.

### முடிவு:

பிற்காலத்தில் நம் நாட்டில் புகுந்து முதலில் வணி கத்தையும், இறுதியில் அரசியலையும் பறித்துக்கொண்ட முஸ்லிம்கள், பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர் முதலியோர் தமக்குள் போரிட்டுக்கொண்ட காலங்களில் இத்தகைய

கோவில்களைக் கோட்டைகளாகப் பயன்படுத்திக் கொண்டனர். அக்காலப் போர்களால் ஏற்பட்ட அழிவுக்குட்பட்ட சிதைவுகளை இன்றும் சிற்சில கோவில்களில் காணலாம்.



# 7. நாமக்கல் கோட்டை

## கோட்டையின் அமைப்பு:

சேலம் மாவட்டத்தில் நாமக்கல் முக்கியமானதொரு நகரமாக விளங்குகிறது. இந்நகரம் அத்தாலூக்காவின் தலைநகரமாகவும் திருச்சிராப்பள்ளி, சங்ககிரி, துறையூர், சேலம் முதலிய நகரங்களுக்குச் செல்லும் பாதைகள் கூடுமிடமாகவும் இருக்கிறது. இங்கிருந்து காவிரிச் செல்வமாகிய வாழை, வெற்றிலை, நெல், தேங்காய் முதலிய பொருள்களும் கொல்லிமலையின் விளைபொருள் களாகிய பழவகைகள் முதலியனவும் பிறவும் மிகுதியாக ஏற்றுமதியாகின்றன. இவை எல்லாவற்றையும்விட, இவ்வூருக்குப் பெருமை தருவது இவ்வூரின் நடுவே அமைந்திருக்கும் மலைக்கோட்டையே யாகும். இக் கோட்டை அமைந்திருக்கும் மலையின் பெயராகிய நாமக்கல் என்பதுதான் இவ்வூரின் பெயராக விளங்கு கிறது. நாமக்கல் மலை மிகப் பெரியதும், பிளவற்றதும், கடினமானதுமான ஒரே கற்பாறையாக அமைந்திருக் கிறது. இப்பாறை 61 மீட்டர் உயரமும் ஏறத்தாழ ஒரு கிலோ மீட்டர் நீளச்சுற்றளவுமுள்ளது. இம்மலையின் கிழக்கு மேற்குப் பகுதிகள் எவரும் ஏறவொண்ணுதபடி மிகச் செங்குத்தாகவும், தெற்கு வடக்குப் பகுதிகள் ஏறுவதற்குச் சற்று சரிவாகவும் அமைந்திருக்கின்றன. வடபகுதியைக் காட்டிலும் தென்பகுதி, சிறிது நீண்ட சரிவாக இருக்கிறது. தென் பகுதியாகிய இச் சரிவில் மலையின்மீது ஏறுவதற்குக் குறுகலான படிகள்

வெட்டப்பட்டிருக்கின்றன. இப்படிகள், மலையின் தென் மேற்குப் பாகத்தில் தொடங்கி, இறுதியில் தென் பகுதியிற்சென்று மேலே மலைக்கோட்டையை அடைகின்றது.

தெற்கிலும் தென்மேற்குப் பகுதியிலும் சிதைந்த சில சுவர்கள் நிற்கின்றன. இவை, தற்போதுள்ள கோட்டை, கட்டப்படுவதற்கு முன்னரே அமைந்திருந்த பழைய கோட்டையின் சிதைவாகக் கருதப்படுகின்றன. பாறையின் உச்சியிலிருக்கும் கோட்டை, சுமார் அரை ஹெக்டேர் பரப்புள்ளதாக இருக்கிறது. மேலே உள்ள கோட்டையின் உட்பகுதி, தெற்கில் உயர்ந்தும் வடக்கில் சரிந்தும் காணப்படுகிறது. கோட்டையினுள் தங்கியிருக்க நேரும்போது, தண்ணீர் தேவைப்படுமாதலின் கோட்டையின் மேல் பகுதியில் மழைத் தண்ணீர் தங்கியிருப்பதற்குரிய பாழிகள் வெட்டப்பட்டிருக்கின்றன. இவ்வாறு அமைக்கப்பட்டிருக்கும் பாழியொன்றில் எப்போதும் (கோடைக் காலத்திலும்கூட) நீர் நிறைந்திருக்கிறது. மற்றும் சில பாழிகளில் தண்ணீர் இருக்கின்றது. இங்ஙனமுள்ள பாழிகளில் கோட்டையின் மேற்பரப்பின் தென்பகுதியில் உள்ளதுதான் பெரியதும் நீர் நிறைந்ததும் ஆகும். இப்பாழியில் நீராடுவதற்கெனப் பலர் செங்குத்தான இம்மலைமீது ஏறுகின்றனர். கோட்டையின் வடக்குப் பகுதியில் இரகசிய வாயில் ஒன்று அமைந்துள்ளது. இந்த இரகசிய வழி, ஆபத்து வந்த காலங்களில் தப்பிச் செல்வதற்காக ஏற்பட்டதாகும். மலையின் மேலுள்ள மேற்பரப்பனைத்தும் நன்கு பயன் படுத்தப்பட்டிருக்கின்றன. கோட்டையின் உட்பகுதி

நீங்கலாகச் சிறிதளவுச் சமநிலமும் மேற்பரப்பில் கிடையாது.

கோட்டையினுள்ளே ஒரு சிறிய திருமால் கோவில் இருக்கிறது. இக்கோவிற் சுவர்களில் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இங்கு மற்றுமொரு பாழடைந்த செங்கற் கட்டடமும் நிற்கிறது. இக்கட்டடம் ஏறத்தாழச் சம சதுரமாகக் கட்டப்பட்டிருக்கிறது. இதன் நீளம், அகலம், உயரம் முதலியன ஏறக்குறைய 10 மீட்டர்கள் இருக்கின்றன. இக்கட்டடம் பண்டைக் காலத்தில் நிதிச் சாலையாக இருந்திருக்கலாம் என்று கருது கின்றனர். இக்கோட்டையின் சுற்றுச் சுவர்கள் மிக வலிமை வாய்ந்து நல்ல நிலையிலிருக்கின்றன. இச்சுவர் களின் அடிப்பகுதி கடினமான கருங்கற் பாளங்களால் அமைக்கப்பட்டிருக்கின்றன. இங்ஙனம் அமைக்கப் பட்டிருக்கும் கற்கள் சுண்ணும்புக் காரையால் பொருத் தப்படாமல், அவற்றின் கன அளவைக் கொண்டும் அடிப்பகுதியில் காடிகள் வெட்டப்பட்டும் பொருத்தப் பட்டிருப்பது அரிய வேலைப்பாடாகும். இங்ஙனம் அமைக்கப்பட்ட கோட்டைச் சுவருக்கு வேண்டிய கற்கள், பாறையின் மேற்குப் பகுதியிலிருந்தே வெட்டி யெடுக்கப்பட்டிருக்கின்றன. கோட்டைச் சுவரின் மேற்குப் பகுதி, சுண்ணும்புக் காரையால் அமைக்கப்பட்ட செங்கற் சுவர்களாகும். இச்சுவர் ஒரு மீட்டர் அகல முடையதாகவும் அலங்கங்களாகவும் இருக்கின்றன. இக் கோட்டைச் சுவரின் உட்பகுதியில் பாதுகாப்புக் காலங் களில் வீரர்கள் அலங்கங்களின் மறைவில் நின்று கொண்டு சுடுவதற்காகப் பல கண்ணறைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. வீரர்கள் நின்றுகொண்டு

கண்ணறைகளின் வழியாகப் பகைவர்களைச் சுடுவ தற்கென மேடையொன்று அமைக்கப்பட்டுள்ளது. இங்கே பலவிடங்களில் நிலவறைகள் பல அமைக்கப் பெற்றிருக்கின்றன. இவற்றில் அக்கால மன்னர்களால் சேர்த்து வைக்கப்பட்ட அரிய பொருள்கள் தொகுத்து வைத்திருந்ததாகக் கூறப்படுகிறது.

**கமலாலயம்:**

நாமக்கல் பாறையின் சரிவுகளில் கிண்ணங்களைப் போன்று, சிற்சில குழிகள் காணப்படுகின்றன. அவற்றில் உள்ள தண்ணீர் உடலுக்கு நலம் பயப்பதாகக் கருதிச் சிலர் செங்குத்தான சரிவுகளில் ஏறிச் சென்று அவற்றில் குளிக்கின்றனர். மலையைச் சூழப் பல குன்றுகள் இருக்கின்றன. மலையின் மேற்குப் பகுதியில் இரண்டு குளங்களும், வடமேற்குப் பகுதியில் ஒன்றும், தென்கிழக்கில் ஒன்றுமாக நான்கு குளங்களிருக்கின்றன. அவற்றுள் பெரியதாகக் காணப்படுவது தென்கிழக்குப் பகுதியிலுள்ள இலக்குமியின் உறைவிடம் எனப்படும் கமலாலயமேயாகும். இக்குளம் சுமார் $1\frac{1}{4}$ கிலோ மீட்டர் சுற்றளவுள்ளதாக அமைந்திருக்கிறது. குளத்தின் நடுவே அழகானதொரு நீராழி மண்டபம் காணப்படுகிறது. இக்குளத்தின் நீர் ஊரவர்களுக்குக் குடிநீராகவும் பயன்படுகிறது. இக்குளத்தைப் பற்றியும், மலையைப் பற்றியும் புராணக்கதையொன்றும் கூறப்படுகிறது. இக்குளம் நாமகிரியம்மனுக்குரியது.

**குளத்தையும் மலையையும் பற்றிய புராணக் கதை:**

இராம இராவணப் போரில், ஒரு சமயம் இலக்குவன் இராவணனுடன் போர்செய்து காயமுற்று விழுந்தபோது,

இலக்குவனைக் காப்பாற்ற அனுமான் சஞ்சீவி மலையைத் தேடச் சென்றனன். அங்ஙனம் சென்ற அனுமான் தேடிய சமயத்தில், கந்தக ஆற்றுப் படுகையின் ஒரு பகுதியில் ஒரு சாளக் கிராமத்தைக் கண்டு எடுத்துக்கொண்டான். மீண்டும் அவன் சஞ்சீவி மலையுடன் திரும்பி வந்து கொண்டு இருக்கும் வழியில், இலக்குமி தவம் செய்து கொண்டிருக்கும் கமலாலயத்தைக் கண்டான்.

கமலாலயத்தைக் கண்ட அனுமான் சாளக்கிராமத்தை நிலத்தில் வைத்துவிட்டுக் குளத்தில் நீரருந்தினுன். வைத்தவிடத்தில் பற்றிக்கொள்ளும் இயல்புள்ள அச் சாளக்கிராமத்தை அநுமானுல் மீண்டும் பெயர்த் தெடுக்க இயலவில்லை. அதனுல் அநுமான் அச் சாளக் கிராமத்தை விட்டுவிட்டுப் போய்விட்டான். அச் சாளக் கிராமமே பின்னுளில் பெருமலையாக வளர்ந்து விட்ட தென்றும், அதுதான் நாமக்கல் மலை என்றும் கூறப் படுகிறது. இங்கு அநுமான் வந்து சென்றதன் நினைவாக நாமகிரி அம்மனுடைய சந்நிதிக்கு எதிரில் மிகப் பெரிய ஏறக்குறைய 6 மீட்டர் உயரமுள்ள அநுமான் சிலை யொன்று தொழும் நிலையில் அமைந்துள்ளது. இம் மலை யின் கிழக்குப் பக்கத்தில் சற்று உயரமுள்ள பகுதியில் வரதராசப் பெருமாள் கோவில் ஒன்று இருக்கிறது. மலையின் மேற்குப் பகுதியில் மலையின் அடிப்பகுதியை யொட்டி அரங்கநாதர் கோவில் ஒன்றும் உள்ளது. இங்குப் பல்லவ மன்னர்களால் மலையைக் குடைந்து அமைக்கப்பட்ட கோவிலொன்றும் இருக்கிறது.

**திரு. பி. தி. சீனிவாசய்யங்கார் கூறும் வரலாறு :**

"நாமக்கல்லில் மலைக்கோவில்கள் இரண்டு உண்டு. அவற்றில் அரங்கநாதன் கோவில் மகேந்திரன் என்னும்

பல்லவ மன்னன் கட்டியதாகும். நரசிம்மன் கோவில் கொஞ்சம் பிந்திய காலத்தில் கட்டப்பெற்றது. அரங்க நாதன் கோவில் மகேந்திரன் கட்டிய கோவில்களெல்லா வற்றிலும் மிக அழகானது. இங்கிருக்கும் பள்ளிகொண்ட திருமாலின் உருவச் சிலையைவிட உயர்ந்த செதுக்கு வேலை உலகில் எங்கும் இல்லையென்று கூறலாம், குகைக் கோவிலும் அற்புதமாய்க் குடையப்பட்டிருக்கிறது. கோவில் முன் மண்டபத்துக்கு வெளியில் ஒரு தாழ்வாரம் மூங்கிலால் செய்த தாழ்வாரத்தைப்போல் மலையைக் குடைந்து அமைக்கப்பட்டிருக்கிறது. இதனழகை நேரில் பார்த்தால்தான் அறிவுக்குப் புலப்படுமேயன்றி வரு ணிக்க முடியாது. நாமக்கல் கோவிலை ஆதிரங்கம் என்பர். கோவில்களின் சுவர்கள்மீது கைடபன் கதை, நரசிம்மாவ தாரக் கதை, மச்சாவதாரக் கதை முதலியன அழகிய சிலைகளால் காட்டப்பெற்றிருக்கின்றன. ''நாமக்கல் மலை யடியில் உள்ள நரசிம்ம சுவாமி குகைக் கோவில் மகேந் திரனது மகனாகிய நரசிங்கப் போத்தரையன் காலத்தது போலும். அதன் சுவரில் புராணக் கதைகள் சிற்பத்தால் காட்டப்பெற்றிருக்கும்.'' ('பல்லவர் சரித்திரம்' முதல் பாகம்). இவரது கூற்றுக்களால், நாமக்கல் கோவில்களில் காணும் அற்புதமான சிற்பங்களின் பெருமை நன்கு விளங்குகிறது. இனி, கோட்டையைப்பற்றிக் கூறப்படும் வரலாறுகளை நோக்குவோம்.

**நாமக்கல் கோட்டை வரலாறு :**

சங்க காலத்தில், கொல்லிமலை நாட்டையாண்டு வந்த ஓரிமன்னனது மலைக்கோட்டையிலுள்ள அடையா ளங்கள், நாமக்கல் மலைக்கோட்டையிலும் காணப்படு கின்றன என்று அறிஞர் பலர் கூறுகின்றனர்.

இக்கோட்டை சேந்தமங்கலம், நாமக்கல் முதலிய பகுதிகளின் அரசனுக விளங்கிய பாளையக்காரர் இராமச்சந்திர நாயக்கரால் கட்டப்பட்டிருக்கலாம் என்று கூறுகின்றனர். இக்கருத்திற்கு மாருக மைசூர் அரசரிடம் உத்தியோகத்திலிருந்த இலட்சுமி நரசிம்ம ஐயாவால் நானூறு ஆண்டுகளுக்கு முன் இக்கோட்டை கட்டப்பட்டது என்று H லெபான், I. C. S. கூறுகிருர். இக்கோட்டையின் அமைப்பு, கற்களில் காணும் புதுமைத்தன்மை, புதுமுறைப் பாதுகாப்பு முதலியவற்றைக்கொண்டு ஆராயும்போது, இக் கோட்டை ஏறக்குறைய இருநூருண்டுகளுக்கு முற்பட்டதாக இருக்கமுடியாதென்றும் வேறு சிலர் கூறுகின்றனர். பிற்காலத்து மைசூர் மன்னர்களின் ஆட்சியானது தெற்கில் சேலம் மாவட்டத்தின் தென் பகுதியாகிய நாமக்கல் கூற்றத்தின் எல்லையில் இருக்கும் வலையப்பட்டிவரை பரவியிருந்தது. அப்போது, இம்மலைக் கோட்டையும் மைசூர் மன்னர்களுக்குச் சொந்தமானதாக இருந்தது. இக்கோட்டையைக் கிழக்கிந்தியக் கம்பெனியைச் சேர்ந்த 'உட்' என்பவர் 1768இல் மைசூர் மன்னரான ஹைதரிடமிருந்து கைப்பற்றி, மீண்டும் அதே ஆண்டில் ஹைதரிடம் விட்டுவிட்டு ஓடினுர். இறுதியில் இக் கோட்டை கிழக்கிந்தியக் கம்பெனியார், வசப்பட்டு நின்றது. கிழக்கு இந்தியக் கம்பெனியார், இந்தியச் சிப்பாய்களைப் பாதுகாப்பாக வைப்பதற்கு இக்கோட்டையைப் பயன்படுத்தி வந்தனர். இன்று, இக்கோட்டை பழங்காலச் சின்னங்களுளொன்ருகக் காட்சியளித்துக் கொண்டு நிற்கின்றது. இக் கோட்டையின்மேற் சென்று காணபவர் தொகை மிகவும் குறைவு எனினும், இக் கோட்டை நகரின் நடுவே பலர்க்கும் பழம் பெருமையையுணர்த்தும் பொருளாய் இன்றும் விளங்குகின்றது.

# 8. புலிக்கோட்டை

**நீலமலையின் மாண்பு :**

நம் நாட்டுச் செல்வர்களில் பலர் கோடைக்கால வெம்மைக்கு ஆற்ருது குளிர்ச்சிக்காக நீலகிரிக்குச் சென்று, இன்பமாகத் தங்கித் திரும்புவர். அங்கே தங்கியுள்ள காலங்களில் மலைக் காட்சிகளைக் கண்டு மகிழ்ச்சி எய்துவர். அங்கிருக்கும் மலைவாசிகளான தோதவர், வடுகர், குறும்பர், இருளர் முதலியவர்களில் வயது வந்தோர்களைக் கண்டு, அவர்களுடன் உரையாடின், அம்மலைப் பகுதியைப் பற்றிய வியக்கத் தகுந்த பல வரலாறுகளைக் கேட்டு மகிழலாம்.

நீலமலையில் பற்பல நகரங்களும் சிற்றூர்களும் விளங்குகின்றன. இவற்றுள், புதுக்கோட்டை என்னும் கிராமம் வரலாற்றுப் பெருமை வாய்ந்ததாகும். இதனையே புலிக்கோட்டை, புலிக்குன்று, புலிப்பாறை என்றும் கூறுவர். இக் கிராமத்தின் அருகேயுள்ள குன்றின் உச்சியில் ஏறிப் பார்த்தால், கோட்டையின் அழிபாடுற்ற பற்பல சின்னங்களைக் காணலாம். இக் குன்று, 1830 மீட்டர் உயரமுடையது. செங்குத்தான இக்குன்றின் உச்சியிலிருந்து கீழே பார்த்தால், மனம் நடுக்கங் கொள்ளும். நாற்றிசைகளையும் நோக்கினல் பேரானந்தம் உண்டாகும். கோவை நகரின் அழகிய வீடுகள், பாம்புபோல் வளைந்து வளைந்து செல்லும் பவானியாறு, மலை உச்சிக்கு வரும் வழி மேற்குத் தொடர்ச்சி மலைகளின் மேல் தவழுங் கருமேகங்கள்,

மலையின் பசுமையான மரஞ் செடி கொடிகள், இவற்றினிடையே விளங்கும் கூனூரின் வெண்ணிற மாளிகைகள் ஆகியவை பார்க்கப் பார்க்க அளவற்ற மகிழ்ச்சியையுண்டாக்கும்.

## புலிக்கோட்டையின் வரலாறு :

இக்குன்றின் மேலுள்ள புலிக்கோட்டை, மலைக்கோட்டை, கோணக் கரையிலுள்ள உதயராயன்கோட்டை என்னும் மூன்று கோட்டைகளே நீலமலைப் பகுதியில் காணும் எட்டுக் கோட்டைகளில் மிகவும் முக்கியமானவை களாகும். இவை வடுக மரபினரின் முன்னோரால் கட்டப் பட்டனவென்றும் அம்மரபின் வழியாக வந்த மூவர், இந்நீலகிரியை மூன்று பாகங்களாகப் பிரித்து ஆண்டு வந்தனர் என்றும், அவர்கள் காலத்தில் வடுக மரபினர் பெருவீரர்களாகத் திகழ்ந்தனர் என்றும் சொல்லப்படு கின்றன. காஞ்சிபுரத்தைத் தலைநகராகக்கொண்ட பல் லவர்கள், வல்லரசர்களாக விளங்கிய காலத்தில் அவர்களுடைய படைத் தலைவர்களாக விளங்கிய குறும்பர் என்பவர்கள், நீலகிரி முழுவதும் பல கோட்டை களைக் கட்டி, மலைவளத்தைப் பேணிப்பெருக்கி வாழ்ந்து வந்தனர் என்றும் வேறு சிலர் கூறுகின்றனர்.

## புலிக்கோட்டையின் அமைப்பும் சிறப்பும் :

இப்பழமை வாய்ந்த மலையின்மேல் எட்டு இடங் களில் கோட்டைகளிருந்தன என்பதற்குரிய அடையாளச் சின்னங்கள் இன்றும் காணப்படுகின்றன. புலிக் கோட்டை என்பது, செங்குத்தான ஒரே பாறையா லாகியது. இக்குன்றின் மூன்று பக்கங்களிலும் அகன்று விரிந்து ஆழ்ந்த பள்ளத்தாக்குகளும் அப்பள்ளத்தாக்கில்

இடைவிடாது நெருங்கி அடர்ந்த செழுமை பொருந்தி விளங்கும் மரம், செடி, கொடிகளின் பசிய தோற்றமும் அவற்றினூடே இருண்டு தோன்றும் நிழற்சாயலின் வனப்பும் காண்பார், இவ்வியற்கையின் பேரழகைக் கண்டே இதனை நீலமலை என்றனர் போலும் என்று கருது வர். நான்காவது பக்கத்தில் இக்குன்றைப்பிணைக்கும் குறுகிய பாறைப் பாலம் ஒன்றுளது. இப்பாறைப் பாலத் தின்மீது ஒருவர்தான் நடந்துசெல்லமுடியும். இயற்கை யான அப்பாறை, செங்குத்தாக இருப்பதுமன்றி, வழ வழப்பாயும் நான்கு பக்கங்களிலும் அரண்கள் அமைந்த தாயும் இருப்பதை நோக்கின், அதன் அருமையை அறிய லாம். நூ லே ணி மு த லி ய எவ்வித உதவியைக் கொண்டும், இப்பாறையின் உச்சியை எதிரிகள் அடைய முடியாது.

நான்கு பக்கங்களிலும் உறுதியும் உயரமுமான மதில்கள் உள்ளன. இம்மதிற் சுவர்களில் பகைவர்களின் வருகையை எளிதில் கண்டுகொள்ளத்தக்க கிளிக்கூண் டின் பிறைகள் அமைக்கப்பட்டுள்ளன. 450 மீட்டர் நீளமும் 180 மீட்டர் அகலமுடையதாகிய பெரியதொரு மதிற்சுவரும் உள்ளது. இக்கோட்டையின் சுவர் மிகுந்த அகலமுடையதாக இருக்கிறது. இக்கோட்டையினுள் செல்லுதற்குப் பாறைப் பாலத்தை நோக்கிய வாயிலே முக்கியமானதாக அமைந்திருக்கிறது. இதற்கு நேரே பின்புறத்தில் பள்ளத்தாக்கை நோக்கி யமைந்ததொரு வாயிலும் உண்டு. ஏறக்குறைய நூற்றைம்பது ஆண்டு களுக்கு முன், இக்கோட்டைக்குள் பற்பல வீடுகளில் மக்கள் வாழ்ந்து வந்தனர் என்பதற்குரிய அடையாளங் கள் காணப்படுகின்றன. இப்போது இக்கோட்டையின்

உட்பகுதிகள் மரம், செடி, கொடிகள் நிறைந்து, புதர்க ளாகக் காட்சியளிக்கின்றன.

ஆதியில் வடுக மன்னர்களாலும், பல்லவ மன்னர் களின் ஆட்சிக்குட்பட்ட சிற்றரசர்களான குறும்ப அரசர்களாலும் அமைக்கப்பட்ட இக் கோட்டைகள் பிற் காலத்தில் வந்த மொகலாய மன்னர்களின் ஆட்சிக்குட் பட்டு நின்றன. அதுசமயம் நடந்ததொரு வரலாறு இக் கோட்டையின் பெருமையை நன்கு விளக்குவதா யுள்ளது.

**திப்புசுல்தானும் புலிக்கோட்டையும் :**

மைசூர் நாட்டையாண்ட திப்புசுல்தானுக்கும் கிழக்கிந்தியக் கம்பெனியரான ஆங்கிலேயர்களுக்கும் பகை ஏற்பட்டு, அடிக்கடி போர்கள் நிகழ்ந்துகொண்டே யிருந்தன. ஒருவரையொருவர் தாக்கி அழிக்கத்தக்க காலத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். தம்மை அடக்கி ஒடுக்கிவிட ஆங்கிலேயர் மிகவும் முனைந்து நிற்கின்றனரென்பதைத் திப்பு நன்கு அறிந்திருந்தும் அஞ்சாமல் ஆங்கிலேயரை எதிர்த்து வந்தார். திப்பு தமது ஆட்சிக்குட்பட்டிருந்த கோட்டைகள் எல்லா வற்றையும் வலுப்படுத்திப் பாதுகாப்புச் செய்து வந்தார். சிறந்த பாதுகாப்புடையதாக விளங்கிய புலிக்கோட்டை, மலைக்கோட்டை, உதயராயன் கோட்டை ஆகிய மூன்றினையும் மிகவும் திருத்தியமைத்து, அவற்றிற்கு முறையே 'சையத்பாத்' "உசேன்பாத்" 'உமர்பாத்' என்ற பெயர்களையும் வழங்கினார். அப்போது அவர் அக் கோட் டைகளின் பாதுகாப்புத் தலைவனாக 'அலிகான்' என்ற முஸ்லிம் வீரனை நியமித்தார்.

## கேப்டன் ஹெர்பர்ட்டு சிறைப்படல் :

கேப்டன் ஹெர்பர்ட்டு என்பவன் திப்புசுல்தானைப் பன்முறை போருக்கிழுத்துத் தோல்வியுற்று, மதிப்பிழந் தவன். அவன் எவ்வாறுவது திப்புவை அடக்கிவிட வேண்டுமென்று திட்டமிட்டான். இதன் காரணமாக மாறுவேடம் பூண்டு, திப்புவின் இராணுவ இரகசியங்களை அறிந்துவரத் தானே புறப்பட்டான். மிகத் திறமையாக மாறுவேடத்தில் சென்று, திப்புவின் படை வலிமை, போர் நுணுக்கம் ஆகியவற்றை அறிந்துகொண்ட கேப்டன் ஹெர்பர்ட்டு, இம்முறை எப்படியும் திப்புவை வென்று விடலாம் எனக் கருதி மனப்பால் குடித்தான். வந்த காரியத்தைத் திறமையாக முடித்துக்கொண்டு தம் நண்பர்களான ஆங்கில வீரர்கட்குக் கூறி, நாடு பிடிக் கத் திட்டமிட்டிருந்த ஹெர்பர்ட்டைத் திறமை மிக்க திப்புவின் வீரர்கள், தந்திரமாகச் சிறை செய்து விட்டனர். ஹெர்பர்ட்டுத் தப்பிவிட்டானுனல், தமக்குப் பெரிய கெடுதி விளையுமென்பதைத் தெளிவாக அறிந்த திப்புசுல்தான், ஆங்கிலேயர்களால் மீட்க முடியாத இடமொன்றில் அவனைச் சிறைவைக்கக் கருதினுர். இங்ஙனம் சிந்தித்த திப்புவின் சிந்தனைக்குச் சிறந்த கோட்டையாகத் தோன்றியது, நீலமாமலையில் 1830 மீட்டர் உயரத்திலிருந்த புலிக்கோட்டையேயாம். எனவே, ஹெர்பர்ட்டு, புலிக்கோட்டையில் சிறை வைக்கப் பட்டான்.

## ஹெர்பர்ட்டைத் தேடும் முயற்சி :

திப்புசுல்தான், கேப்டன் ஹெர்பர்ட்டிற்குக் காவலாக நூறு வீரர்களை அங்கு வைத்தார். அவ் வீரர்

களுக்கான உணவுப் பொருள்களை வாரத்திற்கு கொரு முறை அனுப்பி வைக்க, அம்மலையின் கீழுள்ள கிராமத் தலைவனுக்கு ஆணைபிறப்பிக்கப்பட்டது. உளவறியச் சென்ற கேப்டன் ஹெர்பர்ட்டின் வருகையை எதிர்பார்த்த ஆங்கிலேயர்கள் ஏமாற்ற மடைந்தனர். 'இன்று வருவான், நாளை வருவான்' என்று எண்ணிப் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தனர். பொறுமையை இழந்த அவர்கள், ஒருவேளை ஹெர்பர்ட்டு திப்புவின் வீரர்களால் சிறைப்பிடிக்கப்பட்டிருக்கலாம் என்று கருதினர். திறமைமிக்க ஹெர்பர்ட்டை எவ்வாருயினும் தப்புவிக்க வேண்டுமென்று கருதிய வெள்ளையர், அச்செயலுக்கு ஹெர்பர்ட்டின் நெருங்கிய தோழனும் நுட்பமதி படைத்தவனுமான வார்டு என்பவனை அனுப்பத் துணிந்தனர். எப்பொழுதும் ஹெர்பர்ட்டின் நினைவாகவே இருந்து வந்த வார்டும் தனக்கிட்ட பணியைப் பெரும்பேருகக் கருதிப் புறப்பட்டான். பலவித மாறுவேடங்கள் பூண்டு, மைசூர் நாட்டில் சுற்றித் திரிந்தான். ஹெர்பர்ட்டு, சிறை வைக்கப் பட்டிருக்கும் செய்தி மிகவும் இரகசியமாகக் காக்கப்பட்டு வந்ததால், வார்டு, ஹெர்பர்ட்டைப் பற்றி எளிதில் ஒரு செய்தியும் அறிந்துகொள்ள முடியவில்லை. 'முயன்ருல் முடியாததும் உண்டோ?' என்ற முதுமொழியை நம்பிப் பாடுபட்ட வார்டு, பல மாதங்களுக்குப் பின் ஹெர்பர்ட்டு இறக்கவில்லை என்பதையும், நீலமலைப் பகுதியிலுள்ளதொரு மலைக் கோட்டையில் சிறை வைக்கப்பட்டிருக்கிருன் என்பதையும் அறிந்து கொண் டான். ஒருவாறு நண்பன் இருக்குமிடத்தை அறிந்து

கொண்ட வார்டு, எவ்வாறுவது ஹெர்பர்ட்டை விடுவித்து விடலாம் என்ற மன உறுதியுடன் நீலமலை நோக்கி நடந்தான்.

புலிக்கோட்டையில் சிறைப்பட்ட ஹெர்பர்ட்டோ தனது மனக்கோட்டை தகர்ந்து விட்டதை எண்ணி எண்ணி ஏங்கினான். அவன், "புலிக்கோட்டையில் சிறைப்பட்ட நமக்கு இனிமேல் விடுதலையே இல்லை; இங்கிருந்து நம்மை இனி எவரும் விடுவிக்க மாட்டார்; இங்கிருந்தே இறக்க வேண்டியதுதான் நமது தலைவிதி போலும்" என்று முடிவு கட்டினான். பல சமயங்களில் தனது தாய் நாடாகிய இங்கிலாந்தை எண்ணி வருந்தும் ஹெர்பர்ட்டுக்கு இயற்கைக் காட்சிகள் ஓரளவு ஆறுதலளித்து வந்தன. சிற்சில சமயங்களில் ஹெர்பர்ட்டு, "நாம் சிறைப்பட்டதுங்கூட நன்மைக்கே, இங்கே சிறைப்படாவிடின் இத்தகைய இயற்கைக் காட்சிகளைக் காண இயலுமோ?" என்று பலவாறு புலம்பிக்கொண்டு புலிக்கோட்டையில் சிறைப்பட்டிருந்தான்.

### கிராமத் தலைவன் உறுதி:

ஒரு நாள் வார்டு மாறுவேடத்துடன் புலிக் கோட்டையின் அடியில் இருக்கும் கிராமத்திற்கு வந்து சேர்ந்தான். மெல்லப் பக்குவமாகக் கிராமத் தலைவனைக் கண்டு பேசினான். தனக்கு உதவிசெய்ய வேண்டு மென்று ஆரம்பித்து, கையூட்டாக (லஞ்சம்) ஆயிரம் வராகன்களைக் கொண்ட பெரியதொரு பண முடிப்பைக் கிராமத் தலைவனுக்குக் கொடுக்கத் தொடங்கினான். தவறான வழியில் பொருள் சேர்க்க விரும்பாத அக்

கிராமத் தலைவன், வார்டைத் திட்டிக் கண்டித்து விட்டான். இறுதியாக வார்டு, ஐயா, நான் இம்மலை உச்சிக்குச் சென்று இயற்கைக் காட்சிகளைக் கண்டு மகிழத் தாங்கள் அனுமதியளிக்க வேண்டும் என்று கெஞ்சினான். உடனே கிராமத் தலைவன் அவன்மீது ஐயங்கொண்டான். "நீ பொன் கொடுப்பதும், மலை உச்சிக்குச் செல்ல விரும்புவதும் நோக்கின், ஏதோ இதில் சூது இருப்பதாகத் தோன்றுகின்றது. எனக்குக் காசு பெரிதன்று; மானமே பெரிது; உடனே நீ இங்கிருந்து ஓடிவிடுக. இல்லையேல் உயிர் தப்ப மாட்டாய்!'' என்று கூறி விரட்டிவிட்டான். வார்டு இவற்றிற்கெல்லாம் மனம் தளராமல், பல நாள் அவ்வூரிலேயே மறைந்து வாழ்ந்து வந்தான். மலைக்காவல் வீரர் பலரையும் அணுகிப் பசப்பு மொழிகளைக் கூறிப் பணத்தை நீட்டுவதும், அவர்கள் அவனைக் கண்டித்து விரட்டுவதும் அவனது வழக்கமான நிகழ்ச்சிகளாகி விட்டன. எனினும் வார்டு, அங்குள்ள மக்களின் ஒழுக்கத்தையும், உறுதியையும் வியந்தான். ஆனாலும் கருதிய செயல் முடியவில்லையே என்பதற்காகப் பெரிதும் வருந்தினான்.

### சதிச் செயல் :

ஒரு நாள் வார்டு வழக்கம்போல் மலைக்காவல் வீரன் ஒருவனைக் கண்டு பேசினான். அவன் பெயர் மாபுஸ்கான் என்பது. அம்மாபுஸ்கான் தன் மனைவிக்குப் பிள்ளைபேறு காரணமாக உடல்நலமின்றியிருப்பதாக அறிந்து, அதற்காக ஒரு மாத விடுமுறை பெற்றுச் சொந்த ஊருக்குப்போக வந்து கொண்டிருந்தான். சிந்தையைச் சொந்த ஊரின்மீது பதித்த அவன் கையில் போதுமான

பணமில்லாமை குறித்து வருந்திக்கொண்டே வழி நடந்தான். இத்தகைய சூழ்நிலையில் இருந்த மாபுஸ்கானைக் கண்டு வார்டு வழக்கம்போல் பணத்தை நீட்டினான். பெரிய பையில் பொற்காசுகளாக இருந்த ஆயிரம் வராகன்களைக் கண்டதும் மாபுஸ்கானின் மனம் மயங்கி விட்டது. ''ஐயா, தங்கள் விருப்பம் எதுவாயினும் என்னால் இயன்ற உதவி செய்ய வல்லேன்!'' என்று கூறி மாபுஸ்கான் பல்லிளித்து நின்றான். உடனே வார்டும் மாபுஸ்கானும் நண்பரானார்கள். மாபுஸ்கானும் வார்டும் மைசூர் நாட்டிலுள்ள மாபுஸ்கானின் சிற்றூருக்குச் சென்றார்கள். அங்கு இருவரும் சில நாட்கள் தங்கிய பின், விரைவில் நீலமலைக்குத் திரும்பினர். விடுமுறை நாட்கள் முடிவதற்குமுன் திரும்பிய மாபுஸ்கானைக் கண்ட கோட்டையின் பாதுகாப்புத் தலைவனுக்கு ஐயம் பிறந்தது. மாபுஸ்கான் தலைவனுக்குப் பற்பல சமாதானங்கள் கூறி மழுப்பி விட்டான். கோட்டைத் தலைவன் தன்மேல் ஐயப்பட்டிருக்கிறான் என்பதைத் தெளிவாக உணர்ந்து கொண்ட மாபுஸ்கான் எச்சரிக்கையாக நடந்துகொண்டான். வார்டின் விருப்பப்படி மலையின்மீது அழைத்துச் செல்வதைச் சற்றுத் தள்ளிப் போட்டுக்கொண்டே வந்தான். விடாமுயற்சியுடைய வார்டு அடிக்கடி மாபுஸ்கானைக் கண்டு பேசுவது வழக்கமாயிற்று. கோட்டைக் காவலர்களில் மங்களன், பிரதாபன் இருவரும் மாபுஸ்கான் அந்நியனாகிய வெள்ளை மனிதனோடு நெருங்கிய தொடர்புடையவனாய்ப் பேசிப் பழகிவருவதை வெறுத்தனர்.

பலமுறை அவர்கள் மாபுஸ்கானை நலம் விசாரிப்பது போல் மெல்ல அணுகிப் பரிகாசம் செய்யத்தலைப்

பட்டனர். மாபுஸ்கான் அவர்கள் பரிகாசம் செய்யும் கருத்தைத் தெரிந்துகொண்டான். தான் வெள்ளையனுக்கு உடந்தையாக நின்று காட்டிக்கொடுக்க விருப்பதை அவர்கள் கோட்டைப் பாதுகாப்புத் தலைவனுக்கு அறிவித்துவிட்டால் ஆபத்தாய் முடியுமென்று அஞ்சினுன். உடனே கோட்டைப் பாதுகாப்புத் தலைவனை அணுகி மங்களன், பிரதாபன் ஆகியோர்மீது கோள்கள் பல மூட்டினுன். பொய்யை மெய்யெனக்கொண்ட அக் கோட்டைத் தலைவன் மாபுஸ்கானின் கருத்தின்படி அவ்விரு வீரர்களையும் மைசூர் நாட்டிற்கு அனுப்பி வைத்தான். சதிவிளையாடத் தொடங்கிய அவ்விடத்தை விட்டுப் பிரிந்திருப்பதே சிறந்ததென்று கருதிய மங்களன், பிரதாபன் இருவரும் மகிழ்ச்சியோடு ஊர் திரும்பினர்.

## ஹெர்பர்ட்டின் சிறை மீட்சி :

ஒரு நாள் கோட்டையின் மேற்பகுதி வாயிலாகிய பாறைப்பாலத்தில் பத்து வீரர்கள் இரண்டாம் சாமக் காவல் புரியவேண்டுமென்பது கோட்டையின் பாதுகாப்புத் தலைவனது உத்தரவு. அப்பத்து வீரர்களுள் மாபுஸ்கான் ஒருவனுவான். இரண்டாம் சாமக் காவலுக்கு வந்தவுடன் மாபுஸ்கான் ஏனைய வீரர்களுக்கெல்லாம் தின்பண்டங்கள் கொடுத்தான். மயக்க மருந்து கலந்த அத்தின்பண்டங்களையுண்ட வீரர்கள் மயங்கி மண்ணில் சாய்ந்தனர். உடனே மாபுஸ்கான் கேப்டன் ஹெர்பர்ட்டைக் கோட்டைச் சிறையிலிருந்து தப்பச்செய்து பாறைப் பாலத்தின் வழியாகக் கடத்திக் கொண்டுவந்து வெளியில் விட்டுவிட்டான். முன் கூட்டியே செய்திருந்த முன்னேற்பாட்டின்படி மாபுஸ்கானின் மைத்துனன் ஹெர்பர்ட்டின் வருகைக்

காகக் காத்திருந்தான். மாபுஸ்கானின் மைத்துனன் ஹெர்பர்ட்டுக்குக் காட்டினுள் வழிகாட்டி அழைத்துக் கொண்டு போய்க்கொண்டிருந்தான்.

**விதிச் செயல் :**

அச்சமயம், தாய்ப்புலியொன்று மாபுஸ்கானின் மைத்துனனைத் தனது குட்டிகளின் இரைக்காகக் கௌவித் தூக்கிக்கொண்டு போயிற்று. அது கண்டு மனமும், உடலும் நடுங்கிய ஹெர்பர்ட்டு, கால் நழுவி, ஏறத்தாழ நூற்றிருபது மீட்டர்கள் உருண்டு விழுந்தான். இதனால் மறுநாள் சூரிய உதயம்வரை நினைவற்றுப்போன ஹெர்பர்ட்டு விழித்துப்பார்த்து "தப்பினோம்; பிழைத்தோம்" என்று அருகேயிருந்த ஒரு மலைக் குகையில் ஒளிந்துகொண்டான். பல நாள் வெளிவரத் துணிவின்றி மலைப்பகுதியில் கிடைக்கும் காய்கனிகளை உண்டு குகையிலேயே மறைந்திருந்தான்.

**முடிவு :**

ஒரு நாள் அம்மலையில் வாழும் தோதவன் ஒருவன், விறகு தேடச் சென்றிருந்த சமயம் மலைக் குகையில் கிடந்த அவன் மீது இரக்கப்பட்டு அழைத்துவந்து, அவனுக்குப் பல மருத்துவ உதவிகள் செய்யவே, ஹெர்பர்ட்டு உடல் நலமுற்றான்; இறுதியில் தன்னைத் தேடி வந்த வார்டுடன் ஹெர்பர்ட்டு தன் இருப்பிடம் சேர்ந்தான்.

புலிக் கோட்டைப் பகுதிகளில் கோட்டையின் பாதுகாப்புக்காகவே புலிகள் வளர்க்கப்பட்டு வந்ததாகக் கூறுகின்றனர். புலிக் கோட்டைப் பகுதியில் இன்றும்

# சமுகப் புரட்சி!

தன்மானத் தோழர்களே! வீறுகொண்டு எழுங்கள்! வீழ்த்துங்கள் வீணரை! உயர்த்துங்கள் உழைப்பாளியை! மடமையை மடியச் செய்யுங்கள்! மானமாய் வாழுங்கள்! அறிவே துணை அன்பே குணம் எனக் கொள்ளுங்கள்!

* * *

ஒரு நாட்டின் நிலை, அதன் நினைப்பை உருவாக்கு கிறது. உன்னத நிலையிலுள்ள நாட்டின் நினைப்பு உயர்ந்திருக்கும்; தாழ்ந்த நிலையிலுள்ள நாட்டின் நினைப்புத் தாழ்ந்திருக்கும்.

* * *

ஒரு நாட்டின் நினைப்பைப் பார்த்துத்தான் அந்நாட்டின் நிலை மதிப்பிடப்படும்.

* * *

தாழ்ந்த தமிழகத்தை உயர்த்தவேண்டும் என்றும், இன்று மக்கள் மனதில் படிந்திருக்கும் மூடநம்பிக்கை களை - தமிழ்ப் பண்பாட்டிற்கு மாருன கருத்துக்களை அகற்றி, ஆங்கே பண்டைய உயர்ந்த கருத்துக்களைக் குடியேற்ற வேண்டும் என்றும் நினைப்புகள் தோன்றி யிருக்கின்றன. இந்த நினைப்புகள் பாமர மக்கள் மனத் திலும் தோன்ற, நாட்டில் எங்கும் அறிவுப் பிரச்சாரம் செய்யப்படவேண்டும்.

* * *

பாமரரிடம் படிப்பு இல்லை; படித்தவர்களிடம் பண்பு இல்லை. இன்று சொல்லித் தரப்படுகின்ற பாட முறையே மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

* * *

சுக்கு நூருகிவிட்ட கலம், கடலடி சென்று ஆண்டு பல ஆன பிறகும், விஞ்ஞானக் கருவிகளின் மூலம்

கடலடி சென்று, கலத்தின் பகுதிகளையும், அதிலிருந்த பொருள்களையும் எடுத்து வரும் பெருமுயற்சியில், மேலை நாட்டவர் வெற்றிகரமாக ஈடுபடுகிறார்கள் என்றால், ஒரு காலத்தில் உன்னதமான நிலைமையில் வாழ்ந்து, உலகிலே உயரிடம் பெற்றுத் திகழ்ந்து, இடைக்காலத்திலே எத்தரின் பிடியிலே சிக்கியதால் சீரழிந்த நாட்டையும், சமுதாயத்தையும் புதுப்பிப்பது ஏன் சாத்தியமாகாது? இந்தத் தளராத நம்பிக்கைதான் மறுமலர்ச்சி இயக்கத்திலே பணிபுரிபவர்களுக்கு உள்ள பெரியதோர் துணை.

* * *

வெடித்துக் கிடக்கும் வயல், படர்ந்து போகும் நிலையில் உள்ள விளக்கு, பட்டுக்கொண்டே வரும் நிலையில் உள்ள மரம், உலர்ந்து கொண்டு வரும் கொடி, வற்றிக் கொண்டிருக்கும் குளம்—இவைபோல சமுதாயத்தில் நிலையும் நினைப்பும் நடவடிக்கையும் ஆகிவிடும் போது, இந்த அவல நிலையை போக்கியாக வேண்டுமென்ற ஆர்வமும், போக்க முடியும் என்ற நம்பிக்கையும், போக்கக் கூடிய அறிவாற்றலுங் கொண்ட ஒரு சிலர் முன் வருகிறார்கள். அறிவுப் பண்ணைக்குப் பணியாற்ற அவர்களை நாடு வரவேற்பதில்லை. நையாண்டி செய்யும்! மதிப்பளிப்பதில்லை; மாச்சரியத்தை வாரி வீசும்; துணை புரிவதில்லை; தொல்லை தரும்! எனினும், அந்த ஒரு சிலர் ஓயாது உழைத்து, சலிப்பு, கோபம், வெறுப்பு, பகை என்னும் உணர்ச்சிகளுக்குப் பலியாகி விடாமல் புன்னகையும் பெருமூச்சும் கலந்த நிலையில் பணிபுரிந்து, பட்ட மரம் துளிர்விடும் வரை, படர்ந்து போக இருந்த விளக்கு மீண்டும் ஒளிவிடும் வரையில் பாடுபட்டு, வெற்றி கண்டு மறுமலர்ச்சியை உண்டாக்கி வைக்கிறார்கள்.

* * *

பாடத்திட்டத்தில் பகுத்தறிவைப் புகுத்தினுல் தான் மக்களுக்குப் பழமையினிடத்திலுள்ள பாசம் குறையும்; மனத்திலுள்ள மாசு நீங்கும்; காலத்திற்குத் தக்கதுபோல கருத்து வளரும். .அப்பொழுது மக்கள் உணவுப் பஞ்சத்தால் மடியும் பொழுது சாந்தி பருவ ஆராய்ச்சி நடக்காது. மழையைப் பற்றி ஆராய்ச்சி நடக்கும். சொற்பக் காலத்தில் விளையக் கூடிய பயிர்களைப் பற்றி ஆராய்ச்சி நடக்கும்.

* * *

நாடு நிலை உயர்ந்திருந்தும், நினைப்பு உயராத தற்குக் காரணம், மூடநம்பிக்கை—நினைப்புநிலை உயர்ந்த அளவுக்கு உயர்வதற்கு ஒரே மார்க்கம், பகுத்தறிவைப் பரப்பவேண்டும். பாடத்திட்டத்திலே நான் முன்பு கூறியது போல, பகுத்தறிவைப் புகுத்தும் தீவிரமான ஒரு திட்டம் வகுக்கப்படாத வரையில், பகுத்தறிவும் பரவாது; நமது நினைப்பும் உயராது.

* * *

பகுத்தறிவு என்னும் ஒரே மருந்தால் வைதீகம் என்னும் நோயைப் போக்க முடியுமே தவிர, வேறு எந்த மருந்தாலும் போக்க முடியாது.

* * *

பகுத்தறிவால் பண்படாத எந்த உள்ளத்தில் நல்லெண்ணத்தை விதைத்தாலும் அது நல்ல விளைவைத் தராது.

* * *

பணம், கோயில்களிலே நகையாய் வாகனமாய் நிலமாய் முடங்கிக் கிடக்கிறது. இந்த முடக்கு வாதம் தீர்ந்தால்தான் முடிவுறும் வறுமை, கொடுமை, இல்லாமை என்பனவெல்லாம்.

* * *

இந்த நாட்டை ஏழை நாடென்று எவராவது கூறமுடியுமா? பொருளில்லையா இந்த நாட்டில்? இருக்கிறது. யாரிடம் பொருள் உளது? மதத்தின் பெயரால் கோயிலாகவும், வாகனமாகவும், ஆண்டவன் சொத்தாகவும் அடைந்து கிடக்கிறது.

*　　*　　*

நாட்டிலே பொருள் இவ்விதம் ஒரு மூலையில் குவிந்து முடக்குவாதமாய் முடங்கிக்கிடக்க, மக்கள் பசியென்றும், பிணியென்றும் பதறி அழுகின்றார்கள்; பகவானைப் பிரார்த்திக்கின்றார்கள் பசிப்பிணி நீக்கிட, படையல் போட்டு. என்ன பரிதாப நிலை?

*　　*　　*

தர்ம சத்திரமென்றும், மடமென்றும் கட்டி ஒரு சிலரை உழையாது உண்ணும் சோம்பேறிகளாக்க வசதியளிக்கிறோம். இது தகுமா? நீதியா? இதுதான் அறமா?

*　　*　　*

கோயில்களிலே உள்ள ஆயிரங்கால் மண்டபங்களெல்லாம் கல்விச் சாலைகளாய், ஆராய்ச்சி நிலையங்களாய் மாறினால், நூற்றுக்கால் மண்டபங்களெல்லாம் நூல் நிலையங்களாய், வாசகசாலைகளாய் மாறினால், மக்கள் மடமையினின்றும் விடுபட்டு மதியைப் பெறுவது எத்தனை எளிது என்று சிந்தியுங்கள் தோழர்களே!

*　　*　　*

எவ்வளவோ இயற்கை வளம் பெற்ற இந்த நாட்டில்-எல்லாச் செல்வங்களையும் படைத்த ஆண்டவர்கள் அநேகர் வாழும் இந்த நாட்டில்—பிறந்து வளர்ந்து, உணவின்றிப் பசியுடன், வாழவும் வகையற்று, ஒரு

சாண் வயிற்றை நிரப்பமுடியாது நிர்க்கதியாய், பல்லாயிரக்கணக்கான தோழர்கள் கடல் கடந்து மலாய் நாட்டுக்கும், சிங்கப்பூருக்கும் தோட்டக் கூலிகளாய்ச் செல்கின்றனரே! ஏன் செல்வமில்லையா இந்த நாட்டில் அவர்களைச் சீர்படுத்த?

*　　　*　　　*

இடிந்த மனத்தைப் புதுப்பிக்கவேண்டிய நேரத்திலே, இடிந்த கோயில் புதுப்பிக்கப்பட்டு, பூசாரி புளகாங்கிதமடைகிறான். மக்கள் மனம் குமுறிக் கிடக்க, கடவுளுக்குக் கும்பாபிஷேகங்கள் நடைபெறுகின்றன. பசிக்கு உணவில்லை; இருக்க இடமில்லை; வாழ வசதி இல்லை மக்களுக்கு. ஆனால் ஆண்டவனுக்குக் கோயில் திருப்பணி, குடமுழுக்குகள் முதலியவைகளுக்குக் குறைவில்லை.

*　　　*　　　*

படித்த கூட்டம் பதவியிலும், பரமன் அருளிலும் மூழ்கிக்கிடக்கிறது. பாமரரோ பரிதவிக்கின்றனர் பசியால்.

*　　　*　　　*

இந்த அகில உலகைப் படைத்தவனுக்குக் கோயில் கட்டுவதிலும், கும்பாபிஷேகம் செய்வதிலும், தங்க ரிஷபம், வெள்ளித்தேர் போன்ற விதவிதமான வாகனங்கள் செய்வதிலும், அவற்றின் வாலறுந்தால், காதறுந்தால், காலொடிந்தால் அவற்றை ஈடு செய்வதிலுந்தான் இன்று மக்கள் அறிவையும் பணத்தையும் பயன்படுத்துகின்றனர். படிக்கும் மக்கள் ஹாஸ்டல் வசதியற்றிருக்கும்போது, படிக்கப்பள்ளிகளிலே இடமில்லாது ஏங்கித் தவிக்கும் போது, பரந்த இந்தத் திருநாட்டின் நிலைமையைப் பாருங்கள்.

*　　　*　　　*

வாழ்வு என்பது அனைவருக்கும் உள்ள உரிமை. இதைப் பறிக்கும் முறையில் உள்ள அமைப்புக்கள் அழிக்கப்படவேண்டியன.

*    *    *

சமுதாயத்திலே புதிய துறைகள், அதன் அமைப்பிலே புதியதோர் மாற்றம் தேவை. அந்தப் புதிய உருவத்தை உருவாக்கும் உயரிய பணிதான் மறுமலர்ச்சி.

காலவேகம்! காலவேகம், மனித வாழ்வைப் பலப்பல விதங்களிலே மாற்றிக்கொண்டே வந்திருக்கிறது.

விதியை நம்பி, மதியைப் பறிகொடுத்து, பகுத்தறிவற்ற மனிதர்களாய் வாழ்வது மிகமிகக் கேடு, தீங்கு!

*    *    *

## விதி என்னும் சதி

விதிக்கு நாம் அடிமைப்பட்டது அந்நியனுக்கு அடிமைப்பட்டதற்குப் பலப்பல நூற்றுண்டுகளுக்கு முன்பே; விதி நமது பரம்பரை நோய்—பூர்வீகச் சொத்து; ஆஸ்ரமத்திலே பிறந்தது; அரண்மனையிலும், குடிசையிலும், சரிசமமாகப் படர்ந்த பழம் பெரும் நோய். ஜொலித்திடும் சாம்ராஜ்யங்களும், மணங்கமழும் கலை நயங்களும், காவியமும் வீரமும்—செல்வமும் மேலோங்கியிருந்த நாட்களிலேயே இந்த நோய் நம்மைப் பிடித்து ஆட்டிப் படைத்தது. ஆனால் புண்ணின் கெட்ட வாடை வெளியே தெரியாதிருக்க, பன்னீர்கொண்டு அதனைக் கழுவிப் புனுகு பூசி, மறைத்திடுதல், போல நாம் சாம்ராஜ்யச் சிறப்பு, கலையழகு என்னும் பல்வேறு பூச்சு வேலைகளினால் புண்ணின்

கெட்ட வாடையைக் குறைத்துப் பார்த்தோம்; மறைத்துப் பார்த்தோம், போக்கிட முயற்சிக்கவில்லை.

*     *     *

மதுரம் தரும் பழமாயிற்றே, நமது தோட்டத்திலே கிடைத்ததாயிற்றே. இதிலே நெளிவது புழுவாக இருக்கமுடியாது; பழத்திலே சுவை இருக்கும்; புழு எப்படி இருக்கும் என்று யாராவது வாதாடுவார்களா? பழம் அழுகுவது போல, மலர் கசங்கி மணத்தை இழந்து பிறகு கெட்ட வாடை கொள்வது போல, தழை சருகு ஆவது போல, கட்டடங்கள் கலனுகிக் குப்பை மேடு ஆவது போல, பலப்பல தத்துவங்களும், ஏற்பாடுகளும் காலச்சிறையிலே கிடந்து, கிடந்து கெடுவதும், பல கேடுகளை உற்பத்தி செய்வதும், இயற்கையாக ஏற்படும் ஒரு நிகழ்ச்சி; இதனை உணர மறுப்பது உலகை அறியாதார் போக்கு.

*     *     *

விதி, ஒரு நோய்; நெடுநாளாக மனித சமுதாயத்தில் இருந்து வருவது. அதன் பிடியும், வேகமும் குறைக்கப்படுவதற்கு மற்ற நாட்டினர் எடுத்துக் கொண்ட முயற்சிகளின் அளவையும், திறத்தையும் விடச் சற்று அதிகமான அளவிலும், திறத்திலும் நாம் விதியெனும் நோயைக் குறைக்க அல்ல—வளர்த்திட வேலை செய்து கொண்டிருந்தோம். அதனுலேதான் விதிக்கு அடிமைப்பட்டிருக்கும் நிலை, இங்கு மிக மிகக் கவலை தரும் அளவுக்கு இருக்கிறது.

*     *     *

## குழந்தையின் கேள்வி

அன்பையும்—அன்னத்தையும் ஒன்ருகக் கலந்து, வானத்திலுள்ள நிலவையும் காட்டிக் குழந்தைகளுக்குத் தாய் சோறிடும் போது, குழந்தையும் நிலவைப் பார்க்கிறது. ஏதேதோ எண்ணத்தான் செய்கிறது; ஏதேதோ கேள்விகளைக் கேட்கிறது.

'யாரம்மா இவ்வளவு அழகான விளக்கை அவ்வளவு உயரத்தில் ஏற்றி வைத்திருக்கிருர்கள். அந்த ஒரு விளக்கைச் சுற்றி ஏனம்மா அவ்வளவு சிறுசிறு விளக்கு கள் உள்ளன?' என்று கேட்கிறது.

அம்மா அந்தச் சந்திரனைப் பிடித்துத்தா; நான் பந்தாட வேண்டும் என்று கேட்கிறது இன்னொரு குழந்தை. நிலவையும் பார்த்து விட்டுத் தன் அன்னையின் திருமுகத்தையும் பார்த்து இரண்டுக்கும் என்ன வித்தியாசம் என்று யோசிக்கிறது இன்னோர் குழந்தை.

* * *

குழந்தை உள்ளத்திற் குமுறி எழும் எண்ணங்கள் வேடிக்கையானவை—ஆனல் முடிவுகள் அல்ல; ஆசை அலைகள் அவை. மனித சமுதாயத்தில் குழந்தைப் பருவத்திலேயும் இதே போலத்தான் ஒவ்வொரு நிழ்ச்சிக் கும், இயற்கைக் காட்சிக்கும் ஏதோ ஒரு வகையான காரணம் தேடி அலைந்து, பலப்பல விசித்திரமான காரணங்களை, விளக்கங்களை மனித சமுதாயம் எண்ணிற்று—பேசிற்று—நம்பலாயிற்று.

* * *

மனித சமுதாயத்தில் பாலப் பருவத்தில் கிடைத்த பல உண்மைகள், இன்று உண்மைகள் என்று உலகினரால் ஒப்புக்கொள்ளப் படுவதில்லை.

* * *

பர்மாவை ஜப்பானியர் பிடித்தபோது, அவர்கள் வெளியிட்ட நோட்டுகள் எப்படி இன்று பர்மாவில் செல்லுபடியாகாதோ, அது போலச் செல்லுபடியாகாத நோட்டுகளைச் சேகரித்து வைத்துச் சிறுபிள்ளைகள் விளையாடினால், கேடு அதிகம் இல்லை; அந்த நோட்டுகள் செல்லுபடியாக வேண்டும் என்று வாதாடினால், நாட்டுக்கு எவ்வளவு பெரிய தொல்லை. அதுபோல மனித சமுதாயத்தின் சிறுபிள்ளைப் பருவ எண்ணங்களை—ஏற்பாடுகளை—தத்துவங்களை—விளக்கங்களை இன்னும் நம்பித்தான் ஆகவேண்டும் என்று வாதிடுவது எவ்வளவு பெரிய கேடு என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

*　　　*　　　*

### விதியின் விளையாட்டு

எதிர்பார்ப்பதற்கு நேர்மாறான நிகழ்ச்சிகளைக் காணும்போது, சாதிக்கமுடியும் என்ற நம்பிக்கையுடன் துவக்கப்பட்ட காரியம், நல்ல முயற்சிக்குப் பிறகும் முறிகிறபோது, போட்ட கணக்குப் பொய்யாகும் போது, விதைத்து முளைக்காதபோது, நண்பர்களிட மிருந்து பகை கிளம்பும்போது, ஓவியம் தீட்டுகையில், வண்ணக்கலயம் உடையும்போது, வீணையை மீட்டும் போது நரம்பு அறுந்து, அறுந்த நரம்பு வேகமாகக் கண்ணில் பாயும்போது, இவை போன்ற திகைப்பூட்டும் சம்பவங்கள்—மனதைக் குழப்பும் நிகழ்ச்சிகள் நேரிடும் போது, மனம் ஒடியுமோ என்று மருளும்போது ஏதேனும் ஒரு வகை ஆறுதல் தேவைப்படுகிறது. அப்போது விதி யெனும் தத்துவம் வெற்றிச் சிரிப்புடன் மக்கள் உள்ளத்திலே புகுந்து கொள்கிறது. குடிபுகுந்த பிறகு விதிதான் எஜமான். அந்த எண்ணத்துக்கு இடமளித்தவன், பிறகு தெய்விக முலாம் பூசிவிட்டனர்

விதியென்ற தத்துவத்திற்கு. ஆகவேதான் அதனை உதறித் தள்ள நெஞ்சு உரம் பலருக்கு வருவதில்லை.

*　　　*　　　*

மேலுலகத்தில் ஏதோ ஓர் பெரும் ஏடு இருப்பது போலவும், அதிலே பூலோக வாசி ஒவ்வொருவரின் வாழ்க்கைக் குறிப்பும் முன் கூட்டியே எழுதி வைக்கப் பட்டிருப்பது போலவும், அதன்படிதான் சகல காரியமும் நடைபெறும் என்றும் கூறப்படுகிறது. பல வழிகளில் இந்த நம்பிக்கையைப் பலப்படுத்தினர். எவ்வளவு பெரிய கேடு செய்கிறோம் என்பதை அறிந்தார்களோ இல்லையோ, மனிதன் மனதை முடமாக்குகிறோம், கருத்தைக் குருடாக்குகிறோம் என்று தெரிந்து செய்திருந்தால், அவர்கள் மாபெரும் துரோகிகள்; தெரியாமல் செய்திருந்தால் ஏமாளிகள், கபடராயினும், கசடராயினும் அவர்கள் கட்டிவிட்ட கதைகள், இந்த நாட்டு மக்களைத் தலைமுறை தலைமுறையாகக் கெடுத்து விட்டது—தன்னம்பிக்கையைத் தகர்த்து எறிந்தது—முயற்சிகளை முறியடித்தது—முற்போக்கைக் கெடுத்தது.

*　　　*　　　*

முயற்சி பலனளிக்காதபோது, திட்டம் தகர்ந்து விடும் போது, நோக்கம் ஈடேறுதபோது, ஏன் முயற்சி பலிக்கவில்லை; திட்டம் ஏன் வெற்றி பெறவில்லை; நமது கணக்கு ஏன் பொய்த்துப் போயிற்று; காரணம் என்ன என்று கண்டுபிடிக்க, ஆராய்ச்சி செய்ய, திருத்தம் தர, இந்த 'விதி'யெனும் தத்துவம், மனிதனை விடுவதில்லை.

*　　　*　　　*

இந்த விதியை வெல்ல, அல்லது முன் கூட்டியே தெரிந்து கொள்ள, மாற்ற, திருத்த, ஏதாவது

செய்யலாமா என்ற ஆசை கிளம்பலாயிற்று. அதனைப் பூசாரிகள், சோதிடர்கள், மாந்திரீகர்கள் என்போர் பயன்படுத்திக்கொண்டனர். அவர்கள் வாழ்வு நடத்த, பிறகு அவர்கள் அந்த வாழ்விலே கிடைக்கும் சுகத்தை இழக்க மனமின்றி விதியை மக்கள் நம்புவதற்காக, மேலும் மேலும் கற்பனைக் கதைகளைக் கட்டி விடலாயினர்—கடவுளின்மீது ஆணையிட்டு எதையும் பேசினர்—ஏழை ஏமாளியானான்.

*　　*　　*

விதிக்கு அடிமைப்பட்டிருக்கும் நிலை நிச்சயமாக நாம் எதிர்பார்த்ததைவிட, விரைவில் ஒழியத்தான் போகிறது—அசைவும் ஆட்டமும் கொடுத்து விட்டது.

*　　*　　*

இப்போது மட்டும், இந்நாட்டு எழுத்தாளரும், பேச்சாளரும், இசை வாணரும், படப்பிடிப்பாளரும்—அறிவுத் துறைக்குத் துரோகம் இழைக்காமல், மீண்டும் மீண்டும் விதிக்கு அடிமையாகும் வேதனைக்கு எரு இடாமல் அதற்கு ஆதாரமாக உள்ள கற்பனைக் கதைகளைக் கருத்துக்களைப் பரப்பாமல் — விதி பற்றிய எண்ணத்தை, விடவேண்டிய அவசியத்தை, விதிக்கு அடிமைப்படாமல் இருந்தால் எவ்வளவு நலன் நாட்டுக்குக் கிடைக்கும் என்பதை — எத்தன் எப்படி வஞ்சிக்கிறான் என்பதை விளக்கத் தமது அறிவையும், திறமையையும் ஒரு பத்து வருஷ காலத்துக்குப் பயன் படுத்த முன் வந்தால்... நிச்சயமாக, உறுதியாகக் கூற லாம் விதிக்கு அடிமைத்தனம் ஒழிந்தே தீரும் என்று.

*　　*　　*

விதி என்றும், சப்மரைன், டார்பிடோ, விமானம், விஷப்புகை, வெடிகுண்டு இவைகளைப் போன்ற படைக்

கலங்களைக் கொண்டு இல்லை. அப்படிப்பட்ட படைக் கலங்களைக் கொண்ட ஒரு ஏகாதிபத்தியத்தின் பிடியிலிருந்து விடுபட்ட நமக்கு, இந்த நாளில் சாதாரண ஏடுகள்—அதிலும் காலமெனும் செல்லரித்த ஏடுகள், அவைகளிலே காணப்படும் கருத்துக்குக் குழப்பம் தரும் கற்பனைகள், அந்தக் கற்பனைகளை நம்பிப் பிழைக்கும் கபடர்கள் ஆகிய இவ்வளவு படைக்கருவிகளை மட்டுமே கொண்டுள்ள விதிக்கு அடிமைத்தனம் பழமையை முறியடிப்பது முடியாத காரியமல்ல.

* * *

## மனிதன் முன்னேற

மனிதன் மனவளமும், மனத்திடமும், நல்லறிவும் பெறவேண்டும். ஆராயுந்திறனை அடைந்திடவேண்டும். பகுத்தறிவும் பண்பும் படைத்தவனாக வாழவேண்டும். இந்தச் சூழ்நிலையை அமைத்தாக வேண்டும். மனிதத் தன்மையோடு வாழ பகுத்தறிவைப் பரப்பும் நிலை, மனிதனை 'மனிதன்' என்ற எண்ணத்தோடு வாழ வைக்கும் சூழ்நிலை தேவை, உடனடியாகத் தேவை.

* * *

பழைய காலத்தைப்போல நாம் நடக்க முடியாது. நடக்கத்தேவையுமில்லை. புதிய கருத்துக்களைத் தைரியத்துடன் கவனித்து ஏற்று புதுவாழ்வு நடத்த நம்மை நாம் தயாராக்கிக் கொள்ளவேண்டும்.

* * *

கடவுள் என்றும், மதம் என்றும், சாஸ்திர சடங்குகள் என்றும் மக்கள் தங்கள் காலத்தையும், கருத்தையும் நேரத்தையும், நினைப்பையும், உழைப்பையும் ஊக்கத்

V2",21 Y7M09
N69



தையும், பணத்தையும் பகுத்தறிவையும் சிறிதும் பயன் படுத்தாது பாழாக்குவதைத் தடுத்தாக வேண்டும்.

*  *  *

ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற கருத்துடன் வாழ்ந்த திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள் நாம் என்பதை மக்கள் உணர்ந்து, இனத்தால் ஒன்றுபட்டு வாழும் முறையை மக்களிடையே எங்கள் கழகம் ஏற்படுத்தி வருகின்றது.

*  *  *

சூழ்நிலைக்குக் கட்டுப்பட்டே மனித வாழ்வு நடக்கிறது!

*  *  *

சூழ்நிலை மனிதனை மனிதனுக்குகிறது; மனிதத் தன்மையற்ற மிருகமாகவுமாக்குகிறது! சூழ்நிலை, மனிதனை மகா புருஷனுகவும் உயர்த்துகிறது; மாபாவி யாகவும் தாழ்த்துகிறது!

*  *  *

மனிதன் பொய் பேசுவதும்--புரட்டுகள் செய்திடு வதும் அஞ்சுவதும், அக்கிரமங்கள் செய்வதும், ஆள்வதும், ஆளப்படுவதும், வாழ்வதும் வீழ்வதும் உயர்வதும்—தாழ்வதும் சூழ்நிலையைப் பொறுத்துத் தான் இருக்கிறது!

*  *  *

ஏனப்பா ஏக்கம், என்ன வருத்தம் உனக்கு என்று கேட்டவுடன் ஏக்கத்திற்கு விளக்கந்தராது வருத்தத் தின் காரணத்தை விளக்கிடாது, "எல்லாம் என் தலைவிதி" என்று தலையிலே அடித்துக் கொள் கிருனே மனிதன்; அந்த நிலைமை மாறி, மனிதன்

TAMIL NADU ARCHIVES MADRAS

107826

தனது வருத்தத்திற்கும், வாட்டத்திற்கும் தனது உழைப்பும், ஊக்கமும், அதற்கான சூழ்நிலையுமே காரணம் என்ற சூழ்நிலையை, தன்னைச் சுற்றிலுமுள்ள நிலையை நன்கு உணர்ந்து, அலசிப் பார்த்து, ஆராய்ந்து தெளிந்து, சூழ்நிலைக்கேற்ப நடக்கவும், தனக்கும், பிறருக்கும், சமுதாயத்திற்கும் நன்மை தரும் சூழ்நிலையை உண்டாக்கும் சூழ்நிலையின் தன்மையறிந்தவனாக மாறவேண்டாமா?

*            *            *

விதி, விதி, என்று தனது மதியை மதிக்காது, மந்த மதி படைத்தவனாகவே தமிழன் வாழத்தான் வேண்டுமா? ஆண்டவன் விட்டவழி என்று கிடந்து, தன்னம்பிக்கையற்ற தமிழனாகவே—தாழ்ந்த தமிழனாகவே தமிழன் வாழக்கூடாது, இனியும்!

*            *            *

தனி மனிதன் 'தரம்' உயர்ந்தால் போதும்; தனி மனிதன் 'பண்பு' வளர்க்கப்பட வேண்டும். தனி மனிதன் தரம், பண்பு வளர, உயர உயர, சமுதாயத்தின் தரமும் பண்பும் தானே வளரும்; உயரும் என்றெல்லாம் பேசப்படுவது தவறு, சரியல்ல! நடைமுறைக்கு ஒத்து வராத தத்துவம், அது!

*            *            *

எத்தனை யெத்தனையோ மகான்களும், மகாத்மாக்களும், அடியார்களும் ஆழ்வார்களும், ஆண்டவன் தூதர்களும், ஆண்டவன் அவதாரங்களும், தோன்றிய பின்னரும்கூட மனிதரது நிலை உயரக்காணோமே? ஏன்? எந்தக் காரணத்தால்? தனி மனிதனது தரமும் பண்பும் அவனவன் சூழ்நிலைக்கேற்ப அமைகிறது என்பது தானே உண்மைக் காரணம்.

*            *            *

விதி என்ற நம்பிக்கை, மனிதனை வாழவிடவில்லை. வாழ்க்கையின் முன்னேற்ற எண்ணம் அவனிடம் தோன்றவில்லை! இது அவனது சூழ்நிலை. அர்த்த மற்ற, அறியாமை நிலை!

* * *

திருடன், பொய்யன், புரட்டன்—என்றும் மன்னிக் கப்படுவதில்லை, இன்றைய சமுதாயத்தில். திருடனுக்குத் தண்டனை தரும் அளவோடு தீர்ந்தது, சட்டம்.

* * *

ஏன் திருடினன், திருடன் திருந்திட வழி என்ன? என்று எண்ணிப் பார்த்து, திருடர்கள் ஏற்படும், ஏற்படக் காரணமான நிலைமைகளை, நினைப்புகளை, கொடுமைகளை, சக்தியற்ற சூழ்நிலையை மாற்ற, மாற்றி நல்ல சூழ்நிலையை உருவாக்க வேண்டாமோ?

* * *

சூழ்நிலையால் பொய் பேசும் மனிதன், தனது சூழ்நிலையை மாற்றிக் கொண்டு, நல்லவனுக மாற மார்க்கம் அமைக்க எண்ணி, துணிந்து நல்ல வழியிலே காரிய மாற்றும் சந்தர்ப்ப மளித்தால், மாற முடியாத, நல்லவனுக, பொய் பேசாதவனுக முடியும்.

* * *

தனி மனிதனது தரமும் பண்பும் மட்டுமே போதாது சமுதாயமும்,மனித இனமும் சீர்பட- திருந்த- நல்வாழ்வு வாழ. மனிதனை மனிதனுக வாழ வைத்திடும் நல்லநிலை, நல்ல சூழ்நிலை தேவை. மிகமிகத் தேவை என்றுதான் கூறுகிறேன்.

* * *

மனிதனது தரமும் பண்பும், குறிப்பாக, மனித வாழ்வு மனிதத் தன்மையோடு கூடிய நல்ல வாழ்வாக

அமைவது மனிதனது சூழ்நிலையைப் பொறுத்தே இருக்கிறது என்பது நன்கு தெரிகிறது; மிக மிகத் தெளிவாகத் தெரிகிறது.

* * *

சூழ்நிலை மனிதனை இயக்குகிறது; மனிதன் சூழ்நிலைக்குக் கட்டுப்பட்டே வாழ்கிறான்; வாழவேண்டியிருக்கிறது!

* * *

உலகம் தட்டையல்ல! நீண்ட சதுர வடிவமானதல்ல! தட்டைப் போலத்தான் கண்ணுக்குத் தோன்றுகிறது. ஆனால், கருத்தூன்றிக் கவனித்தால் உலகம் ஒரு உருண்டை வடிவமானது என்று முதன் முதலில் கூறிய கலீலியோ கல்லடிப்பட்டார். கசடன்—கடவுள் தன்மைக்கே விரோதி என்று தூற்றுதல் மொழிகளுக்கெல்லாம் ஆளானார்.

* * *

கேலிக்கும், கண்டனத்திற்கும், கல்லடிக்கும், சொல்லடிக்கும் கலங்கிடாது, எதிர்ப்புக்கும், ஏளனத்திற்கும் அஞ்சாது, எண்ணத் தெளிவோடு தனது சிந்தனையின் முடிவை, உலகம் தட்டையல்ல—உருண்டை என்ற உண்மையை உலகினர்க்கு உணர்த்திடத் தயங்கிடவில்லை அந்தக் கலீலியோ அந்தக் காலத்திலே!

* * *

எந்தத்துறையிலும், எந்த விதக் கருத்து மாறுதல்களுக்கும் ஆரம்பத்திலேயே ஆதரவு கிடைத்திடாது என்ற எண்ணத்தைக் கொண்டு எதிர்ப்பு, ஏளனம், தடை, தண்டனை இவற்றைக் கண்டு இதற்கெல்லாம் மனித இனம் கட்டுப்பட்டு நின்றுவிட்டால்—நின்று

விட்டிருந்தால் மனித வாழ்வில் எத்தகைய மாறுதல் களும், முன்னேற்றமும் ஏற்படமுடியாது. ஏற்பட்டிருக்க முடியாது.

* * *

நல்ல மாந்தோப்பு அமைய—நல்ல களம்—விளை நிலம் எப்படி முக்கியமாகிறதோ—மூலமுமாகிறதோ அப்படியேதான் மனிதன் தரமும், பண்பும் படைத்தவனுக நல்ல வாழ்வு—நாகரிக வாழ்வு வாழவேண்டுமானுல், மனிதன் வாழ்ந்திடும் களம்—நிலம், சமுதாயம் சமுதாயத்தின் நிலை, சூழ்நிலை முக்கியமாகிறது—மூலமும் ஆகிறது!

* * *

சமுதாயம், மனித சமுதாயம் தனது முக்கிய தேவைகளை உணவு, உடை, வீடு என்ற மூன்று, முக்கிய, முதற் தேவைகளை முழு அளவில்—தேவையான அளவில், தேவையான நேரத்தில் பெற்று, திருப்தியான வாழ்வு வாழ்ந்திட, வாய்ப்பும், வசதியும் பெற்றுக வேண்டும்.

* * *

மனித வாழ்வு—இன்றைய மனித வாழ்வு எத்தனையோ மனப்போராட்டங்களிடையேயும் சுருங்கக் கூறுமிடத்து, வசதியையும், வாய்ப்பையும்—சமயத்தையும் சந்தர்ப்பத்தையும்—அறிவையும், ஆற்றலையும்—அறியாமையையும், அஞ்ஞானத்தையும்—பெருமளவு விஞ்ஞானத்தையும் துணைகொண்டு நடந்திடும் நிலையில் இருக்கிறது.

* * *

மனிதர் உணவை மனிதர் பறிப்பது மட்டுமல்ல, மனிதனை மனிதனே மனிதனுக மதிக்காத மனப்பான்மை, மனிதனை மனிதன் பிறப்பால் உயர்த்தியும்,

தாழ்த்தியும், நிறுத்துப் பார்த்திடும் நேர்மையற்ற நிலை—மதம், சாதி, ஆண்டவன் தூதன், ஆண்டான் அடிமை, பிறப்பால் உயர்ந்தோன், பிறப்பால் தாழ்ந்தோன், ஏழை, பணக்காரன் இன்னும் எத்தனை எத்தனையோ முரண்பட்ட கொள்கையினிடையே சிக்கிச் சீரழியவில்லையா, இன்றைய சமுதாய வாழ்க்கை!

* * *

எத்தனையோ சிக்கல்களுக்கிடையே—முரண்பட்ட மூடநம்பிக்கைகளுக்கிடையே — அறிவாளி அறிவற்றவனையும்— இருப்பவன் இல்லாதவனையும்—பலமுள்ளவன் பலமற்றவனையும்—சுரண்டிச் சுகபோகியாக வாழ்ந்திட வாய்ப்பும் வசதியும் அமைந்ததாகத்தானே இன்றைய சமுதாயம் இருக்கிறது!

* * *

விடுவிக்க முடியாத வாழ்வுச் சிக்கல்களும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட கொள்கைகளும், மூட நம்பிக்கைகளும், சுய சிந்தனையற்ற, சலிப்பான சத்தற்ற வாழ்க்கை முறையுமேதான் இன்றைய வாழ்வை—மனித வாழ்வை—மிருக நிலைக்கே மீண்டும் மீண்டும் கொண்டு செல்கின்றன!

* * *

வாழ்வுச் சிக்கல்களை சீர்படுத்தி செப்பனிட்டு முரண்பட்ட கொள்கைகளிலே தெளிவடைந்து, மூட நம்பிக்கைகளை முறியடித்துச் சுய சிந்தனையாளனாக மனிதன் மாறிட வேண்டாமா!

* * *

ஏன் வாழ்விலே சிக்கல்கள் ஏற்படுகின்றன? எத்தகைய முரண்பட்ட கொள்கைகள் நீக்கப்பட

வேண்டும்? மூட நம்பிக்கையால் ஏற்படும் முட்டுக் கட்டைகள் என்னென்ன? எவையெவை? என்றெல்லாம் மனிதன் சிந்தித்துச் சிந்தித்து சிந்தனைத் தெளிவு பெற்று தெளிந்த வாழ்வு—திருப்தியான வாழ்வு—மனிதனை மனிதனாக வாழ வைத்திடும் வாழ்வு—நாகரிக வாழ்வு—நல்ல வாழ்வு வாழ வேண்டாமா, மக்கள்!

* * *

நாகரிக வாழ்வு—நல்ல வாழ்வு வாழ்ந்திட மக்களைத் தயார் செய்திடுவதே இன்றைய பணி—முதற்பணி—முக்கியபணி—மக்கட்பணி!

* * *

மக்களிடையே மத மூட நம்பிக்கைகளைப் போக்கி சாதி, சமய பேதங்களையகற்றி, சமத்துவத்தையும், சன்மார்க்கத்தையும் ஏற்படுத்தி, அஞ்ஞானத்தை நீக்கி விஞ்ஞான உணர்வை ஊட்டித் தன்னம்பிக்கையையும், தளராத உழைப்பையும், ஊக்கத்தையும், உண்டாக்கித் தீரவேண்டும்!

* * *

மக்கள் வாழவேண்டும், உலகம் உருப்படவேண்டும், வறுமை ஒழியவேண்டும், உலகத்தில் உண்மை தழைக்க வேண்டும். என எந்த முனிவராவது, எந்தப் பக்தனாவது நாயன்மாராவது கேட்டிருக்கிறார்களா! இல்லையே! பொது நன்மைக்காகக் கடவுளை வரம்கேட்ட பக்தர்கள் யாரையாவது காட்டமுடியுமா? ஒருவரும் கிடைக்க மாட்டார்கள்.

* * *

புராணங்கள் சொல்லுகிறபடியே பார்த்தாலும், எந்தக் கடவுளும் யோக்கியமான கடவுள்களாகத்

தெரியவில்லையே! பிரமன் திலோர்த் தமையைக் கெடுத்தான்; சிவன் தாருகாவனத்து ரிஷி பத்தினியைக் காமுற்றான், இந்திரன் அகலிகையையும், சந்திரன் குருபத்தினி தாரகையையும், மகாவிஷ்ணு சந்திரன் மனைவியையும் கெடுத்தனர். இப்படித்தான் புராணங் கள் சொல்லுகின்றன. இப்படிப்பட்ட ஒழுக்கக் கேடான கடவுளரையா நாம் நமது வாழ்வின் வழிகாட்டி களாகக் கொள்வது!

* * *

நாங்கள் எடுத்துக்காட்டி விளக்குவதும், ஆபாசங் கள் என்று கூறிக் கண்டிக்கும் ஆண்டவனின் திருவிளை யாடல்களும் எங்கள் கற்பனைகள் அல்லவே அல்ல! அவைகள் அத்தனையும் பக்தர்கள், பக்தியோடு படித்துப் பாராயணம் செய்துவரும் புராணங்களில் காணப் படுபவைதான் என்பதை ஆத்திக நண்பர்கள் உணர்ந்து திருந்தவேண்டுகிறேன்.

* * *

ஏதோ சில காரியங்களைச் சடங்குகள் என்றும் சாஸ்திர முறைகள் என்றும் பழைய வழக்கங்கள் என்பதற்காக மட்டும், எந்தவிதமான காரணங் களுமின்றி நம்மையறியாமலேயே நாம் செய்து வருகிறோம். இவைகளைத்தான் நாம், சரியா? தேவை தானா? என்று சீர்தூக்கிப் பார்த்து முடிவுகட்ட வேண்டும்.

* * *

கொட்டாவி விடும்போது மூன்றுதரம் சிட்டிகை போடுவதும், போகும்போது எதிரே பூனை குறுக்கே வந்தால் சகுனம் சரியில்லை யென்று திரும்பிவிடுவதும், பல்லி சொல்லுக்குத் தரையைத் தட்டுவதும், அதற்குப்

பலன் பார்த்துப் பதைப்பதும் மக்களிடம் எப்படியோ ஏற்பட்டுவிட்ட பழக்கத்தினுலும், அறியாமையினுலுந் தான்.

*　　*　　*

மனிதன், தான் வாழவேண்டும்; தன்னைப் போலவே பிறரும் வாழவேண்டும். மனிதர் எல்லோரும் மனித ராகவே வாழ்ந்திடவேண்டும் என்ற மனப்பண்பைக் கொண்டவனுக இருக்கவேண்டும். அப்படி இருந்தால் தான், மனித இனம் ஒன்றுபட்டு, நாகரிக வாழ்வு வாழ முடியும்.

*　　*　　*

அர்த்தமற்ற திருப்தியும், வெறுப்பான வாழ்வும், சாவை எதிர்நோக்கிய சஞ்சல புத்தியும், கொண்ட சத்தற்ற வாழ்வுதான், இன்றைய மக்களின் பெரும் பகுதி மக்களின் வாழ்க்கை நிலை; வாழ்க்கைத்தரம்!

*　　*　　*

வாழ்க்கை வாழ்வதற்கே, வாழவேண்டும், வளமாக வாழவேண்டும், வாழத்தான் வேண்டும், வாழ்ந்தே தீருவோம்; வாழ்க்கையைப் பற்றிய கருத்து இப்படித் தானே இருக்கவேண்டும், மக்களுக்கு!

*　　*　　*

தமிழர், தாழ்ந்ததற்குக் காரணம், தமிழகத்தில் தமிழரது எண்ணங்களில் ஏற்பட்ட, பக்தி, புராணம் மோட்சம், நரகம், மேலுலகவாழ்வு, கர்மம், வினை, விதி என்பன போன்ற கருத்துக்கள் புகுந்து ஆதிக்கம் செலுத்தினதுதான் என்பது நன்கு விளங்கும்!

*　　*　　*

மனிதன், மனிதனுக வாழவேண்டும், மனிதனுக்கு உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் தேவை!

மனிதனது முதற்தேவை, உணவு, உடை இருப்பிடம் என்ற மூன்றும்.

* * *

முதற் தேவையான, முக்கிய தேவையுமான மூன்று தேவைகளைப் பெற்றால்தான் — தேவையான அளவு பெற்றால்தான் மனிதன் மனிதனாக வாழமுடியும்.

* * *

காட்டுமிராண்டியாக, காடுகளிலும் குகைகளிலும் வாழ்ந்து, இலைகளையும் தழைகளையும் உடுத்தி, கிடைத்த கிழங்கையும் கீரைகளையும், வேட்டையாடிய மிருகங்களின் பச்சை இறைச்சியையும் புசித்து வாழ்ந்த நிலையிலிருந்து, மனிதன், மாடமாளிகைகள், கூட கோபுரங்கள் அமைந்த அழகு நகரங்களைக் கட்டி, பட்டு, பருத்தி, கம்பளி போன்ற ஆடைகளை அணிந்து, அரிசி, கோதுமை, கம்பு, கேழ்வரகு முதலிய அறுசுவை ஆகாரங்களைப் புசித்திடும் இன்றைய நாகரிக நிலைமைக்கு வளர்ந்திருக்கிறான்.

இந்த வளர்ச்சிக்கு, மனிதனிடமுள்ள, மற்ற உயிரினங்களிடமில்லாத பகுத்தறிவு முதற்காரணம்; மூலக்காரணமுமாகும்.

* * *

மாறுதலுக்கு, மனித வாழ்வின் மகத்தான மாறுதலுக்கு, மனிதனிடம் உள்ள அறிவே, பகுத்தறிவே அடிப்படை, ஆதாரம், வழிகாட்டி!

* * *

சிந்திக்கத் தொடங்கிய மனிதன்— முதல் சிந்தனையாளன், இயற்கை வளத்தை, தனது வாழ்வு வசதி

யாக அமையும் வகைக்குப் பயன்படுத்தத் தொடங்கிய தின் விளைவு, நாகரிக வாழ்வின் ஆரம்பக் கட்டம்; முதல் அத்தியாயம்.

* * *

சிந்திக்கத் தொடங்கிய முதல் சிந்தனையாளன், சுயநலமுள்ளவனாக, தன்னைப் பற்றிய எண்ணத்தை மட்டுமே கொண்டவனாக இருந்து விட்டிருந்தால், இன்றைய உலகம், நாகரிக உலகம் ஏற்பட்டிருக்க முடியாது!

* * *

இந்த நாட்டிலே ஜாதிதான் மக்களின் இரத்தத்திலே கலக்கப்பட்டிருக்கும் கடு விஷம்—மனதிலே இடக்கு நோயைப் புகுத்திவிட்ட முறை. எனவேதான், பேதமற்ற சமுதாயத்தை—தத்துவத்தை — சமர்தர்மத்தை நாம் காணவேண்டுமானால் முதலில் ஜாதி தொலைந்தாக வேண்டுமென்று நான் சார்ந்துள்ள அறிவியக்கம் பல காலமாகக் கூறி வருகிறது.

* * *

மனதிலே உள்ள தளைகளை நீக்குவது, அவசியமான காரியமென்பதை உணர்ந்து, ஐரோப்பாக்கண்டத்திலே பேரறிவாளர்களான வால்டேர், ரூசோ போன்றார் அறிவுத்துறைப் புரட்சிக்காகப் பணியாற்றினர். அதே விதமான பணி தேவை.

* * *

மனிதனுக்குள் புகுத்தப்பட்ட அச்சம் அவனுடைய அறிவு ஊற்றைப் பாழ்படுத்துகிறது. அதனாலேயே மனிதன் மனம் அலைமோதி நிற்கிறது.

* * *

சாதாரணமாக நாம் பேசுவதில்லையா? சங்கீதம் என்ன சார், பிரமாதம்? சாரீரம் கொஞ்சம் நன்ருக இருக்கவேண்டும்; சுருதியுடன் சேர்ந்து பாடவேண்டும்; 'தாளம் தவறக்கூடாது இவ்வளவு தானே' என்று பாட ஆரம்பிக்கும்போது தானே தெரிகிறது. சாரீரம் வித்வானுடன் ஒத்துழைக்க மறுப்பதும், சுருதியுடன் அவர் மல்லுக்கு நிற்பதும், தாளம் அவருக்குச் செய்யும் துரோகமும், அது போலத்தான் சமத்துவம் சமதர்மம் போன்ற இலட்சியங்களைப் பேசுவது சுலபம், சாதிப்பது கடினம்.

* * *

ஜாதி, மத, குல, பொருளாதார பேதங்கள் மக்களை முன்னேற ஒட்டாதபடி, மூச்சுத்திணறும்படி, முதுகெலும்பை முறிக்கும்படி அழுத்துகின்றன.

* * *

மக்களுக்குள் எந்தக் காரணம் கொண்டும் பேத உணர்ச்சியோ, அதனுலான கேடுகளோ இருத்தல் கூடாது.

* * *

உலகிலே மிக மிகச் சிறு தொகையினர்— பேரறிஞர்கள் - சீர் திருத்தக் கருத்தினர் - உலகத்தைத் திருத்தும் உத்தமர்கள், சித்தத்தை சிறையிட மறுத்தனர்; சிந்திக்கத் தொடங்கினர்; புத்தம் புதிய உண்மைகளை கண்டறிந்து கூறினர். உலகின் உருவம், இயல்பு, எண்ணம், ஏற்பாடு எல்லாம் மாற ஆரம்பித்தன.

தட்டை உலகு, உருண்டை ஆயிற்று. மேல் ஏழு கீழ் ஏழு லோகம் என்பது வெறும் கட்டுக் கதை என்பது விளங்கலாயிற்று. சூரிய-சந்திரதேவன், இந்திர தேவன், வாயு, வருணன், அக்கினி என்ற தேவர்களெல்லாம் குடியிருந்து கொண்டு, குதூகலமாக ஆடிப் பாடிக் கொண்டு, ஆரணங்குகளாம் அரம்பை, ஊர்வசி ஆகியோர் புடை சூழ வீற்றிருக்கிறார்கள் என்பதெல்லாம், சுவைமிக்க கற்பனை என்பது தெரியலாயிற்று. கண்ணுக்குத் தெரியாதிருந்த அமெரிக்கா போன்ற நாடுகளைக் கண்டு பிடிக்கவும், கருத்துக்கு எட்டாதிருந்த கருவிகளை அமைக்கவும் முடிந்தது. பஞ்சாங்கத்துக்குப் பக்கத்திலே அட்லாஸ் வந்து சேர்ந்தது வெற்றிச் சிறப்புடன்.

*　　　*　　　*

வாழ்வாவது மாயம், இது மண்ணாவது திண்ணம் தேவைதானா, இந்தக் கருத்து இன்றும்?

*　　　*　　　*

வாழ்வை நம்பாதே! எதைத்தான் நம்புவது? வாழ்ந்தால் தானே, எதையும் நம்ப முடியும். வாழா விட்டால், வாழவழி தேடாது சும்மா இருந்தால் சுகம் வருமா? சோம்பேறி என்ற பட்டமல்லவா, கிடைத்து விடும், சுலபத்தில்!

## ஆண்டவனிடம் தீண்டாமை ஏன் ?

ஒருவனைப் பிறப்பால் உயர்ந்தவனாகவும், உல்லாசியாகவும், குருவாகவும் படைத்து, மற்றவனைத் தாழ்ந்த

வனாகவும், உழைப்பாளனாகவும், அடிமையாகவும் அமைக்கிறார் அந்த ஆண்டவன். எல்லோரையும் தன் குழந்தைகள் எனக் கருதும் ஆண்டவன் செயலாக அமையுமா இது?

* * *

எப்படி ஒரே ஆண்டவன், ஒருவனை வேதமோதுபவனாகவும், மற்றவனை அவன் திருவடி தொழுபவனாகவும் படைப்பார்- அவருக்கு அறிவில்லையா ? அன்பில்லையா? அறம் அறியாரா அவர்? அத்தகைய ஆண்டவன் உண்மையில் இருந்தால் அதைவிட நயவஞ்சகப் பொருள் இந்த அகில உலகிலும் இல்லை; இருக்க முடியாது.

* * *

பாடுபட்டும் மக்கள் பஞ்சையாய் வாழும்போது, பரமனுக்குப் பல லட்சத்தில் பதக்கங்கள், வாகனங்கள். என்ன அறியாமை மக்களிடம்?

* * *

ஆண்டவன் அனைவர்க்கும் தந்தை; ஆண்டவன் முன் எவரும் ஒன்றே, எல்லோரும் சமம், பிறப்பால் உயர்வு தாழ்வு இல்லை. ஆண்டவன் உருவமற்ற அரூபி; அருளுடையவன்; அனாதரட்சகன்; மனமே கோயில், மக்கள் தொண்டே பக்தி என்ற பரந்த கொள்கை, விரிந்த போக்கு, தெரிந்த பாதை, புரிந்த தத்துவம் வேண்டும்.

* * *

ஆண்டவனை உருவமுள்ளவனாக்கி, ஆனைமுகம், ஆறுமுகம், பன்றியுருவம் படைத்து மனிதத் தன்

மைக்கே புறம்பான மடத்தனங்களை ஏற்றி மனங் குழைவது நன்றா? நவிலுங்கள் நாட்டோரே!

* * *

குந்தக் குடிசையின்றி, உண்ண உணவின்றி, அணிய ஆடையின்றி, மக்கள் நிர்க்கதியாய் நிலவும்போது, ஆண்டவன் பேரால் கோட்டைகள் போன்ற கோயில் களையும், வாகனங்களையும் மண்டபங்களையும் கட்டு கின்றீரே? இது அந்த அன்புடைய ஆண்டவனுக்கு, அருள் படைத்த தந்தைக்கு, உவந்த செயலா? இது அறமெனப் படுமா அன்றி அசட்டுச் செயல் எனப் படுமா என்று ஓர் அரைக்கணம் ஆராயுங்கள் தோழர் களே உம் அறிவைக் கொண்டு!

* * *

வீணையை மீட்டத் தொடங்கியதும், இசை கேட்க வருபவனின் காதுகளை அடைப்பது போல, எழில்மிகு சித்திரத்தைத் தயாரித்துக் காண வாரீர் என்று அனைவரையும் அழைத்துக் காண வரும் சிலரின் கண் களைக் கட்டியிருப்பது போல, பழச்சாற்றின் இனிப்பைக் கூறிக்கொண்டு, பருகக் கொஞ்சம் தருக என்று கேட்ப வனை விரட்டுவது போல, ஆலயங்களுக்கு மகிமையும், பலனளிக்கும் சக்தியும் இருப்பதைக் கூறிவிட்டு, அங்கு வரக்கூடாது நுழையக் கூடாது என்று சிலரை அல்ல— ஏறக்குறைய எட்டுக் கோடி மக்களைத் தடுத்து வரு கிறோம், இன்று நேற்றல்ல, தலைமுறைத் தலை முறையாக.

* * *

பொருளைக் காட்டி மறைப்பர் குழந்தைகளிட மிருந்து பெற்றோர். நாமோ புனித ஸ்தலங்களின்

பெருமையைக் கூறிப் பூட்டி விடுகிறோம். அங்கு ஒரு குறிப்பிட்ட சமூக மக்கள் வரக்கூடாது என்று. ஏன்?

* . * *

கெட்ட பொருளைத் தொடக்கூடாது- குப்பை கூளம், நாற்றப் பொருள், ஆகியவைகளிடம் நிச்சய மாகத் தீண்டாமை அனுஷ்டிக்கத்தான் வேண்டும். அக்கினித் திராவகம், வெடிகுண்டு, விஷம், சீறும்நாகம், கொட்டும் தேள் இன்னும் பலப் பல உண்டு ஆபத்துத் தரக்கூடியவை. அவைகளைத் தீண்டாதிருக்கவேண்டும்- நியாயம் அது. ஆனால் பலகோடி மக்களை, தாய்நாட்டாரை மூதாதையர் கால முதற்கொண்டு நம்முடன் வாழ்ந்து வருபவர்களை தீண்ட மாட்டோம் என்று கூறுவது- தீண்டாமையை அனுஷ்டிப்பது- எவ்வளவு வேதனை? எவ்வளவு அர்த்தமற்றது?

* * *

கள்ளக் கையொப்பக்காரன் கரம் கூப்புகிறான்- விபசாரி விசேஷ அபிஷேகம் செய்விக்கிறாள் குடி கெடுப்பவன் கும்பாபிஷேகம் செய்கிறான். கொள்ளை இலாபமடித்தவன் வெள்ளி ரிஷபம் செய்து வைக்கிறான். ஒழுக்கக் குறைவு உள்ளவர்கள், அழுக்கு மனம் படைத்தோர், இழுக்கான வழி செல்பவர்கள் ஆலயங்களிலே நுழைய முடியாதபடி தடை உண்டோ? இல்லை.

ஆனால் ஆதித்திராவிடரை மட்டும் ஆலயத்துக்கு வரக் கூடாது என்று தடுக்கிறோம்- நியாயமா?

சீர்திருத்தத் திருமணங்கள் அதிகம் நடைபெற வேண்டும் என்பதிலும், சீர்திருத்த முறையிலேயே திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்பதிலும் இன்றைக்கு பெரும்பாலான மக்கள் அக்கரை காட்டத் தான் செய்கிறார்கள்.

* * *

ஆணும் சரி, பெண்ணும் சரி, முன்னதாகவே ஒருவரைப் பற்றி மற்றவர் நன்றாக அறிந்து தெரிந்து கொண்ட பின்னர்தானே திருமணம் நடைபெறவேண்டுமென்று நாங்கள் கூறுகிறோம்; செய்கிறோம்.

* * *

பல பெண்களை ஓர் ஆண் மணந்து கொள்வதினால் எவ்வளவு கேடுகள் விளைந்தன! எத்தனை பெண்கள் கட்டிய பிறகு, கணவன் முகத்தைக்கூடப் பார்க்க முடியாத பயங்கர நிலையில் தத்தளித்தனர். எத்தனை குடும்பங்களில் கண்ணீர் வெள்ளம் புரண்டோடியது!

* * *

பல மனைவியரை நான் மணப்பேன். என்னைத் தடுப்பவர் யார்? என்று ஆண்மகன் பேசிவந்த காலம் போய் விட்டது.

* * *

மணவாழ்க்கையில் இருவரும் ஒன்றுபட்டு வாழ முடியாத நிலைமை ஏற்பட்டுவிட்டால், அந்த நிலையில்

அவர்கள் விவாக விடுதலை பெறும் உரிமை இருக்க வேண்டும்.

*    *    *

கணவனுல் கொடுமைப்படும் மனைவியும் சரி, அல்லது மனைவியினுல் தொல்லைக்கு ஆளாகும் கணவனும் சரி, தங்களுக்குள் பிடித்தமில்லாத போது, விவாக ரத்துச் செய்து கொள்ளும் உரிமை பெற்ருக வேண்டும்.

*    *    *

விவாக ரத்துரிமை இருந்தால், பொருத்தமற்ற திருமணங்கள் தவறுதலாக நடந்து விட்டாலும் பின்னர் அதனைத் திருத்திக்கொள்ள வழிவகை பிறக்க முடியும். பிடித்த மற்றவர்கள், காலமெல்லாம் கூடி வாழ்வதென்பது நடவாத காரியந்தானே. எனவே, பிடித்தமற்றவர்கள் விவாகரத்து கோரி விடுதலை பெறும் உரிமையைப் பெறுவது நன்மைதானே?

*    *    *

விவாகரத்து உரிமை வழங்கும் சட்டம் அமுலாக்கப் பட்டுவிட்டால், கண்டபடி திரியும் கணவனை மனைவி தட்டிக் கேட்டு, திருந்தாவிடின், விவாக விடுதலை பெற்றுக் கொள்ள முடியும். குடிகாரக் கணவனின் கொடுமைக்கு நாளெல்லாம் ஆளாகி அவதியுறும் மனைவி, அவனிடமிருந்து விடுதலை பெற வழி பிறக்கும்.

*    *    *

ஒத்த கருத்தின்மை ஏற்படும்போது விலகி வாழ உரிமை பெறுவது, இருவருக்கும் நல்லதுதானே. இதனுல் சமூகத்திற்கும் நன்மை உண்டு.

*    *    *

அந்தக் காலம் எது என்பதற்கு 'யாராலும் திட்ட மான முடிவு கூறமுடியாது; நிர்ணயத்தையும் காட்ட முடியாது. அந்தக்காலம் என்பது முடிவற்றது. அள விட்டுக் கூறமுடியாதது. அளக்க அளக்க நீண்டு கொண்டே போகிற கஜக்கோல் அது!

* * *

எந்தக் காலத்துப் பழக்கமானாலும் சரி, அது இந்தக் காலத்துக்குப் பொருந்துகிறதா? வாழ்க்கைக்குத் தேவையானதுதானா? அறிவுக்கு ஏற்றதா? என்றுதான் நாம் பார்த்துப் பின்பற்ற வேண்டுமே தவிர, அந்தக் காலத்துப் பழக்கம் என்பதற்காகவும் கண்ணை மூடிக் கொண்டு எதையும் அர்த்தமற்றும், பொறுத்த மில்லா மலும் பின்பற்றக் கூடாது.

* * *

உலகத்தில் மற்ற நாடுகள் எவ்வளவோ முன்னேற்ற மடைந்துள்ளன. இந்த நாடு மட்டுமேதான் எல்லாத் துறைகளிலும் பழம் பெருமை பேசிக் கொண்டும் அந்தக் காலம் என்று கூறிக் கொண்டும் முன்னேறாமல் பின் தங்கிக் கிடக்கிறது.

* * *

நாம் அறிவுத் துறையில் முன்னேற்ற மடைந்தால் தான் நம்மிடமுள்ள பழமைக் கருத்துக்கள் அகலும்; பாசி பிடித்துள்ள கண்மூடிப் பழக்கங்களும் தொலையும்; மதமூட நம்பிக்கைகள் முறியடிக்கப்படும் என்பதை நாம் உணரவேண்டும். சுய மரியாதைத் திருமணங்கள் செய்து கொள்வதும், சீர்திருத்தத் திருமணங்களைப் பரப்புவதும் அறிவுத்துறையில் நாம் முன்னேறுவதற் கான அடிப்படைகளில் முக்கியமானதாகும்.

* * *

சீர்திருத்தம், திருமணத்திலிருந்து துவங்குவது வாழ்வில் நல்லதொரு நிகழ்ச்சியாகும். எனவே இதைக் கண்டு யாரும் அச்சப்படத் தேவையில்லை.

* * *

கேவலமான பழக்கங்களையும், அர்த்தமற்ற திருவிழாக்களையும், பொருத்த மற்ற சடங்குகளையும் விட்டொழித்தால் தான் நாம் உண்மையிலேயே முன்னேற முடியும்.

* * *

சுயமரியாதைத் திருமணங்கள் ஒவ்வொரு குடும்பத்திலும் நடக்கத் தொடங்கி விட்டால், நாட்டிலே பரவிக் கிடக்கும் மூடக் கொள்கைகள் தாமாகவே சிந்து வாரற்றுப் போய் விடுமே! ஆகவேதான் இப்படிப்பட்ட மணம் செய்து கொள்ளும் இந்த மணமக்களை நான் பெரிதும் பாராட்டுகின்றேன்; மனதார வாழ்த்துகின்றேன்.

உழைப்பாளர் இனம் ஓங்குக!

## தொழிலாளின் உயர்வு

பாட்டாளி மக்களின் விடுதலை விழா மேனதினம் நாடு அல்ல இதற்கு எல்லை! பாட்டாளிகள், வாழ்வுக்காக—விடுதலைக்காக— உரிமைக்காக மே தினத்தைக் கொண்டாடுகின்றனர். நாளொன்றுக்கு 8 மணி நேரம் உழைப்பது, 8மணி நேரம் குடும்பத்தினரிடம் குதூகலமாக வாழ்வது, மற்ற 8 மணி நேரம் ஒய்வாக இருப்பது - இந்தத் திட்டத்தை மே தினம் எடுத்துக் கூறுகிறது.

*  *  *

தொழிலாளி, துயரின் உருவமாகிறுன். அடிமைப் படுகிறுன். வாழ்வு பெரியதோர் சுமை என்று எண்ணு கிறுன். இந்த நிலையை மாற்றவேண்டும் என்ற நல்லெண்ணம் கொண்டவர்கள், எட்டு மணி நேர வேலைத் திட்டத்தை வலியுறுத்தினர். அதனை வலியுறுத்த, ஆண்டுதோறும் மே மாதம் முதல் தேதி அன்று விழா நாளாகக் கொண்டாட்டம் நடத்த ஏற்பாடு செய்தனர்.

*  *  *

முதலாளித்துவம் ஒரு மதம் பிடித்த யானை. அந்த யானையைப் பிடித்து, வாழை நாரினுல் துதிக்கையைக் கட்டி, அந்தக் கயிற்றை ஒரு வாழை மரத்தில் கட்டி விட்டு, "பார், பார் நான் முதலாளித்துவத்தைக்கட்டிப் போட்டு விட்டேன்" என்று கூறினுல் சரியா?

*  *  *

ஜார் மன்னன் ஆட்சியிலே அவனுல் இழைக்கப் பட்ட கொடுமைகளை ஒழிக்க எப்படி அந்நாட்டு மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒருமித்துப் போராடினுர்

களோ, பிரான்சிலே பணப்பட்டாளத்தின் கொடுமைகளை எதிர்த்துப் பல பட்டினிப் பட்டாளங்கள் ஒன்று சேர்ந்து தங்கள் புரட்சிச் சக்தியின் மூலம் லூயி மன்னருக்கு அறிவுறுத்தினர்களோ, அதே போன்று நம் நாட்டுத் தொழிலாளர்கள் அனைவரும் ஒன்று சேர வேண்டும்; மக்களின் சக்தி ஒன்று திரண்டு, மக்களை வாட்டி வதைக்கும் முதலாளித்துவத்திற்குப் புத்தி புகட்ட வேண்டும்.

* * *

பாட்டாளிகளின் போராட்ட முயற்சியின் இடையிலே ஒரு நாள் ஓய்வு பெற்று நின்று, சென்ற கால-வருங்கால கணக்கைப் பார்க்கும் திருநாளே இம் மே நாள். சென்ற காலங்களில் மகத்தான வெற்றிகளைக் காண முடியாவிட்டாலும், கண்ட சிறு சிறு வெற்றிகளை நினைத்து, மகிழ்ந்து, உள்ளத்தை ஊக்குவித்துக் கொள்ளவும், வருங்காலத்தில் ஆற்ற வேண்டிய செயல்களை எண்ணிச் செயலாற்றும் நெறியிலே உறுதி கொள்ளவும் இம் மே நாள் பயன்படுகிறது.

* * *

இன்று தொழிலாளர்களில் பலர் மாயப் பிரபஞ்ச வாழ்வைப் பற்றியும், ஆண்டவன் திருவடியில் இரண்டறக் கலப்பது எப்படி என்பதைப் பற்றியும் சிந்தனை செய்து கொண்டிருக்கிறார்களே அதை முதலில் போக்கடிக்க வேண்டும். தொழிலாளர்களுக்கு முதலில் வாழ்க்கையிலே உள்ள சலிப்பைப் போக்கவேண்டும். இந்த உலகம் பெரியது, விழுமியது, வளமுள்ளது என்ற விரிந்த மனப்பான்மை அவர்களிடையே தோன்ற வேண்டும். நாம் வாழப் பிறந்துள்ளோம் என்பதை அவர்கள் உணரவேண்டும்.

பஞ்சாங்கமில்லாத வீடுகளை நீங்கள் காண முடியாது.

நாள் பார்க்காத மக்களை நீங்கள் பார்க்க முடியாது.

சகுனம் கேட்காத ஜென்மங்களை நீங்கள் காண்பது அரிது.

மார்கழித் திருநாள் கொண்டாடாத மக்கள் மிகக் குறைவு.

சித்திரா பௌர்ணமிக்குப் பொங்கலிட்டுப் படைக் காத வீடுகளை நீங்கள் பார்க்க முடியாது.

பஞ்சாங்கம் பார்க்கும் பழைய புத்தி அடியோடு ஒழிந்தால் ஒழிய மக்கள் பகுத்தறிவைப் பெற முடியாது.

* * *

கோழியோடு அதிகாலையில் விழித்தெழுந்து கோட்டானோடு தூங்குகிறான் நம் தொழிலாளி! ஓயா மல் உழைத்து உழைத்து அருமையான பொருள்களை உற்பத்தி செய்கிறான். ஆனால் அவன் வாழும் வாழ்க்கை எப்படி? சுருங்கச் சொன்னால் அவன் வாழ்வது மிருக வாழ்க்கைதான். நாகரிக நாட்டிலே, தன்னரசு தழைத்து ஓங்குவதாகச் சொல்லும் இந்த நாட்டிலே தொழிலாளி மிருக வாழ்க்கை வாழ வேண்டியிருக் கிறது. மிருகங்களுக்கு கிடைக்கும் ஓய்வுகூட ஏழைத் தொழிலாளிக்குக் கிடைக்கவில்லை. உற்பத்தியைப் பெருக்கும் தொழிலாளி உயர முடிகிறதா?

* * *

ஆலைத் தொழிலாளி சகுனத்திலே நம்பிக்கை வைத் திருப்பது விசித்திரமானது. அமெரிக்காவிலிருக்கும்

தொழிலாளிகள் சகுனம் பார்ப்பதில்லை. ரஷ்யாவில் உள்ள தொழிலாளி சகுனம் என்ருல் என்ன என்று கேட்பார். சகுனம் பாராத மேலை நாட்டுத் தொழிலாளிகள், கடிகாரத்தைக் க்வனித்து நடக்கிற மேனுட்டினர், முன்னேற்றத்தின் உச்சியிலே இருக்கிருர்கள். நம் நாட்டுத் தொழிலாளர்கள், கடிகாரத்திற்கு மதிப்புத் தருவதில்லை. கடிகாரம் வாங்கப் பணமில்லாமலே பஞ்சாங்கம் வாங்கி வைத்துக் கொண்டு இராகு காலம் பார்க்கிருர்கள்; சகுனம் பார்க்கிருர்கள்; இன்னும் தாழ்ந்த நிலையிலேயே இருக்கிருர்கள்.

* * *

உலகம் மாயம் இல்லை. உழைப்பவன் வாழ்வும் மாயமன்று. ஆனல் உழையாதவன் உல்லாசத்தில்தான் மாயம் இருக்கிறது.

* * *

மனிதன் உணவு உண்கிருன்; மிருகமும் உணவு உண்கின்றது. மனிதன் காதல் புரிகிருன். மிருகமும் காதல் புரிகிறது. மக்களிலே ஆணும் பெண்ணும் மருவுகின்றனர். விலங்குகளிலும் அப்படியே. ஆனல் மிருகத்திற்குத் தேவைக் கேற்ற வசதி இருக்கிறது. மனிதனுக்கோ தேவைக்கேற்ற வசதி இல்லை.

* * *

நாட்டிலே ஒரு குலம் பாடுபடாது உண்டு உறங்கிக் கிடக்க, மற்றவர் உடல் தேய, உள்ளமும் உணர்வும் தேய, உழைத்துக் கெடுவதா?

* * *

பண்ணைகளில் பாடுபட்டுப் பயிர் செய்வது சீரகச் சம்பா, கிச்சிலிச் சம்பா இன்னவித உயர் வகுப்புப் பயிர்கள். ஆனல் அவன் உண்பது கால் வயிற்றுக் கஞ்சி.

அதுவும் கம்பங் கூழோ கேழ்வரகுக் கஞ்சியோ தான். பாட்டாளி பாடுபட்டுக் கட்டுவது மாட மாளிகைகள், கூட கோபுரங்கள் போன்ற மனைகள், நான்கடுக்கு ஐந்தடுக்கு அரண்மனைகள்; அவைகளை நிமிர்ந்து நோக்கினல் கழுத்து வலிக்கும். ஆனல் அவன் அண்டியிருப்பது குனிந்து நுழைய வேண்டிய குடிசை! ஏன் இந்தப் பேதம் இந்த நாட்டிலே?

* * *

பணக்காரன் குளம், குட்டைகளுக்குச் சமமானவன்; முதலாளி ஊற்றுக்குச் சமமானவன். மழை பெய்தால் குளம் குட்டைகளில் நீர் இருக்கும்; இன்றேல் வரண்டு விடும். ஆனல் ஊற்ருே என்றும் நீர் சுரந்து கொண்டே இருக்கும். இத்தகைய பேதம் இருக்கிறது பணக்காரனுக்கும்– முதலாளிக்கும்.

* * *

உழைக்க ஒரு குலம், அதனை உறிஞ்சப் பிறிதொரு குலம் என்ற நியதி நியாயமா?

* * *

'தோழமை'—ஆழ்ந்த கருத்துள்ள அழகான சிறு சொல்.

* * *

ஒற்றுமை–கூட்டுறவு–ஒப்பந்தம்-கூடிவாழ்தல்-நட்பு –அன்பு-என்றுள்ள எத்தனையோ பதங்களும், ஒவ்வோர் அளவுவரை மட்டுமே சொல்லக் கூடியவை-முழுத் திருப்தி தருபவையல்ல-தோழமை என்ற நிலையை அடையும் படிக்கட்டுகள் இவை-ஆனல் தோழமை, இவ்வளவுக்கும் மேலான ஓர் நிலை, பேதம் நீங்கிய,

நீக்கப்பட்ட அல்லது கவனிக்கப்படாத நிலை அல்ல-பேதம் ஏற்படாத நிலை-ஏற்பட முடியாத நிலை.

* * *

ஒருவரை ஒருவர் கண்டவுடன் முகமலர்ச்சி சிரமமின்றி ஏற்படவேண்டும்- பயன் கருதி அல்ல- அர்த்தமற்று அல்ல-கண்டதும் களிப்பு-நம்மைப்போல ஒருவன் என்ற நினைப்பிலிருந்து அந்தக் களிப்பு மலரவேண்டும். அதுவே தோழமை!

* * *

சமதர்மம்-ருசிகரமான வார்த்தை-நாட்டிலே இன்று பலராலும் பேசப்பட்டு வரும் இலட்சியம். பலராலும் என்றால் உண்மையிலேயே அந்த உயர்ந்த இலட்சியத்தின்படி சமூகம் திருத்தி அமைக்கப்பட வேண்டும்.

* * *

நீதியையும் நேர்மையையும், சமுதாயத்தில் அமைதியையும், சுபீட்சத்தையும் விரும்பும் எவரும், தொழிலாளர் பிரச்னையை அலட்சியப்படுத்தி விடவோ, அல்லது அடக்கு முறைகளால் அழித்து விடக் கூடுமன்றோ எண்ண முடியாது.

* * *

எந்த ஸ்தாபனமும், ஐக்கியத்தை, ஒற்றுமையைக் கொண்டதாக இருந்தால் மட்டுமே வலிவுடன் விளங்கும், பயன் விளையும்.

* * *

ஸ்தாபனம்—அதாவது அமைப்பு-பலருடைய எண்ணங்களைத் திரட்டி, பலருடைய சக்திகளை ஒருங்கு சேர்த்து வைக்கப்பட்டிருக்கும் ஓர் பொது இடம்—ஓர் பாசறை. பாசறையிலே, பலவிதமான போர்க்கருவி

களும் வீரர்களும் தேவை—கருவிகளின் எண்ணிக்கையும்—வகையும் வளர்ந்து கொண்டு இருக்க வேண்டும். பாசறையின் உபயோகம் அதிகப்பட வேண்டுமானல் வாள் மட்டும் போர்போல் குவித்து வைத்துக்கொண்டு கேடயம் தேடாமல் இருப்பதோ, வில்களைக் குன்றெனக் குவித்துக் கொண்டு அம்புகள் இல்லாமலிருப்பதோ, துப்பாக்கிகளைக் கிடங்குகளில் குவித்துவைத்துக் கொண்டு, வெடிமருந்து தேடாமலிருந்து விடுவதோ, இவையாவும் ஒழுங்காகவும், தேவைக்கேற்ற அளவும் இருந்து, இவைகளைத் திறம்பட உபயோகிக்கும் ஆற்றலுக்கு வீரர்கள் இல்லாதிருப்பதோ, வீரர்கள் இருந்தும், இவர்களை நடத்திச் செல்லும் படைத்தலைவன் இல்லாதிருந்தால், பாசறை இருந்து என்ன பயன்? அழகிய சிலைபோல் இருக்குமே தவிர பயன் தரும் மனிதராக இருக்க முடியாது.

* * *

குறைகளை உணர்ந்து, அவைகளுக்குக் காரணம் யாவை என்பது பற்றிய விவாதத்திலே ஈடுபட்டு, உண்மைக் காரணத்தைக் கண்டுபிடித்து, பிறகு அவைகளைப் போக்கிக் கொள்ள, தனித் தனியாக முயற்சித்துப் பார்த்து, முடியாது போன பிறகு தொழிலாளர்கள் ஓர் ஸ்தாபனரீதியாகத் தமது குறைகளை எடுத்துக் கூறித்தான் பரிகாரம் தேடவேண்டும் என்ற முடிவுக்கு வந்தனர். தங்களின் வாழ்க்கை முறையும், தொழில் முறையும், தங்களுக்குள்ள வாழ்க்கை வசதிக் குறைவுகளும், எல்லா தொழிலாளருக்கும் ஒரே விதமானதாக இருக்கக் கண்டு, அனைவருக்கும் ஒரே வகை வியாதி என்று தெரிவதால், அனைவரும் ஒரே வகை மருந்து தேடவேண்டும் என்று முடிவு செய்து, ஸ்தாபனங்களை ஏற்படுத்தினர். இந்தப் பொதுத் தன்மை கெடாதிருக்கு மட்டும்,

ஸ்தாபனம் அவசியமானது என்பது மட்டுமல்ல, பயனுள்ளதுமாகும்.

*   .   *   *

பொதுத்தன்மை பலமாக இருக்க வேண்டுமானல், ஸ்தாபனம், மிக மிக நியாயமான கொள்கைகளின் மீது கட்டப்பட வேண்டும்.

*   *   *

அண்ணன் அறியாதபடி தம்பி செலவிடும் பத்து ரூபாய்—அண்ணன் தம்பி என்ற பாசத்தால், சில நாட்களுக்குக் குடும்பத்தை எவ்விதத்திலும் பாதிக்காமலிருக்கும்— ஆனுல் சில காலத்துக்குத்தான் — எப்போது மல்ல. தம்பியின் பழக்கமே அண்ணன் அறியா வண்ணம் தன்னலத்துக்காக நடந்து கொள்வது என்ருகி விட்டால், குடும்பக் கட்டுப்பாட்டை நிலை நிறுத்த, எந்த விதமான பந்த பாசம் பேசியும், பழைய கதைகளைச் சொல்லியும், இராமனையும் இலட்சுமணனையும் துணைக்கு அழைத்தும் முடியாததாகிவிடும். குடும்பம் பிளவுறும்; பிரியும். அண்ணன் தம்பிக்குள்ளாக ஒரு குடும்பத்திலேயே, இந்த நிலை என்ருல், ஒரு ஸ்தாபனத்தின் தலைவருக்கும் துணைத் தலைவருக்கும் ஸ்தாபனத்தில் மற்ற ஐக்கிய உறுப்பினருக்குமிடையே, கடைசி வரையில் பாசம் ஒன்றை மட்டும் கொண்டு, அன்பு உண்டாக்கி ஸ்தாபனத்தை உடையாதபடி பார்த்துக் கொள்ள முடியாது.

*   *   *

ஸ்தாபனம் ஏற்படச் செய்வதற்குக் கொள்கைகள் தேவை என்பது, கட்டடம் கட்டுவதற்கு அதற்குரிய சாமான்கள் தேவை என்பது போன்றது. கட்டடம் அமைக்கும் கடினமான காரியத்துக்கு, அதற்கான

திறமை வாய்ந்த சட்டட வேலைக்காரர் தேவைப்படு வது போலச் சில குறிப்பிட்ட கொள்கைகளை அடிப் படையாகக் கொண்டு ஒரு ஸ்தாபனத்தை அமைக்க, திறனும், உறுதியும் கொண்ட அமைப்பாளர் தேவை.

* * *

பெரியதோர் மாளிகையில், ஒரு சிறிய ஜன்னல் அவ்வளவு முக்கியமானதல்ல— அந்த ஜன்னல் இல்லா மற் போனாலும் மாளிகை இருக்கத்தான் செய்யும். அடிப்படையும் குறுக்குச் சுவரும், மேல் அமைப்பும் சரி யாக இருக்கு மட்டும், ஜன்னல் இருந்தாலும் எடுப் பட்டாலும், கெட்டாலும், மாளிகைக்கு ஒரு சேதமு மில்லை. ஆனாலும் மாளிகையிலே அக்கரை உள்ளவர்கள், அந்தச் சிறு ஜன்னலைக் கூடத்தான் கவனித்துக் கொள் வார்கள் கெடாதபடி. ஜன்னலை மட்டுமல்ல, அதன் கம்பிகளிலே ஒன்று கெட்டாலும், கவலைப்படுவர். ஏனெனில், ஜன்னலின் கம்பி கெட்டுக் கள்ளனோ காற்று மழையோ உள்ளே புகுந்து அதன் விளைவாக மாளி கைக்கு நஷ்டமும் கஷ்டமும் ஏற்பட்டு விடக் கூடுமே என்ற யூகம், மாளிகைக்காரருக்கு இருக்கும். எனவே, அவர் ஜன்னலின் கம்பி, மாளிகையின் அடிப்படை அல்ல என்ற போதிலும், அதனையும் தான் அக்கரை யுடன் கவனித்துக் கொள்வார்; ஸ்தாபனங்களிலும் இது போலத்தான், தொழிற் ஸ்தாபனங்களின் ஐக்கியமும் பலமும் கெடாதிருக்க வேண்டுமானால், ஜன்னல் கம்பி யையும் ஜாக்கிரதையுடன் கவனிக்கும் மாளிகைக்காரர் போல், ஸ்தாபனத்தின் சகல உறுப்பினரையும், கவனித்து, கட்டுக் கோப்பு கெடாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும்.

* * *

பெரிய மரங்களை மாளிகை மண்டபத்துக்குத் தூண்களாக அமைத்து விட்டால் மட்டும் போதாது. மிக மிகச் சாதாரணச் செல், மரத்திலே சிறு துளை களிலே புகுந்து கொள்ளாதபடியும் பார்த்துக் கொள்ள வேண்டும்—செல் அரிக்க ஆரம்பித்தால் செம்மரமும் சரி, எம்மரமும் சரி கெடும்.

* * *

தாங்கும் சக்தி தாக்கும் சக்தி இரண்டும் ஒரு சேர ஸ்தாபனத்துக்குத் தேவை. அதற்கேற்ற வகையிலே அந்த அமைப்பு இருக்க வேண்டும்—இருக்க வேண்டு மானல், இருவகை சக்திகளையும் திரட்டவும், திரட்டி யதை உபயோகிக்கவும், ஏற்ற தகுதி படைத்தவர்கள் ஸ்தாபனத்தில் இருக்க வேண்டும். ஒருவர் இருப்பது மற்றவருக்கு வலிவு என்ற எண்ணம், குன்ருது, குறை யாது இருக்க வேண்டும். அந்த எண்ணத்தாலேயே ஸ்தாபனத்தின் ஐக்கியத்தைக் குன்ருமல் காப்பாற்ற முடியும்.

* * *

அடிப்படை பலமாக இருந்தால் மாளிகை கெடா திருப்பது போலக் கொள்கை பலமிருந்தால் ஸ்தாபனம் கெடாது.

* * *

ஸ்தாபன ஐக்கியம்,ஒரு முறை பாடுபட்டுச் சாதித்து விட்டு, அதைக் கண்டு சந்தோஷப்பட்டுக் கொண்டு இனிக் கவலை இல்லை என்று இருந்து விடக் கூடிய ஒரு சம்பவமல்ல. எப்போதும் விழிப்போடு இருந்து கொண்டு அவ்வப்போது பழுது பார்த்துக் கொண்டு இருந்தால் மட்டுமே காப்பாற்றக் கூடிய ஓர் அற்புத மான ஜீவ சக்தி. ஸ்தாபனத்தின் பலமும் பயனும், அந்த

ஐக்கியத்தை—ஒற்றுமை உணர்ச்சியைப் பொறுத்தே இருக்கிறது.

* * *

வீணை உயர்தரமானதால், வித்வானும் தேர்ந்தவர் தான். ஆனால் ஒரு நரம்பு மட்டும் ஓரிடத்தில் தளர்ந்து இருக்கிறது என்றால், வீணையின் நாதமும் கெடும்; வித்வானின் நாதமும் பாழ்படும். ஸ்தாபனத்தின் ஐக்கியம் சங்கீதத்துக்கு உள்ள சுருதி ஞானத்தைப் போன்றது- மிக மிக ஜாக்கிரதையாகக் கவனிக்கப்பட வேண்டிய விஷயம்.

* * *

முதலாளிகளுக்கு கிடைக்கும் லாபம் அவர்கள் மேனிமினுக்குக்குப் பயன்படுத்தும் அளவு இருக்கக் கூடாது. அவர்கள் வாழ்க்கை நடத்துவதற்கு, குடும் பத்தைக் காப்பாற்றுவதற்குப் போதுமானதைத் தவிர மீதிப் பணத்தை வரி போட்டு அரசாங்கம் வாங்கிக் கொள்ள வேண்டும்.

* * *

தனிப்பட்ட எவரும் எந்த தொழிற்சாலையையும் எடுத்து நடத்த அனுமதிக்கக் கூடாது. முதலாளி களிடம் இருக்கும் எல்லா ஆலைகளையும் அரசாங்கம் கைப்பற்றிக் கொள்ள வேண்டும். எல்லா தொழிற் சாலைகளையும் சர்க்கார் எடுத்து நடத்த வேண்டும். அவ்விதம் செய்தால் அதில் கிடைக்கும் லாபம் அரசாங் கத்தைச் சாரும். எந்தத் தனிப்பட்ட முதலாளியையும் சாராது. அதனால் முதலாளித்துவம் வளராது; பூண்டே இல்லாமல் ஒழிந்து விடும்.

* * *

முதலாளிகள், அதிக சரக்கைத் தயார் செய்து, அகண்ட தன் நாடு பூராவிலும் விற்று, நிறைய லாபம் சம்பாதித்து பெரிய முதலாளிகள் ஆகிறார்கள். இம் முறையை ஒழிக்க வேண்டும். முதலாளிகள் ஒரு குறிப்பிட்ட இடம் வரையில்தான் வியாபாரம் செய்யலாம். அதற்குமேல் செய்ய வேறு அரசாங்கத்தின் அனுமதி பெற வேண்டும் என்ற முறை இருக்க வேண்டும்.

*　　　*　　　*

ஒய்வு நேரம் - வேலை கிடைத்து அதிலே ஈடுபட்டு உள்ளவர்களுக்கு வேலை நேரம் போக, மிச்சமிருக்கும் பொழுது வேலை செய்யும் நிலையில் இல்லாதவர்களின் 'காலம்'– ஒய்வு அல்ல – அது ஒய்யாரம். வேலை கிடைக்காததால் வேலை செய்யாது இருப்பவர்களுக்கு கிடைத்திருப்பது 'ஒய்வு' அல்ல திகைப்பு. வேலை செய்யும் மனப்பான்மையற்றவர்கள் காலத்தைக் கொலை செய்வது 'ஒய்வு' அல்ல - அது சோம்பல். ஆக, யாராவது ஒரு வேலையும் செய்யாது இருக்கும்போது அவர் ஒய்வாக இருக்கிறார் என்று கூறிவிடுவது கூடாது.

*　　　*　　　*

பொது மக்களின் பெரும்பாலானவர்களுக்குக் கிடைக்கும் 'ஒய்வு' இருக்கிறதே, அதையே நாகரிகத்தின் அளவுகோலாகக் கொள்கிறார்கள் நல்ல அறிவாளர்கள்.

*　　　*　　　*

உழைப்பு, உருக்குலைந்து விடக் கூடாது – உடலையும் சரி, உள்ளத்தையும் சரி, வாழ்விற்காக வசதி தேடுவதற்கு உழைத்து, அந்த உழைப்பினாலே, உருக்குலைந்து போகும் நிலை மனிதனுக்கு ஏற்படுமானால், அவன்

முட்டையிட்டதும் செத்து விடும் கோழி. அரும்பு விட்டதும் பட்டுப்போகும் செடி போலப் பயன் காணமலும் பயன் தாராமலும், போய் விடுகிருன்.

* * *

உழைப்பு, நம்முடைய உடலையும் உள்ளத்தையும் சிதைத்து விடவில்லை. வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளுக்கும் குடும்ப வளர்ச்சிக்கும் வளத்துக்கும் த்க்க வருவாயைத் தருகிறது. இந்த வருவாயைப் பெறுவதற்காக உழைத்த நேரம் போக மிச்ச நேரம் ஒய்வு கிடைக்கிறது என்ற நிலைமை நாட்டு மக்களின் பெரும்பான்மையினருக்கு ஏற்பட்டால்தான், ஓய்வு நேரம். சமூகத்தின் தரத்தையும் மனப்பண்பையும் உயர்த்தக் கூடிய சக்தி பெறும்.

* * *

இயற்கை நம்மைத் துரோகம் செய்து விட வில்லை. மற்ற நாடுகளிலே உள்ளதைவிட, இயற்கை வளம் இங்குக் கண்டவர்கள் பொருமைப் படும் அளவிற்கு இருக்கத்தான் செய்கிறது. என்றுலும் தொழில் வளம், தொழில் திறம் போதுமான அளவு பெருகாததால் தரித்திரம் தாண்டவமாடக் காண்கிறேம்.

* * *

பெரும்பான்மையினருக்கு ஓய்வு கிடைத்து, அந்த ஓய்வை தக்கபடி பயன் படுத்தினல்தான் பாடுபடுபவருக்கு மேலும் தொடர்ந்து பாடுபடவும், திறமையுடன் பாடு படவும் முடியும் - பிறகு பொதுச் செல்வம் வளரும்; சீர் உண்டாகும்; நாடு செழிக்கும். இவைகள் எல்லா வற்றையும்விட, மனித மாண்பு மலரும். உழைத்தோம், வாழ்வின் பயனைப் பெறுகிறேம் என்ற களிப்பு முதலிலே

ஏற்படவேண்டும். பிறகுதான் ஓய்வைச் சுவைக்க முடியும்.

*　　　　*　　　　*

வேலே, மனிதத் தன்மையை மாய்க்காத அளவு -இருக்க வேண்டும்.

*　　　　*　　　　*

ஓய்வு சிலருக்கு - வேலே பலருக்கு என்ற - முறை மாறினுலொழிய ஓய்வு சமூக உயர்வுக்குப் பயன்படும் பண்பு ஆக முடியாது.

*　　　　*　　　　*

வாழ்க்கைத்தரம் மட்டமாக இருக்கும் சமூகத்திலே, ஓய்வு கிடைத்துப் பயனில்லே, பொருளும் இல்லே. வேகாத பண்டத்தை வெள்ளித் தட்டிலே வைத்துத் தரும் வீண் வேலேயாகும்.

*　　　　*　　　　*

ஓய்வு - உயர்ந்த பண்புள்ள நண்பன் மூலம் நாம் என்ன பெறமுடியுமோ அவ்விதமான மனமகிழ்ச்சி யைத் தருவதாக அமைத்துக் கொள்ள வேண்டும். அது இன்றுள்ள சமூக, பொருளாதார அமைப்பு முறையில், சாத்தியமாகுமா என்பது மிகமிகச் சந்தேகம்.

*　　　　*　　　　*

உதக மண்டலத்து வனப்பு, கொடைக்கானல் குளிர்ச்சி, குற்றுலக் கவர்ச்சி, இவைகளேக் கண்டு களிக்கும் பொழுது போக்கு - ஓய்வு – எவ்வளவு பேருக்குக் கிடைக்க முடியும்? வாழ்க்கைத் தரம் பொதுவாக உயர்ந்தாலொழிய இத்தகைய 'உல்லாசம்' சிலர் சொல்லப் பலர் அதிசயிக்கும் பேச்சளவாகத்தான் இருந்து தீரும்.

# இளைஞர் ஏறுகள்!

சிற்பியிடம் கற்பாறை தரப்படுகிறது. அவன் வேலைக்கான மூலப் பொருள் - இனி அவனுக்குத் தேவை சிறிய உளியும், பெரிய உள்ளமும்; சுதந்திர இந்தியாவிலே, இதுபோலவே, வாலிபர்களுக்குப் பகுத்தறிவும், சுயமரியாதை உணர்ச்சியும் தேவை- புது வாழ்வு பெற - முழு வாழ்வு பெற.

* * *

வாலிபர்கள், உரிமைப் போர்ப்படையில் ஈட்டி முனைகள். அவர்தம் உள்ளத்தில் புரட்சிப் புயலிருக்கும் வாழ்க்கை எனும் பொய்கையிலே, விசாரம் என்னும் நஞ்சு கலக்கப்படாத பருவம்.

* * *

சந்தனக் காட்டைக் கடந்து மணமும் குளிர்ச்சியும் மருவி மக்களை மகிழ்விக்க வருகிறதே தென்றல் அது போன்றது வாலிபம்.

* * *

மாயா வாதமும், மனமருட்சியும் வாலிபர்களிடம் நெருங்க நடுங்கும். வெட்டிப் பேச்சைத் தட்டி நடக்கும் தீரன் வீணரின் கொட்டத்தை அடக்கியாக வேண்டும் என்ற வீரம், ஆபத்துக்குப் பொருட்படுத்தாமல் அநீதியைக் கண்டால் கொதித்தெழுந்து தாக்கும் பண்பு, வாலிபர்களிடையே மிகுந்திருக்கும்.

* * *

முடியுமா? காலம் சரியா? போதுமான பலம் இருக்கிறதா? நாளைவரை பொறுத்திருக்கக் கூடாதா?

என்பன போன்ற பேச்சுக்கள் வாலிபர்களுக்கு இனிப்பாக இரா.

* * *

வாலிபர்கள் நடமாடும் எஃகுக் கம்பிகள், அகத்திலே அருவிபோல் ஆர்வம், முகத்திலே வீரக்களை, செயலிலே துடிதுடிப்புக் காணப்படும். தலை குனிந்து நிற்பது பெருமூச்செறிவது, நம்மால் முடிகின்ற காரியமா என்று இழுத்துப் பேசுவது, ஆகிய முறைகள் அவர்களுக்குப் பிடிக்காதன. அவர்கள் செயலாற்றும் வீரர்கள்.

* * *

உரிமைக்காகப் போராடிய உத்தமர்கள், அக்கிரமங்களை அழிக்க அனைத்தையும் அர்ப்பணித்த தியாகிகள், மக்கள் வாழ உழைத்த மாவீரர்கள், ஆகியோர் பற்றிய வரலாறு படித்தறிந்த அவர்கள் சிந்தனையிலே நம்மாலாவதென்ன பராபரமே, என்ற பஜனைப்போக்கு ஏற்பட முடியாதல்லவா? ஆகவேதான் வாலிபர்கள் விறுவிறுப்புடன் காணப்படுகின்றனர்.

* * *

என் நாடு பொன்னாடு: எங்கும் இதற்கு இல்லை ஈடு என்று மார்தட்டுகிறான் வாலிப வீரன். நாட்டின் நிலை உயர வேண்டும்; வளம் பெருக வேண்டும். செல்வம் வளர வேண்டும்; தொழில் செழிக்க வேண்டும்; ஒருவர் ஒருவரை அடக்குவது; சுரண்டுவது மேல் கீழ் என்று பேதம் காட்டுவது: விசாரத்தோடு விண்ணை அண்ணாந்து பார்ப்பது: வாழ்வாவது மாயம்; மண்ணாவது திண்ணம் என்று வேதாந்தம் பேசுவது; பிறவா வரம் தாரும் என்று சலிப்புச் சிந்து பாடுவது ஆகிய போக்கு

முறையும் மாறி, "எல்லோரும் இந்நாட்டு மன்னர்" என்று பாரதியார் சொன்னபடி அனைவரும் உரிமை யுடன் உவகையுடன் வாழவேண்டும். நாடு பூந்தோட்ட மாக விளங்கி, நானிலத்தோர் கண்டு புகழும் நிலை அடைதல் வேண்டும் என்பது வாலிபர்களின் இன்பக் கனவு.

*       *       *

சுதந்திரம் - விடுதலை - என்றால், சட்டசம்பந்தமான சொற்களின் மாற்றம் என்றல்ல வாலிபன் எண்ணுவது. புதிய நிலை - புது அழகு - புது உருவம் புதிய மகிழ்ச்சி நாடு புதுக்கோலம் கொள்வது என்றே கருதுகிறான்; உண்மையும் அதுதான்.

*       *       *

சுதந்திர இந்தியாவிலே, வளைவுகளை நிமிர்த்த படு குழிகளை மூட, பாதைகளைச் செப்பனிட, சூதுமதியினரை அடக்க, சொந்த மதியற்றோருக்கு அறிவு புகட்ட, சுரண்டுபவனை அடக்க, சோர்ந்திருப்பவனுக்கு உரம் ஊட்ட, பஞ்சம் வராமல் தடுக்க, படிப்பைப் பரப்ப, தொழிலை வளர்க்க, வாலிபத்தை வளமாக்க – எண்ணப் போனால் மளமள வென்று பலப்பல வேலைகள் தெரியும் மனக் கண்முன், இவைகளைச் செய்யவேண்டும். அதற் கான உறுதிவேண்டும். செய்வதைத் திருந்தச் செய்ய வேண்டும்.

*       *       *

பழமை பயங்காட்டும்; வைதீகம் மிரட்டும்; ஜாதி எதிர்க்கும், சம்பிரதாயம் சீறும்; குருட்டுக் கோட்பாடு கள் முரட்டுப் பிடிவாதங்கள், அர்த்தமற்ற பற்றுபாசங் கள், இவைகளெல்லாம் இருண்ட மண்டபத்திலே வட்ட மிடும் வௌவால்கள் போலக் கிளம்பும். உற்றார் உற வினர், அண்ணன் தம்பி, பெற்றோர் பெரியவர்கள், எங்

கெங்கேயிருந்தோ எதிர்பாராத இடத்திலிருந்தெல்லாம் எதிர்ப்புக் கிளம்பும், இவைகளைக் கண்டு அஞ்சாமல் அயராமல், பணி புரியும் பண்பு வாலிபருக்குத் தேவை.

* * *

மனிதன் மனிதனுக வாழ வழி கண்டுபிடிக்கும் மகத்தான வேலை, வாலிபர்கள் முன் இருப்பது, நாட்டின் இயற்கை வளத்தையும், மக்களின் மன வளத்தையும் பெருக்கும் பெரும் வேலை இருக்கிறது. புதிய வாழ்வு அமைக்கும் பொறுப்புள்ள வேலை; இதற்குப் பல பொருள் பற்றிய அறிவும் எதையும் பகுத்தறியும் தன்மையும், காரணம் கண்டே எதையும் ஏற்றுக்கொள்ளும் போக்கும் அறிவுடன் தொடர்புகொண்ட ஆற்றலும், மக்களிடம் மட்டற்ற அன்பும், அவர்களை வாழச் செய்ய முடியும் என்ற நம்பிக்கையும், அவர்கள் அனைவரும் வஞ்சிக்காமல், சுரண்டாமல், அடக்கி ஆளாமல், அடிமைப்படாமல் வாழக்கூடிய விதத்தில் நாட்டின் வளத்தையும் முறையையும் புதுப்பிக்கமுடியும் என்ற எண்ணமும், பழையன கழிதலும், புதியன புகுதலும் வழுவல என்ற எண்ணமும், வாலிபர்களுக்குத் தேவை.

* * *

வாலிபர்கள் ஆசிரியர்களாக வேண்டும். உலகத்தைக் கிராமத்தாருக்குக் காட்டவேண்டும். வாலிபர்கள் வைத்தியர்களாகவேண்டும். உடல் உள்ளம் இரண்டிலும் உள்ள நோய் தீர்க்கும் மருந்தளிக்கவேண்டும். வாலிபர்கள் பாலம் அமைக்க, நீர்த்தேக்கம் அமைக்க, உழவு முறையை மாற்றப் பணிபுரியவேண்டும். பழமையின் பிடியிலிருந்து மக்களைப் பக்குவமாக விடுவித்துப் புதுமையின் சோபிதத்தைக் காட்டிப் புத்துலகு அமைக்கவேண்டும் வாலிபர்கள். இதற்கான திறமும் தீரமும் தேவை. அறிவு ஆராய்ச்சி தேவை. இதற்கான வெளி உலகத் தொடர்பு தேவை.

# கலைப் புரட்சி

## கலை உணர்ச்சி!

கலை, ஓர் இன மக்களின் மனப்பண்பு; அவ்வின மக்களிடையே தோன்றும் தெளிவு, வீரம், ஆகிய வற்றின் எடுத்துக்காட்டு. எனவே, கலை இனவளர்ச் சிக்கு ஏற்றபடி மாறியும், விரிந்தும் வருமென்பதே நுண்ணறிவின் துணிபு.

* * *

இனத்துக்கோர் கலையும், இடத்தின் இயல்பு, தட்ப வெட்பம் ஆகியவற்றிற்கு ஏற்ற முறையிலும், கலை உண் டாகும், வளரும், மாறும்.

* * *

தமிழ் இசை உணர்ச்சி பெருகி, வளர்ச்சியடைந்து வருகிறது. தன்மதிப்புப் பாடல்கள் தமிழகத்தில் பாடப் பட்டு பரவி வருகின்றன.

* * *

நாடகத் துறையிலேயும், நல்லதொரு மாறுதல், மறுமலர்ச்சி தோன்றிவிட்டது. நல்லறிவுப் பாதைக் கான நாடகங்கள் சூழ்நிலையால் பரிதவித்திடும் மனித ரைப் பற்றிய நாடகங்கள் நடிக்கப்படுகின்றன.

* * *

முத்தமிழ், நாடெங்கும் முழங்கப்படுகிறது. முத் தமிழ், தமிழர் வாழ்வும் வளமும் பற்றிய அக்கரை கொண்ட முறையில், துறையில், நல்ல வாழ்வுக்கான கருத்துக்களைப் பரப்பிடும் பணியில் பயன்படுத்தப் படு

கின்றன என்ற செய்திகள் ஓரளவுக்கு மனமகிழ்ச்சியைத் தருகின்றன.

* * *

இன்று இசையரங்குகளிலே, தனி அரசு செலுத்திடும் தியாகராஜ கீர்த்தனங்களின் ஆரம்ப நிலை என்ன? எந்த அளவிற்கு அவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டன என்பதை எண்ணிப்பாருங்கள்.

* * *

தியாகராஜ கீர்த்தனங்கள் ஆரம்பத்தில் பஜனை மடங்களில் பாடப்படும் வெறும் பக்திப் பாடல்களாக மட்டுமே மதிக்கப்பட்டன - கையாளப்பட்டன.

நாளடைவில் காஞ்சிபுரம் நயினாப்பிள்ளை அவர்கள் அவற்றிற்கு இராகம், தாளம், பல்லவி முதலிய இசை அமைப்புக்களைப் பிரித்துப் பாகுபடுத்திப் பாடிக் காட்டினார் முதலில்.

நயினாப்பிள்ளை அவர்கள் செய்த மாறுதல் இசை துறையிலே மாறுதலை உண்டாக்கிவிட்டது! இதன் பின்னரே தியாகராஜ கீர்த்தனம் இசைவாணர்களின் திறமையை எடுத்துக்காட்டிடும் கருவியாகக் கையாளப்பட்டு வருகிறது.

* * *

இந்த முறையிலேதான், பயன் கருதிச் செய்யப்படும் எந்த மாறுதலும், மறுமலர்ச்சியும், அதற்கான முயற்சியும் ஆரம்பத்திலே தரம் தாழ்ந்தவைகளாகக் கருதப்பட்டாலும், அவை தரும் பயனுள்ள விளைவுகளால் பலவித நன்மைகள் நிச்சயம் ஏற்படுகின்றன.

* * *

இசைத் துறையிலும் பழமையை நீக்கிப் புதுமை எண்ணங்களையும், நல்வாழ்வுக் கருத்துக்களையும் புகுத்திப் பயன்படுத்தவேண்டும்.

* * *

ரேடியோவைத் திருப்பினல் ''என் பள்ளி கொண்டீரையை ஸ்ரீ ரங்கநாதரே'' என்பன போன்ற பாடல்களைக் கேட்கிறோம் அடிக்கடி. என்றோ படுத்து எழுந்திராத — எழுந்திருக்கவும் முடியாதவரைப் பற்றி ஆராய்ச்சியேன்? இதை விட்டு மக்கள் மனவளத்திற்கான பாதையிலே இசை வல்லுனர்கள் — இசை வாணர்கள் தம் திறமையைப் பயன்படுத்த வேண்டுகிறேன்.

* * *

நாடகத்தில் மறுமலர்ச்சி மிகமிக முக்கியமானது. நாட்டின் விழிப்புக்கு அது நல்லதோர் அளவுகோல், நாளை நாம் எப்படி இருப்போம் என்பதற்கு அதுவே அறிகுறியாகும்.

* * *

இயலிலும், இசையிலும் கருத்துரைகளைக் கேட்க மட்டுமே முடியும். நாடகத்திலேயோ, கருத்துரையைக் கேட்பதுடன் கருத்து விளக்கக் காட்சிகளைக் காணவும் முடிகிறது. எனவே நாடக மூலம், மனதை அதிகமான அளவுக்கு வசப்படுத்த முடிகிறது.

* * *

மின்சாரம் பாய்ச்சப்பட்ட கம்பிகள் போல நல்ல நடிகனின் திறமை, நாடகத்தைக் காண்பவர்களை உணர்ச்சி வயத்தவராக்கிவிடுகிறது.

* * *

அறிவு வளர, ஆர்வம் பிறக்க, மகிழ்ச்சி தோன்ற மக்களை நன்னெறியிலே புகவைக்க, நற்பண்புகள் உள்ளத்திலே குடிபுக - இப்படிப்பட்ட நற்காரியங்களுக்கு, முத்தமிழ் அதிலும் முக்கியமாக நாடகம், பயன்படல் வேண்டும் என்பது அடிப்படை உண்மை.

* * *

நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த உழைக்கும் கையே தலையணையாய், கட்டாந்தரையே படுக்கையாய், காய்ந்த வயிரே தோழனுய்க்கொண்டு கஷ்டப்படும் பாட்டாளி முன்பு, விறகு வெட்டி வேதனைப்பட்ட சத்தியவான், ராஜ்யமிழந்து சுடலை காத்த அரிச்சந்திரன், பெற்ற குழந்தைகளைக் கிணற்றில் தள்ளிய நல்லதங்காள் இவர்களைக் காட்டி, எத்தகைய அறிவை வளர்க்க முடியும்! விதி - விதி என்று அவனை விம்மவைக்கத்தானே முடியும்.

* * *

நாடகம் :– இன்று நள்ளிரவுச் சத்தமல்ல - நடையாலும், உடையாலும், விழியாலும், மொழியாலும், அரைத் தூக்கத்திலிருப்பவர்களுக்கு ஆனந்தம் தர முயற்சிக்கும், வெறும் ஆடல் பாடல் அல்ல! நாடகம், இன்று நாட்டுக்கு ஒரு நல்லரசனுக முன்வந்திருக்கிறது - துணிவுடன்.

* * *

இயல், இசை, நாடகம், மக்கட்கு அறிவு வளர ஆர்வமூட்ட அகமகிழ்ச்சி பிறக்க, நன்னெறியைக் காட்டப் பயன்படவேண்டும்.

# பேச்சுக்கலை!

## மேடைப் பேச்சு

இந்நாட்களில் மேடைப் பேச்சு, நாடாளும் நற்பணியில் முக்கியமான கருவியாகிவிட்டது.

* * *

திசை காட்டும் கருவி தீயோனிடம் சிக்கினல் கலம் பாறையில் மோதுதல் போல, அரசுகளை ஆட்டிவைக்கும் அளவுக்கு ஆற்றல் அமைந்த மேடைப் பேச்சு எனும் சக்தி, சாதனம், ஒரு சிலருக்கு மட்டுமே கிடைத்து, அவர்களும் அந்தச் சக்தியைத் தவருன காரியத்துக்குப் பயன் படுத்துவதால், மக்களின் நலன், பாறை மோதிய கலமாகும்.

* * *

ஆள்பவர், ஆளப்படுவர் எனும் இருசாராருக்கும், மேடைப் பேச்சு, ஒரு சமயம் வாளாக, பிறிதோர் சமயம் கேடயமாக, ஒரு சமயம் விளக்காக, வேருேர் சமயம் தீப்பந்தமாகப் பயன்படுகிறது.

* * *

மக்களுக்கு ஆள்பவர்களின் தன்மை, நோக்கம், திட்டம் இவைகளைப் பற்றிக் கண்காணிக்கும் பொறுப்பு அதிகரித்துவிட்டது. இந்தக் கண்காணிப்பு வேலைக்கு மேடைப் பேச்சு முக்கியமான துணையாகிறது.

* * *

அலைகடலை அடக்கும் மரக்கலம் அமைத்தோர், ஆழ்கடலுக்குள்ளே செல்லும் கலம் அமைத்தோர், விண்ணில் பறக்கும் விமானம் அமைத்தோர், தொலைவிலுள்ளதைக் கேட்கவும் காணவும் கருவிகள் கண்டு பிடித்தோர், காட்டாறுகளைக் கட்டுக்குக் கொண்டு

வந்தோர், நீரிலே நெருப்பின் சக்தியைக் கண்டறிந்தோர், அனைவரும் நம்போல் மனிதரே. அவர்களால் முடிந்தது நம்மால் ஆகும் என்ற நினைப்பு அவர்களை ஊக்குவிக்கும் சக்தியாயிற்று. அவைகள் சாத்தியமான போது மேடைப் பேச்சு ஏன் சாத்தியமாகாது.

* * *

பேசாமல் இருப்பது வேண்டுமானால் சிரமம்—சிந்தனையை அடக்கியே சும்மா இருப்பதரிது—பேசுவது எளிது—பேசுவதை, ஒழுங்குக்கும் முறைக்கும் கட்டுப் படுத்துவதுதான் மேடைப் பேச்சு.

* * *

இந்நாளில் மேடைப் பேச்சுக்குத் தேவையும் பயனும் உள்ளது என்பது உணர்ந்து, அதனை நாமும் பெறமுடியும் என்ற நம்பிக்கையும் கொள்வது முதல் வேலை.

* * *

வாழ்க்கையுடன் தொடர்பு கொண்ட பிரச்சினைகளைப் பற்றி, மக்கள் குழப்பமான கருத்து கொண்டிருந்தால் தெளிவு அளிப்பது, மக்கள் மருண்டிருந்தால் மருட்சியை நீக்குவது, மக்கள் கவலையற்று இருந்தால், பிரச்சினையின் பொருப்பை உணரச் செய்வது, போன்ற காரியமே மேடைப் பேச்சு.

* * *

'சரஸ்வதி தாண்டவமாடுகிறாள்' அவன் நாவில் என்று புகழ்வதும், 'தம்பி என்னடா சண்டப் பிரசண்ட மடிக்கிறார்—வீசு மலைப்பிஞ்சுகளை என்று ஏசுவதும் ஏககாலத்தில் நடைபெறும் விநோத புரியிலே இருக்கிறார் மேடைப் பேச்சாளி.

* * *

எந்தப் பேச்சு பலருக்கு இனியதாய், பயனுடைய தாய் அறிவு நிரம்பியதாய்த் தோன்றுகிறதோ, அதே பேச்சு வேறு சிலருக்குச் சுடு சொல்லாய், வெட்டிப் பேச்சாய், ஞான சூன்யமாய்த் தோன்றக் கூடும்.

* * *

பேச்சு இனிமையாக இருக்கவேண்டும், என்பதையே நோக்கமாகக் கொள்வதைவிட, மக்களையும் கொள்கை யையும் மதித்து நம்பிக்கையுடன் பேசும் நோக்கம் சிறந்தது—மேலானது.

* * *

பேசும் பொருள் பயன்படத் தக்கதாகவும், வீணை வீம்புக்கு வித்திடாத வகையிலும் அமைத்துக் கொள்வது நல்லது. இனித்தே ஆகவேண்டும் என்று முயன்றால், ஐதங்கையும் ஜாலரும் தேடித் தீரவேண்டி வரும்.

* * *

வள்ளுவர் வாக்கின்படி பேச்சு அமைவதற்கு, வள்ளுவர் வாக்கின்படி கேட்பவர்களும் அமைய வேண்டும். பேசுபவர்க்கு முறை கூறிய வள்ளுவர் கேட்பவர்க்கும் முறை கூறி இருக்கிறார்.

"எப்பொருள் யார் யார் வாய்கேட்பினும்
அப்பொருள் மெய்ப் பொருள் காண்பதறிவு"

ஆனால் நடைமுறையில் இந்தக் குறள் இல்லை. மெய்ப் பொருள் காண்பதறிவு என்றார் திருவள்ளுவர்; மெய்ப் பொருள் காண்பதரிது என்று ஆகிவிட்டது நிலைமை.

* * *

மலர் கொண்டு மாலை தொடுத்தலிலே கைத்திறன் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் கைத்திறன் முழு

வதும் காட்டி, காகிதப் பூமாலை தொடுத்தால் பயன் என்ன? மாலைக்கு முதற்பொருள் மணமுள்ள மலர் அதுபோலப் பேச்சுக்கு முதற்பொருள் சுவையும் பயனும் உள்ள கருத்துக்கள்.

*　　　*　　　*

மாற்றான் வீட்டுத்தோட்டத்திலே பூத்திடினும் மல்லிகைக்கு மணம் உண்டல்லவா? ரசிக்கத்தானே செய்வோம்; அது போல, பேசுபவரின் கருத்து பயன் தருமாயின் கேட்பவரின் கூட்டுறவு எத்தன்மையதாக இருப்பினும், அவர்கள் ஏற்றுக்கொள்வர். எனவே மேடைப் பேச்சுக்குக் கருத்துக்களைச் சேகரிப்பது, சிந்தனையில் விளையும்படிச் செய்வது மிகமிக முக்கியம்.

*　　　*　　　*

தூய்மையான நோக்கமும், தெளிவான அறிவும், கொள்கை வெல்லும் என்ற நம்பிக்கையும் இருக்குமானல், தட்டுத் தடுமாறி பேசும் பேச்சு நாளா வட்டத்தில் முழக்கமாகித் தீரும்.

*　　　*　　　*

கதம்பம், மலர் குறைவாகவும் தழை அதிகமாகவும் இருப்பின் மாதர் கொள்ளார். அதுபோலவே பேச்சும், கருத்து அங்கொன்றும் இங்கொன்றுமாகி, சுவைக்குத வாதன அதிகமாக இருப்பின் எவரும் கொள்ளார். எனவே, கருத்து மிகமிக முக்கியம்; நடை வானவில் அதிக நேரம் அழகளிக்காது.

*　　　*　　　*

நீதியை நிலைநாட்ட, நேர்மையை வலியுறுத்த, நாட்டிற்கேற்ற திட்டங்களை எடுத்துரைக்க, மடமையை மாய்க்க, கொடுமைகளைக் களைய, சிறுமைகளைச் சீரழிவு களைப் போக்க ஆர்வம் தோன்ற வேண்டும். அந்த ஆர்வம் ஏற்படுத்தும் சிந்தனையிலே பூத்திடும் நல்ல கருத்துக்களை அழகுறத் தொடுத்து அளிப்பதே மேடைப் பேச்சு.

# காந்தி அண்ணல்!

வேறு நாடுகளிலே விடுதலைப் போர் தொடுத்தவர்கள் இரகசியமாகவோ, பகிரங்கமாகவோ, சொந்தத்திலேயோ, வேறு நாட்டின் துணைகொண்டோ, இராணுவத்தைத் திரட்டுவது, போர்ப் பொருளைக் குவிப்பது; மறைந்திருந்து தாக்குவது; சதி செய்வது என்ற பல முறைகளைக் கையாண்டனர். தாய் நாட்டின் விடுதலைக்காக இவையாவும். எனவே சரியா? தவறு? என்ற கேள்விக்கும் இடம் இல்லை என்றனர்.

* * *

உலக வரலாற்றிலேயே முதன் முறையாக இந்தத் திட்டம் வேண்டாம் என்று ஒதுக்கிவிட்டுப் புதியதோர் தத்துவத்தைக் கொண்ட திட்டத்தை, ஆயுதமின்றி இரகசியமின்றி, வெளிப்படையாகத் தூய்மையுடன் விலைதலைப் போர் நடத்தலானார்; அதிலே வெற்றி கண்டார், காந்தியடிகள்.

* * *

நல்ல மனிதர்களால் தான் நல்லாட்சி நடத்த முடியும், நாட்டுக்கு விடுதலையும் கிடைத்து மக்கள் நல்லவர்களாகாமல், கொலை பாதகர்கள், கொள்ளைக் காரர்கள், ஆதிக்க வெறியர்கள், ஆள் விழுங்கிகள், ஆஷாடபூதிகள் ஆகியோரின் ஆதிக்கம் அழிந்து படாதிருந்தால், விடுதலையால் என்ன பலன்? வேடனிடமிருந்து மீட்டு வந்த புள்ளி மானை; வேங்கையின் முன்பு துள்ளி விளையாட விடுவதா?

* * *

அவர் மந்தரக்கோல் கொண்டோ, யாககுண்டத்தருகே நின்றோ சாதிக்கவில்லை — மக்களிடையே வாழ்ந்து, மக்களின் மகத்தான சக்தியைத் திரட்டிக் காட்டிச் சாதித்தார். புதிய வாழ்வு தந்தார். புதிய அந்தஸ்து தந்தார்.

* * *

இவ்வளவு பெரிய துணைக் கண்டத்துக்கு விடுதலையை வாங்கித் தந்தவர், நாட்டு மக்களின் ஏழ்மைக் கோலத்தைக் கண்டார்—கருத்திலே அக் காட்சி கலந்தது. அவர், அவர்களிலே ஒருவராகவே வாழலானார். ''எல்லாம் மாயம்; உலகமே இந்திர ஜாலம்'' என்று உபதேசிக்கும் குருமார்கள், தங்கப் பாதக் குறடும், வைரம் இழைத்த குண்டலங்களும் அணிந்துகொண்டிருக்கக் கண்ட மக்கள் முன்பு, சுகத்தையும், வசதியையும் நினைத்தால் பெறுவதற்கு உரிமையும் வாய்ப்பும் பெற்றிருந்தும், ஏழை வாழ்வை நடத்திய உத்தமர் உலவினர். மக்களின் மனம் என்னென்ன எண்ணியிருக்கும்; குண்டல மணிந்த குருமார்களையும், குறுந்தடி பிடித்து உலவிய உத்தமரையும் ஏககாலத்தில் கண்டபோது கண்டறியாதன கண்டோம் என்று களித்தனர்.

* * *

அவரைக் கொன்றனே கொடியோன், அப்போது அவர் மனதிலே இருந்து வந்த எண்ணங்கள் யாவை? என்பதை எண்ணும் போதுதான், நாம் எவ்வளவு பெரிய நஷ்டத்துக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறோம் என்பது விளங்குகிறது. கல்லும், கட்டிடையும், காகிதக் குப்பையும் ஏற்றிக்கொண்டு சென்ற கலம் கவிழ்ந்தால் நஷ்டம் என்ன? முத்தும், பவளமும், முழுமதி போன்ற துகிலும், பிறவும் கொண்டு செல்லும் கலம், கடலிலே

மூழ்கிவிட்டால், நஷ்டமும் மனக்கஷ்டமும் நெஞ்சை வெந்திடச் செய்யுமல்லவா? அதுபோலக் காந்தியாரைக் கயவன் கொன்றபோது, அவருடைய மனதிலே அருமையான திட்டங்கள், நாட்டுக்குப் பலன் தரும் புதிய முறைகள், ஊசலாடிக்கொண்டிருந்தன. அந்த எண்ணும் போதுதான் எவ்வளவு பெரிய நஷ்டம் இந்தச் சம்பவம் என்பது விளங்குகிறது.

* * *

விடுதலை பெற்றுத் தந்ததோடு வேலை முடிந்தது என்று அவர் முடிவு கட்டவில்லை. நாட்டை மீட்க வேண்டும்—நல்லாட்சி அமைக்கவேண்டும் — மக்களை நல்லவர்களாக்கவேண்டும், வீரம், திறம், விவேகம், மூன்றையும் விரும்பினார். மக்களை நல்லவர்களாக்க வேண்டும் என்பதே அவருடைய இறுதி இலட்சியம்.

* * *

நாட்டை மீட்க ஒரு ரணகளச் சூரரையும், நல்லாட்சி அமைக்க பல கலைவாணரையும் மக்களை நல்வழிப்படுத்த அறநெறி கூறுவோரையும் நாடியாக வேண்டும்; எந்த நாட்டுக்கும் அனைவரும் ஏககாலத்தில் கிடைக்கமாட்டார்கள். ஒரு தலை முறையிலே வீரன் தோன்றி விடுதலை நல்லாட்சி அமைப்பார். பிறிதோர் சமயம் பேரறிஞர் தோன்றி மக்களுக்கு நல்வழி காட்டுவார்.

* * *

இந்து மதத்திலே ஏறிப்போய் —ஊறிப்போயிருந்த கேடுகளைத் தமது பரிசுத்த வாழ்க்கையாலும், தூய்மையான உபதேசத்தாலும், புதிய விளக்க உரைகளாலும் நீக்கும் காரியத்தில் ஈடுபடலானார்; அன்பு நெறி தழைக்கவேண்டும் என்றார்.

* * *

அவர் இந்த மதம், அவன் அந்த மதம், என்று குரோதம் கொள்ளாதீர் என்ருர். இது பெரியது; இன்னென்று தாழ்ந்தது என்று எண்ணுதீர் என்ருர். தீண்டாமை போகவேண்டும் என்ருர். அமளிக்கிடையே நின்று படுகொலைகள் நடைபெற்ற இடத்திற்கெல்லாம் சென்று கூறிவந்தார்.

* * *

மக்களை நல்லவர்களாக்க வேண்டுமானுல், அவர்கள் மனதிலே உள்ள மாசு, மதவெறி, ஜாதி ஆணவம், சுயநலம், ஆதிக்க எண்ணம் ஒழிந்தாக வேண்டும்.

* * *

தோட்டத்தை மண்மேடாக்கியவனிடமிருந்து மீட்டு, அதைப் புன்னகைப் பூந்தோட்டமாக்குவதற்காக அழகிய மலர்ச் செடிகளுக்கான விதைகளைத் தூவ அங்கு சென்றபோது புதருக்குள்ளிருந்து, பாம்பொன்று வந்து கடித்துக் கொல்வது போல், நாட்டை மீட்டு நல்லாட்சி அமைத்து, மக்களை நல்லவர்களாக்கு வதற்காகக் கருத்தைப் பரப்பும்போது, கோட்சே கிளம்பினுன்.

* * *

மறைந்த உத்தமர் மத ஆதிக்க வெறியால் கொல்லப்பட்டார். அந்தக் கொடும்பாம்பை ஒழித்தாக வேண்டும். அவர், 'அனைவரும் ஒன்று' என்னும் அன்பு மார்க்கக் கருத்தைத் தூவி வந்தார். அதை நாம் செய்து முடிப்போம், என்பதே நமது உறுதியாக இருக்கவேண்டும்.

# உரிமை வேட்கை!

மக்களின் சுதந்திரம் காக்கப்படவேண்டுமானால், மக்களாட்சி ஏற்படவேண்டும். ஓநாயைச் சாதுவாக்கி ஆட்டுக்குக் காவல் வைக்கவும் முடியாது; உருத்திராட்சம் அணிந்ததாலேயே பூனை, போதகாசிரியனாகி விடாது.

* * *

திறமை மிக்க ஓவியக் கலைஞன், திரையில் தீட்டிய தீங்கனி குலுங்கும் மரத்தின் காட்சியைக் கண்டு உயிர்ப் பறவை மயங்கி, கனியை அங்கு வட்டமிடும் காட்சிப் போல, தந்திரமான பிரச்சாரத்தால் மயங்கிடும் மனப் பான்மை பொது மக்களிடம் இருக்குமானால், மக்களாட்சிக் காலத்தில், சாதுர்யக்காரர்கள் சர்வாதிகாரமும் பெறமுடியும். சுதந்திரத்தைக் கேலிக் கூத்தாக்கிவிட முடியும். ஆகவேதான் இந்நாட்களிலே மக்களின் சுதந்திர வாழ்வுக்குச் சிந்தனைத் தெளிவுதான் மிகவும் அடிப்படையாகத் தேவைப்படுகிறது.

* * *

உயர்ந்த ஜாதிக்காரர், கொழுத்த பணக்காரர், தேர்ந்த தந்திரக்காரர், மிகுந்த வடிவுள்ளவர் என்று எந்தக் காரணத்தைக் கொண்டாகிலும் ஒருவர் மற்றவர்மீது ஆதிக்கம் செலுத்துவதற்கு வழி அமைந்துவிடுமானால், அங்கு ஏட்டிலே எவ்வளவுதான் சிறந்த முறையில் சுதந்திரத்தின் கோட்பாடுகள்—சாசனம் தீட்டப்பட்டிருப்பினும், உண்மையான சுதந்திரம் மலராது—நிலைக்காது.

* * *

ஒரு சிலர், உயர்ந்த ஜாதியினர் என்று கூறப்பட்டு, மக்களால் நம்பப்பட்டு, அந்த நம்பிக்கை முறியாதிருக்க ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டு விடுமானால், பிறகு அவர்கள் மற்ற மக்களைத் தமது இச்சைப்படி ஆட்டிப் படைக்கமுடியும். செல்வத்தால் சக்தியைக் கொண்டு சுதந்திரத்தைச் சூறையாடிவிடமுடிகிறது. இவரை எதிர்த்து நாம் என்ன செய்யமுடியும்? அவர் நம்மைப் பணத்தாலேயே அடித்தும் கொன்றும் விடுவார் என்ற அச்சம் பிடித்தாட்டும் போது சுதந்திரமாகச் சிந்திக்கவோ, நடந்து கொள்ளவோ எப்படிச் சாத்திய மாகும்?

* * *

மனிதருக்குள் பேதத்தையும் அச்சத்தையும் மூட்டக் கூடிய, வளர்க்கக்கூடிய எந்த ஏற்பாடும், சுதந்திரத்தின் பரம விரோதிகளே.

* * *

ஜெபமாலை, இரும்புப் பெட்டி, எதைக் கருவி யாகக் கொண்டாலும் சரி, இவைகள் மூலம் ஆதிக்கம் செலுத்தும் நிலை இருக்குமட்டும் மனித, சுதந்திரம் பறிக்கப்பட்டுதான் போகும்.

* * *

பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம், மதச் சுதந்திரம், ஏட்டில் இருக்குமளவுக்கு நடைமுறைக்கு வருவதில்லை.

* * *

சொல்லுகிறபடி செய்யவேண்டும் என்ற எண்ணம் ஆட்சியாளர்க்கும். சொன்னபடி செய்யக்காணோம் ஏன்

என்று கேட்கும், விழிப்புணர்ச்சி மக்களுக்கும் ஏற்பட வேண்டும்.

* * *

அரிசிப் பஞ்சமும் அமெரிக்கா நாட்டுப் பிரச்சினையும் ஒருசேர மக்களின் முன் வந்து நிற்கும் போது, அமெரிக்கத் தேர்தலைப்பற்றி அல்ல, அரிசி விஷயமாகத் தான் மக்களால் அதிகமான அக்கரை காட்டமுடியும்.

* * *

மக்களாட்சி முறைக்குத் தேவையான, தேர்தல் யந்திரத்தையே விலைக்கு வாங்கி விடக்கூடிய அளவு பொருளாதார பலம் சிலரிடமும், செக்கு மாடென உழைத்தால் தான் வாழவே முடியும் என்ற நிலையுள்ள பொருளாதார பீடை பலரிடமும் இருக்கும் பொருளாதார பேத முறை ஒழியவேண்டும்.

* * *

பெரும்பாலான மக்கள் சுகமாக வாழவேண்டும் என்பதையே குறிக்கோளாகக் கொண்டிருக்கிறார்கள். அது தவறும் ஆகாது. அந்தச் சுக வாழ்வுக்கு, என்ன வழி என்று சிந்தித்தபோது கிடைத்த பல எண்ணங் களிலே மிக முக்கியமானது சுதந்திரம் என்ற கருத்து.

* * *

அடிமைத்தனம் ஒரு கூட்டுச் சரக்கு. அடிமைத் தனம் ஏற்படுவதற்கான காரணங்களை ஆராய்ந்தாலும், அடிமைத்தனம் என்பது ஒரு கூட்டுச் சரக்கு என்பது தெரியும்.

* * *

ஆதி மனிதன், மிகமிகச் சுதந்திர புருஷன்—அவன் வரி செலுத்தியதில்லை. அவனைக் கட்டுப்படுத்த எந்தச்

சட்டமும் கிடையாது. 144-வது செக்ஷனை அவன் அறியான். வழக்கு மன்றமும் கிடையாது. வாதாடும் முறை கிடையாது; சிறையோ சிரச்சேதமோ கிடையாது. இங்கே நுழையாதே; இதைத் தொடாதே; இப்படிச் செய்யாதே என்று அவன் ஆட்டிவைக்கப்படவில்லை. கண்ணெதிரே தெரிந்த காட்டில் தன்னிச்சையாகத் திரிந்து, பசித்தால் புசித்து, அலுத்தால் உறங்கி, கோபம் வந்தால் கூவி, குதூகலம் வந்தால் ஆடிப்பாடிக் கொண்டுதான் இருந்தான்.

* * *

வானத்தில் வட்டமிடும் பறவை, இரையும் இருப்பிடமும் தேடி, பலவற்றைக் கண்டு ஏதேனும் ஒன்றினைக் கொண்டு மகிழ்தல் போலச் சிந்தனைத் திறம் படைத்த மனிதன், சுக வாழ்வுக்கான சாதனங்கள் யாவை என்று தேடிய வண்ணம் இருந்து வந்திருக்கிறான்; பல தவறுகளை இழைத்திருக்கிறான். வட்டமிடும் பறவையைக் கொத்தவரும் வல்லூறு போலச் சுக வாழ்வு தேடின மனிதனைக் கொடுங்கோலர் வதைத்து மிருக்கிறார்கள். பல கஷ்டங்களுக்குப் பிறகு மக்களாட்சி முறையே, சுக வாழ்வுக்குச் சரியான சாதனம் என்று முடிவு செய்திருக்கிறான்.

# பல்சுவை

அ. 8—600

# முகவுரை

"எல்லோரும் இந்நாட்டு மன்னர்" என்று முழங்கினர் தேசியக்கவி பாரதியார்; ஆனால், இன்றைய தமிழ் மக்கள் அரசியலுக்கும் தமக்கும் உள்ள தொடர்பை அறியாது விலகி நிற்கின்றனர். இதற்குக் காரணம் இடைக்காலத்தில் நமது இரத்தத்தில் ஊறிநின்ற அடிமையுணர்ச்சியேயாம்.

தமிழகம் உரிமையாக வாழ்ந்த நாடு; கடல் கடந்தும் தன் ஆட்சியைப் பரப்பிய நாடு; என்பன போன்ற உண்மைகளை மக்களிடையே எடுத்துக் கூறினாலும் நம்பும் மனப்பான்மை யற்ற இந்த நாளில், பண்டைத் தமிழகத்தின் அரசியல் சின்னங்களாக ஆங்காங்குக் கோட்டை கொத்தளங்கள் நின்று நிலை பெற்றுக் காட்சியளிக்கின்றன. கால இடையறவால் மங்கி மறைந்து நிற்கும் நமது முன்னோர்களின் வரலாறுகளைக் காட்சிக்குரியனவாக விளங்கும் இக்கோட்டை கொத்தளங் களின் வாயிலாக ஓரளவு நாம் அறிவோமானால் நமக்கு உரிமை உணர்ச்சியும் கடமையுணர்ச்சியும் தோன்றும்.

எனவே, இத்தகைய வரலாறுகளை வருங்காலச் செல்வர் களாகிய மாணவர்கள் அறிந்து நலம் பெற வேண்டுமென்பது எனது விருப்பம். இச்சிறு நூலை என்னை எழுதுமாறு தூண்டிய ஜெனரல் புக் கம்பெனியாருக்கும், இந்நூல் எழுதக்கருவி நூல் களாக இருந்த மாவட்ட விளக்கங்களை (Gazeteer) எழுதிய நூலாசிரியர்களுக்கும், பிற நூலாசிரியர்களுக்கும், இந்நூல் எழுதுங்கால் உடனிருந்து உதவிய, திரு. துரை. பழனிவேலன் அவர்களுக்கும் எனது நன்றி.

இந்நூலைத் தமிழாசிரியர்களும், தலைமையாசிரியர்களும், கல்வியதிகாரிகளும் ஆதரித்து மேலும் மேலும் இத்தகைய பணியில் என்னை ஊக்குவிக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

சேலம்,
13—11—54.

வை. சுப்பிரமணியன்

# பதிப்பகத்தார் உரை

"தென்னாட்டுக் கோட்டைகள்" எனும் பெயர் தாங்கிய இந்நூல், உயர்நிலைப் பள்ளிகளுக்கான துணைப்பாட நூலாக வெளி வருகின்றது.

எம் வேண்டுகோளின்படி, உரிய காலத்தில் எழுதித் தந்த இதன் ஆசிரியர் திரு. வித்துவான் வை. சுப்பிரமணியன் அவர்கட்கும், இந்நூல் அச்சாகுங்கால் ஏடுகளைப் பரிசோதித்தும், பிழை நீக்கம் செய்தும் ஆவன செய்த, திருப்பூர், சுப்பிரமணிய செட்டியார் உயர்நிலைப் பள்ளி, தமிழாசிரியர் திரு. புலவர் ஆ. நாராயணசாமி அவர்கட்கும், கும்பகோணம் சிறிய மலர் உயர்நிலைப் பள்ளி, தமிழாசிரியர் திரு. வித்துவான் ப. திருநாவுக்கரசு அவர்கட்கும் எம் உளம் நிறைந்த நன்றி உரித்தாகுக.

இந்நூலில் காணப்பெறும் படங்களை இத்துடன் இணைத்துக்கொள்ள அனுமதி தந்த சென்னை பழம்பொருள் பாதுகாப்பிலாக்காவினர்க்கும் எம் நன்றி.

குறுகிய காலத்தில் நன்முறையில் இந்நூலை அச்சிட்டுதவிய தி மெட்ராஸ் சிடி பிரிண்ட்டேர்ஸார்க்கும் எம் நன்றியை உரித்தாக்குகின்றோம்.

பதிப்பகத்தார்

# பொருளடக்கம்


(1) தோற்றுவாய் ... 1

(2) பண்டைக்காலப் போர் முறை ... 11

(3) வேலூர்க் கோட்டை ... 17

(4) செஞ்சிக் கோட்டை ... 31

(5) தஞ்சாவூர்க் கோட்டை ... 47

(6) திருச்சிராப்பள்ளிக் கோட்டைகள் ... 58

(7) நாமக்கல் கோட்டை ... 75

(8) புலிக்கோட்டை ... 83

# தென்னாட்டுக் கோட்டைகள்

## 1. தோற்றுவாய்

சீறும் சிறப்பும் பெற்ற நம் தென்னாடு மிகவும் பழமையானது. பண்டுதொட்டே தென்னாட்டு மக்கள் கோட்டை கொத்தளங்களை அமைத்துக் கட்டடக் கலையில் வல்லவர்களாக விளங்கினார்கள். தென்னாட்டுப் பழங்காலக் கட்டடக் கலையின் சிறப்பை விளக்குதற்குரிய சான்றுகளாகத் தஞ்சை, சிதம்பரம், மதுரை, காஞ்சி போன்ற ஊர்களிலுள்ள விண்ணளாவிய கோவில்கள், மகாபலிபுரத்திலுள்ள சிற்பக் களஞ்சியங்கள், மற்றும் நாட்டின் பல பகுதிகளிலுள்ள பழங்காலக் கட்டடங்கள் முதலியன இன்றும் நின்று நிலவுகின்றன. இத்தகைய கட்டடக் கலையில் கோட்டைகளும் முக்கியமான இடத்தைப் பெறுகின்றன. பண்டைக் காலத்து மக்கள் தமக்குள் மனமாறுபாடு நேருங்காலத்து வில், வாள், வேல், தடி, கயிறு முதலியன கொண்டு போர் புரிந்து வந்தனர். ஆதலால் தம் பகைவர்களிடமிருந்து தம்மையும், தம் மக்களையும் காத்துக்கொள்ளத் தமிழ் மன்னர்கள் பலவகை ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். இவ்வகை ஏற்பாடுகளில் தலைநகரையும் மற்றும் பல இன்றியமையாத இடங்களையும் பகைவரிடமிருந்து காப்பதற்கு வலிமை வாய்ந்த கோட்டை முதலிய

அரண்களை ஏற்படுத்திக் கொண்டனர். இத்தகைய ஏற்பாடுகளைப் பற்றிப் பழங்காலத்தில் கையாண்ட முறைகளைப் இனிக் காண்போம்.

பண்டைக் காலத்திய தமிழ் மன்னர்கள் நாட்டின் நடுப்பகுதிகளில் பாதுகாப்பான இடங்களில் தமது தலைநகரங்களை அமைப்பர். அத்தலைநகரத்தின் நடு விடத்தில், அரசனது அரண்மனையிருக்கும். அரச காரியங்கள் நடைபெறும் அலுவலகங்களில், பணிபுரிவோரும் பிறரும் அரண்மனையைச் சூழ விருப்பர். அதனைச் சூழவிருக்கும் இடங்களில் நாட்டின் தொல்குடிப் பெருமக்களாகிய செல்வர் முதலியோர் வாழ்வர். மற்றும் அதனைச்சூழ வணிகர் களும் பலவகைத் தொழிலாளர்களும் வாழ்வர். நகரின் அமைப்பு, அகநகரம், புறநகரம் என இரு வகையாகப் பகுக்கப்பட்டிருக்கும். அகநகரில் இன்றி யமையாத செல்வ இருக்கைகளும் ஆயுதச்சாலைகளும் இருக்கும். புறநகரில் போர்வீரர்களும் பல்வகைத் தொழில் புரிவோரும் ஏனையோரும் வாழ்வர். இங்ஙனம், அமைந்த நகரத்தைச் சுற்றிலும் போர்த் திறன்மிக்க, பெரியதொரு மதிற்சுவர் எழுப்பப்பட் டிருக்கும். இம்மதிற் சுவர்தான் அரண்களில் இன்றி யமையாத இடத்தைப் பெறுகிறது. இம்மதிற் சுவரை அடுத்து வெளியே நீர் நிறைந்த ஆழமான அகழி இருக்கும். மதிலுக்கு அகத்தும் புறத்தும் மிகுதியான போர் வீரர்கள் மதிலைக் காவல் செய்வர். அகழிக்கு வெளிஇடங்களில் வேல், மூங்கில், இலந்தை முதலிய முள்மரங்களும், காரை, சூரை, இண்டு போன்ற முட்செடிகளும், முட்கள் செறிந்த

ஆதொண்டை, அச்சங்கொடி ஆகிய முட்கொடி களும் நிறைந்த காவற்காடு நகரைச் சூழ்ந்திருக்கும். மதிற்சுவரை அடுத்து, சுமார் 60 அடிக்கு அதிகமான ஆழமும் 100 முதல் 300 அடி வரை அகலமு முடைய அகழி, நகரைச் சூழ்ந்திருக்கும். இவ்வகழி யில் ஆறுகள், ஏறிகள், கடல்கால்கள் முதலியவற்றை இணைத்து நீர் நிறைந்திருப்பதற்கு வேண்டிய வகையினைக் செய்வர். பகைவர் அகழிகளைக் கடந்து மதிலைப்பற்றுது தடுப்பதற்காக அகழிகளில் இடங்கர், கரா முதலிய கொடிய நீர்வாழ் உயிரினங்களும், வலை போல் பின்னிப்பிணைந்து கிடக்கும். முள் நிறைந்த தாமரைக் கொடிகளும் பிறவும் நிறைந்திருக்கும்.

பகைவர்கள் தலைநகரைத் தாக்க முற்பட்டால் முதலில் காவற் காட்டையும் அதன் பின் மதிலையும் அகழியையும் கடக்கவேண்டும். அது மிகவும் கடுமையான செயலாகும். பகைவர்கள் திடீரென நகருக்குள் நுழையாவண்ணம் காவற்காடு முள்ளும் புதரும் செறிந்திருக்கும். காட்டின் வழித்துறைகளை நன்கறிந்த வீரர்கள் காட்டுக்குள் இருக்கும் பகைவரை எளிதில் வென்றுவிடுவர். இவற்றையும் கடந்து வரும் பகைவர்களை வீரர்கள் எதிர்த்துப் போரிடுவர். தடுத்து நிறுத்த இயலாவிடின், வீரர்கள் மதிலுக்குள், நுழைந்துகொண்டு பகைவரை எதிர்ப்பர். மதில்கள், பகைவர்களால் ஏறமுடியாதனவாகவும் தகர்க்க முடியா தனவாகவும் மிக்க வலிமையும் திண்மையும் வாய்ந் திருக்கும். அத்தகைய மதிற் சுவர்களை அமைக்கும் போது, அவற்றில் உலோகத் தகடுகளையும் கூட்டி அமைப்பர்.

* செம்புத் தகடுகளை மதிற் சுவர்களில் கூட்டி அமைந்திருந்ததாகச் சங்க நூல்களால் அறியலாம். மதிற் சுவற்களை அமைக்கும்போது மண்ணைப் § பனஞ் சாறு கூட்டி அரைத்துக் கட்டுவார்கள். மதிற் சுவர் களைக் கட்டுங்காலத்து, இராகிக் கூழைக் காய்ச்சி இணைப்புகளில் ஊற்றுவதும், ஈயம், செம்பு முதலிய உலோகங்களைப் பொருத்துவதும் அக்கால வழக்கங் களாக இருந்தன. இத்தகைய மதில்கள் உயர்வு, அகலம், திண்மை, அருமை முதலிய இலக்கணங்க ளுடையனவாக இருக்கும். கோட்டையின் அடிப் பகுதிகளைக் கல்லால் அமைப்பார்கள். இக் கோட்டைச் சுவர்கள் வெளிப்புறம் செங்குத்தாகவும் வெளியில் சற்று கவிழ்ந்த வண்ணமாகவும் உட்புறம் சரிந்தும் அமைந்திருக்கும். மதிற் சுவர்கள் பெரும்பாலும் இரட்டைச் சுவர்களாலேயே அமைக்கப் பட்டு வந்தன. படகு, தோணி, முதலியன கொண்டும், நூலேணி கொண்டும் அகழியைக் கடக்க முற்படும் பகைவரை மதிலின் அலங்கங்களிலிருந்து கொண்டு, வீரர்கள் அம்பு முதலியவற்றுல் தாக்குவர். சுவர்களின் நடுவே நெற்பதர், வரகு, உமி, வரகுவைக்கோல், கம்பு முதலிய பொருள்கள் நிரப்பப் பெற்றிருக்கும். எதிரிகள் சுவர்களைத் துளைத்துக் கொண்டு வர முற் பட்டால், அவர்கள் உள்ளே நுழைய முடியாதபடி நடுவே இருக்கும் பதர், வரகு முதலிய பொருள்கள் சரிந்து வந்துகொண்டே இருக்கும். அதனுல் பகைவ ரது முன்னேற்றம் பெரிதும் தடைப்படும். மதிற்சுவர்

---

* செம்புறழ் புரிசை செம்மண் மூதூர். (புறநானூறு)

§ அரைமண் இஞ்சி நாட்கொடி நுடங்கும்

களினுள் பல சுரங்கங்களும், மேலேபலவகை அலங்கங்களும், கிளிக்கூடுகளும் அமைக்கப்பட்டிருக்கும். பகைவர்கள் அரணைத்தாக்கத் துவங்கும்போது, வீரர்கள் மதில்களில் அமைக்கப்பட்டிருக்கும் அலங்கங்களில் பாதுகாப்பாகத் தங்கிக் கொண்டு பகைவர்களை எதிர்ப்பார்கள். தனித்த ஆள் மறைவாக நின்று கொண்டு பகைவரை எதிர்க்குமிடம் கிளிக்கூடு எனப்படும். இவ்வாறு அமைக்கப்பட்ட மதில்களில் பலவகை இயந்திரப் பொறிகளும் இயங்கிகளும் அமைக்கப்பட்டிருந்தன. 1800 ஆண்டுகட்கு முற்பட்டதாகக் கருதப் படும் சிலப்பதிகாரம் போன்ற தமிழ் நூல்களால் இவ்வுண்மைகள் தெளிவாக அறியப்படுகின்றன.

.............''வளைவிற் பொறியுங்
கருவிர லூகமுங் கல்லுமிழ் கவணும்
பரிவுறு வெங்நெயும் பாகடு குழிசியும்
காய்பொன் னுலையுங் கல்லிடு கூடையுந்
தூண்டிலுத் தொடக்கும் ஆண்டலை யடுப்பும்
கவையும் கழுவும் புதையும் புழையும்
ஐயவித் துலாமுங் கைபெய லூசியும்
சென்றெறி சிரலும் பன்றியும் பணையும்
எழுவும் சீப்பும் முழுவிறற் கணையமும்
கோலும் குந்தமும் வேலும் பிறவு
ஞாயிறுஞ் சிறந்து நாட்கொடி நுடங்கும்
வாயில் கழிந்து''..............

—சிலப்பதிகாரம்

மேற்கானும் சிலப்பதிகாரம் வரிகள் மதுரை நகரத்திலிருந்த மதிற் சுவரில் பன்னூறு ஆண்டுகட்கு முன்னர், அமைக்கப் பெற்றிருந்த இயந்திரப் பொறி

களைப பற்றிக் கூறுகின்றன. அவற்றின் விளக்கம் கீழ்வருமாறு:

வளைவிற் பொறி - வளைந்து தானே எய்யும் இயந்திரவில்.

கருவிரலூகம் - கரிய விரலையுடைய குரங்கைப் போலிருந்து (வேடிக்கைக்கு மதிலில் செய்துவைத்த பதுமை போல) அருகில் வந்தவரைப் பிடித்துக் கொல்லும் பொறி.

கல்லுமிழ்கவண் - தானே கல்லை எறியும் கவண்.

பரிவுறிவெந்நெய் - எண்ணெயைக் கொதிக்க வைத்து அருகில் வருபவர்மேல் வீசும் எண்ணெய்மிடா.

பாகடுகுழிசி - செம்பை உருக்கி வைத்திருந்து பகைவர் மீது சிதறும் மிடா; (அல்லது) வெல்லப்பாகைக் காய்ச்சிச் சிதறும் பாத்திரங்களும் ஆம்.

காய் பொன்னுலையும் - ஆயுதங்களை உருகக் காய்ச்சி எறிவதற்கு அமைக்கப்பட்டிருந்த உலைமுகங்கள்.

தொடக்கு - கழுக்கோல்போலக் கழுத்திற்பூட்டி முறுக்கும் சங்கிலி.

ஆண்டலையடுப்பு - ஆண் மகனது தலையைப் போன்ற வடிவமுள்ள ஒருவகைப் பறவை. இது பறந்து சென்று பகைவரது மண்டையைக் கொத்தி மூளையைக் கடிக்கும் பொறியாகும்.

கவை - இரு பிரிவாக இருந்து மதிலேறும் பகைவரை மறித்துத் தள்ளும் இரும்புக் கவை.

கழு - கழுகுபோன்றதொரு ஆயுதம்.

புதை - அம்பு முதலிய ஆயுதங்கள் இருக்குமிடம்.

புழை - தாமே அம்பைச்சிந்தும் ஏவறைகள்.

ஐயவித்துலாம் - மறைந்துநின்று துளைவழியாகப் பகவரை அறிந்து, துளைவழியாகவே அம்பெய்யும் பாது

காப்பான பலகை என்பர். மற்றும் சிற்றம்புகள் வைத்து எய்யும் இயந்திரமென்றும் கூறுவர். மேலும் பகைவர்கள் மதிலின் வாயிலை யானை முதலியவற்றின் உதவிகொண்டு உடைக்க முற்படும்போது, திடீரென மதிலுக்குள்ளிருந்து இறங்கிவிடுவதோர் பெரியகதவு போன்றதென்றும், அதன் முன்புறம் அம்புகளால் நிறைக்கப்பட்டிருக்குமென்றும் கூறப்படுகிறது.

**கைபெயரூசி** – மதிலைக் கைப்பற்றுவாரது கையைத் துளைக்கும் ஊசிகள்.

**சென்றெறிசிரல்** - அரணை அணுகும் பகைவர்மேற் சென்று கண்ணைக்குத்தும் சிச்சிலிப்பறவை.

**பன்றி** - மதிலின்மேல் ஏறியவர்களைக் தனது கொம்பால் பிளந்து கீழேதள்ளும் பன்றிப்பொறி.

**பணை** – மூங்கிற்கோல் போலிருந்து தானே பகைவரை அடிக்கும் பொறி.

**எழுவும் சீப்பும்** - கதவைப் பகைவர் தாக்கும்போது உடையாமல் கதவு வலிமையாக இருப்பதற்காக பொருந்தும் மரங்கள்.

**கணையம்** - கதவுக்குத் தாங்கலாகப் போடும் குறுக்குமரம்.

**கோல்** - விட்டெறியும் வேல்.

**குந்தம்** - ஈட்டி.

**பிறவும்** - சதக்கினி, தள்ளிவெட்டி, களிற்றுப் பொறி. விழுங்கும் பாம்பு. கழுகுப்பொறி, புலிப்பொறி, குடப் பாம்பு, சகடப்பொறி, தகர்ப்பொறி, அரிநூற்பொறி. மிளகாய்க்குடுக்கை முதலியன.

**சதக்கனி** - நூறுமனிதர்களை ஒருசேரக் சொல்லும் பொறி.

**ஞாயில்** - குருத்தலைகள், அல்லது ஏவறை.

மேற்காட்டிய இத்துணை வகையான பொறிகளும் சங்க காலத்து மதுரை நகரின் மதிலின்மீது அமைக்கப்

பட்டிருந்தன வென்பதை நூல்கள் வாயிலாக அறிகிறோம்.

கோட்டை மதில்களின்மேல் பண்டைத் தமிழ் அரசர்கள் தங்கள் அடையாளங்களாகிய வில், புலி, கயல் முதலிய இலச்சினைகளைப் பொறித்துவைப்பார். அஃதன்றியும் தம்மால் வெல்லப்பட்ட மன்னர்களது கோட்டைச் சுவர்களின்மீதும் தமக்கு உதவியாக இருக்கும் துணையரசர்களின் கோட்டைச் சுவர்களின் மீதும், பேரரசர்களின் அடையாளங்கள் பொறிக்கப் பெற்றிருக்கும். இச்செய்தியை மலையமான் சோழிய ஏனாதி திருக்கண்ணனை மாறேக்கத்து நப்பசலையார் புகழ்ந்து கூறியுள்ள பாடலில் "விடர்ப்புலி பொறித்த கோட்டை" எனவரும் அடியால் அறியலாம்.

பண்டைத் தமிழகத்தில் எயிற்பட்டினமென்ற பெயருடைய சிறந்த நகரமொன்று காஞ்சிபுரத்திற்கு வடபால் 16 கல் தொலைவில் இருந்ததாகக் கருதப் படுகிறது. சோழன் நலங்கிள்ளி என்பான் பாண்டி நாட்டிலுள்ள ஏழுபொன் கோட்டை என்றதோரூரில் இருந்த ஏழு மதில்களையும் அழித்து வென்றதோடு, அம்மதிலின்மீது தனது புலிப்பொறியையும் பொறித் தான் என்று புறநானூறு கூறுகிறது.

கி. மு. 287 முதல் 212 வரை வாழ்ந்தவராகக் கருதப்படும் கிரேக்க நாட்டவரான ஆர்க்கிமிடிஸ் தம் நாட்டின்மீது படையெடுத்துவந்த, அக்காலத்து வலிமை பெற்ற வல்லரசாக விளங்கிய உரோமப் பேரரசை ஓரளவு தடுக்க முடிந்ததும் கோட்டை மதிலின் துணை கொண்டேயாம். ஆர்க்கிமிடிஸ் தமது

நாட்டு மதிலின்மீது பற்பல விதமான இயந்திரப் பொறிகளை அமைத்துப் பகைவர்கள் மதிலை அணுக ஒட்டாதபடி தடுத்து வந்தார். இப்பொறிகளின் நுட்பத்தை அறியாத உரோமர்கள் நெடுநாள் செய்வ தறியாது திணறினர்.

உரோமர்களது கப்பற்படை சிசிலி நகரத்தின் கோட்டையை நோக்கி வரும்போது, ஆர்க்கிமிடிஸ் அனலொளியை ஒருமுகப்படுத்தும் கண்ணாடித் தொகுதியின் மூலம் அவற்றை எரியச் செய்தார். இவ்வாறு கப்பல்கள் பலமுறை எரிந்து சாம்பலாயின. துறைமுகங்களில் சரக்கு மூட்டைகளைத் தூக்கும் (கிரெயின்கள்) தூக்கிகள் போன்ற பொறிகளை நீரில் மூழ்கும்படி மறைத்து வைத்திருந்து, திடீரெனக் கலங்களைக் கவிழ்த்தும், எழுந்து உள் மூழ்கும்போது கொக்கிகள் போன்றவற்றால் மாட்டியிழுத்து உள்ளே அமிழ்த்தியும் பகைவரது கலங்களை அழித்தனர்.

இதுபற்றி, "புளுடார்க்கு" என்ற ஆசிரியர், "உரோமரும் கிரேக்கரும் போரிட்டார் என்று கூறுவதற்கில்லை. ஆர்க்கிமிடிஸ் என்ற ஒரு கிரேக்கர் தான் உரோமர்களுடன் போர் புரிந்தார் என்று கூற வேண்டும். சிசிலி மக்கள் அனைவரும் ஆர்க்கிமிடி சின் பொறியமைப்புகளுள் சேர்ந்த துணையமைப்புப் பொறிகளாயினர். உயிரில்லாத அப்பொறிகளை ஆக்கியவரும் அசைவித்தவரும் அவரே ஆயினர். தாக்குதலிலும், பாதுகாப்பிலும் அவரது படைகள் சிறந்த வெற்றியடைந்தன. ஆர்க்கிமிடிசின் மாயக் கருவிகளால் மனம் மருண்ட உரோமர்கள் கோட்டைக்

குள்ளிருந்து யாராவது தடியையோ, கயிற்றையோ நீட்டினுல்கூட அஞ்சி நடு நடுங்கினர்" என்று கூறுகின்ருர்.

தார்த்தாரியப் படைகளுக்கு அஞ்சிய சீனர்கள் தங்கள் நாட்டு எல்லைப்புறத்தில் பெரியதொரு கோட்டையாக மதிற் சுவரை எடுத்தனர். இம்மதில் 1400 மைல் நீளமுள்ளது. இதன் உயரம் 30 அடி, அகலம் 25 அடி. நடுவே, பல கோபுரங்களும் கோட்டைகளும் உண்டு. அநேக பள்ளத்தாக்குகளையும் மலைகளையும் ஊடுருவிக்கொண்டு இம்மதில் செல்கிறது. இச்சீனப் பெருஞ்சுவர் வடபாகத்தில் மங்கோலியாவுக்கும் சீனுவுக்கும் எல்லையாக இருக்கிறது. பகைவர்கள் நாட்டுக்குள் வராமல் தடுக்கிறது. இச்சுவர் உலக அதிசயங்களுள் ஒன்ருகக் கருதப் படுகிறது.

மற்றும் அண்மையில் நடந்த உலகப் பெரும் போரில் ஐரோப்பியரைக் குலைநடுங்கச் செய்த அடால்ப் ஹிட்லரின் மின்னற் போரில் ஓரளவு தங்கி நின்றது மாகினுட் அரண்தான் என்பது அனைவரும் அறிந்ததே. எனவே, இரண்டாயிரம் மூவாயிரம் ஆண்டுகட்கும் அதற்கு முன்னரும் கோட்டைகள் பகைவரிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்வதற்குப் பயன்பட்டது போலவே, விஞ்ஞானம் தலையெடுத்து விண்ணூர்தியினுல் அணுகுண்டுப் போர் செய்யும் இக்காலம் வரை பாதுகாப்புக்குக் கோட்டைகள் இன்றியமையாதவையாகவே இருந்துவருகின்றன என்பதை அறிகிருேம். எனவே, கோட்டை கொத்தளங்களின் அமைப்பை—சிறப்பாகத் தென்னுட்டவ

ராகிய நம் நாட்டவர் கையாண்ட கோட்டைகளின் அமைப்பை மாணவர்கள் அறியவேண்டுவது இன்றியமையாததாகும். அங்ஙனம் கோட்டையின் இயல்புகளை அறிவதற்குச் சரித்திரப் புகழ் வாய்ந்த பல கோட்டைகளின் அமைப்பு முறைகளை அறிவது உதவியாக இருக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. எனவே, இன்றுவரை முற்றும் அழிவுபடாது நின்று நிலவும் செஞ்சிக் கோட்டை, வேலூர்க் கோட்டை, நாமக்கல் கோட்டை முதலியவை பற்றி இனி அறியத் தொடங்குவோம். அதற்கு முன் பண்டைக் காலத் தமிழரசர்களின் போர் முறையினைச் சிறிது காண்போம்.

---

## 2. பண்டைக்காலப் போர் முறை

பண்டைக் காலத்துத் தமிழ் மன்னர்கள் மதிலரண்களில் தங்கியிருந்து போர் செய்த முறைகளை நாம் புறநானூறு, புறப்பொருள் வெண்பாமாலை முதலிய நூல்களில் காணலாம். இக்காலத்துப் போர் முறைகளைப் போன்றதன்று பழங்காலப் போர் முறை. இக்காலத்து ஒரு போர் மூளுதற்குப் பல மாதங்களுக்கு முன்னரே அரசர் தன் இருக்குமிடம் தெரியாதவாறு மறைந்து விடுவார். மீண்டும் போர் நிகழ்ந்து சமாதானம் நிலைபெற்ற பல மாதங்களுக்குப் பிறகுதான், வெளியில் தலைகாட்டத் துணிவர். இஃதன்றிப் படைவீரர்களும் தூங்குபவன் தலையில் கல்லைப்போடுவதுபோன்று ஆயுதமற்ற பொது மக்கள்மீதும், குடியிருக்கை, பள்ளி, மருத்துவச்சாலை போன்ற அமைதி

யான பகுதிகளிலும், அணைக்கட்டு, தொழில் நிலையம் போன்ற இடங்களிலும், இரவோடிரவாக விமானங்களில் பறந்து சென்று குண்டு மாரி பொழிந்து மறைவர்.

பண்டைக்காலத்தில் போர் தொடங்கின் மன்னன் தானே முன்னின்று போரை நடத்துவான். போர் நடத்துவதற்குரிய இடங்கள் வரையறுக்கப்படும். போர் நிகழ்தற்குரிய இடங்களில் உள்ள பொது மக்களுக்கு 'இவ்விடம் போர் நிகழவிருப்பதால் நீங்கள் யாவரும் பாதுகாப்பான இடங்களைச் சென்றடையுங்கள்' என்ற அறிக்கை விடப்படும். உணர்த்த உணராப்பசு முதலிய விலங்குகளைத் தாமே முன்னிருந்து போர்க்களத்தினின்று அப்புறப்படுத்துவர். எதிர்த்துப் போர் புரிய வந்தவரிலும் அடிபிறக்கிட்டோர், ஆயுதமில்லாதோர், குடுமியவிழ்ந்தோர், பின்னிட்டோர், அஞ்சியோர், பேடியர், மகளிர், குழவிகள், நோய்வாய்ப்பட்டோர் முதலியவர்களோடு போரிடார். அன்றியும் தாம் போருக்குப் போதலை மற்றையோருக்கு விளக்கமாக அறிவித்தற்காகப் போருக்குரிய அடையாள மாலைகளை அணிந்தே செல்வர்.

இங்ஙனம் போர்க்கெழும் மன்னர்கள் தம்போர் முறைகளைப் பெரும்பாலும் ஏழுவகையாகப் பகுத்திருந்தனர். அவற்றுள் முதலாவது வெட்சியாகும். வெட்சி என்பது: பகைவர் நாட்டின்மீது படையெடுக்க விரும்பும் மன்னன், அந்நாட்டிலுள்ள பசுக்கள் போர் நிகழ்ச்சிகளால் துன்பமுறுமே என்ற இரக்க உணர்வால் அவற்றிற்குத் தொல்லை நேரா

வண்ணம் பாதுகாக்க முயல்வான். இவ்வாறு பகைவர்களது பசுக்களைக் கவர விரும்பிய மன்னன் தனது வீரர்களை அனுப்புவான். வீரர்கள் செந்நிற ஆடையை அணிந்து (போரில் வெட்டப்பட்டு உதிரம் பெருகி ஆடையில் பட்டாலும், தோன்றுமல் இருப்பதற்காகவும், அது கண்டு மனத்திகில் ஏற்படாதிருக்கவும்) செல்வர். வீரர்கள் ஆநிரைகளைக் கவரச் செல்கின்ருேம் என்பதை அறிவித்தற்காகச் செந்நிறம் பொருந்திய வெட்சிப்பூ மாலையை அணிவர். இத்தகைய இவ்வீரர்களை எதிர்த்துப் போரிட விரும்புவோர் வெட்சி வீரர்களைத் தாம் எதிர்த்துப் போரிடப்போகிருேம் என்பதை அறிவித்தற்குக் கரந்தைப் பூமாலையைச் சூடிக்கொண்டு போரிடுவர்.

இதுபோலவே, பகைவர் நாட்டின்மீது படையெடுத்துச் செல்வோர் வஞ்சிப்பூ மாலையைச் சூடிக்கொண்டு போரிடுவதும், அவ்வீரரை எதிர்த்துப் போரிடுவோர் காஞ்சிப்பூ மாலையைச்சூடி எதிர்ப்பதும் முறையாகும். இத்தகைய பழங்காலப்போர் முறைகளில் மதிலை வளைத்துக்கொண்டு போரிடுவதும் மதிலுக்குள் இருந்து மதிலைக் காப்பதுமாகிய முறைகள் கூறப்படுகின்றன. மதிலைக் வளைத்துக் கொண்டு அழிக்க முற்படும் வீரர்கள் உழிஞைப்பூவை மாலையாகக்கட்டி அணிந்திருப்பார். மதிலை வளைத்துக் கொண்டு அழிக்க முற்படும் வீரர்களை எதிர்த்து நிற்போர் நொச்சிப்பூவை மாலையாகக்கட்டி அணிந்திருப்பர். இப்போர்ப் பகுதியை நூல்கள் உழிஞைப் படலம் என்றும் நொச்சிப்படலம் என்றும் பகுத்து விரிவாகக் கூறுகின்றன. அதன் சுருக்கம் பின் வருமாறு:—

அரசன், தான் போருக்குச் செல்வதற்குமுன், வெண்கொற்றக் குடையையும் வாளையும் நல்லதொரு நாளிலே முன்னே செல்லும்படி அனுப்பிவைப்பான். அதன்பின், தனக்கு ஏற்றநாளில் முரசத்திற்குப் பூசனைபுரிந்து முழக்கிப் படைவீரர்களுடன் போருக் கெழுவான். அதுபோழ்து அறிஞர்கள் முற்காலத்து நிகழ்ந்த போர்களால் பல அரண்கள் அழிந்ததை எடுத்துக்கூறி, மன்னனுக்கு ஊக்கமூட்டுவர். அரசன் படைகளுடன் சென்று பகையரசனது மதிலின் புறத்தே தங்குவான். வீரர்கள் பகைவருடைய மதிலின் இரகசியங்களையும் நுட்பங்களையும் அறிந்து கூறுவர். அதன்பின் அரசனது படைகள் காவற்காட்டில் நுழையத் தொடங்கும். இங்ஙனம் காட்டை அழித்துக் கொண்டு புகும் வீரர்களது நிலையைப் புறத்துழிஞை என்று கூறுவர். காவற்காட்டைத் தாண்டிக்கொண்டு அகழின் புறத்தே தங்கியிருந்து, நாவாய், தோணி, நூலேணி, கயிறு முதலியவற்றின் துணைகொண்டு அகழியைக் கடப்பர். அது போது மதிற்காப்போர் கற்பொறி, அம்பு, எறிவேல், மாதிற்பொறி முதலியன கொண்டு தாக்கினும் அதற்கு அஞ்சாது, மதிலின் மீது ஏணி சார்த்தி மேலே ஏறி, அதற்குள் அமைந் திருக்கும் காவற்காட்டுக்குள் குதிப்பர். மதிற் சுவரி னுள்ளும் காவற்காடு இருப்பதுண்டு. வீரர்கள் பாதுகாப்பிலிருந்து கொண்டு பகைவரைக் கடுமையாக எதிர்ப்பர். இவ்வண்ணம் பகைவரது அரண்களை வீரர்கள் போரிட்டு வெல்வர்.

பகைவர்களது மதில், ஏறுவதற்கும் உடைத் தற்கும் இடங்கொடாது மிக வலிமை வாய்ந்ததாக

இருப்பின், அதுபோது மதிற்கதவுகளை யானைகளைக் கொண்டும், வீரர்களைக்கொண்டும் தாக்கியுடைப்பர். அவ்வாறு மதிலை வளைத்துக்கொண்டு போரிடும் வீரர்கள் பலநாள் அணுகமுடியாத நிலை ஏற்படுவதும் உண்டு. அங்ஙனம் வீரர்கள் வெளியில் இருக்கும் போது மதிலுக்குள் இருக்கும் அரசனது முரசொலியைக் கேட்டு அதனாற் சின மிகுந்த உழிஞைப்படை வீரர்களின் தலைவனான மன்னன் புறத்திலுள்ள உணவு சமைத்தற்குரிய அகப்பை முதலிய கருவிகளை மதிலினுள் எறிந்துவிட்டு, இன்று மாலைக்குள் இம் மதிலைக் கைக்கொண்டு உட்புகுந்து பிறகே சமைத்து உண்போம் என்று வஞ்சினங் கூறுவான். வீரர்கள் மதில்களின் உயரங் குறைந்த பகுதிகளின் மீது தாவிக் குதிக்கும்படி குதிரையைச் செலுத்துவர். அங்ஙனம் குதிரை மதிலின்மீது தாவும்போது, மதிலின் மீதுள்ள வீரன் மீதும் பாய்ந்து வீரனது உடலைச் சின்னபின்னப்படுத்தும். அதனைக் குதிரை மறம் என்று கூறுவார்கள். இங்ஙனம் பகையரசர்கள் மதிலைச் சூழ்ந்து கொண்டிருப்பதை அறிந்து, மதிலுக்குள் இருக்கும் அரசனுக்கு நண்பரான மன்னர்கள் வந்து உழிஞையாரோடு போரிட்டு மதிலைக் காப்பதும் உண்டு. உழிஞை மன்னன் தான் மதிலைக் கைப்பற்றி விட்டால் மதிலை அழிப்பதோடு, கழுதை ஏர் பூட்டிக் குடைவேளை விதையையும் பலகறையையும் கலந்து விதைப்பான். இத்தகைய வெற்றி கொண்டபின் படைவீரர்களுக்குப் பல சிறப்புகள் செய்தலோடு, தன்து வாளுக்கு மஞ்சன நீராட்டுதலும் செய்வான்.

முற்கூறியவாறு பகையரசர்கள் தமது மதிலைக் கைக்கொள்ள வரும்போது மதிலைக்காக்கும் வீரர்களை நொச்சி வீரர்கள் என்று கூறுவார்கள். இவ்வீரர்கள் நொச்சிப் பூமாலையை அணிந்து மதிலைக் காவல் புரிவர். இவர்களது நிகழ்ச்சிகளைப் பற்றிக் கூறும் பகுதி நொச்சித்திணையாகும். இதன் சுருக்கம் பின் வருமாறு:—நொச்சிப் படையினர், மதிலை வளைத்துப் போர் செய்யும் படைவீரர்களின்மீது மதிலுக்குள் அமைந்துள்ள கண்ணறைகளிலிருந்து அம்பெய்வர். இவர்கள் காவற்காட்டைக் காத்தற்குச் செய்யும் போரை ஊர்ச்செரு என்றும், மதில் காத்தலை எயிற் போர் என்றும் கூறுவர். மதிற்காக்கும் வீரர்கள் தங்களது குதிரைகளை மதிலின்மீது நடத்தியும் போரிடுவர். இங்ஙனம் மதிலானது பண்டைத் தமிழ் மன்னர்களின் போர் நெறிகளிற் சிறந்த இடத்தைப் பெற்றிருந்ததென்பது நூல்களால் அறியப்படு கின்றது.

தமிழ் நூல்களில் தூங்கெயிலெறிந்த தொடித் தோட் செம்பியன் என்ற பெயரால் சோழ மன்னன் ஒருவன் சிறப்பிக்கப்படுகிறான். இம்மன்னனைப் பற்றிக் கூறுவோர், இம்மன்னன் அரக்கர்களால் இரும்பு, செம்பு, வெள்ளி ஆகிய உலோகங்களால் அமைக்கப்பட்டதும் ஆகாயத்தில் திரிய வல்லதுமாகிய அரண்களைத் தன் கை வேலால் எறிந்து வென்றான். அச்சிறப்பு நோக்கிய மக்கள் இவ்வரிய வீரத்திற்கு அறிகுறியாக இம்மன்னனுக்கு ஒரு கைவளையை அணிவித்தனர். ஆதலின் இம்மன்னன் தூங்கெயி லெறிந்த தோடித்தோட் செம்பியன் எனப் பெயர் பெற்றனன் என்பர். தூங்குதல் என்பது தொங்குதல்

என்று பொருள்படும். தூங்கெயில் என்பதற்கு பல வகை இயந்திரப் பொறிகள் பொருத்தப்பட்டுத் தொங்கும் எயில் என்று பொருள் கொள்வதே சிறப்பு. நற்றேர்ச் செம்பியன் என்னும் மன்னன், மிகுதியான இயந்திரப் பொறிகள் பொருந்தப் பெற்றுத் தூங்கெயில் என்று புகழப் பெற்றதும், பகைவர்கள் அணுகுதற்கரியதுமான பகைவரது மதிலை அழித்துப் புகழ் பெற்றான் என்ற செய்தியை மணிமேகலை, சிலப்பதிகாரம், புறநானூறு, பத்துப்பாட்டு, கலிங்கத்துப் பரணி முதலிய நூல்கள் கூறுகின்றன.

இங்ஙனம் அமைந்த கோட்டைகள் சிற்ப இலக்கணப்படி நான்கு வகைப்படும். சமவெளிகளில் அமைந்த கோட்டையை, ஸ்தலதுர்க்கம் என்றும், காட்டுப் பகுதிகளின் பாதுகாப்பையுடையனவற்றை வனதுர்க்கம் என்றும், மலைப்பாதுகாப்பைப் பொருந்தினவற்றைக் கிரிதுர்க்கம் என்றும், நீரரணையுடையனவற்றை ஜலதுர்க்கம் என்றும் கூறுவர்.

## 3. வேலூர்க் கோட்டை

பல நூற்றாண்டுகளுக்கு முன் ஒரு வேலங்காட்டருகில் தோன்றியதால் வேலூர் அப்பெயரைப் பெற்றது. வேலூரை இராயர் வமிசத்து மன்னர்கள் ஆண்டுவந்தமையின் இராய வேலூர் என்ற பெயரும் ஏற்படலாயிற்று. வரலாற்றுப் பெருமை வாய்ந்த இராயவேலூரை நினைக்கும்போது நம் நினைவுக்கு வருவன: அவ்வூர்க் கோட்டையும், அக்கோட்டைக்கு உள்ளே உட்கோட்டையாக அமைந்திருக்கும்

ஜலகண்டேசுரர் கோவிலும், அக் கோவிலின் கலியாண மண்டபத்தில் காணும் ஒப்பற்ற அரிய வேலைப்பாடமைந்த சிற்பங்களுமேயாம்.

## கோட்டையின் அமைப்பும் அகழியின் சிறப்பும் :

இவ்வூர்க் கோட்டை தென்னிந்தியாவின் போர்க் கட்டடக் கலைக்கு மிகச் சிறந்த முன் மாதிரியாக விளங்குகிறது. தற்போது தென்னிந்தியாவிலுள்ள கோட்டைகளில் அதிகமான அழிபாட்டுக்கு உட்படாது முழுதாக இருக்கும் கோட்டை இது ஒன்றுதான். கோட்டை மிகப் பரந்த வெளியில் பள்ளமான இடத்தில் அமைந்திருக்கிறது. கோட்டையின் வெளிப்புறங்கள் பரந்த வெளியாகவும் மேடாகவும் இருப்பதால், பகைவர் வெளியிடங்களில் பாதுகாப்பாகத் தங்கிக் கோட்டையைத் தாக்க முடியாமல் . போவதோடு, பீரங்கி முதலியவற்றால் உள்ளிடங்களைத் தாக்குதற்கும் இயலாமல் போகிறது. கோட்டையின் பொது அமைப்பு ஒழுங்கற்ற நாற்கோண உருவில் அமைந்திருக்கிறது. கோட்டையின் முக்கிய உறுப்புகளாக மதிற்சுவரையும், அகழியையும் உள்ளிடத்தையும் கருதலாம்.

கோட்டையின் வெளிப்புறத்தைக் கடந்தவுடன் முதலாவதாகக் காணப்படுவது அகழியேயாம். அகழி, சுமார் 40 அடி ஆழமும் சில இடங்களில் 300 அடி அகலமும் உடையதாகக் காணப்படுகிறது. இவ்வகழியில் நீர் நிறைந்திருக்கிறது. அகழிக்காக நகரத்தின் கீழ்ப்புறத்தில் அமைந்திருக்கும் குன்றுகளிலிருந்து ஓடிவரும் நீரைச் சூரிய குண்டம் என்றதொரு

குளத்தில் தேக்கிவைத்துப் பாதுகாக்கின்றனர். அக்குளத்திலிருந்துதான் கோட்டையின் அகழிக்குப் பூமிக்குள்ளே கால்வாய் அமைத்து, மட்குழாய்களின் வழியாகத் தண்ணீர் கொண்டு செல்லப்படுகிறது. அகழியைப் பகைவர் கடக்காமலிருப்பதற்காக, முன்னர்ப் பலவகை முதலைகளும் தாமரைக்கொடிகளும் வளர்க்கப்பட்டன. முற்காலத்தில் இராசத்துரோகிகள், கொலைக் குற்றம் செய்வோர், போர்க் கைதிகள் முதலியோரை முதலைக்கு இரையாக இதில் தூக்கிப் போட்டுவிடுவார்களாம்! பிற்காலத்தில் கோட்டையில் தங்கியிருந்த வெள்ளையர்கள் வேடிக்கையாக அம் முதலைகளை வேட்டையாடிச் சுட்டுக் கொன்று விட்டனர். மீண்டும், 1878 ஆம் ஆண்டு பல்மனுர் தாலூகாவிலிருந்து முதலைக்குட்டிகளைக் கொண்டு வந்து அதில் விட்டனராம். அவற்றின் சந்ததிகளில் சில இன்னும் காணப்படுகின்றன.

பண்டைக் காலத்தில் அகழியைக் கடந்து உள்ளே செல்லப் பெரியதொரு தூக்குப்பாலம் இருந்ததாம். தற்போது அகழியைப் பாலத்தால் கடந்து கோட்டைச் சுவரைத் துளைத்துப் பெரியதொரு பாதை அமைக்கப் பட்டிருக்கிறது. மற்றும் அகழியின் தெற்குப் பக்கத்தில் கற்பாறைகளால் கட்டப்பட்ட ஓர் ஒற்றையடிப் பாதையும் அதனைக் கடப்பதற்குத் தற்போது உதவுகிறது.


அகழியின் மேற்குப் பக்கத்தில் கல்லால் அமைக்கப்பட்ட ஒரு ஒற்றையடிப் பாதை முன்னர் கட்டப் பட்டும், தற்போது பயன்படாத வகையில் அடைத்தும்

வைக்கப்பட்டிருக்கிறது. தற்போதும் அகழிகளில் ஏராளமான தாமரை அல்லிக்கொடிகள் வளர்ந்து கண்ணுக்கினிய காட்சியைக் கொடுக்கின்றன.

மதிற்சுவர்களின் மாண்பு :

இனி, அகழிக்கு அடுத்தபடியாகக் காணப்படும் மதில்களைக் கவனிப்போம். மதிற்சுவர்கள் மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிந்து அமைந்திருக்கின்றன. கோட்டையின் பெரிய சுவர்களெல்லாம் கருங்கற்களால் கட்டப்பட்டவை. கருங்கற்கள் நன்கு செதுக்கப்பட்டுக் காரையின் உதவியில்லாமல் காடிவெட்டி இணைக்கப் பட்டிருக்கின்றன.

முதற்பகுதி, அகழியின் உட்பகுதிச் சுவர்க்கு மேலே சுமார் பத்தடி உயரம் வரை அமைந்துள்ளது. இச்சுவர்கள் மிகப் பெரிய பாறைப் பாளங்களால் கட்டப்பட்டிருக்கின்றன. இச்சுவர்களின் இடையில் சுண்ணும்புக் காரை செலுத்திப் பொருத்தப்படாமல், கற்களின் கன அளவையும் காடி அமைப்பையும் கொண்டு பொருத்தப்பட்டிருக்கின்றன. இம் மதிலின் மேல் வரிசையில் அரைவட்ட வடிவமான பெருங் கற்கள் பொருத்தப் பட்டிருக்கின்றன. இக்கற்கள் மதிற் சுவருக்குச் சிறந்த அழகைத் தருவதோடு அகழியைக் கடக்க முற்படும் பகைவரைப் பாதுகாப்பாக மறைந்துநின்று பார்த்துச் சுடுவதற்கான துளைகள் அமைந்தனவாகவும் இருக்கின்றன. இத்துளைகள் வெளியிலிருந்து பார்ப்பதற்குச் சிறிய புள்ளிகள் போலத் தோன்றினும், உள்ளமைப்பில் போதுமான



வேலூர்க் கோட்டையின் அகழியும் மதிலும்

அளவு அகன்றதாக அமைந்திருக்கின்றன. மேலும், சுவரில் ஏறத்தாழச் சமமான இடைவெளித் தூரங்களில் நீண்ட சதுர வடிவமுள்ள கிளிக்கூடுகள் போன்ற ஏவறைகள் பல அமைந்து உள்ளன. அகழியின் நடுப்பகுதியை அடைந்தவரைத் தாக்குவதற்கு மேலே கண்ணறைகளும், அகழியின் உட்புறச் சுவரை அடைந்தவர்களைத் தாக்குவதற்கு ஏற்றவண்ணம் கீழ்நோக்கிய துளைகளும் அமைந்தனவாயிருக்கின்றன. இக் கிளிக்கூடுகள் உட்புறச் சுவருக்கு வெளியே அகழிக்குள் நீட்டிக்கொண்டிருப்பதோடு, மேற்பகுதியில் பாதுகாப்பாக மூடப்பட்டுமிருக்கிறது. கோட்டைச் சுவரின் வெளிப்பகுதியில் காணும் இவ்வலங்கங்கள் கோட்டைக்குச் சிறப்பான பாதுகாப்பைத்தருவதோடு, சிறந்த அழகுப் பொருள்களாகவும் காட்சியளிக்கின்றன. இத்தகைய கிளிக்கூடுகள் கோட்டையின் கிழக்குப் பக்கத்தில் முப்பத்து மூன்றும், தெற்கில் இருபதும், மேற்கில் பதினெட்டும், வடக்கில் பதினறுமாக எண்பத்தேழு கூடுகள் அமைந்திருக்கின்றன.

வெளிப்புறச் சுவரில் மற்றுமொரு பெரிய பாதுகாப்பாகப் பிதுக்கங்கள் அமைந்திருக்கின்றன. இவை மூலைப்பகுதிகளில் மிகப் பெரிய அளவில் அகழிக்கு உள்ளே நீட்டிக்கொண்டிருக்கின்றன. இப்பிதுக்கங்கள், அகழியில் இறங்கும் பகைவரை மிகச்சுலபமாக நெருங்கித் தாக்குவதற்கு ஏற்றதாக இருக்கின்றன. இப்பிதுக்கங்களிலும் மிகுதியாகக் கிளிக்கூட்டு அலங்கங்கள் காணப்படுகின்றன். இப்பிதுக்கங்கள் மூலைப் பகுதிகளில் மிகப் பெரிய அளவிலும் மற்ற இடைப்

பகுதிகளில் சற்றுச் சிறு அளவிலும் காணப்படு கின்றன. இத்தகைய பிதுக்கங்களில் மிகப் பெரும் பாலானவை வட்டமாகவும், சிறுபான்மையான சதுர மாகவும் அமைந்துள்ளன. இத்தகைய பிதுக்கங்கள் கிழக்கில் ஏழும், தெற்கில் மூன்றும், மேற்கில் நான் கும், வடக்கில் ஆறுமாக இருபது பிதுக்கங்கள் காணப் படுகின்றன. தெற்குப் பகுதிச் சுவரும் மேற்குப் பகுதிச் சுவரும் பகைவர்களின் தாக்குதலுக்கு உட் பட்டு, அலங்கம் முதலியவை ஓரளவு அழிபாடுற்றிருக் கின்றன. மற்ற பகுதிகள் சிறிதும் கெடாது நல்ல நிலையில் காணப்படுகின்றன. வெளிப்புறச் சுவரின் உட்பகுதியிலிருந்து அகழிக்கு இறங்க கிழக்குப் பகுதி யில் இரண்டும், வடக்குத் தெற்கு மேற்குப் பகுதிகளில் ஒவ்வொன்றுமாகத் திட்டி வாயில்கள் (சிறு வழிகள்) இருக்கின்றன.

அதை அடுத்துக் கோட்டையின் இரண்டாவது சுவர் எழுப்பப் பெற்றிருக்கிறது. இச்சுவர் தான் கோட்டையின் முக்கிய பாதுகாப்பாக விளங்கும் சுவராகும். இச்சுவருக்கும், வெளிச்சுவருக்கும் சுமார் 40 அடி இடைவெளியிருக்கிறது. இச்சுவரும் மிகச் சிறந்த கற்களால் இரட்டைச் சுவராக 50 அடி உயரமும் 30 அடி அகலமும் கொண்டதாக அமைந்திருக்கிறது. மேற் சுவரின் மேற்பகுதி, முன்பக்கம் சற்றுச் சரிவாக வும் பின்னே உயர்ந்தும், முக்கோணமும் நீண்ட முக்கோணமுமான வடிவங்கொண்ட மூன்றடி உயரத் திட்டுகளைக் கொண்டதாகக் காட்சி யளிக்கிறது. அதைச் சேர்ந்தாற்போல்தான் சுவரின் மூன்றும் பகுதி யான இராம பாட்டை அமைந்திருக்கிறது. மதிற்

சுவரின் இரண்டாம் பகுதியிலும், மூலைப்பகுதிகளில் வட்டப் பிதுக்கங்கள் அமைந்திருக்கின்றன. இக் கனமான சுவற்றின்மீது மழை பெய்யும்போது தண்ணீர் தேங்கிச் சுவரைக் கொடுத்துவிடாதிருக்க மேற்பகுதி சுண்ணும்புக் காரையால் பூசப்பட்டிருப்ப தோடு, சுவர்களின் இடைப்பகுதிகளில் நீர்க்கழிவுக் கானப் பள்ளங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இம் மேற் பகுதியைப் பிற்காலத்தில் இக்கோட்டைக்குவந்து சேர்ந்த எஞ்சினீயர்கள் கட்டியிருக்கலாமென்று கருதப் படுகிறது. இத்தகைய பள்ளங்கள் மதிலின் முற் பகுதிச் சுவர்களிலும் அமைக்கப்பட்டுள்ளன.

இராமபாட்டை :

இனி மதிற் சுவரின் மூன்ரும் பகுதியாகிய இராம பாட்டையைப் பற்றிக் கவனிப்போம். இராமப்பாட்டை, கோட்டையின் உட்பகுதியிலிருந்து சுமார் 15 அடி உயரமுள்ளதாய் அமைந்திருக்கிறது. கோட்டையின் உட்பகுதியிலிருந்து கோட்டை மதிலின் மேலிடங்களுக் குச் செல்ல அங்கங்கே படிக்கட்டுகள் அமைந்திருக் கின்றன. இப்பாதை சுமார் 20 அடி அகலம் கொண்ட தாக அமைந்திருக்கிறது. இப்பாதை ஒரே மட்டமாக இருப்பது போர்க் கருவிகளையும்—வேறு தளவாடங் களையும்—போர்க்காலங்களில் போரிடும் வீரர்களுக்குக் கொடுப்பதற்கு வண்டிகளில் ஏற்றிச் செல்வதற்கு ஏற்றவாறு உள்ளது. இரண்டாவது மதில் பத்தடி அகலமுள்ள சுவரின் மறைவில் பாதுகாப்பாகப் பகைவரறியாமல் ஆட்கள் சென்று வருவதற்கு ஏற்ற தாக இப்பாதை அமைந்திருக்கிறது.

இப் பகுதியின் வடகிழக்கு மூலையில் பெரியதொரு உயர்ந்த அலங்கம் விளங்குகிறது. தற்போது இராம பாட்டையின் தென்மேற்கு மூலைத்திட்டில் கொடிக் கம்பம் ஒன்று காட்சியளிக்கின்றது.

### கோட்டையும் கோவிலும் :


கோட்டையின் உட்பகுதி முற்காலத்தில் நான்கு மாடவீதிகள் கொண்டதொரு நகரமும், ஜலகண்டேசுரர் கோவிலும் அதற்கு எதிரில் ஒரு பெரிய குளமும் கடை கண்ணிகளும் உடையதாக விளங்கிற்றும். ஆனால், தற்போது சிற்சிலக் கட்டிடங்களும் கோவிலும் மட்டும்தான் காணப்படுகின்றன. குளம் இருந்த சுவடே காணப்படாமல் மறைந்து, அவ்விடத்தில் தற்போது விளையாட்டு மைதானம் இருப்பதாகக் கூறப்படுகிறது. கி. பி. 16-ஆம் நூற்றுண்டின் பிற் பகுதியில் விஜயநகர ஆட்சிக்குக் கீழ்ப்பட்ட வேங்கடாத்திரி என்னும் சிற்றரசன் வேலூர்க் கோட்டையில் வாழ்ந்து வந்தான் எனவும், அவன் சிற்பம், சித்திரம், சங்கீதம், தத்துவம் முதலிய கலைகளில் விருப்பமுடையவனு யிருந்தானென்றும் அவனது காலத்தில் கோவிலும் கோட்டையும் பெருமையோடு விளங்கின எனவும் விஜயநகர சாம்ராஜ்யத்தின் அழிவால் அச்சிற்றரசன் இறந்தானென்றும், அவனுக்குப்பின் கோவிலும் கோட்டையும் பொலிவிழந்தன என்றும் கூறப்படுகிறது.

### ஜலகண்டேசுவரர் கோவிலும் சிற்ப வேலைப்பாடும் :

கோட்டையின் உட்பகுதியின் வடக்குப்பக்கத்தில் உட்கோட்டையாக அமைந்திருக்கும் ஜலகண்டேசுரர்

கோவிலைப் பற்றி இனி அறியத்தொடங்குவோம். கோட்டையின் உட்பகுதியைவிடக் கோவில் இருக்கும் மட்டம் தாழ்ந்து உள்ளது. கோவிலில் உள்ள இலிங்கம் மூர்த்தம் நீரில் அமைந்திருந்ததால் ஜல கண்டேசுரர் என்று பெயர் பெற்றது. தென்புறம் நோக்கி இருக்கும் இக்கோவிலுக்கு மற்ற கோவில் களைப் போலவே, சுற்றுப் பிரகாரம், மதில் முதலியன அமைந்திருக்கின்றன. இக்கோவிலின் மேற்குப் பக்கத்தின் முற்பகுதியில் அமைந்திருக்கும் கலியாண மண்டபம் மிக அரிய வேலைப்பாடமைந்த சிற்பச் சிறப்பு வாய்ந்ததாக விளங்குகின்றது. அதிற்காணும் ஒவ்வொரு தூணும், கூரையும், மேலிடங்களும் அதி அற்புதமான சிற்றுளி வேலைகளால் நிரம்பப் பெற்றிருக்கின்றன. பேரழகு வாய்ந்த ஒற்றைக்கல் சிற்பங்களாகிய தூண்களைக் கொண்ட மண்டபத்தின் மத்திய பகுதி, பல பருமனுள்ள தூண்களால் தாங்கப் படுகிறது. தூண்களை இணைக்கும்படியான பகுதி களிலே அழகு வாய்ந்த கோலங்கள் செதுக்கப் பட்டுள்ளன. நடுவில் அமைந்திருக்கும் ஐந்து தூண் களும் அவற்றைச் சேர்ந்த நான்கு வரிசை மேற் கூட்டுகளும் ஒரே கல்லால் ஆனவை. ஒரு சிறிதும் உடைசலோ விரிசலோ இன்றி, இவ்வேலையை நிறைவேற்றியது மிகுந்த ஆச்சரியத்துக்குரியதாக இலங்குகிறது. மண்டபத்தின் மேற்பகுதியில் செதுக்கப்பட்டுள்ள வேலைப் பாடுகள் மனதைக் கவர்வனவாயுள்ளன.

மண்டபத்தின் முன் பகுதியிலும், இரண்டாம் பகுதியிலும் ஐந்தடுக்காகவும் நான்கடுக்காகவும் விரிந்த தாமரை மலரின் இதழ்களின் மேல் கிளிகள்




கலியாணமண்டபத்தின் வெளித்தோற்றம்

நேராகவும் தலைகீழாகவும் அமர்ந்து மூக்காலும், கால்களாலும் இதழ்களைப் பற்றி மலரைத் தாங்கிக் கொண்டிருப்பனவாகச் செதுக்கப் பட்டிருக்கிறது. மற்றும், அம்மேற் கூட்டின் மூலைகளில் கல்லாலான வளையங்கள் இரண்டு மூன்று அடுக்குகள் தொங்கு கின்றன. இவற்றைக் காண்போர் எவரும் வியப்புரு மலிருக்க முடியாது. ஆமையால் சுமக்கப்பட்டிருப்பது போன்று மண்டபத்தின் மேற் பகுதி மேடை செதுக்கப்பட்டிருக்கின்றது. மற்றும் அம்மண்டபத்தின் வெளியே சுமார் நான்கடி உயரமும் மூன்றடி அகலமும் கொண்ட இரண்டு பெரிய கல் தொட்டிகள் தேங்காய் ஓட்டைப் போல, ஓரங்குல கனத்தில் செதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. கோவிலின் பிரகாரத்தின் வடமேற்கு மூலையில் ஆபத்துக் காலங் களில் தப்பிச் செல்வதற்கான தொரு சுரங்க வழியும் அமைக்கப் பட்டிருக்கிறது. கோவிலின் உட்பகுதி சாதாரணமான வேலைப்பாடுகளோடுதான் விளங்கு கிறது. தற்போது இக்கோவிலின் மூலத்தானத்தில் இலிங்கப் பிரதிட்டையோ வேறு மூர்த்திகளோ கிடையா. மற்றும் பூசனை, திருவிழா முதலிய எவ்வித நிகழ்ச்சிகளும் இருப்பனவாக அறியக்கூடவில்லை. பகையரசர்களின் படையெடுப்பால் இக்கோவில் பாழ் பட்டுள்ளதென்றே கூறவேண்டும்.

இக்கோவிலின் வெளிப்புறத்தே மிகச் சிறந்த வேலைப்பாடமைந்த இரண்டு துவார பாலகர்களின் சிலைகளும் இரண்டு பெரிய பீரங்கிகளும் உள்ளன. இக்கோவிலின் முற்பகுதியில் இருக்கும் பெரிய கோபுரம் சற்றுப் பழுதுபட்டுக் காணப்படுகிறது.

இக்கோவிலின் கலியாண மண்டபத்தில் காணப்படும் சிற்பங்கள் மதுரை மீனுட்சியம்மன் கோவிலில் காணப்படும் விஜயநகர மன்னர்களின் காலத்திய சிற்பங்களோடு ஒத்தனவாக இருக்கலாமென்று அறிஞர்கள் கருதுகின்றனர். கலியாண மண்டபத்தின் சிறந்த சிற்ப வேலைப்பாடுகளைக் கண்ட ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியார் இம்மண்டபத்திற்காணும் சிற்ப வேலைபாடுகளமைந்த பகுதிகள் முழுவதையும் பெயர்த்து இங்கிலாந்துக்கு எடுத்துச் செல்ல விரும்பினுர்கள் என்றும், அவர்கள் அவற்றை எடுத்துச் செல்வதற்காக ஏற்பாடு செய்திருந்த கப்பல் எதிர் பாராத வகையில் மூழ்கிவிட்டதால் அவர்களது எழுச்சி தளர்ந்து விட்டதென்றும் கூறப்படுகிறது.

**கோட்டையையும் கோவிலையும் பற்றிய வரலாறு:**

இக்கோட்டையும் கோவிலும் பொம்மி ரெட்டி என்பவனுல் கட்டப்பட்டன என்று கூறப்படுகிறது. பொம்மி ரெட்டி, கிருஷ்ணு நதிக்கரையில் உள்ள பத்திராசலம் என்னும் ஊரைச் சேர்ந்தவன். இவனது தகப்பன் யாதம நாயுடு என்பவன். அவனுடன் பிறந்தவர்கள், பொம்மி ரெட்டியையும் அவன் சகோதரன் திம்மி நாயுடு என்பவனையும் கொன்று, பொருள்களைக் கைப்பற்றத் திட்டமிட்டனர். அவர்கள் எதிரிகளிடமிருந்து தப்பித் தங்கள் தாய்நாட்டை விட்டுத் தெற்கு நோக்கிப் புறப்பட்டனர். இராமேசுரம் மற்றும் பல புண்ணிய தலங்களுக்கு யாத்திரை சென்று வரும் வழியில் வேலூரின் சுற்றுப்புறம் அவர்களைக் கவர்ந்தது. அங்கேயே அவர்கள் தங்கிவிட விரும்பி, வேலூருக்குத் தெற்கே ஐந்து

மைல் தூரத்திலுள்ள கைலாசப்பட்டினம் என்னும் ஊரில் வாழ்ந்த இராஜா கரிகாலச் சோழனிடம் அங்குக் குடியேற அனுமதி வேண்டினர். கரிகாலச் சோழனிடம் குடியேற அனுமதி பெற்ற அவர்களிருவரும் அங்குத் தங்கித் தமது கால்நடைகளை வளர்த்துப் பெருக்கிப் பெருஞ் செல்வரானுர்கள்.

ஆரணியை ஆண்டு வந்த ஒரு சிற்றரசன் அவர்களை ஒரு முறை தாக்கிப் படுதோல்வி யடைந்தான். இதனுல் மகிழ்ந்த கரிகாலன் பொம்மி ரெட்டிக்குப் பல பரிசுகளும் உரிமைகளும் வழங்கினுன். இவ்வாருக மேனிலை எய்தியவனே பொம்மி ரெட்டி. இவன் கோயில் கட்டியதற்கு வேறு வேறு வரலாறுகள் வழங்கி வருகின்றன. வேட்டையின் பொருட்டு நாயுடன் சென்ற பொம்மி ரெட்டி, தன் நாய் முன் செல்ல ஓர் முயலைத் துரத்திச் சென்ருனும். அம்முயல் நாயிடமிருந்து தப்ப ஓர் எறும்புப் புற்றைச் சுற்றிச் சுற்றி வந்ததாம். அச்சமயம் "இந்த எல்லையில் ஒரு கோயில் கட்டுவாயாக" என்று அசிரீரி கூறிற்ரும். அதன்படி கோயில் எழுப்பினுன் என்று கூறுகிறது ஒரு கதை. மற்ருெரு கதை பின்வருமாறு கூறுகிறது. பொம்பி ரெட்டியிடம் ஓர் பசு இருந்ததாம். அதற்கு ஐந்து பால் காம்புகள் இருந்தனவாம். அது அருகேயுள்ள ஒரு நீர்க்குளத்தின் இடையே இருந்த ஓர் புற்றில் வாழ்ந்து வந்த ஐந்துதலை நாகப்பாம்பிற்குப் பாலூட்டிற்ரும். அப்பாம்புருவில் பாலருந்திய சிவபெருமான் பொம்மி ரெட்டியின் கணவில் தோன்றி ஒரு புதையலை அவனுக்குக் காட்டி, அதைக் கொண்டு ஒரு கோயில் எழுப்பக் கட்டளையிட அதன்படி கோவில் கட்டினுன் எனக் கூறுகிறது.

முடிவு:

இவ்வாறுகத் தோன்றிய அழகிய இக்கோவிலில் பூசனை கிடையாது. இங்ஙனம் அமைந்துள்ள இக் கோட்டையுள் மன்னன் வாழவில்லை. ஆனால் இங்குப் போலீசுப் படையினர் பயிற்சிசாலை ஒன்றும் கோட்டை யின் தென்கிழக்குப் பகுதியில் சிறியதொரு சிறைக் கூடமும் இன்று இருக்கின்றன.

## 4. செஞ்சிக்கோட்டை

தமிழ் நாட்டின் பழங்காலக் கோட்டைகளுள் செஞ்சிக்கோட்டையும் ஒன்று. இது தென்னார்க்காடு மாவட்டத்தின் வடமேற்குப் பகுதியில் செஞ்சி எனப் பெயர் பூண்ட தாலூக்காவிலுள்ளது. செஞ்சியாற் றின் கரைக்கு மேற்கே ஒரு மைல் தூரத்தில் இக் கோட்டை விளங்குகிறது. இக்கோட்டை முக்கோண வடிவில் மூன்று குன்றுகளுக்கு நடுவே ஆயுத எழுத் தைப்போன்று அமைந்திருக்கிறது. இம்மூன்று குன்றுகளும் வலிய கருங்கற் சுவற்களால் இணைக்கப் பட்டிருக்கின்றன. இச்சுவர்களின் அகலம் அறுப தடியும், இருபது முதல் இருபத்தைந்தடி உயர முள்ளனவாகவும் இருக்கின்றன. மதிலின் அருகே ஆழ்ந்தகன்ற அகழி ஒன்றும் காணப்படுகிறது. இதன் அகலம் எண்பதடியாகும். கோட்டையின் வெளிச் சுற்றளவு சுமார் இருபத்துநான்கு மைல். உள் கோட்டை மூன்றுமைல் சுற்றளவுடையதாகும். இந்த இரண்டு கோட்டைகளுக்கும் கோட்டை வாயில் களிருந்தன. தற்போது வெளிக்கோட்டையின்


வாயில்கள் அடைக்கப்பட்டு விட்டன. இப்பொழுது இருப்பவை இரண்டு வாயில்கள் தான். அவை திண்டி வனத்திலிருந்து திருவண்ணாமலைக்குச் செல்லும் பாதைக்காக மதிலை இடித்து அமைக்கப்பட்டிருக் கின்றன. அவற்றின் வழியாகத்தான் இப்போது கோட்டைக்குப் போக முடியும். உள் கோட்டையி லிருந்த இரண்டு வாயில்களும் இன்னும் அப்படியே இருக்கின்றன. அவற்றில் வடக்கிலுள்ளது ஆர்க் காட்டு வாயில் அல்லது வேலூர் வாயில் என்றும், கிழக்கிலுள்ளது புதுச்சேரி வாயில் என்றும், அங்குள்ள மக்கள் வழங்கி வருகின்றார்கள்.

இம்மூன்று குன்றுகட்கும் இடையே முக்கோண வடிவமான நிலப்பரப்புள்ளது. இது சுமார் மூன்று மைல் சுற்றளவுள்ளது. இங்குள்ள கோட்டையைத் தான் கீழ்க் கோட்டை என்று கூறுவார்கள். கீழ்க் கோட்டைக்குள் இருக்குங் குன்றுகளுள் ஒன்று வடக் கிலும் மற்றொன்று தெற்கிலும் வேறொன்று மேற்கிலு மாக அமைந்துள்ளன. வடபாலுள்ளது கிருஷ்ணகிரி எனவும் தென்பாலுள்ளது சந்திராயன் துர்க்கம் என வும் மேற்பாலுள்ளது இராஜகிரியெனவும் பெயர் பெறும். இராஜகிரிக்குத் தெற்கிலுள்ள சிறிய குன் றைச் சக்கிலி துர்க்கம்—சங்கிலி துர்க்கம் என்றும் கூறுவர். இவற்றுள் மிகப் பெரியதும் சிறந்ததும் இராஜகிரியேயாகும்.

**இராஜகிரி :**

இராஜகிரி சுமார் தொள்ளாயிரத்தெழுபதடி உயரமுள்ளது. இக்குன்றின் வடபகுதி நேருயர் நெடுவரை என்று கூறத்தக்கவண்ணம் செங்குத்தாய்

அமைந்துள்ளது. இக்குன்றைச் சுற்றிக் கீழ்க் கோட்டையினுள் காப்புச் சுவர்கள் வலுவாக்கப் பட்டுள்ளன. எனவே, இதைக் கீழ்க்கோட்டையினுள் அமைந்திருக்கும் உட்கோட்டையென்று கூறலாம். இராஜகிரியின் மேலே ஏறி உச்சியை அடைவதற்கு உட்கோட்டையின் வழியாக ஒரே வாயில்தான் அமைந்திருக்கிறது. இவ்வாயில் உட்கோட்டையின் பகுதியில் கிழக்கு நோக்கியுள்ளது. இவ்வாயிலிலிருந்து வரிசையாகக் கட்டப்பட்டுள்ள சுவர்களின் நடுவே மேலேறிச் செல்லுவதற்குப் படிகள் அமைக்கப் பட்டிருக்கின்றன. இப்படிகளின் வழியாகக் குன்றின் பாதி உயரத்தைக் கடந்துவிட்டால் கொஞ்சம் சமநிலங் காணப்படுகிறது. இச்சம நிலத்தில் ஒன்றிரண்டு மரங்களும் புற்றரைகளும் காணப்படுகின்றன. இராஜகிரியைக் காணச் செல்லுவோர் இங்குச் சிறிது நேரம் தங்கி, இளைப்பாறிச் செல்ல வாய்ப்புடையதா யிருக்கிறது. இதற்கு மேலுள்ள பகுதி மிகவும் செங்குத்தாயிருப்பதால் ஏறிச் செல்வதற்கு மிகவும் கடினமானதாக இருக்கிறது. இங்கிருந்து பாதை வளைவாகத் தொடங்கி மேல்புறமாகச் சென்று, பின்னர் வடபுறம் உயரச் செல்லுகிறது. இப்பாதை மேலிடத்தில் சமதளமுள்ள ஒரு பாறைவரை சென்று முடிகிறது. இப்பாறைக்கும் இராஜகிரியின் உச்சிக்கும் இடையில் சுமார் நாற்பதடி அகலமுள்ள பிளவு ஒன்று மலையின் அடிப்பகுதி வரைக்கும் காணப்படுகின்றது. மூன்று புறங்களிலும் ஏறமுடியாத பாறைகள் நிறைந்த பாதுகாப்புடைய இக்குன்றின் நான்காம் பக்கத்தில் செங்குத்தான மலைப்பிளவு ஒன்றை இயற்கை யகழியாகக் கொண்டிருக்கிறது. இந்தப்



செஞ்சிக்கோட்டையின் தோற்றம்

பிளவு இருபத்து நான்கடி அகலமும், அறுபதடி ஆழமும் உடையது கோட்டையை ஆண்டு வந்த மன்னர்கள் அவ்வகழியை மேலும் மேலும் ஆழமாக்கி விட்டனர். இப்பிளவினை இரும்புப் பாலத்தின் உதவி யால் கடந்து வந்தார்களென்றும், அப்பாலம் பழுது பட்டமையான் தற்போது மரப்பாலம் அமைத்திருக் கிறார்கள் என்றும் தெரிகிறது. இதைக் கடந்தால் இராஜகிரியின் உச்சியிலுள்ள கோட்டை வாயிலை அடையலாம்.

இராஜகிரியின் வடக்குப்பாகம் செங்குத்தாய் அமைந்துள்ளதெனக் கூறினோம். கிழக்குப் பகுதியும் தெற்குப் பகுதியுங்கூட உச்சியிலிருந்து நானூறடி உயரம் கீழ்நோக்கிச் செங்குத்தாக அமைந்துள்ளது. அதற்கு அப்பால் சமநிலம்போல நூற்றைம்பதடி அகலம் பிதுக்க முற்றும், அங்கிருந்து தரை வரையில் சரிவுற்றும் அமைந்திருக்கிறது. பிதுக்கமுற்று விளங்கும் இச் சமநிலத்தை இம்மலையின் பீடபூமிப் பாகமாகக் கொள்ளலாம். பீடபூமியின் ஓரங்களில் உயர்ந்த கருங்கற் சுவர்கள் எழுப்பப்பெற்றுள்ளன. உட்கோட்டையிலிருந்து இப் பீடபூமி பாகம் வரையில்தான் எளிதாக ஏறுவதற்குப் படிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இப்படிகள் செல்லும் மார்க்கத்தில் இடையிடையே பத்துச் சிறு மண்டபங்கள் அமைந்து உள்ளன. படிகளின்மீது ஏறிப் புளிய மரங்கள் நிறைந்த பீடபூமிப் பாகத்தை அடைந்த உடனே அதன் கீழ்ப்பகுதியில் அழகிய ஒரு சிறு கோவிலைக் காணலாம். அதை அரங்கநாதர் கோவிலென்று கூறுகின்றனர். ஆனால் அதில் உருவச் சிலை ஒன்றும் இல்லை.

அரங்கநாதரது கோவிலுக்கு மேற்கே சென்ருல், துர்க்கைக்குரிய சிறிய கோவில் ஒன்று இருக்கிறது. இதைக் கமலக்கன்னி அம்மன் கோவிலென்று கூறுகின்றனர். கோட்டையின் மற்ருெரு பகுதியில் செஞ்சியம்மன் என்னும் ஒரு கன்னித் தெய்வத்தின் கோவிலிருக்கிறது. இந்தத் தெய்வத்தின் பெயர்தான் இக் கோட்டைக்கும் இந் நகரத்திற்கும் பெயராக அமைந்துள்ளதென்று கூறுகின்றனர். இக் கோவிலின் முன்னர், பெரியதொரு பாறையிருக்கிறது. அப்பாறையின்மீது வில், வாள், அம்பு, எருமைத்தலே, ஆட்டுத் தலே, மனிதர் தலே முதலிய வடிவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இவ்வம்மனுக்கு இத்தகைய உயிர்ப்பலிகள் கொடுக்கப்பட்டு வந்தன என்பதை இவை குறிக்கின்றன என்று கூறுகின்றனர். கோட்டையில் இத்தகைய பெண் தெய்வங்களின் கோவில்கள் ஏழு இருக்கின்றன. கமலக்கன்னியம்மன் கோவிலேக் கடந்து சிறிது தூரம் மேற்கே செல்லின், இரண்டு பெரிய பாறைகளின் கீழே ஒரு சுனே இருக்கிறது. அச் சுனேயிலுள்ள நீர் மிகக் குளிர்ந்த தாகவும் சுவை மிகுந்ததாகவுமிருக்கிறது. இச் சுனேயின் தென்பகுதியிலும் சில மண்டபங்கள் பாழடைந்து கிடக்கின்றன. சுனேயைக் கடந்து மேலும் மேற்கே சென்ருல், பீடபூமிப் பகுதி அகலம் குறைந்து இராஜகிரியின் செங்குத்தான பாகத்தை அடைகிறது. அப்பாகம் சிறிது அகன்று, சமநிலம் போல் அமைந்திருக்கிறது. அங்கும் ஓர் அழகிய கோவில் இருக்கிறது. அதிலும் கடவுளின் சிலே காணப்படவில்லே.


அதற்கு மேற்கில் உயர்ந்த நீளமான ஒரு மண்டபம் கட்டப்பட்டிருக்கிறது. அதைக் கொலு மண்டபம் என்றும் சங்கீத மண்டபம் என்றும் சொல்லு கிருர்கள். அதனுட்சென்று பேசினுலும் பாடினுலும் அதிலிருந்து உண்டாகும் எதிரொலி, மிகுந்த வியப்பை உண்டாக்குகிறது. அவற்றின் வடபகுதி யில் கொடிமரம் நிற்கும் கட்டிடமும் தெற்கில் மணிக் கூண்டு போன்றதொரு கம்பமும் காணப்படுகின்றன. மணிக்கூண்டின் தென்புறமாகச் சிறிது தாழ்ந்த இடத்தில் சிறுமண்டபம் ஒன்றில் ஏழடிச் சுற்றளவும் பதினேரடி நீளமுள்ள ஒரு பெரிய பீரங்கி காணப்படு கிறது. இவற்றைத்தவிர, அச்சிகரத்தின் மேற்குப் பகுதியில் ஆழ்ந்த நிலவரையுள்ள பெரிய கட்டிடம் ஒன்றும் காணப்படுகிறது. அது பொக்கிஷசாலே என்று கூறப்படுகின்றது. சில பாறைகளின் நடுவே ஆழ்ந்த, நீர்நிறைந்த இரண்டு சுனேகள் காணப்படு கின்றன. அங்குள்ள கட்டிடங்கள் எல்லாம் மிகவும் உறுதி வாய்ந்தவையாய்ச் சுவற்றின் பழமையை உணர்த்தி நிற்கின்றன.

இத்தகைய அரிய காட்சிகளேக் கண்டு கீழே இறங்கினுல், முற்கூறிய உட்கோட்டையை அடைய லாம். அங்கு அழிந்தவைபோக எஞ்சியுள்ள பல சின்னங்கள் காணப்படுகின்றன. யானேகள், குதிரை கள் முதலியன கட்டுமிடங்கள், போர்வீரர்களின் உறைவிடங்கள், மிகப் பெரிய தானியக் களஞ்சியங்கள் உடற்பயிற்சி மண்டபங்கள் முதலிய பல கட்டிடங்கள் காண்பவர்களின் கண்களேக் கவரும் வண்ணம் காட்சியளிக்கின்றன. அவற்றுள், தானியக் களஞ்சியம் 28 அடி நீளமும் 18 அடி அகலமும் 39 அடி உயரமும்

உடைய மூன்று அறைகளேயுடையதாய் விளங்குகின்றது. இக் களஞ்சியத்தின் சுவர்கள் ஐந்தரை அடி அகலமுடையது. இக்களஞ்சியத்தை அடுத்தாற்போல் மிகப் பெரியதொரு சிலம்ப மண்டபமுள்ளது. இதன் கீழ்ப்புறத்தில்தான் அரசர் நீராடும் மண்டபம் இருந்தது எனக் கூறுகின்றனர். இப்போது அவ்விடத்தில் வழவழப்பாகச் செதுக்கப்பட்ட இரண்டு பாறைகள் காணப்படுகின்றன. அவற்றையடுத்துப் போர்வீரர்களின் பாசறைகள் இருக்கின்றன.

இவற்றிற்குக் கிழக்கே எண்பதடி உயரமும் நாற்கோண வடிவமும் உடைய ஏழடுக்குகளேப் பெற்ற கலியாணமகால் என்ற ஒரு கட்டிடத்தையும் காணலாம். அது நான்கு பக்கங்களிலும் திறப்பிடங்களேக் கொண்டு, மிக அழகாகவும் புதுமையாகவும் விளங்குகின்றது. இம்மகாலேச் சுற்றிப் பல பெரிய அறைகளுள்ள கட்டிடங்கள் உள்ளன. அரசியார் இங்குதான் வசித்தனராம். இவ்விடத்திற்குச் சக்கரக்குளத்திலிருந்து மட்குழாய்களின் வழியாகத் தண்ணீர் கொண்டுவரப்பட்டது. சக்கரக் குளத்தின் அருகிலேயே செட்டிகுளமும் இருக்கின்றது. இவ்விரு குளங்கட்குமிடையே பெரியதொரு அநுமான் உருவச்சிலே யொன்றும் காணப்படுகிறது. செட்டிகுளத்திற்கு வடக்கே மேடையொன்றுண்டு. அங்கேதான் தேசிங்கின் உடல் கொளுத்தப்பட்டதென்று கூறுகின்றனர்.

இவற்றையெல்லாம் கண்ணுற்றபின், கிழக்கிலுள்ள உட்கோட்டையின் வாயிலேக்கடந்து வெளியேயுள்ள கீழ்க்கோட்டைக்கு வருவோமாயின்,



கல்யாணமகால்

அதன் நேர் கிழக்கில் சாதுல்லாவின் மசூதியும் அதன் தென்பாரிசத்தில் சந்திராயன் துர்க்கத்தி னடுவில், சிதைவுற்று விளங்கும் வேங்கடரமண சுவாமியின் ஆலயமும் காணப்படுகின்றன. இக் கோவில் தற்பொழுது விக்கிரகமின்றிப் பாழ்பட்ட நிலையிலுள்ளது. இங்கிருந்த வேலைப்பாடு மிகுந்த கற்றூண்கள் பிரஞ்சுக்காரர்களால் எடுத்துச் செல்லப்பட்டு புதுவையிலுள்ள 'டியூப்ளே' சிலையின் முன் நாட்டப்பட்டுள்ளன. கீழ்க்கோட்டைக்கு வெளியே ஒருகல் தொலைவில் பாழடைந்த நிலையில் வேலைப்பாடுகளமைந்திருந்த பட்டாபிராம சுவாமி கோவிலொன்றும் காணப்படுகிறது.

கிருஷ்ணகிரி :

இக்குன்று இராஜகிரியைவிடச் சிறியது. இக் குன்றின்மீது ஏறிச்செல்ல ஒழுங்கான படிக்கட்டுகள் இருக்கின்றன. இங்கே செங்கற்களாலான மசூதி போன்ற சிகரத்தையுடைய அழகிய கொலுமண்டபம் ஒன்றிருக்கிறது. மேலும், இங்குக் கருங்கற்களா லமைக்கப்பட்ட இரண்டு தானியக் களஞ்சியங்களும் எண்ணெய்க் கிணறும் காணப்படுகின்றன. இங்கும் விக்கிரகமில்லாத ஒரு அரங்கநாதராலயம் உண்டு. இம்மலையின்மீதும் நல்ல நீர்ச்சுனையொன்றுண்டு. சந்திராயன் துர்க்கம் இவ்விரு குன்றுகளைப்போல் குறிப்பிடத் தகுந்த சிறப்புடைய்யதல்ல. இராஜகிரியில் அரசன் தன் குடும்பத்துடன் தங்கியிருந்தான் என்றும், கிருஷ்ணகிரியில் கொலுமண்டபத்திலிருந்து அரசியல் அலுவல்களைக் கவனித்து வந்தான் என்றும் தெரிகின்றது.

**கோட்டையின் வரலாறு :**

சரித்திரச் சிறப்புப்பெற்ற இடங்கள் பலவற்றுள் செஞ்சிக் கோட்டையும் ஒன்று. இக்கோட்டையை ஆதியில் சேரரும், சோழரும் ஆண்டு வந்தனர். பத்தாம் நூற்றுண்டில் சோழவரசர்களில் ஒருவனுன ஆதித்த சோழன் என்பவன் வடக்கே பாலாற்றங் கரைவரை ஆண்டான். அப்போது செஞ்சியும் சிங்க புரம் என்ற பெயரால் அவன் ஆட்சிக்குட்பட்டிருந் தது. அதன் பின்னர், பல்லவமன்னர்கள் சிறிது காலம் அக்கோட்டையை ஆண்டு வந்தனர்.

கி. பி. 1209இல் ஆண்டு செஞ்சியின் கோட்டை கொத்தளங்கள் திறம்பட அமையலாயின. ஆனந்தக் கோன் என்பான் செஞ்சிக்கருகிலுள்ள தேவனூர், மேலச்சேரி, ஜெயங்கொண்டான் ஆகிய இடங்கட்குத் தலைவனுக விளங்கினுன். அவன் செஞ்சியில் கோட்டையொன்று கட்டி, அவ்விடத்திற்கு ஆனந்த கிரி என்ற பெயருஞ் சூட்டினுன். அதன்பின், செஞ்சி கி. பி. 1240இல் யாதவகுல மன்னனுன கிருஷ்ணக் கோன் என்பானுக்குரியதாயிற்று.

கிருஷ்ணக்கோன் திருமாலை உள்ளன்போடு குல தெய்வமாக வழிபடுவனுதலின் செஞ்சியின் வடபாலுள்ள குன்றில் அரங்கநாதராலயம் ஒன்றைக் கட்டினுன். அக்குன்றுக்குக் கிருஷ்ணகிரி என்ற பெயரும் இவனுலேயே ஏற்பட்டது. மதிற் சுவர் களும், கோவில்களும், பல உயர்ந்த கட்டிடங்களும் இவன் காலத்தில் நன்னிலையில் அமைக்கப்பட்டன. இங்ஙனம் கிருஷ்ணக்கோன் ஆட்சியில் செஞ்சிக்

கோட்டை பல்வகைச் சிறப்புக்களையும் பெற்று விளங்கிற்று.

அதன் பின், முறையே கோனேரிக்கோன், கோவிந்தக்கோன் என்பவர்கள் செஞ்சிக்கோட்டையை முறையாக ஆண்டுவந்தனர். இவர்கள் கோட்டை கொத்தளங்களைப் பலவகையிலும் அழகு படுத்திக் கோபால சுவாமி ஆலயம் ஒன்றையும் கட்டினர். இவர்கட்குப்பின் புளியக்கோன் என்பவன் அரசனானன். சத்திரம், சாவடி, குளம் முதலியவற்றை ஏற்படுத்தினன். இவ்வாறு செஞ்சிக் கோட்டை கி. பி. 1330 வரை யாதவ குல மன்னர்களாகிய கோனர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. இவர்களையடுத்துக் குறும்பர்கள் என்னும் ஒரு வகையினர் சில ஆண்டுகள் செஞ்சியை ஆண்டுவந்தனர்.

விசயநகர மன்னர்கள் தென்னாட்டில் வலுவடைந்து வந்தபோது, செஞ்சிக் கோட்டையைக் கைப்பற்றிக்கொண்டனர். அக்காலத்தில் பீஜப்பூர் சுல்தான் தன் ஆட்சியை விரிவாக்க எண்ணினர். அவரிடம் ஷாதி என்ற மகாராட்டிரவீரர் படைத் தலைவராக விளங்கினர். இவர் அஞ்சா நெஞ்சம் படைத்த வீரர். போரில் பகைவர்களை முறியடிப்பதில் நிகரற்றவர். பீஜப்பூர் சுல்தானுக்காகத் தென்னாட்டைக் கைப்பற்ற ஷாதி பல்வகைப் படைகளோடும் புறப்பட்டார். ஷாஜி தன் போர்த் திறத்தால் செஞ்சிக்கோட்டை, தஞ்சைக்கோட்டை முதலியவற்றைக் கைப்பற்றி, பீஜப்பூர் சுல்தான் ஆட்சிக்குட்படுத்தினர். மேலும் செஞ்சியை யாண்ட விசயநகர மன்னர்களும் தலைக்கோட்டைச் சண்டை

யால் முறியடிக்கப்பட்டு நலிவுற்றிருந்தனர். அந்நிலையில் ஷாஜி படையெடுத்தமையால் செஞ்சிக்கோட்டை அவரால் எளிதில் கைப்பற்றப்பட்டது.

ஷாஜிக்குப் பிறகு அவர் மைந்தர் சிவாஜி மகாராட்டிர மக்களை ஒன்று திரட்டி, மகாராட்டிரப் பேரரசை நிலைநிறுத்த முயன்றார். சிவாஜி மகாராட்டிரர்களுக்குள் ஒற்றுமையை ஏற்படுத்தி, படைகளையும் திரட்டினார். சுல்தானின் ஆட்சிக்குட்பட்டிருந்த செஞ்சி, தஞ்சைக்கோட்டைகளைத் தன் வசப்படுத்தினார். அக்கோட்டைகளைக் கைப்பற்றிய உடனே அவர் அவற்றை நன்கு பலப்படுத்தினார்.

சிவாஜி இறந்த பின் அவருடைய மைந்தர் இராஜாராம் சிறிதுகாலம் செஞ்சியை ஆண்டுவந்தார். சிவாஜி இறந்ததை யறிந்த அவுரங்கசீப் அச்சமின்றி மகாராட்டிரப் பேரரசை யழிக்கத் தென்னாட்டின்மீது படையெடுத்தார். அவர் செஞ்சியைத் தவிர, தஞ்சை முதலான தென்னாட்டின் பல பாகங்களையும் பிடித்துக் கொண்டார். இந்நிலையில் இராஜாராம் மகாராட்டிரப் படைகளோடு சென்று முகம்மதியப் படைகளைப் பல விடங்களிலும் தீவிரமாகத் தாக்கிவந்தார்.

அவுரங்கசீப் இத்தொல்லையை நீக்க முதற்கண் இராஜாராமை ஒழிக்கவேண்டுமெனக் கருதினார். தம் படைத் தலைவனை சுல்பிகர்கான் என்பவனை அழைத்து, செஞ்சிக் கோட்டையைக் கைப்பற்றி வருமாறு பணித்தார். சுல்பிகர்கான் பெரும் படையுடன் சென்று செஞ்சியைக் கைப்பற்றத் தொடங்கினான். இருதிறத்தார்க்கும் கடும்போர் நிகழ்ந்தது.

செஞ்சிக்கோட்டை பல்வகை இயற்கை யரண்களைப் பெற்றிருந்தது. மேலும், அக்கோட்டை மீது மிகுதி யான பீரங்கிகள் பொருத்தப் பெற்றிருந்தன. தீக் குண்டுகளைப் பீரங்கிகள் பகைவர் மேல் வீசின. மொக லாயர்களால் செஞ்சியைக் கைப்பற்ற முடியவில்லை. அவர்கட்குத் திரும்பிப் போகவும் விருப்பமில்லை. அதனால் செஞ்சியை எவ்வாரேனும் கைப்பற்றுமல் திரும்பலாகாது என்னும் நோக்கத்துடன் சுல்பிகர் கான் முற்றுகையிட ஆரம்பித்தான் முற்றுகை ஏழு ஆண்டுகள் நடைபெற்றது. மதிலகத்திருந்தோர்க்கு உணவு முதலிய ஏமப் பொருள்கள் சுருங்கின. போரிட்டு மனஞ்சலித்த மகாராட்டிரத் தலைவர்களும் அரசர்களும் உருக்கரந்து இரவோடிரவாய்க் கோட் டையை விட்டு வெளியேறினர். ஏழு ஆண்டுகட்குப் பிறகு, அவர்கள் சென்ற பின்தான்—கோட்டை மொக லாயர் வசமாயிற்று.

அவுரங்கசீப்பின் படையில் பல இராஜபுத்திர வீரர்கள் இருந்து பணியாற்றி வந்தனர். அவர்கள் உயிரினும் மானமே பெரிதெனப் போற்றுபவர்; போரெனிற் பூரிப்படைவர்; விழுப் புண் படுதலேயன் றிப் புறப்புண் படுதல் இழுக்கெனக் கொள்ளும் உயரிய நோக்கினர்; நீதியும் நேர்மையும் உடையவர். இராஜப் புத்திரப் பெண்மணிகளும் கணவன்மார் போர்மேற் செல்லுங்கால் "வென்றுவருக" என வாழ்த்துவர். போரிலே கணவனிறந்தால் மீண்டும் உயிர்வாழாக் கற்பரசிகளாய் அப் பெண்மணிகள் விளங்கினர்.

இத்துணைச் சிறப்புகளைப் பெற்ற இராஜபுத்திர மரபிலே தோன்றிய சாரூப்சிங்கு என்பவர், அவுரங்கசீப் படையிலே வீரராகப் பணிபுரிந்தார். இவர் இளமை முதலே படையில் தொண்டாற்றி வந்ததோடு, தம் போர்த்திறத்தால் தானைத்தலைவர் நிலைக்கு உயர்ந்தார். அவுரங்கசீப் தென்னாட்டின்மீது படையெடுத்த போது, உடனிருந்து மன்னன் மகிழும் வண்ணம் போரிட்டுப் பல பரிசுகளையும், பட்டங்களையும், அவனது அன்பையும் ஒருங்கே பெற்றார். இந்நிலையில் அவுரங்கசீப், சுல்பிகர்கானைக் கொண்டு கைப்பற்றிய செஞ்சியைச் சாரூப்சிங்கிடம் ஒப்புவித்து, அவரையே ஆண்டுவருமாறு ஏற்பாடு செய்தார். இவ்வகையாகத் தம் திறமையால் உழைத்து உயர்ந்த சாரூப்சிங்கு அவுரங்கசீப்புக்கு அடங்கிய சிற்றரசராய், செஞ்சியை ஆண்டு வந்தார்.

சாரூப்சிங்கு என்பவரின் மனைவியார் இராணி இராமாபாய் என்பவராவார். இவர்கட்கு நன்மகனாக விளங்கியவரே வரலாற்றுப் புகழ்பெற்ற இராஜா தேசிங்கு என்பவர். சாரூப்சிங்கு செஞ்சியைக் கி. பி. 1700 முதல் 1713 வரை ஆண்டு வந்தார். கி. பி. 1714-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் தேசிங்கு பட்டத்திற்கு வந்தார். ஆனால், அதே ஆண்டு செப்டம்பர் மாதம் ஆர்க்காட்டு நவாப்பான சாதுல்லாகான் என்பானோடு போர் புரிந்தார். போரிலே சதிகாரர்கள் சிலர் இருந்து எதிரிக்கு உளவு கூறியதாலும் தனது நண்பன் மகமத்கான் இறந்து பட்டதாலும் மனந்தளர்ந்த தேசிங்கு போரிலே வெற்றி கிட்டாதென்றறிந்து போர்க்களத்தி

லேயே தற்கொலை செய்துகொண்டு உயிர் நீத்தார். பட்டமேறி ஒன்பது மாதங்கள்தான் தேசிங்கு செஞ்சியை ஆண்டாரெனினும், இவ்வீரரால் செஞ்சியில் ஏற்பட்ட சீர்திருத்தம் மிகவும் பெரிது. தேசிங்கின் பிறப்பால் செஞ்சி வீரத்தின் விளைநிலமாக மாறியது. இன்றும் செஞ்சி என்ற பெயரைக் கேட்போர் தேசிங்கை நினைந்து போற்றுமலிரார்.

கி. பி. 1750இல் பிரெஞ்சுக்காரர் முகம்மதியர்களிடமிருந்த செஞ்சிக்கோட்டையைக் கைப்பற்றிக் கொண்டனர். அதன் பிறகு சுமார் முப்பது ஆண்டுகளுக்குப் பின், பிரெஞ்சுக்காரரிடமிருந்து ஆங்கிலேயர்கள் செஞ்சியைக் கைப்பற்றினர். மைசூரைத் தலை நகரமாகக் கொண்டு ஆண்டுவந்த ஹைதரலி என்ற மன்னர் செஞ்சியைத் தன்னுட்சிக்குட்படுத்திச் சிறிது காலம் ஆட்சி செலுத்தினர். இறுதியில் மீண்டும் ஆங்கிலேயர் அதனைக் கைப்பற்றினர்.

இதுகாறும் கூறியவற்றால் பழம் பெருஞ் சிறப்புமிக்க செஞ்சிக்கோட்டையைச் சேரர், சோழர், பல்லவர், கோனர், குறும்பர், விசயநகர மன்னர், சுல்தானியர், முகம்மதியர், இராஜ புத்திரர், பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர் ஆகியோர் ஒருவர் பின் ஒருவராக ஆண்டு வந்தனர் என்று அறியலாம். அக்கோட்டை இந்நாளில் நமது அரசியலாரின் கண்காணிப்பில் பழங்காலச் சின்னமாகப் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

# 5. தஞ்சைக் கோட்டைகள்

தஞ்சை நாட்டில் மிகுதியான கோட்டைகள் கிடையா. இப்பகுதியில் ஆட்சி நகரமாக நெடுங்கால மாய் விளங்கி வருவது தஞ்சை நகரமேயாகும். இப் பெருநகர் பிற்காலச் சோழர்களுள் முதல்வனுக விளங் கிய விஜயாலயச் சோழன் காலமாகிய ஒன்பதாம் நூற்ருண்டிலிருந்தது. பதின்மூன்ரும், நூற்ருண்டு வரை சோழர் ஆதிக்கத்திலும், பதினைந்து, பதிஞரும் நூற்ருண்டுகளில் நாயக்க மன்னர்கள் ஆதிக்கத்திலும், பதினேழு பதினெட்டாம் நூற்ருண்டுகளில் மராட்டிய மன்னர்களது ஆதிக்கத்திலும் ஆட்சி நகரமாக விளங் கியது. ஏறத்தாழ ஓராயிரம் ஆண்டுகள் ஆட்சித் தலை நகரமாக விளங்கிய பெருமை தஞ்சைக்கு உண்டு. தென்ஞட்டுக் கட்டிடக் கலையின் மிகச் சிறந்த மாதிரிகள் இன்றும் தஞ்சையில்தான் இருக்கின்றன. திராவிடர் கள் கட்டிடக் கலையின் (மனை) முழு அமைப்பாகிய மாடம், மாளிகை, கூடம், கோபுரம் எனப்படும் நான்கு வகைகளையும் தஞ்சையைத் தவிர வேறு எங்கும் காண முடியாது. இனி, இத்தஞ்சை நகரில் அமைந்திருக்கும் அரண்மனைக் கோட்டையாகிய வீரராகவன் கோட்டை யையும் முதலாம் இராசராசனுல் அமைக்கப்பட்ட இராசராசேச்சுவரம் எனப்படும் கோவிற் கோட்டை யையும் அறியத் தொடங்குவோம்.

**வீரராகவன் கோட்டை :**

இவ்வரண்மனைக் கோட்டையைப் பெரிய கோட்டை என்றும் கூறுவர். இதன் இடப் பரப்பு 530 ஏக்கர். இக்கோட்டைக்கு அமைந்த கோட்டைச் சுவர்

கள் 15 அடி கனமும் 151 அடி உயரமும் கொண்டன வாக மிக நீண்ட அளவில் அமைந்திருந்தன. நகரின் சுற்றுப் பகுதிகளில் காவிரியாற்றின் கிளை நதிகள் அகழிகளாக அமைந்து விளங்கின. மதில்களுக்குள் மிகப் பெரும் கட்டிடங்களும் நான்கு பெருஞ் தெருக் களும் காட்சியளிக்கின்றன. இக்கோட்டையின் கீழ்ப் பகுதியில் சுமார் 150 அடி உயரமுள்ள சிறு குன்றின் மீது, 24 அடி நீளமுள்ள பெரியதொரு பீரங்கி வைக் கப்பட்டிருக்கிறது. உள் மதிலுக்குள் ஒழுங்கற்ற முறை யில் அவ்வக்காலத்து ஆட்சியரசர்கள் கணக்கற்ற கட்டடங்களை மனதிற்குத் தோன்றியபடி கட்டியிருக் கிறார்கள். உள்ளே எட்டு அடுக்குகள் கொண்டதும் 190 அடி உயரமுள்ளதுமாகிய பெரியதொரு கூடமும் கோபுரமும் இருக்கின்றன. அவற்றைச் சேர்ந்தாற் போல் ஆறு அடுக்குகள் கொண்ட மாடமும் மாளிகை யும் இருக்கின்றன. இவையன்றி, மேலும் இரண்டு கொலுமண்டபங்களும் சரஸ்வதி மஹால் என்ற பெரிய தொரு நூல் நிலையமும், ஆயுதச்சாலை யொன்றும் இருக்கின்றன. தற்போது ஆயுதச்சாலை எடுக்கப்பட்டு விட்டது.

இராசராசேச்சுவரம் :

கோவில் கோட்டையாகிய இராசராசேச்சுவரத்தை அறியத் தொடங்குவதற்குமுன், தென்னாட்டின் தலை சிறந்த கட்டிடக் கலையாக விளங்கும் இவ்வரிய கோவிலைக்கட்டி முடித்த இராசராசனைப்பற்றி ஒரு சிறிது அறியவேண்டியது இன்றியமையாதது. இராச ராசன் கி. பி. 985 முதல் 1014 ஆம் ஆண்டு வரை

29 ஆண்டுகள் மிக்க கீர்த்தியோடு சோழப் பேரரசை ஆண்டுவந்தான். இவன் தனது ஆட்சிக் காலத்தில் சேர பாண்டிய இராஜ்ஜியங்களையும், மற்றும் தனது அண்டை நாடுகளாகிய பல நாடுகளையும், இலங்கை யையும் வென்று, தனது நாட்டிற்கு வடக்கெல்லை கோதாவரியாகவும், கீழ், மேல் எல்லைகள் கடல்களாக வும் இருக்குமாறு அமைத்தான். இம்மன்னன் சிறந்த தரைப்படையோடு வலிமை வாய்ந்த பெரியதொரு கடற்படையையும் வைத்திருந்தான். இப்பெரு வீரன் போரில் கொண்டிருந்த ஆர்வத்தைப் போலவே, சிற்பம், சித்திரம், இசை, நடனம் ஆகிய நுண் கலைகளி னும் சிறந்த விருப்பமுடையவனாக இருந்தான் என் பதை இம் மன்னனது பெருங் கோயிலாகிய இராச ராசேச்சுவரம் நிருபித்துக் கொண்டிருக்கிறது.

## அமைப்பும் மாண்பும் :

இராசராசேச்சுவரத்தைச் சிறுகோட்டை என்றும் சிவகங்கைக் கோட்டை என்றும் கூறுவர். சிவகங்கை யின் தென் பகுதியிலிருக்கும் இக் கோட்டையின் அகழியைக் கடந்து, கோட்டைச் சுவரின் உள்வளைவுக் குள் நுழைந்து சென்றால், சிறிது தூரத்தில் முதற் கோபுர வாயிலாகிய 'கேரளாந்தகன் வாயில்' என்னும் அழகிய ஒரு கோபுரம் எதிர்ப்படும். அவ்வழகிய கோபுரத்தைக் கடந்து மேலும் சிறிது தூரம் சென்றால், இராசராசனால் கட்டப்பட்ட மற்றொரு அகன்ற கோபுரமாகிய 'இராசராசன் திருவாயிலை' அடைய லாம். அதனையும் கடந்து உட்சென்றால், கருங் கல்லும், செங்கல்லும் பதித்து அமைக்கப்பட்ட பரந்த தொரு பேரவை காணப்படுகிறது. இப்பேரவையின்



தஞ்சை கோட்டையின் தோற்றம்

N54-4;1

நீளம் ஏறத்தாழ 500 அடியும், அகலம், 250 அடியும் ஆகும். இப்பரப்பின் முதற்பகுதியில் அமைந்த பெரியதொரு மேடையில் தென்னுட்டிலேயே மிகப் பெரியதான நந்தியொன்று அமைந்திருக்கிறது. அதனைப் பாதுகாக்க நாயக்க மன்னர்கள் கட்டிய மண்டபமும் இருக்கிறது. அதை அடுத்துத் "தட்சிண மேரு'' எனப் புகழ்பாடும் பெரியகோவில் கருப்பகிரகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், ஸ்தாபன மண்டபம், நர்த்தன மண்டபம், வாத்திய மண்டபம் என்ற ஆறு பகுதிகளையும், ஏழு வாயில்களையும் உடையதாக விளங்குகிறது. ஒவ்வொரு வாயிலின் இரண்டு பக்கங்களிலும், 18 அடி உயரமும், 8 அடி அகலமுள்ள பதினாறு துவாரபாலகர் சிலைகள் நிறுத்தப் பெற்றுள்ளன. கருப்பகிருகம் என்பது இறைவன் சந்நிதியாகச் சிவலிங்கம் காட்சியளிக்கும் இடமாகும். கோவிலின் முதல் வாயிலைத் திருஅணுக்கண் வாயில் என்று கூறுகின்றனர். கருப்ப மண்டபத்தை அடுத்துள்ள மண்டபங்களில் தெற்கிலும், வடக்கிலும் வாயில்கள் அமைந்துள்ளன. இவ் வாயில்களில் தெற்குப் பக்கத்து வாயிலுக்கு 'விக்கிரமன் திருவாயில்' என்று பெயர் வழங்கப் படுகிறது.

108736

**விமானத்தின் சிறப்பு:**

இக்கோவில் நிலமட்டத்துக்கு மேல் உயர்ந்த மேடையில் நிறுவப்பட்டிருப்பதனுல், இதனை மாடக் கோவில் என்பதற்கேற்ற இலக்கணம் பெற்றதென்று கூறுகின்றனர். இக்கோவிலின் நீளம் 793 அடியும் அகலம் 397 அடியும் • ஆகும். கோவிலின் கருப்ப

கிரகத்திற்கு மேலே சதுரமான அமைப்பில் பதின் மூன்று கோபுர அடுக்குகள் கொண்ட அழகிய விமானம் காட்சி அளிக்கின்றது. உச்சியில் உள்ள சதுர வடிவ மான விமானம் ஒரே கல்லால் ஆனதும் அதன் மேற் பகுதி அரைவட்ட வடிவமானதாகவும் அமைக்கப் பட்டிருக்கிறது. இந்த அரை வட்ட வடிவத்திற்கு மேல்தான் அழகிய தூபிக்கலசம் விளங்குகிறது. இக் கோபுரத்தின் உயரம் 216 அடி. இதனை உத்தம விமானம் என்று அழைக்கின்றனர். இதன் மேல் கலசம் செப்பினாற் செய்யப்பட்டு, அதன்மேல் பொன் தகடு போர்த்தப்பட்டிருக்கிறது. விமான உச்சியில் அமைந்திருக்கும் கருங்கல் 25½ அடி சதுரம் உடையது. இதன் நிறை 80 டன் என்பர். இதனைக் கோபுரத்தின் உச்சியில் சேர்ப்பதற்காகத் தஞ்சை நகருக்கு நான்கு மைல் தூரத்திற்கு அப்பால் உள்ள 'சாரப்பள்ளம்' என்னும் கிராமத்திற்கு சாரம் போட்டு இச்சிகரத்தின் மீது ஏற்றினார்களென்று கூறப்படுகிறது. மேலேயுள்ள சதுரக்கல்லாலாகிய விமானத்தின் நான்கு மூலைகளி லும் மூலைக்கிரண்டிரண்டாக எட்டு நந்திகள் செதுக்கப் பட்டிருக்கின்றன. அவை தனித்தனியே ஒவ்வொன் றும் 6½ அடி நீளமும் 5½ அடி அகலமும் உடையன.

## ஐரோப்பியர் சிலை :

இராசராசன் அளவுகடந்த சைவ மதப் பற்றுள் ளவன். திருக்கோவிலின் நாற்புறமும் உயர்ந்து விளங்கும் கோட்டைச் சுவர்களின் மீது முன்பு அமைக்கப்பட்டிருந்து, தற்போது விழுந்துவிட் டவையான 343 நந்தி உருவங்கள் இருக்கின்றன.

வடகோபுரத்தின் கீழ்ப் பாகத்தில் காணப்படும் மூன்று உருவச்சிலைகளுடன் ஒரு ஐரோப்பிய உருவமொன்றும் காணப்படுகிறது. அதனைப் பற்றிக் கூறும் போது, பதினேழாவது நூற்றாண்டில் வாழ்ந்து வந்த நாயக்கர் பரம்பரையினரான இரகுநாத நாயக்கரின் நண்பராக விளங்கிய கிழக்கிந்தியக் கம்பெனியின் தலைவராகிய ரோலண்ட் கிரேப்பினது உருவம் என்று கூறுகின்றனர். மற்றும் சிலர் இச்சிலையானது பதின்மூன்றும் நூற்றாண்டில் தென்னிந்தியாவுக்கு வந்து போன மார்க்கோபோலோவின் உருவமென்றும் கூறுகின்றனர்.

## சிவலிங்கமும் பிற உருவங்களும் :

இராசராசேச்சுவரத்தில் அமைக்கப்பட்டிருக்கும் அளவு பெரிய சிவலிங்க உருவம் வேறு எங்கும் இல்லை. இராசராசன் இவ்விலிங்க உருவத்தை நருமதை நதிக்கரையிலிருந்து தஞ்சைக்குக் கொண்டு வந்து சேர்த்தான் என்று தெரிகிறது. இதற்காதாரமாகத் தலபுராணமும், சித்திரை விழா அஷ்டக்கொடியன்று இராசராசன் தஞ்சை அறுபத்து நான்குமனை வேளாண் செட்டிமார்களை அழைத்துச் சிறப்பிக்கும் வழக்கமும் காணப்படுகின்றன. இக்கோவிலில் சிவபெருமானது உருவமேயன்றித் திருமால், முருகன் முதலிய தெய்வங்களின் உருவங்களும் திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சிறுத்தொண்டர், சண்டேசுவரர், சுந்தரர், பரவை நாச்சியார், இராசராசன், அவன் பட்டத்தரசி லோகமாதேவியார் முதலிய பல அடியவர்களுடைய உருவங்களும் எழுந்தருளச் செய்திருக்கின்றன.

இக்கோவிலிலுள்ள இறைவனது திருநாமம் பெருவுடையார் எனவும், இறைவியின் திருநாமம் பெரிய நாயகியார் எனவும் வழங்குகின்றன.

**இராசராசனின் ஏற்பாடு :**

இவ்வியத்தகு கோவிலைக் கட்டிமுடித்த இராசராசன் தன் நாட்டிலுள்ள பல கிராமங்களின் வருவாயை இக்கோவிலின் பூசை, திருவிழாச் செலவுகளுக்காக எழுதிவைத்தான். தான் பல நாடுகளிலிருந்தும் வென்று கொணர்ந்த பொன்னும் மணியுமாகிய எல்லாச் செல்வங்களையும், இக்கோவிலுக்கே அளித்தான். கோவிலில் நாள்தோறும் தேவாரத் திருப்பதிகங்களைப் பாடுவதற்காக 48 பாடகர்களையும் அவர்களுக்கு மத்தளம் முதலியன வாசிப்பதற்கு வேண்டியவர்களையும் நியமித்து அவர்களுக்கெல்லாம் வீடும், மானியங்களும் வழங்கினான். நடனம், இசை, நாடகம் முதலிய கலைகளைக் கோவிலில் வளர்க்கப் பல்வேறு கோவில்களிலிருந்தும் 400 பெண்களை வரவழைத்தான். ஒருவருக்கு ஒரு வீடும் ஒரு வேலி நிலமாக அந்நானூற்றுவர்க்கும் வீடும் நிலங்களும் அளிக்கப்பட்டன. நாடோறும் விளக்குகளுக்கு ஒரு உழக்கு விழுக்காடு வீதம் நெய் அளப்பதற்கு ஆடு, பசு, எருமை என்ற மூவினங்களும் இடையர்களுக்கு வழங்கி, என்றைக்கும் யாவும் தாராளமாகக் கிடைத்து வரும் வகையினைச் செய்தான்.

**சுவர் ஓவியங்கள் :**

தஞ்சைக் கோவிலின் வெளிப்புறச் சுவர்களில் பற்பலக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. அவற்றில் பல, வரலாற்று முக்கியம் பெற்றவை.

கருப்பமண்டபமாகிய மூலத்தானத்தைச் சுற்றிச் சிறியதொரு உள்மாளிகை இருக்கின்றது. அச் சுவர்களின் மீதும் வேறு பல மண்டபங்களின் மேற் கட்டிலும் நெடுங்காலமாக மறைபட்டிருந்த ஒன்றின் மேலொன்ருன இருவகை அரிய வண்ண ஓவியங்கள் இருக்கின்றன. இது 1931-ஆம் ஆண்டில் அண்ணுமலைப் பல்கலைக்கழக வரலாற்றுப் பேராசிரியர் திரு. ச. க. கோவிந்தசாமி பிள்ளை, எம். ஏ. அவர்களால் கண்டுபிடிக்கப்பட்டது. அவ்விரண்டனுள் மேற்படை யாக அமைந்திருப்பவை, பதினேழாம் நூற்ருண்டினரான தஞ்சை நாயக்கர் கால ஓவியங்கள் என்றும் உட்படையிலிருப்பவை, சோழர் காலத்திய ஓவியங்கள் என்றும் ஓவியக் கலைஞர்கள் கருதுகின்றனர். இவை, காண்பவரை மகிழ்விக்கும் நிலையில் அமைந்திருக்கின் றன. சோழர்கால ஓவியத்தின் காலம் கி. பி. பத்து, பதினென்ரும் நூற்ருண்டு எனக் கூறுகின்றனர். தற்போது இவ்வோவியங்களை அரசாங்கத்தினர் விஞ்ஞான முறைப்படி பாதுகாத்து வருகின்றனர். சில ஓவியங்களை நிழற்படங்கள் எடுத்தும், அவற்றில் அமைந்திருக்கும் நிறங்களோடு பதிப்புச் செய்தும், நூலுருவத்தில் விரைவில் வெளியிடுவார்கள் என்று கருதப்படுகிறது.

சோழர்கால ஓவியங்களில் ஒரு பகுதி சைவ சமயங் குறித்ததேயாம். அவற்றுள் ஒன்று சைவ அடியவரான சுந்திரமூர்த்தி நாயனரது வரலாற்றைக் குறிப்பதாக இருக்கிறது. சுந்தரரது திருமணப் பந்தலில் பலர் கூடியிருக்கும் காட்சியும், சிவபெருமான் கிழவேதியர் உருக்கொண்டு ஒரு கையில் குடையும்

மற்றோர் கையில் ஓர் ஓலையும் தாங்கிச் சுந்தரருக்கு முன் நிற்பதாகவும் காட்டப்பட்டிருக்கின்றது. இவ்வோவியத்தில் கிழவேதியர் அடிமை ஓலையைக் காட்டித் திருமணத்தைத் தடை செய்து, சுந்தரரை ஆட்கொள்ளும் செய்தி காட்டப்படுகின்றது. அதற் கடுத்து ஒரு குடிமகனது வீட்டின் காட்சி வரையப் பெற்றிருக்கின்றது. பெண்கள் மண்பானையிலே உலை வைத்துச் சோறு சமைக்கின்றனர். ஒரு பெண்ணிடமிருந்து வேலையாளொருவன் சோறு பெறுவதாகக் காட்டப் பெற்றிருக்கின்றது. அவற்றிற்கு மேல் கைலைமலைப் பகுதியில் சிவபெருமான் புலித்தோலின் மீது அமர்ந்திருப்பதாகவும், அவர்க்கு முன்னே நந்தி படுத்திருப்பதாகவும், சிவகணங்களும் முனிவர்களும் சூழ்ந்து நிற்பதாகவும், இவர்களுக்கிடையே நடனமாதர் ஆடுவதாகவும், காட்டப் பெற்றிருக்கின்றன.

இதற்குச் சற்றுக் கீழ்ப்பாகத்தில் சுந்தரர் வெள்ளை யானையின்மீதும் சேரமான் பெருமாள் நாயனர் வெள்ளைக் குதிரையின் மீதும் கைலை செல்வதாகக் காட்டப் பெற்றிருககிறது. இவ்வோவியத்தில் அவர்கள் ஆற்றைக் கடப்பது போன்ற தோற்றமும் இருவர்மீதும் தேவர்கள் பூமாரி பொழிவதுபோன்ற தோற்றமும் மிகவும் இன்பம் பயப்பனவாகும். மேற்குப் பக்கத்துச் சுவரில் சிதம்பரம் கோவில் காட்டப்பட்டிருக்கின்றது. கையில் கனலேந்திய சிவபெருமானின் தோற்றம், அதன் முன் வணங்கி நிற்கும் ஒரு அரசன், அவனுடன் வணங்கி நிற்கும் அவனது மனைவியர்கள், இவர்களுக்குச் சற்று விலகி நிற்கும் வெள்ளித்தடி தாங்கிய இரு சேவகர்கள்,

அவர்களுக்குப் பின்னே பல செல்வர்கள், மற்றும் பொதுமக்கள் ஆகியோரின் காட்சிகள் தீட்டப்பட்டிருக் கின்றன. அக்கால மக்கட் கூட்டமாகிய அவ்வோவி யத்திலிருந்து, அவர்களின் உடல்தோற்றம், அணி கலன்கள், உடைகள், தலைமுடியின் ஒப்பனை முதலிய வற்றை அறிந்துகொள்ள முடிகிறது.

அதனையடுத்த வடபுறச்சுவரில் சிவபெருமான் திரிபுரத்தை எரிக்கும் காட்சி காட்டப்பட்டிருக்கிறது. விநாயகர், முருகன் முதலிய தெய்வங்கள் தன் அருகே இருக்க தேவகணங்கள் புடைசூழத் தமது எட்டுக் கரங்களுடன் இரதத்தின்மீது வீற்றிருந்து, தமது நெற்றிக் கண்ணைத் திறந்து நோக்குகிறார். அசுரர்கள் உயிரிழந்து வீழ்ந்து கிடக்கின்றனர். பலர் தங்கள் மனைவியரை அழைத்துக் கொண்டு ஓடுகின் றனர். மற்றும் சிலர் கணவர் கழுத்தைக் கட்டிக்கொண்டு தொங்குகின்றனர். வீராவேசம் பொருந்திய இக்காட்சி யும் இதன் மருங்கிலிருக்கும் சிவபெருமானது ஐந்நிறத் தோற்றக் காட்சியும் காண்பதற்கு உரியனவாகும். இன் னும் இதனைச் சேரப் பற்பல ஓவியங்கள் காட்சியளிக் கின்றன.

முடிவு:


இராசராசன் இப்பெருங் கோவிலைக் கட்டி முடித்தபோது, அவனது காலத்தவரான கருவூர்த் தேவர் என்ற சிவனடியார் இக்கோவிலின்மீது பல பாடற் பதிகங்களை எழுதியுள்ளார். இம்மன்னன் இக்கோவிலைக் கி. பி. 1003–இல் தொடங்கி, கி. பி. 1009–இல் கட்டி முடித்தான் என்று தெரிகிறது. ஒரு

சிறு துண்டு கருங்கல்லும் அகப்படாத தஞ்சை நாட்டில் இத்தகைய பெருங் கோவிலைக் கட்டி முடித்த இராசராசனது அருஞ் செயலை எண்ணி யெண்ணி அறிஞர்கள் வியப்பும் திகைப்பும் அடைகின்றனர். தஞ்சைக் கோவிலைச் சூழ இருந்த கோட்டை அகழிகள் தற்போது தூர்ந்து, பாழ்பட்ட நிலையில் இருக்கின்றன. இவ்வரிய கோவிலைத் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் சென்று கண்டு தமது முன்னோரின் அரும்பெரும் செயல்களை அறிந்து மனமகிழ வேண்டுவது இன்றியமையாததாகும்.

## 6. திருச்சிராப்பள்ளிக் கோட்டைகள்

**திருச்சி மலைக் கோட்டை :**

திருச்சிராப்பள்ளிக்குச் சிறந்த அழகுப் பொருளாகவும், அடையாளப் பொருளாகவும் நகரின் நடுவே அமைந்து இம்மலைக்கோட்டை காட்சி யளிக்கிறது. சோழ நாட்டில் குன்றுக்கோட்டையாக விளங்குவது இஃது ஒன்றே எனலாம். காவிரியின் மிக அருகே தென் பகுதியில் ஒரே பாறையாலான தாயுமானவர் மலை அழகாக அமைந்திருக்கிறது. இம்மலையின்மீது கோவிலாகவும் கோட்டையாகவும் சிறந்த கருங்கற்கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. இம்மலையையும் இதனடியிலுள்ள பெரிய குளத்தையும் உள்ளடக்கிய பெரிய மதிற்சுவர்களால் சுற்றிலும் கோட்டை கட்டப் பட்டிருந்தது. கோட்டைக்கு வெளியில் ஆழ்ந்த அகழி இருந்தது. பிற்காலத்தில் அகழி தூர்க்கப்பட்டுத் தெருக்களாக மாறின.



திருச்சி மலைக்கோட்டையின் தோற்றம்

கோட்டை மதில்கள் இடித்து அழிக்கப்பட்டுவிட்டன. ஆனால், அக்கோட்டையின் மேற்கு வாயில் மட்டும் அழிபாட்டுக்கு இலக்காகாமல் இன்றும் ஒரு பழங் காலச் சின்னமாகக் காட்சியளித்து வருகின்றது. இதனைக் கண்டாலே பழைய கோட்டை எத்தகைய நிலையில் அமைந்திருக்கக்கூடும் என்று ஊகித்து ஒருவாறு உணரலாம். இக்கோட்டை பற்பல போர் களுக்கும் முற்றுகைகளுக்கும் உட்பட்டு, வரலாற்றில் சிறந்த இடம் பெற்றிருக்கிறது. பகைவரின் வருகையை நெடுந்தூரத்திலிருக்கும் போதே அறிவதற்கு ஏற்ற வண்ணம் உயர்ந்த மலையையும் பகைவர்கள் திடீர்த்தாக்குதல் செய்ய முடியாதவாறு தடுக்கும் இயற்கை அரணாகிய காவிரியாற்றையும் இக்கோட்டை பெற்றிருக்கிறது. பதினெட்டாம் நூற்றாண்டில் நடந்த கர்நாடகப் போர்களில் இக்கோட்டை சிறந்த இடத்தைப் பெற்றிருந்தது. இம்மலையின்மீது தாயுமானவர் கோவில் என்ற வண்ண ஓவியங்கள் நிறைந்த ஒரு சிவன் கோவிலும், மலையுச்சியில் ஒரு பிள்ளையார் கோவிலும் இருக் கின்றன. இங்குப் பல்லவர் காலத்திய சிற்பங்களும் இருக்கின்றன. இம்மலை ஒரு காலத்தில் சமணப் பள்ளியாக இருந்திருக்கவேண்டுமென்று அறிஞர்கள் கருதுகின்றனர். அதற்கு வேண்டிய பற்பல ஆதாரங் களும் அங்குக் காணப்படுகின்றன.

பெயர்க் காரணம் :

முன்னொரு காலத்தில் ஆதிசேடனும், வாயு பகவானும் தம்முள் யார் வலிமையுடையவர் என ஒருவரோடொருவர் வாதிட்டுக் கொண்டனர்.

இறுதியில் ஆதிசேடன் தன் ஆயிரம் மணிமுடிகளால் மேருமலையின் ஆயிரம் சிகரங்களையும் மூடிக்கொள்வ தென்றும், அவற்றுள் வாயு ஏதேனும் ஒன்றைப் பெயர்த்தெடுத்தால், அவனே வலியவனென்றும் முடிவுக்கு வந்தனர். அவ்வாறே ஆதிசேடன் சிகரங் களை மூடிக்கொண்டான். வாயுதேவன் தன் வலிமை முழுவதும் கொண்டு மோதித் தாக்கினன். சிகரத் திலிருந்து ஒரு பகுதியைக்கூடப் பெயர்க்க முடிய வில்லை. இதுகண்ட வாயு வெகுண்டு, அசைவற்று நின்றனன். உயிரினங்கள் உயிர்ப்பின்றி வருந்தின; செயலற்றுத் தளர்ந்தன. இதுகண்ட தேவர் பலரும், ஆதிசேடன்பால் சென்று வேண்ட, அரவரசனும் தன் தலைகளில் மூன்றினைச் சிறிது உயர்த்தினன். வாயு தேவன் முழுவலியுடன் தாக்கி, மூன்று சிகரங்களைப் பெயர்த்தெடுத்து வீசினன். அவை பல இடங்களில் வீழ்ந்தன. அவற்றுள் ஒன்றே இம் மலைக்கோட்டை எனப் புராணக் கதை ஒன்று வழங்குகிறது.

திரிசிரஸ் என்பவன் ஓர் அரக்கன். இவன் சிவபெருமானை வழிபட்டு, வரம்பெற்று, வலிமை யுடையவனாய், அரக்கர்களுக்கு அரசனானான். இவன் இம்மலைமீதுள்ள சிவபெருமானையும், திரு ஆனைக் காவிலுள்ள சிவபெருமானையும் வழிபட்டு வந்தான். திரிசிரஸ் வழிபாடு செய்து வந்ததால், இம்மலை இப் பெயர் பெற்றதென்று பிறிதொரு புராணம் கூறுகிறது.

ஆராய்ச்சியாளர் கூற்று :

இடைக்காலத்தில் நம் நாட்டில் சமண மதம் மிகச் சிறந்து பரவி இருந்தது. நாட்டில் பற்பல

இடங்களில் சமண முனிவர்கள் சமணப்பள்ளிகளை நிறுவி, தங்கள் மதக் கருத்தினைப் பரப்பி வந்தனர். அப்போது நாட்டின் பல பாகங்களிலும், சமணப் பள்ளிகளை அமைத்தனர். இம்மலையில் அமைந்த சமணப்பள்ளிக்குத் தலைவராய்த் திகழ்ந்தவர் சிரா என்ற முனிவராவர். அதனால், இங்கிருந்த சமணப் பள்ளி சிராப்பள்ளி யென்னும் பெயரோடு விளங்கி வந்தது. பின் நாளடைவில் இம்மலையைச் சூழ விரிந்து எழுந்தபெரு நகர்க்கும் சிராப்பள்ளி என்னும் பெயரே அமையலாயிற்று. இன்னும் இம்மலைக் குகைகளில் சமணமுனிவர் துயின்ற கற்கட்டில்களும் அவற்றில் சமணத் துறவிகளின் பெயர்கள் பொறிக் கப்பட்டும் இருக்கின்றன. திருச்சிராப்பள்ளியெனப் பெயர் வழங்கக் காரணம் இதுவேயென ஆராய்ச்சி யாளர் கூறுவர்.

வரலாற்றுச் சிறப்பு:

புராணங்களாலும், இலக்கியங்களாலும், சிறப் பிக்கப்படும் இம்மலைக் கோட்டையானது, வரலாற்றுப் பெருமையும் உடையது. காவிரிக்கரையிலுள்ள நகரங்களில் மிகப் பெரியது. பல நூற்றுண்டுகளுக்கு மேலாகவே தமிழக வரலாற்றில் இடம் பெற்றது. சோழர்கள் உறந்தையைத் தலைநகராகக் கொண்ட நாள் முதல் தமிழகத்தின் சிறப்பிடமாக விளங்குவது. கி. பி. 1310–ல் முகம்மதியர் படையெழுச்சியினால் பலம் குன்றிய சோழர்கள், விஜயநகரப் பேரரசர்களின் கீழ் சிற்றரசர்களாக ஆண்டு வந்தனர். கி. பி. 1559-ல் மதுரையை ஆண்ட விஸ்வநாத நாயக்கர் திருச்சிக் கோட்டையைப் பெற்றுக் கொண்டு, தஞ்சையை

அடுத்த வல்லம் கோட்டையைத் தஞ்சை மன்னனுக் களித்தார். அவர்தான் கோட்டையைப் புதுப்பித்து, பெரிய தெப்பக்குளம் வெட்டுவித்து, அரண்களைத் திருத்தியமைத்தவராவர். இத்துடன் ராணி மங்கம்மாள் சிறந்ததொரு சிங்கார அரண்மனையையும் கட்டியிருக் கிறார். நாயக்க அரச பரம்பரையில் எட்டாவது அரச ரான முத்துக்கிருஷ்ணப்ப நாயக்கரென்பவர் திருச்சி யைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தார். பின் வந்த திருமலை நாயக்கர் தலைநகரை மதுரைக்கு மாற்றி விட்டார்.

நாயக்கர் வம்சத்துக் கடைசி அரசரான வங்காரு திருமலை நாயக்கரிடமிருந்து, திருச்சியை ஆற்காட்டு நவாபான சந்தாசாகிப் 1736-ல் கைப்பற்றிக் கொண் டார். பின், மகமதலி 1751-ல் இங்கு வந்து ஒளிந்து கொண்டபோது, சந்தாசாகிபும், பிரெஞ்சுக்காரரும் இதை முற்றுகையிட்டனர். அப்போது கிளைவ் ஆற்காட்டைத் தாக்கி, அதைக் கைப்பற்றிக் கொள்ளவே, சந்தாசாகிப் திருச்சியைக் கைவிடுத்து, ஆற்காட்டை நோக்கி விரைந்தார். அங்குப் போரில் தோற்று இறந்தார். மகமதலி கர்நாடக நவாபானார். ஆங்கிலேயர் செல்வாக்கு உயர்ந்தது.

கி. பி. 1766-ல் ஹைதரலி திருச்சியைத் தாக்கப் படையெடுத்து வந்தார். ஆனால் திருச்சியைத் தாக்காமலேயே திரும்பி விட்டார். பின், 1768—69-ல் திருச்சியை முற்றுகையிட்டு, அதன் அரண்களைத் தகர்த்துப் பாழ்படுத்தினார். 1790-ல் படையெடுத்து வந்த திப்புசுல்தான் ஸ்ரீரங்கத்தைத் தாக்கி அழித்து, திருச்சியைத் தாக்காமலேயே திரும்பி விட்டார்.

அது முதல் ஆங்கிலேயர் வசமிருந்து வந்த இக் கோட்டையானது நம் நாடு விடுதலையடைந்த பின், நம் வசமாகி இன்றும் நம் பண்டைய பெருமையை விளக்கி நிற்கின்றது.

சிற்பச் சிறப்பு :

கி. பி. 615 முதல் 630 வரை அரசாண்டவனுகக் கருதப்படும் பல்லவ வேந்தனுகிய மஹேந்திரவர்மன் சமண மதத்திலிருந்து சைவ மதத்திற்குத் திருநாவுக்கரசரால் மாற்றப்பட்டான். சைவனுக மாறிய மஹேந்திரன் தன்னுட்சிக்குட்பட்ட நிலப்பகுதியில் அமைந்த சமணப் பள்ளிகளையெல்லாம் சிவன் கோயில்களாக மாற்றியமைத்தான். அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட கோவில்களுள் இம் மலைக்கோட்டையாகிய குகைக் கோயிலும் ஒன்று.

இக் குகைக் கோவில், சிற்பக் கலைகள் மலிந்த சிற்றுளி வேலைப்பாட்டினையுடையது. மேற்சுவரில் செதுக்கப்பட்டுள்ள சிற்பங்கள் காண்போர் மனதைக் கவரும் வண்ணம் அமைந்துள்ளன. அவற்றுள் ஒன்று கங்காதரர் சிலையாகும். சிவபெருமானே நம் எதிரில் நிற்பது போன்ற காட்சியினை நல்கும். இச்சிலையினைக் கண்டு வியவாதவர் ஒருவருமில்லை. அன்றியும், யாழோர் இருவரும், மனிதன் ஒருவனும் வானத்தில் மிதப்பதுபோன்று செதுக்கப்பட்டிருக்கும் காட்சியும் கண்டு வியக்கத்தக்கது.

மலையடிவாரப் பகுதியில் சிறிது மேற்கு நோக்கிச் சென்ருல் பசுமடம் ஒன்று காணப்பெறும். அதன் பின், கி. பி. 640—670-க்கு இடைப்பட்டதாகக் கருதப்

படும் பல்லவர் குகையொன்றினைக் காணலாம். ஒரே கல்லாலான இக் குகை அழகிய வேலைப்பாடுடைய தாய் இருத்தலோடு, பல்லவரின் சிற்பக் கலைத் திறனைப் பெரிதும் விளக்கும் சான்ருகவும் நிலவுகின்றது. இதனுள் வியப்பைத் தரும் சிற்ப வேலைப்பாடுகளுடைய இருமண்டபங்கள் உள்ளன. சூரியன், சந்திரன், திருமால், நான்முகன் ஆகிய தேவர்கள் கற்களில் அழகிய உருவங்களாகச் செதுக்கப்பட்டு, காண்போர் வியக்கும் வண்ணம் நிற்கின்றனர். இவைபோன்ற எண்ணிறந்த சிற்பங்களையும், அழகொழுகும் உயிரோவியங்களையும் இக்கோவிலில் கண்டு களிக்கலாம்.

திருச்சிராப்பள்ளியிலுள்ள மற்றும் இரு கோட்டைகள் திருவரங்கமும் திருவானைக்காவுமாகும். இக் கோட்டைகளைக் கோவிற் கோட்டைகள் என்றும் கூறலாம்.

**திருவரங்கம் :**

நாட்டின் அரசையும் பொக்கிஷத்தையும் படைகளையும் காத்துக்கொள்ள அரசர்களால் சிறந்த பாதுகாப்புள்ள பற்பல கோட்டைகள் கட்டப்பட்டன என்பவற்றை முன்னர் அறிந்தோம். இடைக்காலத்தில் கோட்டை அமைப்புகளில் சில மாறுதல்கள் ஏற்பட்டன. பிற நாட்டு மன்னர்கள்—வேறு மதத்தவர்கள்—நம் நாட்டின் மீது படையெடுத்தபோது, தென்னுட்டுக் கோவில்கள் முதலியவற்றில் இறைவனுக்காகச் சேர்த்து வைக்கப்பட்ட பெருஞ் செல்வங்களையும் கொள்ளை கொண்டனர். இத்தகைய அழிபாட்டுக்கு ஆட்பட்ட கோவில்கள் எத்தனையோ!

இதன் காரணமாகத் தமது கோவில்களையும், தெய்வ உருவங்களையும் பாதுகாக்கவும், மக்கள் இறைவன் வழிபாட்டில் கொண்டுள்ள கருத்தைத் தமக்குச் சாதகமாகப் பயன் படுத்திக்கொள்ளவும், மன்னர்கள் இறைவன் ஆலயத்தையே மிக்க பாதுகாப்புள்ள வலிமை வாய்ந்த கோட்டையாக அமைக்க முன் வந்தனர். இவற்ருல் நாட்டு மக்களிடையே கடவுள் பற்று வளரவும், அதன் துணையாக நாட்டுப் பாதுகாப்புக்கு உதவி ஏற்படவும் சாதகமான வாய்ப்புகள் ஏற்பட்டன.

இங்ஙனம் கோவிலாகவும், வலிமை வாய்ந்த கோட்டையாகவும் தென்னுட்டில் விளங்குவன திருவரங்கம் பெரிய கோவில், தஞ்சைக் கோவில், சிதம்பரம் கோவில், திருவண்ணுமலைக் கோவில் முதலியனவாம். இவற்றுள்ளும் மிக்க பாதுகாப்பும், வலிமையும் வாய்ந்தது திருவரங்கம் பெரிய கோவிலே யாம். இக் கோவில் காவிரியாற்றின் நடுவில் நாற்புறமும் ஆற்றையுடையதாய்த் தீவுபோல அமைந்திருக்கிறது. இவ்வரிய பாதுகாப்பு, பகைவர்கள் எப்போதும் திடீரெனப் படையெடுத்து வரமுடியாமல் தடை செய்கிறது. திருவரங்கம் திருச்சிராப்பள்ளிக்கு மூன்று மைல் தூரத்தில் வடக்கே அமைந்திருக்கிறது. இங்கு அமைந்துள்ள விஷ்ணு ஆலயமாகிய அரங்கநாதர் கோவில் நம் இந்தியநாடெங்கும் புகழ் வாய்ந்தது. வைணவர்கள் இதனைத் தமது கோவில்கள் எல்லாவற்றிலும் சிறந்ததாகக் கருதித் திருவரங்கம் பெரியகோவில் எனப் போற்றுகின்றனர். இக்கோவிலிலுள்ள இறைவனது பெயராலேயே இந்த நகரமும் வழங்கப்படுகிறது. திருவரங்க நகரத்து வீடுகளில்

பெரும்பகுதி கோவிலினது வெளிச் சுற்றுப் பிரகார மாகிய சுற்றுச் சுவருக்குள்ளேயே அமைந்திருக்கிறது. இக்கோவிலின் இடப்பரப்பு, தென்னிந்தியாவிலுள்ள கோவில்கள் யாவற்றிலும் பெரியதாகும். கோவிலைச் சுற்றி, ஒன்றைச் சுற்றி ஒன்ருக ஏழு வலிய கருங்கற் சுவர்கள் எழுப்பப் பெற்றுள்ளன. இவற்றுள் வெளிப் புறத்தே அமைந்துள்ள சுற்றுச் சுவரின் நீளம் 3,072 அடியும், அகலம் 2,521 அடியும் ஆகும்.

இக்கோவிலின் மிகச் சிறந்த அழகுத் தோற் றங்கள் இதனைச் சுற்றியுள்ள ஏழு சுற்றுச் சுவர்களால் மறைக்கப்பட்டுள்ளன. எனவே, உட்சுவருக்குள் அமைந்திருக்கும் கோவிலின் அழகு சாதாரணமாகக் காட்சியளிக்கிறதேயன்றி, அத்துணைக் கவர்ச்சி பொருந்தியதாக இல்லை. வெளிப்புறப் பகுதியில் ஏழாவது சுற்றுச் சுவரில் அமைந்துள்ள அலங்கார மான தென்வாயில் வழியாக உள்ளே நுழைபவர், உள்ளே செல்லச் செல்லத் தாம் எண்ணியதற்கு மாருகப் பெரும்பாலும் ஏமாற்றமே அடைவர். உள்ளே பெரிய கோவிற் கட்டடங்களை எதிர்பார்த்துச் சென்றவர் சுற்றுச் சுவர்களோடு இணைத்துப் பொருத்தப்பட்டிருக்கும் வீடுகளையுடைய தெருக் களையே காண்பர். கோவில் என்பதற்கு மாருக நகரம் என்ற உணர்ச்சியே தோன்றும். அவரது மனதைக் கவரும் வண்ணம் அமைந்துள்ள கோவிற் கட்டடங்கள் மிகச் சிலவே. உள்நுழையும் பக்தர்களுக்கு முதன் முதலாகக் காட்சியளித்து நிற்பது நான்காவது சுற்றுச் சுவர்கள் அமைந்துள்ள ஆயிரக்கால் மண்டபமேயாகும். உற்சவக் காலங்களில் உற்சவ மூர்த்திகளாகிய கடவுள் உருவங்களை ஆயிரக்கால்

மண்டபத்தில்தான் கொலு வைத்திருப்பது வழக்கம். ஆனால், அவ்வாயிரக்கால் மண்டபமும் பெரிதாக அமையவில்லை. அங்கே காணப்படும் சிற்ப வேலைப் பாடுகளும் அத்துணை உயர்ந்தனவாக இல்லை. இவ்வாயிரக்கால் மண்டபத்தில்தான், மகாகவி கம்பர் தமது இராமயண அரங்கேற்றத்தை நடத்தி வைத்தார் என்றும், அதுபோது அங்கு உற்சவ மூர்த்தியாக இருந்த அரங்கநாதர் சிரக்கம்பமும், கரக்கம்பமும் செய்தார் என்றும் கூறப்படுகின்றன.

இவ்வாயிரக்கால் மண்டபத்தினும் சற்றுச் சிறந்த முறையில் சிற்ப வேலைப்பாடுள்ளது இதற்கு எதிரே உள்ள சேஷகிரிராயர் மண்டபமாகும். அம்மண்டபத்தில் உள்ள தூண்களில் திராவிடக் கட்டடக் கலை முறைப்படி அலங்கரிக்கப்பட்ட சிற்பத் தூண்கள் நிற்கின்றன. அத்தூண்களில் கால்களை உயர்த்தி நிற்கும் குதிரைகள், யானைகள், யாளிகள், சிங்கங்கள், புலிகள் முதலியன சிறப்பாகச் செதுக்கி அமைக்கப்பட்டுள்ளன. கோவிலின் கோபுர உச்சியிலிருந்து பார்க்கினும் கோவிலின் முழுப்பகுதிப் பரப்பையும் காணமுடியாது. ஆகையால், கோவிலின் பெரிய அளவை ஊகித்து உணரவேண்டுமேயொழியப் பார்த்து அறிய இயலாது. வெளிப்புறச் சுவர்களின் நான்கு திக்குகளிலும் கோபுரவாயில் அமைப்பதற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. எக்காரணத்தாலோ அவ்வேலைப்பாடுகள் முழுவதும் முடிவுறாமல் நின்றுபோயின. முடிவுற்றவையும் மிக்க வேலைப்பாடின்றிச் சாதாரணமாகவே அமைந்துள்ளன. நான்காவது சுற்றுச் சுவரின் கிழக்கு வாயில் கோபுரத்தினுள் படிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவற்

றில் ஏறி, உச்சியில் நின்றுபார்த்தால் கோவிலின் காட்சி சற்று விளக்கமாகவும், அழகாகவும் தோன்றுகிறது. தென்புறம் அமைந்துள்ள வாயிலின் முடிவுருத கோபுரம் வெள்ளேயடிக்கப்பட்டுக் கவர்ச்சியின்றிக் காட்சியளிக்கிறது. எனினும், கட்டடக் கலையின் சிறந்த வேலேப்பாடுகள் அமைந்த பகுதி இதனுள்தான் அமைந்திருக்கிறது. இதன் வழியாகத்தான் நகரத்திலிருந்து காவிரியாற்றுக்கும், திருச்சிராப்பள்ளிக்கும் வழிகள் செல்லுகின்றன.

இக் கோபுரத்தை வெள்ளேக் கோபுரமென்றும், மொட்டைக் கோபுரமென்றும் கூறுவர். இக் கோபுர வாயிலின் நீளம் 22 அடி. அகலமும், உயரமும் 44 அடி கொண்டதாக விளங்குகிறது. கோபுரத்தின் அடிப்பாகத்தின் நீளம் 130 அடி. அகலம் 100 அடி. இக் கோபுரத்தை இதே அளவில் கட்டி முடிக்கப் பெற்றிருந்தால் சுமார் 300 அடி உயரம் உயர்ந்திருக்கும் என்றும், தென்ஞட்டிலுள்ள எல்லாக் கோபுரங்களினும் உயர்வாக அமைந்திருக்கும் என்றும் கூறுகின்றனர். இக் கோபுரத்தைத் திருமங்கை மன்னன் கட்டி முடிக்கத் துவங்கிஞன் என்றும், ஏதோ காரணத்தால் வேலே தடைபட்டு இடையில் நின்றுவிட்டதென்றும் கூறப்படுகிறது. திருவரங்கத்தைக் காண வரும் எவரும் அதனுடைய கம்பீரமான தோற்றத்திலும் எடுப்பான அமைப்பிலும் கவர்ச்சிகரமான சிற்பங்களிலும் மனதைப் பறிகொடுக்காமல் இருக்க முடியாது. இவ்வெள்ளேக் கோபுரத்தைப் பற்றிப் பின்வரும் சுவையானதொரு வரலாறு கூறப்படுகின்றது.

**அரங்கநாத மாணிக்கமும் இடல் கானும் :**

பதினான்காம் நூற்றுண்டின் துவக்கத்தில் தென்னுட்டின்மீது, கோவில் முதலிய சிறந்த இடங்களில் இருந்த அரும்பொருள்களை யெல்லாம் கொள்ளை கொள்ள முகமதிய தளபதி மாலிக்காபூர் படையெடுத்து வந்தார். அச்சமயம், திருவரங்கம் பெரிய கோவிலும் மாலிக்காபூரின் கொள்ளைக்கு உட்பட்டு நின்றது. கோவிலின் அர்ச்சகர் முதலியோர் கோவிலினது அரும்பொருள்களை எல்லாம் எடுத்துக் கொண்டு வெவ்வேறிடங்களுக்கு ஓடி மறைந்தனர். மற்றும் சிலர், மூலத்தானமான திருவரங்கப் பெருமானுக்குப் பகைவர்களால் தீங்கு நேரலாகாதெனத் திருவரங்கநாதரை மறைக்கச் சுற்றிச் சுவர்கள் எழுப்பினர். அக்கோவிலுக்கு ஊழியம் புரிந்து வந்த அரங்கநாத மாணிக்கம், கனகம் என்ற இரு பெண்கள் கோவிலுக்குற்ற இத்தகைய நிலைகண்டு மிகவும் வருந்தினர். பகைவர்களின் கொடுமையை அறிந்து, மனம் வருந்துவதைத் தவிர வேறு ஒன்றும் செய்ய முடியாத அவர்கள் கண்ணீருகுத்துக் கவலைப் பட்டனர்.

இத்தகைய சூழ்நிலையில் மாலிக்காபூரின் தளபதியும் திருவரங்கம் பகுதிக்குத் தலைவருமாகிய 'இடல்கான்' என்பவர் அரங்கநாத மாணிக்கம் என்ற பெண்ணின் அழகைக் கேள்விப்பட்டு, அவளை மணந்துகொள்ள விரும்பிக் கோபாலநம்பி என்பவன் வாயிலாக அவளுக்குச் செய்தி அனுப்பினுர். குறுநில மன்னனைப்போல் வாழ்வு பெற்றிருக்கும் தன்னை மணக்கத் தேவரடியார் குலத்தில் பிறந்த

மாணிக்கம் மிகவும் விரும்புவாள் என்று இடல்கான் நம்பினார். மிக்க கட்டழகு வாய்ந்த மாணிக்கத்தை மணப்பதில் அவர் எத்தகைய முயற்சியையும் கையாளத் தயாராக இருந்தார். கோவிலின் இடிபாட்டையும், பற்பலக் கொள்ளையடிப்புக்களையும் கேள்விப்பட்டிருந்த அரங்கநாத மாணிக்கம் இடல்கான் தன்னை மனைவியாக்கிக்கொள்ள விரும்புகிறார் என்ற செய்தியைக் கேள்வியுற்றுத் திடுக்குற்றாள். அவரது கண்ணிற்குத் தான் தப்பி வாழ முடியாது என்பதைத் திட்டமாக அறிந்த அவள் யாதுசெய்வதெனத் திகைத்தாள். இறுதியாகத் தன் உயிரைக் கொடுத்தேனும் கொள்ளையும் கொலையும் நடத்தும் இடல்கானைப் பழிவாங்கக் கருதினாள். இடல்கானிடமிருந்து வந்த கோபாலநம்பியிடம் தான் இடல்கானை மணக்க விரும்புவதாகவும், ஆனால் இடல்கான் தன்னை ஊரார‌றிய மனம்செய்து கொள்ள வேண்டுமென்றும், மணம் செய்துகொண்ட உடன் திருவரங்கம் பெரிய கோவில் சென்று இறைவனை வணங்க அநுமதி வேண்டுமென்றும், இந்நிபந்தனைகளுக்கு உட்பட்டால் மணம் செய்து கொள்வதற்குத் தடை இல்லை என்றும் கூறியனுப்பினாள்.

இடல்கானும் இந்நிபந்தனைகளுக்கு உட்பட்டார். திருமணம் மிகச் சிறப்புடன் நிறைவேறியது. ஊரிலிருந்தோர் யாவரும் அரங்கநாதர்மீது அளவற்ற பக்திகொண்டவள் போல் நடித்த இப்பெண் முகம்மதியத்தலைவனை மணந்தாளே! என அதிசயமுற்றனர். இடல்கானும், அரங்கநாத மாணிக்கமும் திருமண ஊர்வலம் வந்தனர். அதுபோது

மணமகளாகிய அரங்கநாத மாணிக்கம் இடல் கானுக்கு வெள்ளைக் கோபுரத்தைக் காட்டி, "என் இனிய தலைவரே! இது எத்தகைய சிறந்த கோபுரம் பாருங்கள்! இக்கோபுரத்தின் மீதேறிப் பார்த்தால் இவ்வூரிலுள்ள இனிய காட்சிகளெல் லாம் தெரியும். இதன்மீது ஏறிப்பார்க்க வேண்டுமென்று சிறுவயது முதல் கொண்டுள்ள என் விருப்பம் என் இனிய காதலராகிய தங்களால் தான் நிறைவேறவேண்டுமென்று கூறினாள்." உடனே இடல்கான் அரங்கநாத மாணிக்கத்தை அழைத்துக்கொண்டு வெள்ளைக் கோபுரத்தின் மீது ஏறினார். அதன் மேற் பகுதியில் நின்று இடல் கானுக்கு அரங்கநாத மாணிக்கம் பற்பல இயற்கைக் காட்சிகளைக் காட்டினாள். அவ்வமயம் துரையே! கீழே பாருங்கள்! கோபுரத்தின் உயரம் நன்கு புலப் படும் என்றாள். அத் தலைவர் தலைகுனிந்து கீழே நோக்கினார். உடனே அரங்கநாத மாணிக்கம் அவரது காலை வாரித் தலைகீழாகத் தள்ளினாள். இடல் கானின் உடல் வெள்ளைக் கோபுரத்திலிருந்து விழுந்து சிதறிச் சிதைந்தது. உடனே துருக்க வீரர்கள் அரங்கநாத மாணிக்கத்தைப் பழிவாங்க கோபுரத்தின் மீது ஏறினர். ஆனால், அவர்கள் கையில் அகப்படாமல் கோபுரத்தின் மற்றொரு பக்கத் தில் கீழே விழுந்து உயிரைத் தியாகம் செய்து கொண்டாள்.

அணிகலன்களும் பிறவும் :

இக்கோவிலிலுள்ள தெய்வங்களுக்குச் சாத்துபடி செய்யும் கோவில் நகைகளைப் போன்ற விலையுயர்ந்த

நகைகள் வேறு எங்கும் கிடையா. இவற்றை நாம் காணவேண்டுமாகில் கோவிலதிகாரிகளின் உத்திரவு பெற்றுக் கண்டு களிக்கலாம். அவற்றில் பதிக்கப்பட்டுள்ள விலை மதிப்பற்ற கற்கள் எண்ணற்றன. அவற்றைச் செய்யப் பெரிய அளவு விலையுயர்ந்த தங்கம் பயன்படுத்தப்பட்டது. ஆனால், அவை சிறந்த அலங்காரக் காட்சியளிப்பனவாக இல்லை. நாகரிகமான முறையில் கற்களின் முழு அழகும் வெளிப்படும் வண்ணம் அமைக்கப்படவில்லை. விஜயரங்க சொக்கநாத நாயக்கர் அளித்த பரிசுகளும் 1895-ல் தென் இந்தியாவிற்கு விஜயம் செய்த வேல்ஸ் இளவரசர் அளித்த ஒரு தங்கத் தட்டுமே இக் கோவிற் பொருள்களில் வரலாற்று முக்கியம் வாய்ந்தனவாகக் கருதப்படுகின்றன. நிறைந்த வேலைப்பாடுகளுள்ள ஆடைகள் இக்கோவிலில் உள்ளன. ஜார் மன்னர்களின் வைரமிழக்கப்பட்ட செங்கோலில் விளங்கும் புகழ் வாய்ந்த 'ஆர்லாப் வைரம்' முன்னொரு காலத்தில், திருவரங்கம் கோவில் விக்கிரகத்தின் கண்ணாக அமைந்திருந்தது எனவும், அதனைப் பதினெட்டாம் நூற்றாண்டில் ஒரு பிரஞ்சுக்காரர் கவர்ந்து சென்று விட்டார் எனவும் செவி வழியாக ஒரு செய்தி கூறப்படுகிறது.

கோவிலைப் பற்றிச் சரியான வரலாற்றைத் தெளிவாக அறியக்கூடவில்லை. விரிவாக எழுதப்பட்ட ஒருதல புராணத்தில் கோவிலின் துவக்கத்தைப் பற்றி ஒரு கதை கூறப்படுகின்றது. மற்றொரு நூலாகிய கோவிலொழுகு என்பது அவ்விடத்தின் வரலாற்று நிகழ்ச்சிகளுடன் கூடி அனேகச் செய்திகளைத் தெரிவிக்கின்றது. 'மெக்கன்சி' எழுதிய குறிப்புக்களிலும்

கோவிலின் வரலாறும் குருமார்களின் வரலாறுகளும் குறிக்கப்பட்டுள்ளன. கோவில் கட்டடங்களில் காணப்படும் கல்வெட்டுக்கள் 906 முதல் 946 வரை ஆண்ட முதற் பராந்தக சோழன் காலத்தன எனக் கருதப்படுகின்றன. அவற்றுள் பல வரலாற்றுச் சிறப்புடையனவாகக் காணப்படுகின்றன. அவை பாண்டியர்களாலும் ஹொய்சால மன்னர்களாலும் விஜயநகர அரசர்களின் வழி வந்தவர்களாலும் செதுக்கப்பட்டிருக்கின்றன.

திருவானைக்கா :

திருவரங்கத்தின் மிக அருகில் அமைந்திருக்கும் திருவானைக்காக் கோவிலும் திருவரங்கத்தைப் போன்று அமைந்த கோட்டைக் கோவிலேயாகும். திருவரங்கத்தில் ஏழு சுற்றுச் சுவர்கள் இருப்பதுபோலவே திருவானைக்காவில் ஐந்து சுற்றுச் சுவர்கள் அமைந்திருக்கின்றன. இவ்வைந்துச் சுற்றுச் சுவர்களுக்கும் திருவரங்கத்திலுள்ள ஏழு சுற்றுச் சுவர்களுக்கும் சிலர் தத்துவப் பொருள் கூறுகின்றனர்.


முடிவு :

பிற்காலத்தில் நம்நாட்டில் புகுந்து முதலில் வணிகத்தையும் இறுதியில் அரசியலையும் பறித்துக் கொண்ட முகம்மதியர், பிரஞ்சியர், ஆங்கிலேயர் முதலியோர் தமக்குள் போரிட்டுக் கொண்ட காலங்களில் இத்தகைய கோவில்களைக் கோட்டைகளாகப் பயன்படுத்திக் கொண்டனர். அக்காலப் போர்களால் ஏற்பட்ட அழிவுக்குட்பட்ட சிதைவுகளை இன்றும் சிற்சிலக் கோவில்களில் காணலாம்.

# 7. நாமக்கல் கோட்டை

## கோட்டையின் அமைப்பு:

சேலம் மாவட்டத்தில் நாமக்கல் முக்கியமான தொரு நகரமாக விளங்குகிறது. இவ்வூர், தாலூக் காவின் தலைநகரமாகவும் திருச்சிராப்பள்ளி, சங்ககிரி, துறையூர், சேலம் முதலிய நகரங்களுக்குச் செல்லும் பாதைகள் கூடுமிடமாகவும் இருக்கிறது. இங்கிருந்து காவிரிச் செல்வமாகிய வாழை, வெற்றிலை, நெல், தேங்காய் முதலிய பொருள்களும் கொல்லிமலையின் விளைபொருள்களாகிய பழவகைகள் முதலியனவும் பிறவும் மிகுதியாக ஏற்றுமதியாகின்றன. இவை எல்லாவற்றையும் விட, இவ்வூருக்குப் பெருமை தருவது இவ்வூரின் நடுவே அமைந்திருக்கும் மலைக் கோட்டையேயாகும். இக்கோட்டை அமைந்திருக்கும் மலையின் பெயராகிய நாமக்கல் என்பது தான் இவ் வூரின் பெயராக விளங்குகிறது. நாமக்கல் மலை மிகப் பெரியதும், பிளவற்றதும், கடினமானதுமான ஒரே கற்பாறையாக அமைந்திருக்கிறது. இப்பாறை 200 அடி உயரமும் ஏறத்தாழ முக்கால்மைல் நீளச் சுற்றளவு முள்ளது. இம்மலையின் கிழக்கு மேற்குப் பகுதிகள் எவரும் ஏறவொண்ணுதபடி மிகச் செங்குத் தாகவும் தெற்கு வடக்குப் பகுதிகள் ஏறுவதற்குச் சற்று சரிவாகவும் அமைந்திருக்கின்றன. வடக்குப் பகுதியைக் காட்டிலும் தென்பகுதி சிறிது நீண்ட சரிவாக இருக்கிறது. தென்பகுதியாகிய இச்சரிவில் மலையின்மீது ஏறுவதற்குக் குறுகலாகிய படிகள் வெட்டப் பட்டிருக்கின்றன. இப்படிகள் மலையின்




நாமக்கல் கோட்டையின் தோற்றம்

தென்மேற்குப் பாகத்தில் தொடங்கி, இறுதியில் தென் பகுதியிற் சென்று மேலே மலைக்கோட்டையை அடைகின்றது.

தெற்குத் தென்மேற்குப் பகுதிகளில் சிதைந்த சில சுவர்கள் நிற்கின்றன. இவை தற்போதைய கோட்டை ஏற்படுத்துவதற்கு முன் அமைந்திருந்த பழைய கோட்டையின் சிதைவாகக் கருதப்படுகின்றன. பாறையின் உச்சியிலிருக்கும் கோட்டை சுமார் ஒன்றரை ஏக்கர் பரப்புள்ளதாக இருக்கிறது. மேலே உள்ள கோட்டையின் உட்பகுதி தெற்கில் உயர்ந்தும் வடக்கில் சரிந்தும் காணப்படுகிறது. கோட்டையினுள் தங்கியிருக்க நேரும்போது, தண்ணீர் தேவைப் படுமாதலின் கோட்டையின் மேல் பகுதியில் மழைத் த்ண்ணீர் தங்கியிருப்பதற்குரிய பாழிகள் வெட்டி யமைக்கப் பட்டிருக்கின்றன. இவ்வாறு அமைக்கப் பட்டிருக்கும் பாழியொன்றில் எப்போதும் (கோடைக் காலத்திலும்கூட) நீர் நிறைந்திருக்கிறது. மற்றும் சில பாழிகளில் தண்ணீர் இருக்கின்றது. இங்ஙன முள்ள பாழிகளில் கோட்டையின் மேற்பரப்பின் தென் பகுதியில் உள்ளது பெரியதும் நீர் நிறைந் ததும் ஆகும். இப்பாழியில் நீராடுவதற்கெனப் பலர் செங்குத்தான இம்மலைமீது ஏறுகின்றனர். கோட்டையின் வடக்குப் பகுதியில் இரகசிய வாயில் ஒன்று அமைந்துள்ளது. இந்த ரகசிய வழி ஆபத்து வந்த காலங்களில் தப்பிச் செல்வதற்காக ஏற்பட்டதாகும். மலையின் மேலுள்ள மேற்பரப்பனைத்தும் நன்கு பயன் படுத்தப்பட்டிருக்கின்றன. கோட்டையின் உட்பகுதி நீங்கலாக ஓரங்குலச் சமநிலங்கூட மேற்பரப்பில் கிடையாது.

கோட்டையினுள்ளே ஒரு சிறிய திருமால் கோவில் இருக்கிறது. இக்கோவிற் சுவர்களில் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இங்கு மற்று மொரு பாழடைந்த செங்கற் கட்டடமும் நிற்கிறது. இக்கட்டடம் ஏறத்தாழச் சம சதுரமாகக் கட்டப்பட் டிருக்கிறது. இதன் நீளம், அகலம், உயரம் முதலியன சுமார் 30 அடிகள் இருக்கின்றன. இக் கட்டடம் பண்டைக் காலத்தில் பொக்கிஷ சாலையாக இருந்திருக்கலாம் என்று கருதுகின்றனர். இக்கோட்டையின் சுற்றுச் சுவர்கள் மிக வலிமை வாய்ந்து நல்ல நிலையிலிருக்கின்றன. இச்சுவர் களின் அடிப்பகுதி கடினமான கருங்கற் பாளங்களால் அமைக்கப்பட்டிருக்கின்றன. இங்ஙனம் அமைக்கப் பட்டிருக்கும் கற்கள் சுண்ணும்புக் காரையால் பொருத் தப்படாமல், அவற்றின் கன அளவைக் கொண்டும் அடிப்பகுதிகளில் காடிகள் வெட்டப்பட்டும் பொருத் தப்பட்டிருப்பது அரிய வேலைப்பாடாகும். இங்ஙனம் அமைக்கப்பட்ட கோட்டைச் சுவருக்கு வேண்டிய கற்கள் பாறையின் மேற்குப் பகுதியிலிருந்தே வெட்டி யெடுக்கப்பட்டிருக்கின்றன. கோட்டைச் சுவரின் மேற்குப் பகுதி சுண்ணும்புக் காரையால் அமைக்கப் பட்ட செங்கற் சுவர்களாகும். இச்சுவர் மூன்றடி அகலமுடையதாகவும் அலங்கங்களாகவும் இருக் கின்றன. இக்கோட்டைச் சுவரின் உட்பகுதியில் பாதுகாப்புக் காலங்களில் வீரர்கள் அலங்கங்களின் மறைவில் நின்றுகொண்டு சுடுவதற்காகப் பல கண்ணறைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. வீரர்கள் நின்றுகொண்டு கண்ணறைகளின் வழியாகப் பகைவர்களைச் சுடுவதற்கென மேடையொன்று

அமைக்கப்பட்டுள்ளது. இங்கே பலவிடங்களில் தப்பித்துக்கொள்ளப் பல நிலவறைகளும் அமைக்கப் பெற்ருக்கின்றன. இவற்றில் அக்கால மன்னர்களால் சேர்த்துவைக்கப்பட்ட அரிய பொருள்கள் தொகுத்து வைத்திருந்ததாகக் கூறப்படுகிறது.

**கமலாலயம் :**

நாமக்கல் பாறையின் சரிவுகளில் கிண்ணங்களைப் போன்று, சிற்சில குழிகள் காணப்படுகின்றன. அவற்றில் உள்ள தண்ணீர் உடலுக்கு நலம் பயப்பதாகக் கருதிச் சிலர் செங்குத்தான சரிவுகளில் ஏறிச் சென்று அவற்றில் குளிக்கின்றனர். மலையைச் சூழப் பல குன்றுகள் இருக்கின்றன. மலையின் மேற்குப் பகுதியில் இரண்டு குளங்களும் வடமேற்குப் பகுதியில் ஒன்றும் தென்கிழக்குப் பகுதியில் ஒன்றுமாக நான்கு குளங்களிருக்கின்றன. அவற்றுள் பெரியதாகக் காணப்படுவது தென்கிழக்குப் பகுதியிலுள்ள இலக்குமியின் உறைவிடம் எனப்படும் கமலாலயமேயாகும். இக்குளம் சுமார் முக்கால் மைல் சுற்றளவுள்ளதாக அமைந்திருக்கிறது. குளத்தின் நடுவே அழகானதொரு நீராழி மண்டபம் காணப்படுகிறது. இக் குளத்தின் நீர்தான் ஊரவர்களின் குடிநீராகப் பயன்படுகிறது. இக்குளத்தைப் பற்றியும், மலையைப் பற்றியும் புராணக் கதையொன்றும் கூறப்படுகிறது. இக்குளம் நாமகிரியம்மனுக்குரியது.

**குளத்தையும் மலையையும் பற்றிய புராணக் கதை :**

இராம இராவணப் போரில், ஒரு சமயம் இலக்குமணன் இராவணனுடன் போர்செய்து காய

முற்று விழுந்தபோது, இலக்குமணனைக் காப்பாற்ற அநுமான் சஞ்சீவி மலையைத் தேடச் சென்றனன். அங்ஙனம் சென்ற அநுமான் தேடிய சமயத்தில், கந்தக ஆற்றுப் படுகையின் ஒரு பகுதியில் ஒரு சாளக் கிராமத்தைக் கண்டு எடுத்துக் கொண்டான். மீண்டும் அவன் சஞ்சீவி மலையுடன் திரும்பி வந்துகொண்டு இருக்கும் வழியில், இலக்குமி தவம் செய்து கொண்டிருக்கும் கமலாலயத்தைக் கண்டான். அப்போது இலக்குமி இரணியனைக் கொல்லத் திருமாலை நரசிம்மாவதாரம் எடுக்கும்படி வேண்டித் தவம் செய்துகொண்டிருந்தாள்.

கமலாலயத்தைக் கண்ட அநுமான் சாளக் கிராமத்தை நிலத்தில் வைத்துவிட்டுக் குளத்தில் நீரருந்தினன். வைத்தவிடத்தில் பற்றிக்கொள்ளும் இயல்புள்ள அச் சாளக் கிராமத்தை அநுமானல் மீண்டும் பெயர்த்தெடுக்க இயலவில்லை. அதனல் அநுமான் அச் சாளக் கிராமத்தை விட்டுவிட்டுப் போய் விட்டான். அச் சாளக் கிராமமே பின்னளில் பெரு மலையாக வளர்ந்துவிட்டதென்றும், அதுதான் நாமக் கல் மலை என்றும் கூறப்படுகிறது. இங்கு அநுமான் வந்து சென்றதன் நினைவாக நாமகிரி அம்மனுடைய சந்நிதிக்கு எதிரில் மிகப்பெரிய சுமார் 20 அடி உயரமுள்ள அநுமான் சிலையொன்று தொழும் நிலையில் அமைந்துள்ளது. இம் மலையின் கிழக்குப் பக்கத்தில் சற்று உயரமுள்ள பகுதியில் வரதராசப் பெருமாள் கோவில் ஒன்று இருக்கிறது. மலையின் மேற்குப் பகுதியில் மலையின் அடிப்பகுதியை யொட்டி அரங்க நாதர் கோவில் ஒன்றும் உள்ளது. இங்குப் பல்லவ

மன்னர்களால் மலையைக் குடைந்து அமைக்கப்பட்ட கோவிலொன்றும் இருக்கிறது.

**திரு. பி. தி. சீனிவாசய்யங்கார் கூறும் வரலாறு:**

"நாமக்கல்லில் மலைக்கோயில்கள் இரண்டு உண்டு. அவற்றில் அரங்கநாதன் கோயில் மகேந்திரன் (பல்லவ மன்னன்) கட்டியதாகும். நரசிம்மன் கோயில் கொஞ்சம் பிந்திய காலத்தில் கட்டப் பெற்றது. அரங்கநாதன் கோயில் மகேந்திரன் செய்த கோயில்களெல்லாவற்றிலும் மிக அழகானது. இங்கிருக்கும் பள்ளிகொண்ட திருமாலின் விக்கிரகத்தைவிட உயர்ந்த செதுக்குவேலை உலகில் எங்கும் இல்லையென்று கூறலாம். குகைக் கோயிலும் அற்புதமாய்க் குடையப் பட்டிருக்கிறது. கோயில் முன் மண்டபத்துக்கு வெளியில் மூங்கிலால் செய்த தாழ்வாரத்தைப்போல் மலையைக் குடைந்து காட்டியிருக்கிறது. இக்காட்சியை நேரில் பார்த்தால்தான் புத்திக்குப் புலப்படுமேயன்றி வருணிக்க முடியாது. நாமக்கல் கோயிலை ஆதிரங்கம் என்பர். கோயில்களின் சுவர்கள்மீது கைடபன்கதை, நரசிம்மாவதாரக் கதை, மச்சாவதாரக்கதை முதலியன அழகிய சிலைகளால் காட்டப் பெற்றிருக்கின்றன. "நாமக்கல் மலையடியில் உள்ள நரசிம்ம சுவாமி குகைக் கோயில் (மகேந்திரனது மகனாகிய) நரசிங்கப் போத்தரையன் காலத்தது போலும். அதன் சுவரில் புராணக் கதைகள் சிற்பத்தால் காட்டப்பெற்றிருக்கும்." ('பல்லவர் சரித்திரம்' முதல் பாகம்) இவரது கூற்றுக்களால் நாமக்கல் கோயில்களில் காணும் அற்புத சிற்பங்களின் பெருமை நன்கு விளங்குகிறது. இனி,

கோட்டையைப் பற்றிக் காணும் வரலாறுகளை நோக்குவோம்.

நாமக்கல் கோட்டை வரலாறு:

சங்க காலத்தில், கொல்லிமலை நாட்டையாண்டு வந்த ஓரிமன்னனது மலைக்கோட்டையில் அடையாளங்கள் நாமக்கல் மலைக்கோட்டையில் காணப்படுவதாக அறிஞர் பலர் கூறுகின்றனர். இக்கோட்டை சேந்தமங்கலம், நாமக்கல் முதலிய பகுதிகளின் அரசனாக விளங்கிய பாளையக்காரர் இராமச்சந்திர நாயக்கரால் கட்டப்பட்டிருக்கலாம் என்று கூறுகின்றனர். இக்கருத்திற்கு மாறாக H. லெபான், I. C. S. அவர்கள், மைசூர் அரசரிடம் உத்தியோகத்திலிருந்த இலட்சுமி நரசிம்ம ஐயாவால் நானூறு ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது என்று கூறுகிறார். இக்கோட்டையின் அமைப்பு, கற்களில் காணும் புதுமைத்தன்மை, புதுமுறைப் பாதுகாப்பு முதலியவற்றைக் கொண்டு ஆராயும்போது, சுமார் இருநூறாண்டுகளுக்கு முற்பட்டதாக இருக்க முடியாதென்றும் வேறு சிலர் கூறுகின்றனர். பிற்காலத்து மைசூர் மன்னர்களின் ஆட்சி தெற்கில் சேலம் மாவட்டத்தின் தென்பகுதியாகிய நாமக்கல் கூற்றத்தின் எல்லையில் இருக்கும் வலையப்பட்டி வரை பரவியிருந்தது. அதுபோது, இம் மலைக்கோட்டையும் மைசூர் மன்னர்களுக்குச் சொந்தமுடையதாக இருந்தது. இக்கோட்டையைக் கிழக்கிந்தியக் கம்பெனியைச் சேர்ந்த 'உட்' என்பவர் 1768-ல் மைசூர் மன்னரான ஹைதரிடமிருந்து கைப்பற்றி மீண்டும் அதே ஆண்டில் ஹைதரிடம்

விட்டு விட்டு ஓடினர். இறுதியில் கோட்டை கிழக்கிந்தியக் கம்பெனியார் வசப்பட்டு நின்றது. கிழக்கிந்தியக் கம்பெனியார் இந்தியச் சிப்பாய்களைப் பாதுகாப்பாக வைப்பதற்கு இக்கோட்டையைப் பயன்படுத்தி வந்தனர். இன்று இக்கோட்டை பழங்காலச் சின்னங்களுளொன்றாகக் காட்சி யளித்து நிற்கிறது. இக்கோட்டையின் மேற்சென்று காண்பவர் தொகை மிகவும் குறைவு எனினும், இக்கோட்டை நகரின் நடுவே பலர்க்கும் பழம்பெருமையை யுணர்த்தும் பெரும் பொருளாய் இன்றும் விளங்குகின்றது.

---

## 8. புலிக் கோட்டை

**நீலமலையின் மாண்பு:**

கோடைக்கால வெம்மைக்கு ஆற்றாது குளிர்ச்சிக்காக நம்நாட்டுச் செல்வர்களில் பலர் நீலகிரிக்குச் சென்று இன்பமாகத் தங்கித் திரும்புவர். அங்கே தங்கியுள்ள காலங்களில் மலைக்காட்சிகளைக் கண்டு மகிழ்ச்சி எய்துவர். அங்கிருக்கும் மலைவாசிகளான தொதவர், வடுகர், குறும்பர், இருளர் முதலியவர்களில் வயதுவந்தோர்களைக் கண்டு அவர்களுடன் உரையாடின் அம்மலைப் பகுதியைப் பற்றிய வியக்கத்தகுந்த பல வரலாறுகளைக் கேட்டு மகிழலாம்.

இந்நீலமா மலையில் பற்பல நகரங்களும் சிற்றூர்களும் விளங்குகின்றன. அவற்றுள், புதுக்கோட்டை என்னும் கிராமம் வரலாற்றுப் பெருமை வாய்ந்ததாகும். இதனையே புலிக்குன்று, புலிப்பாறை, புலிக்கோட்டை என்றும் கூறுவர். அக்கிராமத்தின் அருகேயுள்ள குன்றின் உச்சியில் ஏறிப்பார்த்தால் கோட்டையின் அழிபாடுற்ற பற்பல சின்னங்கள் காணப்படுகின்றன. அக்குன்று ஆறுயிரம் அடி உயரமுடையது. செங்குத்தான அக்குன்றின் உச்சியிலிருந்து கீழ்நோக்கிப் பார்த்தால் மனம் நடுக்கங் கொள்ளும். நாற்றிசைகளையும் நோக்கினல் பேரானந்தம் உண்டாகும். கோவை நகரின் அழகிய வீடுகள், பாம்புபோல் வளைந்து வளைந்து செல்லும் பவானியாறு, மலை உச்சிக்கு வரும் பாட்டை, மேற்குத் தொடர்ச்சி மலைகளின் மேல் தவழுங் கருமேகங்கள், மலையின் பசுமையான மரம் செடி கொடிகள், இவற்றினிடையே விளங்கும் கூனூரின் வெண்ணிற மாளிகைகள் ஆகியவற்றைப் பார்க்கப் பார்க்க அளவற்ற மகிழ்ச்சி தோன்றும்.

புலிக்கோட்டையின் வரலாறு:

இக்குன்றின் மேலுள்ள புலிக்கோட்டை, மலைக் கோட்டை, கோணக் கரையிலுள்ள உதயராயன் கோட்டை என்னும் மூன்று கோட்டைகள் தான் இம் மலைப் பகுதியில் காணும் எட்டுக் கோட்டைகளில் மிகவும் முக்கியமானவை யாகும். இவை வடுக மரபினரின் முன்னேரால் கட்டப்பட்டனவென்றும் அம்மரபின் வழியாக வந்த மூவர் இந்நீலகிரியை மூன்று பாகங்களாகப் பிரித்து ஆண்டு வந்தனர்

என்றும், இம்மூவர்கள் காலத்தில் வடுக மரபினர் பெருவீரர்களாகத் திகழ்ந்தனர் என்றும் சொல்லப் படுகின்றன. காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்ட பல்லவர்கள் வல்லரசர்களாக விளங்கிய காலத்தில் அவர்களது படைத்தலைவர்களாக விளங்கிய குறும்பர் என்பவர்கள் நீலகிரி முழுவதும் பல கோட்டைகள் கட்டி, மலைவளத்தைப் பேணிப் பெருக்கி வாழ்ந்து வந்தனர் என்றும் வேறு சிலர் கூறுகின்றனர்.

புலிக்கோட்டையின் அமைப்பும் சிறப்பும் :

எது எவ்வாருயினும் அப்பழமை வாய்ந்த மலையின்மேல் எட்டு இடங்களில் கோட்டைகளிருந்தன என்பதற்குரிய அடையாளச் சின்னங்கள் காணப் படுகின்றன. புலிக்குன்று—புலிக்கோட்டை என்பது செங்குத்தான ஒரே பாறையாலாயது. அக்குன்றின் மூன்று பக்கங்களிலும் அகன்று விரிந்து ஆழம் பொருந் திய பள்ளத்தாக்குகளும் அப்பள்ளத்தாக்கில் இடை விடாது நெருங்கி அடர்ந்த செழுமை பொருந்தி விளங்கும் மரம், செடி, கொடிகளின் பசிய தோற்றமும் அவற்றினூடே இருண்டு தோன்றும் நிழற்சாயலின் வனப்பும் காண்பார். இவ்வியற்கையின் பேரழகைக் கண்டே இதனை நீலகிரி என்றனர் போலும் என்று கருதுவர். நான்காவது பக்கத்திலோ வெனின் இக் குன்றைப் பிணைக்கும் குறுகிய பாறைப் பாலம் ஒன்றுளது. இப்பாறைப் பாலத்தின்மீது ஒருவர்தான் நடந்து செல்லமுடியும். இயற்கையான அப்பாறை செங்குத்தாக இருப்பதுமன்றி, வழவழப்பாயும் நான்கு பக்கங்களிலும் அரண்கள் அமைந்ததாயும் இருப்பதை நோக்கின், அதன் அதியற்புத அருமையை அறிய

லாம். நூலேணி முதலிய எவ்வித உதவியைக் கொண்டும், இப்பாறையின் உச்சியை எதிரிகள் அடைய முடியாது.

நான்கு பக்கங்களிலும் உறுதியும் உயரமுமான மதில்களும், பகைவர்களின் வருகையைக் காண அம் மதிற்சுவர்களில் செப்பனிட்டுள்ள கிளிக்கூண்டின் பிறைகளும் உடையதாய், 500 கஜ நீளமும் 200 கஜ அகலமுமுடையதாகிய பெரியதொரு மதிற்சுவரும் விளங்குகின்றன. இக்கோட்டைச் சுவர் ஐந்தடி அகல முடையதாக இருக்கிறது. இக்கோட்டையினுள் செல் லுதற்குப் பாறைப் பாலத்தை நோக்கிய வாயிலே முக்கியமானதாக அமைந்திருக்கிறது. இதற்கு நேரே பின்புறத்தில் பள்ளத்தாக்கை நோக்கி யமைந்தொரு வாசலும் உண்டு. சுமார் நூற்றைம்பது வருஷங் களுக்கு முன் இக்கோட்டைக்குள் பற்பல வீடுகளில் மக்கள் வாழ்ந்து வந்தனர் என்பதற்குரிய அடையாளங்கள் காணப்படுகின்றன. தற்போது இக்கோட்டையின் உட்பகுதிகள் மரம், செடி, கொடிகள் நிறைந்த புதர்களாகக் காட்சியளிக் கின்றன.

ஆதியில் வடுக மன்னர்களாலும் பல்லவ மன்னர் களின் ஆட்சிக்குட்பட்ட சிற்றரசர்களான குறும்ப அரசர்களாலும் அமைக்கப்பட்ட இக்கோட்டைகள் பிற்காலத்தில் வந்த முகமதிய மன்னர்களின் ஆட்சிக் குட்பட்டு நின்றன. அதுசமயம் நடந்ததொரு வரலாறு இக்கோட்டையின் பெருமையை நன்கு விளக்குவதா யமைந்துள்ளது.

### திப்புசுல்தானும் புலிக்கோட்டையும் :

மைசூர் நாட்டையாண்ட திப்புசுல்தானுக்கும் கிழக்கிந்தியக் கம்பெனியரான ஆங்கிலேயர்களுக்கும் பகை ஏற்பட்டு, அடிக்கடி போர்கள் நிகழ்ந்துகொண்டேயிருந்தன. ஒருவரையொருவர் தாக்கி அழிக்கத்தக்க காலத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். தம்மை அடக்கி ஒடுக்கிவிட ஆங்கிலேயர் மிகவும் முனைந்து நிற்கின்றனரென்பதைத் திப்பு நன்கு அறிந்திருந்தும் அஞ்சாமல் ஆங்கிலேயரை எதிர்த்து வந்தார். திப்பு தனது ஆட்சிக்குட்பட்டிருந்த கோட்டைகள் எல்லாவற்றையும் பலப்படுத்திப் பாதுகாப்புச் செய்துவந்தார். சிறந்த பாதுகாப்புடையதாக விளங்கிய புலிக் கோட்டை, மலைக்கோட்டை, உதயராயன் கோர்ட்டை ஆகிய மூன்றினையும் மிகவும் திருத்தியமைத்து, அவற்றிற்கு முறையே 'சையத்பாத்' 'உசேன்பாத்' 'உமர் பாத்' என்ற பெயர்களையும் வழங்கினர். அப்போது அக்கோட்டைகளின் பாதுகாப்புத் தலைவனாக 'அலி கான்' என்ற முகமதிய வீரனை நியமித்தார்.

### கேப்டன் ஹெபர்ட்டுச் சிறைப்படல் :

திப்பு சுல்தானைப் பன்முறை போருக்கிழுத்து தோற்று, மதிப்பிழந்த கேப்டன் ஹெர்பர்ட்டு, என்பவன் எவ்வாருவது திப்புவை அடக்கிவிட வேண்டுமென்று கருதினன். இதன் காரணமாக மாறு வேடம் பூண்டு திப்புவின் இராணுவ இரகசியங்களை அறிந்து வரத் தானே புறப்பட்டான். மிகத்திறமையாக மாறுவேடத்தில் சென்று, திப்புவின் படை வலிமை, போர் நுணுக்கம் ஆகியவற்றை அறிந்து

கொண்ட கேப்டன் ஹெர்பர்ட்டு, இம்முறை எப்படியும் திப்புவை வென்று விடலாம் எனக் கருதி மனப்பால் குடித்தான். வந்த காரியத்தைத் திறமையாக முடித்துக் கொண்டு தனது நண்பர்களான ஆங்கில வீரர்கட்குக் கூறி, நாடு பிடிக்கத் திட்டமிட்டிருந்த ஹெர்பர்ட்டைத் திறமை மிக்க திப்புவின் வீரர்கள் மிகச் சாதுரியமாகச் சிறை செய்தனர். ஹெர்பர்ட்டுத் தப்பினால் தமக்குப் பெருங் கெடுதி விளையுமென்பதைத் தெளிவாக அறிந்த திப்புசுல்தான் ஆங்கிலேயர்களால் மீட்க முடியாத இடமொன்றில் ஹெர்பர்ட்டைச் சிறை வைக்கக் கருதினார். இங்ஙனம் சிந்தித்த திப்புவின் சிந்தனைக்குச் சிறந்த கோட்டையாகத் தோன்றியது நீலமாமலையில் ஆறுயிரம் அடி உயரத்திலிருந்த புலிக்கோட்டையேயாம்.

## ஹெர்பர்ட்டைத் தேடும் முயற்சி :

ஹெர்பர்ட்டு, புலிக்கோட்டையில் சிறை வைக்கப் பட்டான். கேப்டன் ஹெர்பர்ட்டிற்குக் காவலாக நூறு வீரர்களை அங்கு வைத்தார். அவ்வீரர்களுக்கான உணவுப் பொருள்களை வாரத்திற்கொரு முறை அனுப்பி வைக்க அம்மலையின் கீழுள்ள கிராமத் தலைவனுக்கு உத்திரவு பிறப்பிக்கப்பட்டது. உளவறியச் சென்ற கேப்டன் ஹெர்பர்ட்டின் வருகையை எதிர்பார்த்த ஆங்கிலேயர்கள் ஏமாந்தனர். இன்று வருவான், நாளை வருவான் என்று கருதி, பொறுத்துப் பொறுத்துப் பார்த்தனர். பொறுமையை இழந்த அவர்கள் ஒரு வேளை ஹெர்பர்ட்டு, திப்புவின் வீரர்களால் சிறைப் பிடிக்கப்பட்டிருக்கலாம் என்று

கருதினர். திறமை மிக்க ஹொர்பர்ட்டை எவ்வாறு யினும் தப்பிவிக்க வேண்டுமென்று கருதிய வெள்ளையர் அச்செயலுக்கு ஹொர்பர்ட்டின் நெருங்கிய தோழனும் நுட்பமதி படைத்தவனுமான வார்டு என்பவனை அனுப்பத் துணிந்தனர். எப்பொழுதும் ஹொர்பர்ட்டின் நினைவாகவே இருந்துவந்த வார்டும் தனக்கிட்ட பணியைப் பெரும்பேருகக் கருதிப் புறப் பட்டான். வார்டு, பலவித மாறுவேடங்கள் பூண்டு, மைசூர் நாட்டில் சுற்றித் திரிந்தான். ஹொர்பர்ட்டு, சிறை வைக்கப் பட்டிருக்கும் செய்தி மிகவும் இரகசியமாகக் காக்கப்பட்டு வந்ததால் வார்டு, ஹொர்பர்ட்டைப் பற்றி எளிதில் அறிந்து கொள்ள முடியவில்லை. முயன்ருல் முடியாததும் உண்டோ? என்ற முதுமொழியை முழுமனதுடன் நம்பிப் பாடு பட்ட வார்டு, பல மாதங்களுக்குப் பின் ஹொர்பர்ட்டு இறக்கவில்லை என்பதையும் நீலமலைப் பகுதியிலுள்ள தொரு மலைக்கோட்டையில் சிறை வைக்கப்பட்டிருக் கிருன் என்பதையும் அறிந்து கொண்டான். ஒருவாறு நண்பன் இருக்குமிடத்தை அறிந்து கொண்ட வார்டு எவ்வாருவது ஹொர்பர்ட்டை விடுவித்து விடலாம் என்ற மன உறுதியுடன் நீலமலை நோக்கி நடந்தான்.

சிறைப்பட்ட ஹொர்பர்ட்டோ தனது மனக் கோட்டை தகர்ந்ததை எண்ணி எண்ணி ஏங்கினுன். மனக்கோட்டை தகர்ந்த அவன், புலிக்கோட்டையில் சிறைப்பட்டபோது இனி நமக்கு விடுதலை கிடையாது. இங்கிருந்து நம்மை இனி எவரும் விடுவிக்க இயலாது. இனி இங்கிருந்தே இறக்க

வேண்டியதுதான் நமது தலைவிதி போலும் என்று முடிவு கட்டினான். பல சமயங்களில் தனது தாய் நாடாகிய இங்கிலாந்தை எண்ணி வருந்தும் ஹெர்பர்ட்டுக்கு இயற்கைக் காட்சிகள் ஓரளவு ஆறுதலளித்து வந்தன. சிற்சில சமயங்களில் ஹெர்பர்ட்டு நாம் சிறைபட்டதுங்கூட நன்மைக்கே. சிறைபடாவிடின் இத்தகைய இயற்கைக் காட்சிகளை காண இயலுமோ? என்று கூடக் கருதினான். இங்ஙனம் பலவாறு புலம்பிப் புலிக்கோட்டையில் வருந்தி வாழ்ந்தான்.

### கிராமத் தலைவன் உறுதி:

ஒரு நாள் வார்டு மாறுவேடத்துடன் புலிக் கோட்டையின் அடியில் இருக்கும் கிராமத்திற்கு வந்து சேர்ந்தான். மெல்லப் பக்குவமாகக் கிராமத் தலைவனைக் கண்டு பேசினான். தனக்கு உதவிசெய்ய வேண்டுமென்று ஆரம்பித்து, கையூட்டாக (லஞ்சம்) ஆயிரம் வரான்களைக் கொண்ட பெரியதொரு பண முடிப்பைக் கிராமத் தலைவனுக்குக் கொடுக்கத் தொடங்கினான். தவறான வழியில் பொருள் சேர்க்க விரும்பாத அக் கிராமத் தலைவன், வார்டைத் திட்டிக் கண்டித்து விட்டான். இறுதியாக வார்டு, ஐயா, நான் இம் மலையுச்சி சென்று இயற்கைக் காட்சிகளைக் கண்டு மகிழத் தாங்கள் அனுமதியளிக்க வேண்டும் என்று கெஞ்சினான். உடனே கிராமத் தலைவன் அவன்மீது ஐயங்கொண்டான். நீ பொன் கொடுப்பதும், மலை உச்சி செல்ல விரும்புவதும் நோக்கின், ஏதோ இதில் சூது உண்டெனத் தோன்றுகிறது. காசு பெரிதன்று; மானமே பெரிது; உடனே நீ இங்கிருந்து ஓடிவிடுக.

இல்லையேல் உயிர்தப்ப மாட்டாய்! என்று கூறி விரட்டிவிட்டான். வார்டு இவற்றிற்கெல்லாம் மனம் தளராமல் பல நாள் அவ்வூரிலேயே மறைந்து வாழ்ந்து வந்தான். மலைக்காவல் வீரர் பலரையும் அணுகிப் பசப்பு மொழிகள் கூறிப் பணத்தை நீட்டு வதும், அவர்கள் அவனைக் கண்டித்து விரட்டுவதும் வழக்கமான நிகழ்ச்சிகளாக இருந்தன. இதைக் கண்டு வார்டு, தென்னாட்டு மக்களின் ஒழுக்கத்தையும், உறுதியையும் வியந்தான். எனினும், கருதிய செயல் முடியவில்லையே என்பதற்காகப் பெரிதும் வருந்தினான்.

சதிச் செயல்:

ஒரு நாள் வார்டு வழக்கம்போல் மலைக்காவல் வீரன் ஒருவனைக் கண்டு பேசினான். அவன் பெயர் மாபுஸ்கான் என்பது. அம்மாபுஸ்கான் தனது மனைவிக்குப் பிள்ளைபேறு காரணமாக உடல்நல மின்றியிருப்பதாக அறிந்து, அதற்காக ஒருமாத விடுமுறை பெற்றுச் சொந்த ஊருக்குப் போக வந்து கொண்டிருந்தான். சிந்தையைச் சொந்த ஊரின் மீது பதித்த அவன் கையில் போதுமான பணமில் லாமை குறித்து வருந்திக் கொண்டே வழி நடந்தான். இத்தகை சூழ்நிலையில் இருந்த மாபுஸ்கானைக் கண்டு வார்டு வழக்கம்போல் பணத்தை நீட்டினான். பெரிய பையில் பொற்காசுகளாக இருந்த ஆயிரம் வராகன் களைக் கண்டதும் மாபுஸ்கான் மனம் மடங்கி விட்டது. ஐயா, தங்கள் விருப்பம் எதுவாயினும் என்னால் இயன்ற உதவி செய்ய வல்லேன்! என்று கூறி மாபுஸ்கான் பல்லிளித்து நின்றான். உடனே வார்டும்

மாபுஸ்கானும் நண்பரானுர்கள். மாபுஸ்கானும் வார்டும் மைசூர் நாட்டிலுள்ள மாபுஸ்கானின் சிற்றூருக்குச் சென்றுர்கள். அங்கு இருவரும் சில நாட்கள் தங்கியபின், விரைவில் நீலகிரிக்குத் திரும்பினர். விடுமுறை நாட்கள் முடிவதற்கு முன் திரும்பிய மாபுஸ்கானைக் கண்ட கோட்டையின் பாதுகாப்புத் தலைவனுக்கு ஐயம் பிறந்தது. மாபுஸ்கான் தலைவனுக்குப் பற்பல சமாதானங்கள் கூறி மழுப்பி விட்டான். கோட்டைத் தலைவன் தன்மேல் ஐயப் பட்டிருக்கிருன் என்பதைத் தெளிவாக உணர்ந்து கொண்ட மாபுஸ்கான் எச்சரிக்கையாக நடந்து கொண்டான். வார்டின் விருப்பப்படி மலையின்மீது அழைத்துச் செல்வதைச் சற்றுத் தள்ளிப் போட்டுக் கொண்டே வந்தான். விடாமுயற்சியுடைய வார்டு அடிக்கடி மாபுஸ்கானை கண்டு பேசுவது வழக்கமாயிற்று. கோட்டைக் காவலர்களில் மங்களன் பிரதாபன் இருவரும் மாபுஸ்கான் அந்நியனுகிய வெள்ளை மனிதனேடு நெருங்கிய தொடர்புடையவனைப் பேசிப் பழகி வருவதை வெறுத்தனர்.

பலமுறை அவர்கள் மாபுஸ்கானை நலம் விசாரிப்பதுபோல் மெல்ல அணுகிப் பரிகாசம் செய்யத்தலைப்பட்டனர். மாபுஸ்கான் அவர்கள் பரிகாசம் செய்யும் கருத்தைத் தெரிந்துகொண்டான். தான் வெள்ளையனுக்கு உடந்தையாக நின்று காட்டிக் கொடுக்கவிருப்பதை அவர்கள் கோட்டைப் பாதுகாப்புத் தலைவனுக்கு அறிவித்துவிட்டால் ஆபத்தாய் முடியுமென்று அஞ்சினுன். உடனே கோட்டைப் பாதுகாப்புத் தலைவனை அணுகி மங்களன்,

பிரதாபன் ஆகியோர்மீது கோள்கள்பல மூட்டினுன். பொய்யை மெய்யெனக்கொண்ட அக்கோட்டைத் தலைவன் மாபுஸ்கானின் கருத்தின்படி அவ்விரு வீரர்களையும் மைசூர் நாட்டிற்கு அனுப்பிவைத்தான். சதிவிளையாடத் தொடங்கிய அவ்விடத்தைவிட்டுப் பிரிந்திருப்பதே சிறந்ததென்று கருதிய மங்களன், பிரதாபன் இருவரும் மகிழ்ச்சியோடு ஊர்திரும்பினர்.

ஹெர்பர்ட்டின் சிறை மீட்சி:

ஒருநாள் கோட்டையின் மேற்பகுதி வாயிலாகிய பாறைப்பாலத்தில் பத்து வீரர்கள் இரண்டாம் சாமக் காவல் புரியவேண்டுமென்பது கோட்டையின் பாது காப்புத் தலைவனது உத்திரவு. அப்பத்து வீரர்களுள் மாபுஸ்கானும் ஒருவனுவான். இரண்டாம் சாமக் காவலுக்கு வந்தவுடன் மாபுஸ்கான் ஏனைய வீரர் களுக்கெல்லாம் தின்பண்டங்கள் கொடுத்தான். மயக்க மருந்து கலந்த அத்தின்பண்டங்களை யுண்ட வீரர்கள் மயங்கி மண்ணில் சாய்ந்தனர். உடனே மாபுஸ்கான் கேப்டன் ஹெர்பர்ட்டைக் கோட்டைச் சிறையிலிருந்து தப்புவித்துப் பாறைப் பாலத்தைக் கடத்திக்கொண்டு வந்து வெளியில் விட்டுவிட்டான். முன்கூட்டியே செய்திருந்த முன்னேற்பாட்டின்படி மாபுஸ்கானின் மைத்துனன் ஹெர்பர்ட்டின் வருகைக்காகக் காத்திருந் தான். மாபுஸ்கானின் மைத்துனன் ஹெர்பர்ட்டுக்குக் காட்டினுள் வழிகாட்டி அழைத்துக் கொண்டு போய்க் கொண்டிருந்தான்.

**விதிச் செயல் :**

அது சமயம் தாய்ப்புலியொன்று மாபுஸ்கானின் மைத்துனனைத் தனது குட்டிகளின் இரைக்காகக் கௌவித் தூக்கிக் கொண்டு போயிற்று. அதுகண்டு மனமும் உடலும் நடுங்கிய ஹெர்பர்ட்டு, கால் நழுவி, ஏறத்தாழ நானூறடிகள் உருண்டு விழுந்தான். இதனால் மறுநாள் சூரிய உதயம் வரை நினைவற்றுப் போன ஹெர்பர்ட்டு விழித்துப் பார்த்து, தப்பித்தோம் பிழைத்தோமென்று அருகேயிருந்த ஒரு மலைக் குகையில் ஒளிந்து கொண்டான். பல நாள் வெளி வரத் துணிவின்றி மலைப்பகுதியில் கிடைக்கும் காய் கனிகளை உண்டு குகையிலேயே மறைந்திருந்தான்.

**முடிவு :**

ஒரு நாள் அம்மலையில் வாழும் தொதவன் ஒருவன் விறகு தேடச் சென்றிருந்த சமயம் மலைக் குகையில் கிடந்த அவன் மீது இரக்கப்பட்டு அழைத்துவந்து, அவனுக்குப்பல மருத்துவ உதவிகள் செய்யவே, ஹெர்பர்ட்டு உடல் நலமுற்றான். இறுதியில் தன்னைத் தேடிவந்த வார்டுடன் ஹெர்பர்ட்டு தன் இருப்பிடம் சேர்ந்தான். புலிக் கோட்டைப் பகுதிகளில் கோட்டையின் பாதுகாப்புக்காகவே புலிகள் வளர்க்கப்பட்டு வந்ததாகக் கூறுகின்றனர். புலிக்கோட்டைப் பகுதியில் இன்றும் புலிகளைக் காண லாம். மைசூர் போர் முடிந்ததற்குப் பின், திப்புவிற்குச் சொந்தமாக இருந்த இக்கோட்டைகள் ஆங்கிலேயரின் ஆளுகைக்குக் கீழ்வந்தன. 1800 ஆம் ஆண்டு இக்கோட்டையைக் கண்ட வெள்ளைத்